
# சித்தர் இலக்கியம்

ஆய்வு நூல்

மீ.ப.சோமு



அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு

# சித்தர் இலக்கியம் - 4

## சித்தர் தவமொழி - 1

(சிவவாக்கியம்; கபிலர் அகவல்)

ஆசிரியர்
மீ.ப. சோமசுந்தரம்
சோமு

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் - 608 002.

முதல் பதிப்பு : 2009
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

விலை : ரூ.
வெளிநாடு :

மற்ற விவரங்களுக்கு :
சிறப்பு அதிகாரி
நூல் வெளியீட்டுத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608 002.

அச்சிட்டோர்
ஜனகம் ஆப்செட் பிரிண்டர்ஸ்
சிதம்பரம்.

***Dr.M.A.M. Ramaswamy,*** B.A.,D,Litt.
Pro-Chancellor : Annamalai University
Member of Parliament (Rajya Sabha)

Flat.# 111, Ranka View Apartments
51/22-4. Richmond Road,
Bangalore - 560 025.
Tel : 080-25587779
Fax : 080-25584896

## அணிந்துரை

சித்தர் இலக்கியம் 4,5,6 ஆம் தொகுதிகள் வெளிவருவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

என் அருமைத் தந்தையார் அவர்கள் தமது மறைவுக்குச் சில வாரங்கள் முன்பு, இந்த ஆய்வுப் பணியைத் திரு.மீ.ப.சோமசுந்தரம் அவர்கள் செய்ய வேண்டும் என்று விரும்பி, இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக உருவாவதற்குரிய திட்டத்தைக் கலந்து பேசினார்கள். அவர்களுடைய மறைவுக்குப் பிறகு தந்தையார் உருவாக்கிய திட்டத்தை நிறைவேற்றுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. விரிந்து பரந்த இந்த அரிய ஆய்வு நூலைப் பகுதி பகுதியாக வெளியிட்டு வழங்குகிற பணியானது, எங்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழுக்குச் செய்யும் ஒரு நிலையான தொண்டு என்று நான் கருதுகிறேன்.

அமரர் திரு.மீ.ப.சோமு அவர்கள் ஆழ்ந்த மொழிப் புலமையோடு, தத்துவ நுண்ணறிவும், நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளை ஒப்பு நோக்கும் ஆற்றலும் ஒரு சேரப்பெற்றிருந்த நல்லறிஞர். சில மகான்களின் நேர்முகத் தொடர்பும் அவருக்கு உண்டு. எந்தப் பணியை யாரிடம் எவ்வாறு ஒப்படைக்க வேண்டும் என்று தேர்ந்தெடுப்பதில் வல்லமை பெற்று விளங்கிய என் தந்தையாரின் எண்ணம் நூல்வடிவம் பெற்றுள்ளது. இந்த சிறந்த நூலைத் தமிழ் மக்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வாயிலாக வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

மு.அ.மு. இராமசாமி

Prof. **Dr. M. Ramanathan,**
M.S. (G.S.) F.R.C.S.(Glasg)
Vice-Chancellor

Phone : Office : 04144-238283
Res. : 04144-238214
Fax : 04144-238925
04144-238080
E-mail : auvc_mr@hotmail.com
ANNAMALAI UNIVERSITY,
ANNAMALAINAGAR P.O. 608 002
INDIA

## பாராட்டுரை

சித்தர் இலக்கியம் குறித்த இவ்வரிய ஆராய்ச்சி நூலின் 4, 5, 6ஆம் தொகுதிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக மறுமதிப்புப் பெறுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இத்தொகுதிகளில் நாடறிந்த நல்லறிஞர் திரு. மீ. ப. சோமசுந்தரம், சித்தர்கள் குறிப்பு மொழியில் வெளியிட்டுள்ள மெய்ஞ்ஞான இரகசியங்களை எளிமையாக்கித் தமிழுலகிற்குத் தந்துள்ளார்கள்.

இந்நூல் உருவாக்கத்திற்கு முதற்பெருங் காரணரான கொடைவள்ளல் டாக்டர் ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டதாகும். சித்தர் இலக்கியம் நூலாக வெளிவர வேண்டுமென்று விழைந்த தந்தையாரின் திட்டத்தை மாண்பமை இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார்கள். அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றி உரியது.

சிவவாக்கியர், கபிலர், காகபுசுண்டர், இடைக்காடர், கடுவெளிச்சித்தர், அகப்பேய்ச்சித்தர், பாம்பாட்டிச்சித்தர், பத்திரகிரியார், கருவூரர், நந்தீசர் முதலிய சித்தர் பலரின் பாடல்கள் உரிய விளக்கங்களுடன் இந்நூல்களில் தரப்பட்டுள்ளன.

'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்' என்பார்கள். அதாவது புற உலகிலும் பெறுதற்கரிய மானுட உடம்பிலும் பொதிந்திருக்கும் தத்துவம் ஒன்றுதான் என்பதை உணர்ந்து உணர்த்தியவர்கள் சித்தர்கள். 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பதைப் பலபட வலியுறுத்தியவர்கள். பேரானந்தமாகிய வீடுபேற்று நிலையைப் புறக்கோலங்களாலும் பொய்மைச் சடங்குகளாலும்

CONTINUATION SHEET

ANNAMALAI UNIVERSITY
ANNAMALAINAGAR

அடையமுடியாது என்பதை எடுத்துரைத்தவர்கள். ஆனந்த அனுபூதி நிலையைப் பெறுவதற்கு உரிய யோகப் பயிற்சிகளை, வழிபாட்டு முறைகளை, மந்திரக் கருத்துக்களை விவரிக்கும் இப்பாடல்களில் உலக வாழ்வியல் கருத்துக்களும் அறிவுறுத்தப்பட்டிருப்பது எல்லா மக்களும் இன்புற்று வாழவேண்டும் என்பதற்காகத்தான். சித்தர்கள் வழங்கும் மெய்ஞ்ஞான உண்மைகள் அறிவியற் கருத்துக்களோடு இயைந்து விளங்கும் சிறப்பையும் நூலாசிரியர் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

இறையனுபவம் என்பது சொல்ல முடியாத சுகம் ஆகும். அதைச் சொல்ல முடிந்த அளவு சித்தர்களும் விளக்க முடிந்த அளவு அறிஞர். மீ.ப.சோமு அவர்களும் புலப்படுத்தியுள்ளார்கள்.

தமிழறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும் மட்டுமன்றிப் பொதுமக்களும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் எளியநடையில் எழுதப்பட்டிருப்பது இந்நூலின் குறிப்பிடத்தக்க சிறப்பாகும். அரிய நூல் படைத்த அவரை மனமாரப் பாராட்டுகிறோம்.

தமிழ்கூறு நல்லுலகம் படித்துப் பயன் கொள்ள வேண்டுமென்று விழைகிறேன்.

மா. இராமநாதன்

மா. இராமநாதன்

முனைவர். பழ. முத்துவீரப்பன்
பேராசிரியர் & தலைவர்

தமிழியல் துறை
முதன்மையர் இந்திய மொழிப்புலம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608 002

---

## பதிப்புரை

சித்தர்கள் சமய உலகிலும் சமுதாய வெளியிலும் புரட்சிகரமான கருத்துக்களைப் போதித்தவர்கள். 'உள்ளமே கோயில்' என்று உரக்கச் சொன்னவர்கள். சாதி, சடங்கு, சாத்திரங்களை ஆவேசமாக எதிர்த்தவர்கள். அவர்தம் இலக்கியங்கள் பேரின்பப் பேற்றை அடைய வழிகாட்டுவன. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உயரிய நெறியை வலியுறுத்துவன. 'உள்ளத்துக்குள்ளே ஒளிந்திருப்பவன் இறைவன்' என்பதை எடுத்துரைப்பன. உலகளாவிய ஒருமைக்குக் குரல் கொடுப்பன. பெறுவதற்கரியது மானுட உடம்பு; அதனைப் பயன்படுத்தி ஒளிப்பயிற்சி, ஒலிப்பயிற்சி ஆகியவற்றை முறையாகப் பின்பற்றுவதன் மூலம் பிறவிப்பேற்றை அடையலாம் என்று விளக்குவன. மரபுவழிச் செய்யுட்களையும், நாட்டுப்பாடல்கள் அமைப்பையும் பின்பற்றி எளிய நடையில் அரிய கருத்துக்களைத் தருவன. வாழ்வியல் நெறிகளை விவரித்து வாசிப்பவரை நேசிக்க வைப்பன.

அறிஞர் மீ ப.சோமு சித்தர் இலக்கியங்களில் ஆழங்காற்பட்டவர். தக்க குருமார்கள் வழி சித்தர் இலக்கிய நுட்பங்களைக் கற்றுணர்ந்த பெருமையர்.

சித்தர் இலக்கியம் 4ஆம் தொகுதியில் சிவவாக்கியம், கபிலர் அகவல் என்னும் இருநூல்கள் இடம் பெற்றுள்ளன. சிவவாக்கியம் என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ள 856 பாடல்களும் தத்துவப் பாடல்களாகவும் துதிப்பாடல்களாகவும் விளங்குபவை. தொடர்ந்து வைத்தியம் குறித்த சித்தர் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

சிவவாக்கியம் தந்த சிவவாக்கியர் ஒருமைப்பாடு என்ற பேரானந்த ஒடுக்கத்தின் பேரின்பத்தை அனுபவித்தவர். உலகம் முழுதும் இறைவனே என்ற ஒருமைக் காட்சியை உணர்ந்தவர். சரியை, கிரியை, யோக, ஞான நிலைகளில் தோய்ந்து பாடுபடுபவர். சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளைப் பேசியதில் தந்தைபெரியாரை விட ஒருபடி மிஞ்சியவர். ராம நாமத்தின் மகிமையையும் விளக்கியுள்ளார்.

அகக் காட்சி பெறும் வழிகளை எளிமையாக எடுத்துரைத்தவர். மனம் மலர்கிற நிலையே ஞானம் என்றவர். பெறுதற்கரிய உடம்பைப் பெற்றும் ஞான ரகசியங்களை அறியாதிருப்பது- உடம்புக்குள் ஞானவாசலைத் திறக்கத் தெரியாமல் மூடி வைத்திருப்பது - வீடுகட்டிக் கதவைச் சாத்தி வைத்திருப்பது போல என்கின்றார்.

கபிலர் அகவல் என்ற நூல் பிறப்பால் உயர்வுதாழ்வில்லை, அவரவர் சிறப்பால்தான் உயர்வு என்பதை விரிவாக எடுத்துரைப்பது. உலகளாவிய பொதுநோக்கு, சடங்குகள் மற்றும் மூடநம்பிக்கை எதிர்ப்பு, புரட்சி மனப்பான்மை ஆகியவற்றின் திரட்டுப் பாலாகத் திகழ்வது. மழையும், காற்றும், பூமியும், கதிரவனும் அனைவருக்கும் பயன்படுவது போல மானிடர் யாவர்க்கும் குலமும், குடியும், பிறப்பும், வழிபடுதெய்வமும் ஒன்றே என்று வலியுறுத்துவது. இப்பாடற் செய்திகளை ஆய்ந்தும் தோய்ந்தும் இயன்றவரை எளிமைப் படுத்தி விளக்கியுள்ளார் அறிஞர் மீ.ப.சோமு.

5ஆம் தொகுதியில் சிவவாக்கியம் எனும் தலைப்பில் காகபுசுண்டர் எழுதிய 987 பாடல்கள் குறிப்புரையுடன் இடம் பெற்றுள்ளன. இச்சையை விடுப்பதும் சினம் நீக்குவதும் மோட்சம் அடைவதற்குரிய வழிகள் ஆகும். உடலும் மனமும் செம்மைப்பட்டால் அனுபூதி நிலை பெறலாம். அக உலகின் கதவைத் திறத்தலே பயிற்சிகளில் எல்லாம் பெரிய பயிற்சி. உட்சோதியைக் கண்டு தெளிவதே மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வதற்குரிய அமரநெறி. குண்டலினியை எழுப்புவது என்பது பயிற்சியினால் கிடைக்க வேண்டிய ஒரு மகத்தான அனுபவம் ஆகும் என்றெல்லாம் சித்தர்கள் கூறும் பல்வேறு ஞானநெறிகள், யோக முறைகள் மீ.ப.சோமுவால் எளிய நடையில் விளக்கப்பட்டுள்ளன.

ஆறாம் தொகுதியில் மந்திர ஆற்றல், பதச்சோறு என்னும் தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் உள்ளன. இடைக்காடர், குதம்பைச் சித்தர், கடுவெளிச்சித்தர், அகப்பேய்ச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், பத்திரகிரியார் முதலிய 17 தலைப்புகளில் பலநூறு சித்தர் பாடல்கள் குறிப்புரைகளுடன் விளக்கம் பெற்றுள்ளன. இப்பாடல்கள் அனைத்தும் தன்னை அறிய வேண்டும் என்பதை விளக்குவன. சீவனுக்குள்ளே சிவமணம் பூக்க வழிகாட்டுவன. கையில் விளக்கு வைத்துக்கொண்டு வழி தெரியாமல் கடலில் விழக் கூடாது என்று நெறிப்படுத்துவன.

மனித உடம்பிலே நிலைகொண்டுள்ள எழுத்தாகிய ஆற்றல்களையும் ஆறு ஆதார நிலைகளையும் மூலக்கனலின் இயக்கத்தையும் வாசிப்பயிற்சி முறைகளையும் பேசாக்கிளவி வாயிலாகச் சித்தர்கள் விளக்குவதை எடுத்துரைப்பன. சுருங்கச் சொன்னால் குறியீட்டு மொழியில் கூறப்பட்டிருக்கும் பல்வேறு ஆன்ம ரகசியச் செய்திகளை இயன்றவரை எளிமைப்படுத்தி விளக்குவன.

பிறவிப் பயனை அடைய வழிகாட்டும் சித்தர் இலக்கியக் கருத்துக்களைப் பொதுமக்கள் அனைவரும் உணரும் வகையில் எளிமைப்படுத்த முயன்றுள்ள அறிஞர் மீ.ப.சோமு ஆன்மிக உலகின் பாராட்டுக்குரியவர் ஆவார்.

பழ. முத்துவீரப்பன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| *1.* | சிவவாக்கியம் | *1* |
| *2.* | கபிலர் அகவல் | *318* |
| *3.* | ஆய்வுரை | *331* |

# சிவ வாக்கியம்

## காப்பு

1. அரியதோர் நமச்சி வாயம்
ஆதி அந்தம் ஆனதும்
ஆறிரண்டு நூறு தேவர்
அன்று ரைத்த மந்திரம்
சுரியதோர் எழுத்தை உன்னிச்
சொல்லு வேன்சிவ வாக்கியம்
தோட தோட பாவமாயை
தூர தூர ஓடவே.

2. கரியதோர் முகத்தை ஒத்த
கற்ப கத்தைக் கைதொழக்
கலைகள் நூல்கள் ஞானமும்
கருத்தில் வந்து திக்கவே
பெரிய பேர்கள் சிறிய
பேர்கள் கற்றுணர்ந்த பேரெலாம்
பேய னாகி ஓதிடும்
பிழைபொ றுக்க வேண்டுமே!

---

1 - 2. இந்த இரண்டு பாடல்கள் வைப்புமுறையும் யாப்பமைதியும் அற்புதமானவை. இரண்டன் இணைப்பும் இயைபும் எதுகை மோனை அமைப்பும் ஒரு சித்தனின் போக்கை உள்ளடக்கி ஒளிவீசுகின்றன.

3. ஆன அஞ்செ ழுத்துளே
யண்ட மும்அ கண்ட மும்
ஆன அஞ்செ ழுத்துளே
ஆதி யான மூவரும்
ஆன அஞ்செ ழுத்துளே
அகார மும்ம காரமும்
ஆன அஞ்செ ழுத்துளே
அடங்க லாவல் உற்றதே.

4. ஓடி யோடி ஓடி யோடி
யுட்க லந்த சோதியை
நாடி நாடி நாடிநாடி
நாட்க ளுங்க ழிந்துபோய்
வாடி வாடி வாடிவாடி
மாண்டு போன மாந்தர்காள்
கோடி கோடி கோடிகோடி
எண்ணி றந்த கோடியே.

5. உருத்த ரித்த நாடியில்
ஒடுங்கு கின்ற வாயுவை
கருத்தி னால்இ ருத்தியே
கபால மேற்ற வல்லிரேல்
விருத்த ராரும் பாலராவர்
மேனி யுஞ்சி வந்திடும்
அருட்த ரித்த நாதர்ஆணை
அம்மை ஆணை உண்மையே.

---

3. அட்சர நிலையை உணர்த்துகிற பல பாடல்கள் இத்தொகுப்பிலே காண்கிறோம். சிவவாக்கியர் ஐந்தொழுத்து என்று குறிப்பது சித்தாந்திகள் சொல்கிற பஞ்சாட்சர உச்சரிப்பு எழுத்துக்களை மட்டுமில்லை. இந்த எழுத்துக்களின் இடங்கள் உடம்பில் எங்குள்ளன என்பது யோகப் பகுதிகளிலே விளக்கம் பெற்றுள்ளது.

4. அகப்பார்வையின் நுட்பம் ஆசான் உணர்த்த உணரவேண்டிய இரகசியம் வெறும் புத்தகப் படிப்பினால் தெரிந்துகொள்ள முனைவது வீணேயாகும்.

5. காய சித்தி உபாயம் என்ற உத்திமுறையைப் பேசியவாறு.

6. வடிவு கண்டு கொண்டபெண்ணை
மற்றொ ருவன் நத்தினால்
விடுவ னோஅ வனை இன்னம்
வெட்ட வேணும் என்பனே
நடுவன் வந்த ழைத்தபோது
நாறு மிந்த நல்லுடல்
சுடலை மட்டும் கொண்டுபோய்த்
தோட்டி கைக்கொ டுப்பரே.

7. என்னிலே இருந்த தொன்றை
யான றிந்த தில்லையே
என்னிலே இருந்த தொன்றை
யான றிந்து கொண்டபின்
என்னிலே இருந்த தொன்றை
யாவர் காண வல்லீரோ
என்னிலே இருந்தி ருந்து
யானு ணர்ந்து கொண்டனே.

8. நினைப்ப தன்றிக் கண்டிலேன்
நீய லாது வேறிலை
நினைப்பு மாய்ம றப்புமாய்
நின்ற மாய்கை மாய்கையை
அனைத்து மாய்அ கண்டமாய்
அநாதி முன்அ நாதியாய்
எனக்குள் நீஉ னக்குள்நான்
இருக்கு மாறது எங்ஙனே.

---

6. உடற்பாசம் என்பது எத்தகைய பற்றுக்கோட்டை உண்டாக்குகிறது என்பதை நகைக்கிற பாடல் இப்படி ஒரு வடிவத்திலே வருகிறது.

7. 'என்னை விட்டு என்னை உசாவுதல்' என்று திருமூலர் பாடுகிற தற்காட்சி நிலையாகிய யோக ஒடுக்கம் இது. இது சக மார்க்கப் பயிற்சினால் வருவது.

8. மன்னுயிரும் பேருயிராகிய பரம்பொருளும் ஒன்றுள் ஒன்று அடங்கி நிற்கும் நுட்பத்தை விதந்து கூறுகிறார். சித்தர்கள் பலரும் இதே அனுபவத்தை இனிய கவிமொழியில் பற்பல அணிகளுடன் பாடுகிறார்கள். சாதாரணக் காட்சியான புறக்காட்சிக்கும், தன்னுள்தான் காணுகிற அகக்காட்சிக்கும் உள்ள வேறுபாடு எத்தகையது! எண்ணி எண்ணி வியந்து, அந்த அரிய வியப்பிலேயே உள்ளமானது ஒடுங்கி விடுகிறது.

9. மண்ணும் நீஅவ் விண்ணும்நீ
மறிக டல்கள் ஏழும்நீ
எண்ணும் நீஎ ழுத்தும்நீ
இசைந்த பண்எ ழுத்தும்நீ
கண்ணும் நீம ணியும்நீ
கண்ணு ளாடும் பாவைநீ
நண்ணு நீர்மை நின்றபாதம்
நண்ணு மாறு அருளிடாய்.

10. அரியு மல்ல அரனுமல்ல
அப்பு றத்தில் அப்புறம்
கருமை செம்மை வெண்மையை
கடந்து நின்ற காரணம்
பெரிய தல்ல சிறியதல்ல
பற்று மின்கள் பற்றுமின்
துரிய முங்க டந்துநின்ற
தூர தூர தூரமே.

11. அந்தி மாலை உச்சிமூன்றும்
ஆடு கின்ற தீர்த்தமும்
சந்தி தர்ப்ப ணங்களும்
தபங்க ளும்செ பங்களும்
சிந்தை மேவு ஞானமும்
தினஞ்செ பிக்கும் மந்த்ரமும்
எந்தை ராம ராமராம
ராம வென்னும் நாமமே.

---

9. இந்த உலகம் முழுவதும் இறைவனே என்ற ஒருமைக்காட்சி கிட்டுவது ஒரு பெரிய சித்தியேயாகும். ஒன்றாகக் காண்கிற இந்தக் காட்சி பற்றி அவ்வையும் பாடுகிறார். கண்ணுள் ஆடுகிற பாவையும் கடவுட் தத்துவமே என்ற பாங்கை உற்றுணர்ந்து மெய்க்கொள்வதே சித்தர்கள் கூறுகிற ஒளிப்பயிற்சியாகும்.

10. ஒளிப்பயிற்சியிலே பெறுகிற வர்ணக்காட்சிகளைப் பற்றி மேலைநாட்டு ஞானிகளும் பல நூல்கள் எழுதியுள்ளார்கள். நிறங்களைக் காணுவது கண்ணைத்திறந்து அல்ல, கண்ணை மூடிய நிலையில், இந்த நிலையும் தாண்டி முன்னேறும்போது, தூரதூர அனுபவமாகிய பேரின்பம் கைகூடுகிறது.

11. ராம நாமத்தின் மகிமையை ஒரு பக்தனுடைய நிலையிலிருந்து பாடுகிறார் சிவவாக்கியர். பற்றுதல் என்றால் இதுதான். ஒன்றைப் பற்றுதல், ஒன்றையே பற்றுதல், அதையும் ஒன்றிய ஒருமையிலே பற்றுதல் என்ற நிலை வந்துவிட்டால், அதுவே எல்லாச் சடங்குகளுக்கும் மேலான பெரிய பூசனை!. வேறு எதுவும் வேண்டாம்.

12. சுதாவு பஞ்ச பாதகங்க
களைத்து ரந்த மந்திரம்
இதாமி தாமி தல்லவென்று
வைத்து ழலும் ஏழைகாள்
சதாவி டாமல் ஓதுவார்
தமக்கு நல்ல மந்திரம்
இதாமி தாமி ராமராம
ராம வென்னும் நாமமே.

13. நான தேது நீயதேது
நடுவில் நின்ற தேதடா
கோன தேது குருவதேது
கூறி டுங்கு லாமரே
ஆன தேது அழிவதேது
அப்பு றத்தில் அப்புறம்
ஈன தேதி ராமராம
ராம வென்னும் நாமமே.

14. சாத்தி ரங்கள் ஓதுகின்ற
சட்ட நாத பட்டரே
வேத்தி ரைப்பு வந்தபோது
வேதம் வந்து உதவுமோ
மாத்தி ரைப்போ தும்முளே
மறிந்து தொக்க வல்லிரேல்
சாத்தி ரைப்பை நோய்களேது
சத்தி முத்தி சித்தியே

---

12. ராம நாமத்தின் மகிமையை மேலும் பாடுகிறார் ஞானி. எல்லாத் தீமைகளையும் வென்று, எல்லா நன்மைகளையும் தரவல்லது என்றபடி.

13. இத்தகைய தெளிவு ஏற்பட்டுவிட்டால், அதிலிருந்து உதிக்கிற தன்னம்பிக்கையின் ஆற்றல் ஒப்பற்றதாகும். 'குலாமர்' என்ற சொல் 'குலாவுதல்' என்ற வினையின் அடியாகப் பிறந்த தமிழ்ச்சொல் என்பது என் கருத்து. எதற்கெடுத்தாலும் குழைந்து கொடுக்கிற முதுகெலும்பு அற்ற புழுக்கள் என்று பொருள்.

14. 'நூலறிவு பேசி' க் காலத்தை வீணடிப்பவர்களைப் பற்றிக் காரைக்கால் அம்மையார் பாடியுள்ளார். 'நூலேணிவிண்ணேற நூற்குப் பருத்தி வைப்பது' போலத்தான் என்று தாயுமானவரும் பாடுகிறார். திருமூலரும் பல இடங்களில் இக்கருத்தைக் கூறுகிறார். சிவவாக்கியரும் தமக்கே உரிய கவிச் சீற்றத்தோடு பேசுகிறார்.

15. தூர தூர தூரமென்று
சொல்லு வார்கள் சோம்பர்கள்
பாரும் விண்ணும் எங்குமாய்
பரந்த அப்ப ராபரம்
ஊரும் நாடும் காடுமோடி
உழன்று தேடும் ஊமைகாள்
நேர தாக உம்முளே
அறிந்து ணர்ந்து கொள்ளுமே.

16. நாலு வேதம் ஓதுவீர்
ஞான பாதம் அறிகிலீர்
பாலுள் நெய்க லந்தவாறு
பாவி காள்அ றிகிலீர்
ஆல முண்ட கண்டனார்
அகத்து ளேஇ ருக்கவே
கால னென்று சொல்லுவீர்
கனவி லும்மஃ தில்லையே.

17. வித்தி லாத சம்ப்ரதாய
மேலு மில்லை கீழுமில்
தச்சி லாது மாளிகை
சமைந்த வாற தெங்ஙனே
பெற்ற தாயை விற்றடிமை
கொள்ளு கின்ற பேதைகாள்
சித்தி லாத போதுசிவன்
இல்லை இல்லை இல்லையே.

---

15. அதே கருத்தை மேலும் வலியுறுத்துகிறார். ஞானியினுடைய அறிவுக் கனலோடு வருகிறது பாடல்.

16. ஞானத்தின் கொடுமுடியிலே போய் அமர்ந்திருந்து கீழே பார்த்துப் பாடுகிற நிலை இது. அந்த ஞான நகையும் பாடலிலே ஒலிக்கிறது.

17. கடவுள் என்ற உயர்வு இல்லாதபோது கடவுளேது? வித்து இல்லாமல் மரம் தோன்றுவது எங்ஙனம், அனுபவம் எப்படி உண்டாகும்? இந்த அடிப்படையினை ஆணித்தரமாகப் பாடுகிறார் முனிவர்.

18. அஞ்சும் மூணும் எட்டதாய்
யதாதி யான மந்திரம்
நெஞ்சி லேநி னைந்துகொண்டு
நீரு ருச்செ பிப்பிரேல்
பஞ்ச மான பாதகங்கள்
நூறு கோடி செய்யினும்
பஞ்சு போல்ப றக்குமென்று
நான்ம றைகள் பன்னுமே.

19. அண்ட வாசல் ஆயிரம்ப்ர
சண்ட வாசல் ஆயிரம்
ஆறி ரண்டு நூறுகோடி
யான வாசல் ஆயிரம்
இந்த வாசல் ஏழைவாசல்
ஏக போக மானவாசல்
எம்பிரான் இருக்கும் வாசல்
யாவர் காண வல்லரே.

20. சாமம் நாலு வேதமும்
சகல சாத்தி ரங்களும்
சேம மாக ஓதினும்
சிவனை நீர்அ றிகிலீர்
காம நோயை விட்டுநீர்
கருத்து ளேயு ணர்ந்தபின்
ஊன மற்ற காயமாய்
இருப்ப னெங்கள் ஈசனே.

---

18. அஞ்சு, எட்டு ஆகிய எண்களுக்குள்ள பொருள் அவ்வையின் குறட்பா விளக்கத்திலே விரிவாகக் கூறப்பட்டுள்ளது. காண்க.

19. எனக்குள்ளே இருக்கும் வாசல், உட்புகுந்து செல்லுகிற வாசல், இதன் வழியாகச் சென்றால் எம்பிரானைக் காணலாம். இந்த அகவாசலைத் திறந்து காண்பிப்பான் யார்? அவனே ஞானகுரு.

20. எந்த உயர்ந்த நூலானாலும் சரி; 'ஏட்டின் புறத்தில் எழுதி வைத்த' ஞானந்தான் அது! சிற்றின்ப இச்சையை விட்டு, ஆசான் காட்டுகிற வழியிலே பேரின்ப ஞானம் பெற்றுவிட்டால், பிறகு, நிலையாக நிற்பான் ஈசன் இந்த உடம்புக்குள்ளே! அதாவது அவனிருப்பது நமக்குத் தெரியும்!

21. சங்கி ரண்டு தாரையொன்று
சன்ன பின்னல் ஆகையால்
மங்கி மாளு தேயுலகில்
மானி டங்கள் எத்தனை
சங்கி ரண்டை யுந்தவிர்ந்து
தாரை ஊத வல்லிரேல்
கொங்கை மங்கை பங்கரொடு
கூடி வாழல் ஆகுமே.

22. தங்க மொன்று ரூபம்வேறு
தன்மை யான வாறுபோல்
செங்கண் மாலும் ஈசனும்
சிறந்தி ருந்தது எம்முளே
விங்க ளங்கள் பேசுவார்
விளங்கு கின்ற மாந்தரே
எங்கு மாகி நின்றராம
நாம மிந்த நாமமே.

23. அஞ்செ ழுத்தி லேபிறந்து
அஞ்செ ழுத்தி லேவளர்ந்து
அஞ்செ ழுத்தை யோதுகின்ற
பஞ்ச பூதப் பாவிகாள்
அஞ்செ ழுத்தி லோரெழுத்து
அறிந்து கூற வல்லிரேல்
அஞ்ச லஞ்சல் என்றுநாதன்
அம்ப லத்தில் ஆடுமே.

---

21. ஒளிப்பயிற்சி, ஒலிப்பயிற்சி என்ற இரண்டுமே பேரின்பத்தை அடைவதற்குரிய வழிகள். சந்திரனும் சூரியனும் காற்றாகவும் இயங்குவர்; ஒளியாகவும் இயங்குவர்; இந்தப் பயிற்சி முறைகளைக் கடைப் பிடித்தால் மங்கை பங்கனாகிய அம்மையப்ப தத்துவத்தைத் துய்க்கலாம்.

22. இந்த உடம்பில் வலமும் இடமும் எத்தகைய ஆற்றல் மையங்களாக இயங்குகின்றன என்பதைக் காட்டுவதே சித்தர்களின் ஞானமாகும். அம்மையப்பனும், சங்கர நாரணனும், இன்னும் பல உருவங்களும் இந்தத் தத்துவத்தையே குறிப்பன.

23. தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம் ஆகியவற்றின் விரிவுகள் முதல் இரண்டு பகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளமை காண்க.

24. அஞ்சு மஞ்சும் அஞ்சுமே
அனாதி யானது அஞ்சுமே
பிஞ்சு பிஞ்ச தல்லவோ
பித்தர் காள்பி தற்றுவீர்
நெஞ்சி லஞ்சு கொண்டுநீர்
நின்று தொக்க வல்லிரேல்
அஞ்சு மில்லை யாருமில்
அனாதி யாகித் தோன்றுமே.

25. நீள வீடு கட்டி நீர்நெ
டுங்கதவு சாத்துவீர்
வாழ வேணும் என்றல்லோ
மகிழ்ந்தி ருந்த மாந்தரே
கால னோலை வந்தபோது
கைக லந்து நின்றிடும்
ஆல முண்ட கண்டர்பாதம்
அம்மை பாதம் உண்மையே.

26. வீடெ டுத்து வேள்விசெய்து
மெய்ய ரோடு பொய்யுமாம்
மாடு மக்கள் பெண்டிர்சுற்றம்
என்றி ருக்கும் மாந்தர்காள்
நாடு பெற்ற நடுவர்கையில்
ஓலை வந்த ழைத்திடில்
ஓடு பெற்ற தவ்விலை
பெறாது காணும் உடலமே.

---

24. உடம்புக்குள்ளே பஞ்சாட்சர தரிசனம் என்பது, தன்னுள்ளே ஐந்தெழுத்தைக் காணல் என்பதும் சித்தர்களின் தீட்சை முறையாகும். இந்தக் கல்வியின் நுட்பம் கூறியவாறு.

25. வீடு கட்டிக் கதவைச் சாத்தி விடுகிற செயல் போன்றதே, உடம்புக்குள் ஞான வாசலைத் திறக்க அறியாமல் மூடி வைத்திருப்பது! பிறந்து இறக்கும் பெற்றிமையும் பேதைமையும் ஆம்!

26. உடம்பு விழுவதற்கு முன்பே அகவினைகள் என்னவென அறிந்து செயலாற்ற வேண்டும் என்பதைக் கூறியவாறு.

27. ஓட முள்ள போதெலாம்
ஓடி யேஉ லாவலாம்
ஓட முள்ள போதெலாம்
உறுதி பண்ணிக் கொள்ளலாம்
ஓட மும்உ டைந்தபோது
ஒப்பி லாத வெளியிலே
ஆடு மில்லை கோலுமில்லை
யாரு மில்லை யானதே.

28. அண்ண லேஅ னாதியே
அனாதி முன்அ னாதியே
பெண்ணு மாணும் ஒன்றலோ
பிறப்ப தற்கு முன்னெலாம்
கண்ணில் ஆணின் சுக்கிலம்
கருவி லோங்கு நாளிலே
மண்ணு ளோரும் விண்ணுளோரும்
வந்த வாற தெங்ஙனே.

29. பண்டு நான்ப றித்தெறிந்த
பன்ம லர்கள் எத்தனை
பாழி லேசெ பித்துவிட்ட
மந்தி ரங்கள் எத்தனை
மிண்ட னாய்த்தி ரிந்தபோது
இறைத்த நீர்கள் எத்தனை
மீள வுஞ்சி வாலயங்கள்
சூழ வந்த தெத்தனை.

---

27. இந்த உடம்பு இருக்கும்போதே இதைப் பயன்படுத்திக்கொண்டு உய்ய வேண்டும் என்றபடி. யோக நுட்பம் கூறியவாறு.

28. உயிர்களின் தோற்றமும் அந்தத் தோற்றத்திற்கு ஆதி காரணமான பரம்பொருளாற்றலும் விதந்து கூறுகிறார் ஞானி.

29. சரியை கிரியைகளைக் கடந்து நிற்கும் ஞானநிலையிலே பிறந்த கவிமொழி இது ஆரம்ப நிலையை எண்ணிப் பிறருக்கு அதனை உணர்த்துகிறபடி.

30. அண்டர் கோன்இ ருப்பிடம்
அறிந்து ணர்ந்த ஞானிகள்
பண்ட றிந்த பான்மைதன்னை
யாஅ ரறாய வல்லரே
விண்ட வேதப் பொருளையன்றி
வேறு கூற வகையிலா
கண்ட கோயில் தெய்வமென்று
கையெ டுப்ப தில்லையே.

31. நெருப்பை மூட்டி நெய்யைவிட்டு
நித்த நித்தம் நீரிலே
விருப்ப மோடு நீர்குளிக்கும்
வேத வாக்யம் கேளுமின்
நெருப்பும் நீரும் உம்முளே
நினைந்து கூற வல்லிரேல்
சுருக்க மற்ற சோதியைத்
தொடர்ந்து கூட லாகுமே.

32. பாட்டி லாத பரமனை
பரம லோக நாதனை
நாட்டி லாத நாதனை
நாரி மங்கை பாகனை
கூட்டி மெள்ள வாய்புதைத்துக்
குணுகு ணுத்த மந்திரம்
வேட்ட காரர் குசுகுசுப்பை
கூப்பி டாமு கிஞ்சதே.

---

30. புறச்சடங்குகளைக் கடந்து நிற்கும் ஞானியின் பாங்கு என்ன? தாச மார்க்கமும், சற்புத்திர மார்க்கமும் கடந்த சன்மார்க்கமும் ஞானியின் பாதை. அந்த நிலையிலே அவன் 'கண்ட கோயில் தெய்வம் என்று கையெடுக்க மாட்டான்' அல்லவா?

31. இது யோகியின் நிலை. அவனுக்குப் புறப்பூசனைகள் இல்லை.

32. இதுவும் யோகஞான மொழியே. உடம்பின் அதிர்வுகளை இயக்குகிற மகானுக்கு மந்திர அதிர்வுகள் ஏன்? வேண்டுவதில்லையல்லவா? சொல்லினால் அசைவுகளைத் தோற்றுவிப்பதையெல்லாம் தாண்டி நிற்பவன் அவன். அந்நிலையைக் கூறுகிறது இந்தப் பாடல்.

33. செய்ய தெங்கி லேயிளநீர்
சேர்ந்த கார ணங்கள்போல்
ஐயன் வந்திங் கென்னுளம்
புகுந்து கோயில் கொண்டனன்
ஐயன் வந்திங் கென்னுளம்
புகுந்து கோயில் கொண்டபின்
வைய கத்தில் மாந்தர்முன்னம்
வாய்தி றப்ப தில்லையே.

34. மாறு பட்டு மணிதுலக்கி
வண்டி னெச்சில் கொண்டுபோய்
ஊறு பட்ட கல்லின்மீதே
ஊற்று கின்ற மூடரே
மாறு பட்ட தேவரும்
அறிந்து நோக்கும் என்னையும்
கூறு பட்டுத் தீர்க்கவோ
குருக்கள் பாதம் வைத்ததே.

35. கோயி லாவ தேதடா
குளங்க ளாவ தேதடா
கோயி லும்கு ளங்களும்
கும்பி டும்கு லாமரே
கோயி லும்ம னத்துளே
குளங்க ளும்ம னத்துளே
ஆவ தும்அ ழிவதும்
இல்லை இல்லை இல்லையே.

---

33. அற்புதமான கவிதை! தேங்காய்க்குள்ளே தண்ணீர் இருக்கிறது. எப்போது புகுந்தது அது? குரும்பையிலிருந்து முற்றிமுற்றித் தேங்காய் வளர்வதோடு சேர்ந்து தண்ணீரும் சுரந்து பெருகிற்று. இது அனுபவ நிலை. இந்த நிலையிலே மௌனம் கூடுகிறது.

34. பூசனை முறைகளைச் சாடுவது போலப் பேசி யோகநிலையின் நுட்பத்தை விளக்கியவாறு.

35. இறைவன் ஒருவன் உண்டு என்று நம்பாதவர்கள் இந்தப் பாடலை மேற்கொள் காட்டுவது தவறு! இறைவனோடு கலந்து அவன் இவனாகவும், இவன் அவனாகவும் ஒன்றிய மகானின் பேச்சு இது. இந்த மகானுக்கு இறையின்பம் கிட்டி விட்டது, தனக்குள்ளேயே! புறக் கோலங்களும் புறவினைகளும் தாண்டிய ஞானத்தின் குரலே இந்தப் பாடல்!

36. செங்க லுங்க ருங்கலும்
சிவந்த சாதி லிங்கமும்
செம்பி லும்த ராவிலும்
சிவனி ருப்பன் என்கிறீர்
உம்ம தம்அ றிந்துநீர்
உம்மை நீர்அ றிந்தபின்
அம்ப லம்நி றைந்தநாதன்
ஆடல் பாடல் ஆகுமே.

37. பூசை பூசை என்றுநீர்
பூசை செய்யும் பேதைகாள்
பூசை யுள்ள தன்னிலே
பூசை கொண்ட தெவ்விடம்
ஆதி பூசை கொண்டதோ
அனாதி பூசை கொண்டதோ
ஏது பூசை கொண்டதோ
இன்ன தென்றி யம்புமே!

38. இருக்கு நாலு வேத
மும்ள மூத்தையற ஓதிலும்
பெருக்க நீறு பூசினும்
பிதற்றி னும்பி ரானிரான்
உருக்கி நெஞ்சை உட்கலந்திங்
குண்மை கூற வல்லிரேல்
சுருக்க மற்ற சோதியைத்
தொடர்ந்து கூட லாகுமே.

---

36. வெளிப் பூசனைகளைச் செய்து அவற்றிலேயே நாள்களைப் போக்கும் ஞானமற்ற பேதைகளை நோக்கிப் பேசியவாறு.

37. பூசனையிலேதான் எல்லாம் என்று முடிவுகட்டி விடுகிற நிலையை நோக்கி ஒரு ஞானி பேசுகிற பேச்சு.

38. முந்திய பாடல்களில் புறச்சடங்குகளைச் சாடியவர், மெய்யாகச் செய்ய வேண்டிய அகப்பூசனை எங்ஙனம் அமைகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

39. கலத்தின் வார்த்து வைத்தநீர்
கடுத்த தீமு டுக்கினால்
நிலத்தி லேக ரந்ததோ
கடுத்த தீகு டித்ததோ
நிலத்தி லேக ரந்ததோ
நீள்வி சும்பு கொண்டதோ
மனத்தின் மாசை நீக்கியே
மனத்து ளேக ரந்ததோ.

40. பறைச்சி யாவ தேதடா
பணத்தி யாவ தேதடா
இறைச்சி தோல்எ லும்பினும்
இலக்க மிட்டி ருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ
பணத்தி போகம் வேறதோ
பறைச்சி யும்ப ணத்தியும்
பகுந்து பாரும் உம்முளே.

41. வாயிலே குதித்த நீரை
எச்சி லென்று சொல்கிறீர்
வாயிலே குதப்பு வேதம்
வரம்எ னக்க டவதோ
வாயி லெச்சில் போகவென்று
நீர்த னைக்கு டிப்பிர்காள்
வாயி லெச்சில் போனவண்ணம்
வந்தி ருந்து சொல்லுமே.

---

39. மூலக்கனல் பற்றிய முன் பகுதிகளில் விளக்கம் பெற்றுள்ள பயிற்சியின் நுட்பம் சொல்லியபடி.

40. சாதிபேதங்கள் இல்லை என்பதை வெகுண்டு பேசுகிற பாங்கிலே இந்த உடம்புக்குள் உள்ள படைப்பு நுட்பங்களைக் கூறுகிற பாடல்.

41. புறந்தூய்மை நீரால் அமைகிறது என்பது உண்மையே யாயினும், மெய்யின் தூய்மை எதைப் பொறுத்து அமைகிறது? மாசு என்பது எது? அழுக்கைப் போக்குவது என்றால் அது அகந் தூய்மையால் நிகழ்வது அல்லவா? இறையின்பம் துய்ப்பதற்கு இந்தத் துப்புரவு எங்ஙனம் இயங்க வேண்டும் என்ற சிந்தனையை எழுப்புகிறது இக்கவி.

42. ஓது கின்ற வேதமெச்சில்
உள்ள மந்தி ரங்களெச்சில்
மோத கங்கள் ஆனதெச்சில்
பூத லங்கள் ஏழுமெச்சில்
மாதி ருந்த விந்துவெச்சில்
மதியு மெச்சில் ஒளியுமெச்சில்
ஏதி லெச்சில் இல்லதில்லை
இல்லை யில்லை இல்லையே.

43. பிறப்ப தற்கு முன்னெலாம்
இருக்கு மாற தெங்ஙனே
பிறந்து மண்ணி றந்துபோய்
இருக்கு மாற தெங்ஙனே
குறித்து நீர்சொ லாவிடிற்
குறிப்பில் லாத மாந்தரே
அறுப்ப னேசெ வியிரண்டும்
அஞ்செ ழுத்து வாளினால்.

44. அம்ப லத்தை அம்புகொண்டு
அசங்கெ ன்றால்இ சங்குமோ
கம்ப மற்ற பாற்கடல்
கலங்கென் றால்க லங்குமோ
இன்ப மற்ற யோகியை
இருளும் வந்த ணுகுமோ
செம்பொன் அம்ப லத்துளே
தெளிந்த தேசி வாயமே.

---

42. 'எச்சில்' என்று சொல்லுவதன் ஆழத்தை அளப்பது போலே, உலகளாவி நின்று பேசுகிறது இந்தப்பாடல்.

43. உலகிலே இந்த உடம்பெடுத்து வருவதற்கு முன்பிருந்த நிலை என்ன? இந்த உடம்பு வீழ்ந்தபின் வருகிற நிலை என்ன? சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பதை இப்படி ஒரு போடுபோட்டு வலியுறுத்துகிறார் முனிவர்.

44. கீதையிலே 'ஸ்திதப்ரக்ஞன்' நிலை பேசப்படுகிறது. சிவவாக்கியர் தமக்கே உரிய பாணியிலே இதைப் பேசுகிறார்.

45. சித்த மேது சிந்தையேது
சீவ னேது சித்தரே
சத்தி யேது சம்புவேது
சாதி பேதம் மற்றெது
முத்தி யேது மூலமேது
மூல மந்தி ரங்களேது
வித்தி லாத வித்திலே
இதென்ன தென்றி யம்புமே.

46. சித்த மற்றுச் சிந்தையற்று
சீவ னற்று நின்றிடம்
சத்தி யற்றுச் சம்புவற்று
சாதி பேத மற்றுநன்
முத்தி யற்று மூலமற்று
மூல மந்தி ரங்களும்
வித்தை யித்தை ஈன்றவித்தில்
விளைந்த தேசி வாயமே.

47. சாதி யாவ தேதடா
சலந்தி ரண்ட நீரெலாம்
பூத வாசல் ஒன்றலோ
பூத மைந்தும் ஒன்றலோ
காதில் வாளி காரைகம்பி
பாட கம்பொன் ஒன்றலோ
சாதி பேதம் ஓதுகின்ற
தன்மை யென்ன தன்மையே.

---

45. இறைமை நிலையின் தன்மையைப் பேசுகிறது இந்தப் பாடல். தாயும் தந்தையும் இல்லாமல் பிறந்தவன் இறைவன். அவனுக்கு இலக்கணம் அவனே! இந்த விந்தையை ஏத்துகிற உத்தி இது.

46. மேலே கேள்விகளாகக் கேட்டுச் சித்திரித்த தத்துவத்தை இப்போது விரிவுரையாக வரைகிறார் சிவவாக்கியர்.

47. ஒரே தங்கம் பற்பல அணிபணிகள் ஆகிறது. எல்லாம் ஒன்று என்ற தன்மையும் இவ்வாறே.

48. கறந்த பால்மு லைபுகா
கடைந்த வெண்ணெய் மோர்புகா
உடைந்து போன சங்கினோசை
உயிர்க ளும்உ டற்புகா
விரிந்த பூஉ திர்ந்தகாயும்
மீண்டு போய்ம ரம்புகா
இறந்த வர்பி றப்பதில்லை
இல்லை இல்லை இல்லையே.

49. தரையி னிற்கி டந்தபோது
அன்று தூமை யென்றிலீர்
துறைய றிந்து நீர்குளித்தது
அன்று தூமை யென்றிலீர்
பறைய றிந்து நீர்பிறந்தது
அன்று தூமை யென்றிலீர்
புரையி லாத ஈசரோடு
பொருந்து மாற தெங்ஙனே.

50. தூமை தூமை என்றுநீர்
துவண்ட லையும் ஏழைகாள்
தூமை யான பெண்ணிருக்கத்
தூமை போன தெவ்விடம்
ஆமை போல முழுகிவந்து
அனேக வேதம் ஓதுறீர்
தூமை யும்தி ரண்டுருண்டு
சொற்கு ருக்கள் ஆனதே.

---

48. உடம்புக்குள்ளிருந்து வெளிவருகிற இயற்பொருள் எதுவும் மீண்டும் உட்செல்வதில்லை. செலுத்தவும் முடியாது. இவ்வாறே பிணத்துக்குள் மறுபடியும் அதே உயிரைப் புகுத்த முடியாது.

49. பெண்ணுடலின் படைப்பியலுள்ள ஓர் அடிப்படையான நுட்பத்தை இந்தப் பாடல் இயம்புகிறது. 'தூமை' என்ற பொருளின் உட்கிடையே யோகியான ஞானகுருவின் வாயிலாக உணர்த்த உணரவேண்டும். சித்தர் ஞானத்தின் இரகசியக் கல்வியிலே இது ஒரு முக்கியமான பாடமாகும்.

50. இலிங்கமும் ஆவுடையும் என்பது ஒரு பெரிய ஞான இரகசியம். பரியங்கி யோகம் என்ற பகுதியிலே இதன் உட்பொருள் காணலாம்.

51. சொற்கு ருக்கள் ஆனதும்
சோதி மேனி ஆனதும்
மெய்க்கு ருக்கள் ஆனதும்
வேண பூசை செய்வதும்
சற்கு ருக்கள் ஆனதும்
சாத்தி ரங்கள் சொல்வதும்
மெய்க்கு ருக்கள் ஆனதும்
திரண்டு ருண்ட தூமையே.

52. கைவ டங்கள் கொண்டுநீர்
கண்சி மிட்டி நிற்கிறீர்
எவ்வி டங்கள் கண்டுநீர்
எண்ணி யெண்ணிப் பார்க்கிறீர்?
பொய்யு ணர்ந்த சிந்தையைப்
பொருந்தி நோக்க வல்லிரேல்
மெய்க டிந்த தும்முளே
விரைந்து கூறல் ஆகுமே.

53. ஆடு காட்டி வேங்கையை
அகப்ப டுத்து மாறுபோல்
மாடு காட்டி என்னைநீ
மதிம யக்கல் ஆகுமோ
கோடு காட்டி யானையைக்
கொன்று ரித்த கொற்றவா
வீடு காட்டி என்னைநீ
வெளிப்ப டுத்த வேணுமே.

---

51. 'குரு' என்ற சொல்லுக்கு ஒளி என்பது ஒரு ஞானப் பொருளாகும். மனிதக் கருவுக்கு இடமாக அமைகிற உறுப்புக்களின் ஆற்றலுக்குள்ளே தேவதைகள் அமர்ந்துள்ளன. இதை உணர்த்துபவனே நேர்முக ஆசான்.

52. வாயினால் முணுமுணுப்பதால் மட்டும் சித்தி ஏற்படுவதில்லை. ஒவ்வொரு சொல்லுக்கும் அதன் தோற்ற மூலமான அதிர்விடம் உண்டு. ஆறு ஆதார நிலைகளின் நுட்பத்தை அறிந்து இதைக் காணலாம்.

53. உலக இச்சைகளைக் காட்டி மெய்யை மறைப்பதே திரோதான சக்தி என்னும் கரப்பு! அதைப் புரிந்து மெய்யை உணர்வதே ஞானமாகும்.

54. இடத்த துன்கண் சந்திரன்
வலத்த துன்கண் சூரியன்
இடக்கை சங்கு சக்கரம்
வலக்கை சூல மான்மழு
எடுத்த பாதம் நீண்முடி
எண்டி சைக்கும் அப்புறம்
உடற்க லந்து நின்றமாயம்
யாவர் காண வல்லரே.

55. நாழி யப்பும் நாழியுப்பும்
நாழி யான வாறுபோல்
ஆழி யோனும் ஈசனும்
அமர்ந்து வாழ்ந்தி ருந்திடம்
ஏறி லேறும் ஈசனும்
இயங்கு சக்ர தரனையும்
வேறு வேறு பேசுவோர்
வீழ்வார் வீண்ந ரகிலே.

56. தில்லை நாய கன்அவன்
திருவ ரங்க னும்மவன்
எல்லை யான புவனமும்
ஏக முத்தி யானவன்
பல்லு நாவும் உள்ளபேர்
பகுந்து கூறி மகிழுவார்
வல்ல பங்கள் பேசுவார்
வாய்பு ழுத்து மாய்வரே.

---

54. இடமும் வலமும் சகமார்க்கத்தாரின் யோக நிலைகள். இந்த இரகசியங்களை உணர்ந்தால் சங்கரநாரண தத்துவமும் அர்த்த நாரி தத்துவமும் ஒன்றே என்பது புலனாகும். இதன் நுட்பம் முன் பகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளது.

55. சிவவாக்கியர் வரலாற்றுக்கு இந்தப் பாடல் ஓர் அகச்சான்றாக அமைகிறது. நாழி உப்பும், நாழித் தண்ணீரும் கலந்து நாழி உப்புத் தண்ணீர் என்ற கணக்குள்ளே சித்தர்களின் சாங்கியம் அடங்கியுள்ளது. சிவவாக்கியரும் திருமழிசையும் ஒன்றிய குரல் இது!.

56. ஒருமைப்பாடு என்ற பேரானந்த ஒடுக்கத்தின் பேரின்பத்தை அனுபவித்தவர் சிவவாக்கியர். அந்த ஒருமைக்கு மாறான புன்மைப் பேச்சுகளை வெகுண்டு சாடுகிறார் இந்த மகான்! அந்தச் சீற்றத்துக்கு அடிப்படையாக அமைந்த யோக இரகசியத்தை உணர்ந்தால் இந்தச் சீற்றத்தில் மிகையில்லை என்று உணர்வோம்.

57. எத்தி சைக்கும் எவ்வுயிர்க்கும்
எங்க ளப்பன் எம்பிரான்
முத்தி யான வித்துளே
முளைத்தெ ழுந்த அச்சுடர்
சித்த மும்தெ ளிந்துவேத
கோயி லும்தி றந்தபின்
அந்த னாடல் கண்டபின்
அடங்க லாடல் காணுமே.

58. உற்ற நூல்கள் உம்முளே
உணர்ந்து ணர்ந்து பாடுவீர்
பற்ற றுத்து நின்றநீர்
பராப ரங்கள் எய்துவீர்
செற்ற மாவை யுள்ளரைச்
செருக்க றுத்தி ருத்திடில்
சுற்ற மாக வும்முளே
சோதி யென்றும் வாழுமே.

59. போத டாவெ ழுந்ததும்
புனல தாகி வந்ததும்
தாத டாபு குந்ததும்
தான டாவி ளைந்ததும்
ஓத டாவ தஞ்சுமூன்றும்
ஒன்ற தான அக்கரம்
ஓத டாஇ ராமராம
ராம வென்னும் நாமமே.

---

57. உருக்கமான பாடல். கோயிலும் குளங்களும் 'ஏதடா' என்று கேட்கிற அதே குரல்தான் இந்த உருக்கத்தையும் வெளியிடுகிறது. பொருள் என்ன? எந்த நிலையிலிருந்து வருகிறது என்பதே பாடலின் பொருண்மையாகும்.

58. உள்முகமான அனுபவம் எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை ஆழமான உணர்வுடன் உணர்த்துகிறது.

59. மனம் என்பது ஒரு மலர். அது மலர்கிற நிலையே ஞானம். 'பூவினிற் கந்தம் பொருந்தியவாறுபோல், சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது' என்று திருமூலர் பாடுவது, புறத்தே போகும் மனம் உட்புகுந்து பெறுகிற ஆன்ம ஞான இன்பத்தையே. உணர்ச்சிக்கு இன்பம் உண்டு என்பது உலக அனுபவம். அறிவுக்கு இன்பம் உண்டு என்பது அக அனுபவம். அப்போது அறிவு அறியாமை என்ற மாறுபாடு மாய்ந்து அந்த மயக்கிலே சுரக்கிற பேரின்பமாகும். ராமநாமமும் சிவாயமும் அதுவே!

60. அகார மென்ற அக்கரத்தில்
அவ்வு வந்து தித்ததோ
உகார மென்ற அக்கரத்தில்
உப்பு வந்து தித்ததோ
அகார மும்உ காரமும்
சிகார மின்றி நின்றவோ
விகார மற்ற யோகிகாள்
விரித்து ரைக்க வேணுமே.

61. அறத்தி றங்க ளுக்குநீ
யகண்ட மெண்டி சைக்கும்நீ
திறத்தி றங்க ளுக்குநீ
தேடு வார்கள் சிந்தைநீ
உறக்கம் நீஉ ணர்வுநீ
உட்க லந்த ஜோதிநீ
மறக்கொ ணாத நின்கழல்
மறப்பி னுங்கு டிகொளே.

62. அண்டம் நீய கண்டம்நீ
யாதி மூல மானநீ
கண்டம் நீக ருத்துநீ
காவி யங்க ளானநீ
புண்ட ரீக மன்றுளே
புணரு கின்ற புண்ணியர்
கொண்ட கோல மானநேர்மை
கூர்மை யென்ன கூர்மையே.

---

60. அ, உ என்ற எழுத்துக்களின் நிலையை அவ்வையின் குறளிலே பார்த்துள்ளோம். ம், சி போன்ற ஒலிகளும் அங்கே காண்க.

61. உறக்கமும் விழிப்பும், அறிவும் திறமும் எல்லாம் இறைமயமான நிலையிலே ஒரு ஞானியின் வேட்கை எது? கடவுளிடம் செய்கிற விண்ணப்பம் அதுவே!

62. 'புண்டரீக மன்றம்' என்பது ஆன்ம கமலமாகிய உள்நெகிழ்ச்சி! அந்தச் சிற்றம்பலத்திலே இறைமையைப் புணர்கிறவனே ஞானசித்தன்! அது எப்போது பெற்ற நிலை! புண்ணிய நிலை என்று சித்தர்கள் அழைப்பது அந்த உச்சநிலையையே!

63. மைய டர்ந்த கண்ண ரினார்
மயங்கி டும்ம யக்கிலே
மையி றந்து கொண்டுநீங்கள்
அல்ல லற்றி ருப்பீர்காள்
மெய்ய டர்ந்த சிந்தையால்
விளங்கு ஞானம் எய்தினால்
உய்ய டர்ந்து கொண்டுநீங்கள்
ஊழி காலம் வாழ்விரே.

64. கருவி ருந்த வாசலாற்
கலங்கு கின்ற ஊமைகாள்
குருவி ருந்து சொன்னவார்த்தை
குறித்து நோக்க வல்லிரேல்
உருவி லங்கு மேனியாகி
உம்ப ராகி நின்றுநீர்
திருவி லங்கு மேனியாகிச்
சென்று கூட லாகுமே.

65. தீர்த்த மாட வேணுமென்று
தேடு கின்ற தீனர்காள்
தீர்த்த மாடல் எவ்விடந்
தெளிந்து நீர்இ யம்புவீர்
தீர்த்த மாக உம்முளே
தெளிந்து நீர்இ ருந்தபின்
தீர்த்த மாக உள்ளதுஞ்
சிவாய அஞ்செ ழுத்துமே.

---

63. பெண்ணாசை என்ற மயக்கு நீங்கினால் அந்த ஆசை அத்தனையும் சேர்ந்து, அத்தனையே - அத்தனாகிய அம்மையப்பனையே - பற்றிக்கொள்ளும். அத்தகைய ஞானியர்கள் மரணமிலாப் பெருவாழ்வில் இடமும் காலமும் கடந்து வாழ்கிறார்கள்.

64. சிற்றின்பத்தில் உழலாமல் ஆசான் உணர்த்திய நிலையிலே ஒன்றி இருக்க வல்லவர்கள் அமரநிலை எய்துகிறார்கள். இறைவனைக் கூடுகிறார்கள்.

65. 'உள்ளத்தி னுள்ளே உளபல தீர்த்தங்கள்' என்றார் திருமூலர். உடம்புக்குள் உள்ள பொய்கைக்குள் விழுந்து புகுந்து நீராட வல்லவர்களின் தன்மை என்ன? அதைப் பாடுகிறார் சிவவாக்கியர்.

66. கழுத்தை யும்நி மிர்த்திநல்ல
கண்ணை யும்வி ழித்துநீர்
பழுத்து வாய்வி ழுந்துபோன
பாவ மென்ன பாவமே
அழுத்த மான வித்திலே
அனாதி யாய்இ ருப்பதோர்
எழுத்தி லாஎ ழுத்திலே
இருக்க லாம்இ ருத்துமே.

67. கண்டு நின்ற மாயையும்
கலந்து நின்ற பூதமும்
உண்டு றங்கு மாறுநீர்
உணர்ந்தி ருக்க வல்லிரேல்
பண்டை யாறும் ஒன்றுமாய்
பயந்த வேத சுத்தனாய்
அண்ட முத்தி யாகிநின்ற
ஆதி மூல மூலமே.

68. ஈன்ற வாச லுக்கிரங்கி
எண்ணி றந்து போவிர்காள்
கான்ற வாழை மொட்டலர்ந்த
கார ணம்அ றிகிலீர்
நான்ற வாச லைத்திறந்து
நாடி நோக்க வல்லிரேல்
தோன்று மாயை விட்டொழிந்து
சோதி வந்து தோன்றுமே.

---

66. ஒடுங்கல் என்றும் நிட்டை என்றும் உடம்புகொண்டு ஏதேதோ செய்கிறார்கள். மெய்யான ஒழுக்கமும், மன ஒருமையும் எவ்வாறு என்பதை உணர்த்தியவாறு.

67. எது பொய், எது மெய் என்பதைப் பகுத்தறிவதே பேரறிவு. அதைப் பாடுகிறது இந்தக் கவி.

68. சிற்றின்ப வாசலிலேயே பழியாகக் கிடப்பது மானிட இயல்பு. அதை விட்டொழிந்து ஞானவாசலாகிய உள்வாசலைத் திறந்து உட்புகுந்து பார்க்க வல்லமை பெற்றுவிட்டோமானால், மாயம் நீங்கி இறையொளியைக் காண்போம். அருட் பெருஞ்ஜோதி காட்சி தரும். அதுவே அமரவாழ்வாம்.!

63. மைய டர்ந்த கண்ண ரினார்
மயங்கி டும்ம யக்கிலே
மையி றந்து கொண்டுநீங்கள்
அல்ல லற்றி ருப்பீர்காள்
மெய்ய டர்ந்த சிந்தையால்
விளங்கு ஞானம் எய்தினால்
உய்ய டர்ந்து கொண்டுநீங்கள்
ஊழி காலம் வாழ்விரே.

64. கருவி ருந்த வாசலாற்
கலங்கு கின்ற ஊமைகாள்
குருவி ருந்து சொன்னவார்த்தை
குறித்து நோக்க வல்லிரேல்
உருவி லங்கு மேனியாகி
உம்ப ராகி நின்றுநீர்
திருவி லங்கு மேனியாகிச்
சென்று கூட லாகுமே.

65. தீர்த்த மாட வேணுமென்று
தேடு கின்ற தீனர்காள்
தீர்த்த மாடல் எவ்விடந்
தெளிந்து நீர்இ யம்புவீர்
தீர்த்த மாக உம்முளே
தெளிந்து நீர்இ ருந்தபின்
தீர்த்த மாக உள்ளதுஞ்
சிவாய அஞ்செ ழுத்துமே.

---

63. பெண்ணாசை என்ற மயக்கு நீங்கினால் அந்த ஆசை அத்தனையும் சேர்ந்து, அத்தனையே - அத்தனாகிய அம்மையப்பனையே - பற்றிக்கொள்ளும். அத்தகைய ஞானியர்கள் மரணமிலாப் பெருவாழ்வில் இடமும் காலமும் கடந்து வாழ்கிறார்கள்.

64. சிற்றின்பத்தில் உழலாமல் ஆசான் உணர்த்திய நிலையிலே ஒன்றி இருக்க வல்லவர்கள் அமரநிலை எய்துகிறார்கள். இறைவனைக் கூடுகிறார்கள்.

65. 'உள்ளத்தி னுள்ளே உளபல தீர்த்தங்கள்' என்றார் திருமூலர். உடம்புக்குள் உள்ள பொய்கைக்குள் விழுந்து புகுந்து நீராட வல்லவர்களின் தன்மை என்ன? அதைப் பாடுகிறார் சிவவாக்கியர்.

66. கழுத்தை யும்நி மிர்த்திநல்ல
கண்ணை யும்வி ழித்துநீர்
பழுத்து வாய்வி ழுந்துபோன
பாவ மென்ன பாவமே
அழுத்த மான வித்திலே
அனாதி யாய்இ ருப்பதோர்
எழுத்தி லாஎ ழுத்திலே
இருக்க லாம்இ ருத்துமே.

67. கண்டு நின்ற மாயையும்
கலந்து நின்ற பூதமும்
உண்டு றங்கு மாறுநீர்
உணர்ந்தி ருக்க வல்லிரேல்
பண்டை யாறும் ஒன்றுமாய்
பயந்த வேத சுத்தனாய்
அண்ட முத்தி யாகிநின்ற
ஆதி மூல மூலமே.

68. ஈன்ற வாச லுக்கிரங்கி
எண்ணி றந்து போவிர்காள்
கான்ற வாழை மொட்டலர்ந்த
கார ணம்அ றிகிலீர்
நான்ற வாச லைத்திறந்து
நாடி நோக்க வல்லிரேல்
தோன்று மாயை விட்டொழிந்து
சோதி வந்து தோன்றுமே.

---

66. ஒடுங்கல் என்றும் நிட்டை என்றும் உடம்புகொண்டு ஏதேதோ செய்கிறார்கள். மெய்யான ஒழுக்கமும், மன ஒருமையும் எவ்வாறு என்பதை உணர்த்தியவாறு.

67. எது பொய், எது மெய் என்பதைப் பகுத்தறிவதே பேரறிவு. அதைப் பாடுகிறது இந்தக் கவி.

68. சிற்றின்ப வாசலிலேயே பழியாகக் கிடப்பது மானிட இயல்பு. அதை விட்டொழிந்து ஞானவாசலாகிய உள்வாசலைத் திறந்து உட்புகுந்து பார்க்க வல்லமை பெற்றுவிட்டோமானால், மாயம் நீங்கி இறையொளியைக் காண்போம். அருட் பெருஞ்ஜோதி காட்சி தரும். அதுவே அமரவாழ்வாம்.!

69. உழலும் வாச லுக்கிரங்கி
ஊச லாடும் ஊமைகாள்
உழலும் வாச லைத்திறந்து
உண்மை சேர எண்ணிலீர்
உழலும் வாச லைத்திறந்து
உண்மை நீர்உ ணர்ந்தபின்
உழலும் வாச லுள்ளிருந்து
உண்மை தானு மாவிரே.

70. மூல நாடி தன்னிலே
முளைத்தெ ழுந்த சோதியை
நாலு நாழி யும்முளே
நாடி யேஇ ருந்தபின்
பால னாகி வாழலாம்
பறந்து போக யாக்கையும்
ஆல முண்ட கண்டராணை
அம்மை யாணை உண்மையே.

71. இருக்க வேணும் என்றபோது
இருக்க லாய்இ ருக்குமோ
மரிக்க வேணும் என்றலோ
மண்ணு ளேப டைத்தனர்
சுருக்க மற்ற தம்பிரான்
சொன்ன அஞ்செ ழுத்தையும்
மரிக்கு முன்வ ணங்கிடீர்
மருந்தெ னப்ப தங்கெடீர்.

---

69. உழலும் வாசலிலே கிடப்பது மானிடம்! அந்த வாசலை விட்டு உண்மை வாசலை நாடினால் மெய்ஞ்ஞானமும் மெய்யின்பமும் உண்டாம்.

70. மூலக்கனல், மூலநாடி, குண்டலினிப் பயிற்சி ஆகியன பற்றிய குறிப்புக்கள் முன்பகுதிகளிலே இந்த விரிவை விளக்கியுள்ளமை காண்க.

71. மரணம் என்பது ஜனனத்தின் பயன் என்பது ஞானமொழி! பிறப்பின் நோக்கம் இறப்பு என்பர் சித்தர்கள். இதைக் கடந்து நிற்பது எது? மருந்து என்னும் அமுதம். அதை உண்டு அமரராகும் சஞ்சீவி எது? அஞ்செழுத்து என்ற சூக்குமம் அது!

72. அம்பத் தொன்றில் அக்கரம்
அடங்க லோர்எ ழுத்துமோ
விண்ப ரந்த மந்திரம்
வேத நான்கும் ஒன்றலோ
விண்ப ரந்த மூலஅஞ்
செழுத்து ளேழு ளைத்ததே
அங்க லிங்க பீடமாய்
அமர்ந்த தேசி வாயமே.

73. சிவாய மென்ற அட்சரம்
சிவனி ருக்கும் அட்சரம்
உபாய மென்று நம்புதற்கு
உண்மை யான அட்சரம்
கபாட மற்ற வாயிலைக்
கடந்து போன வாயுவை
உபாய மிட்ட ழைக்குமே
சிவாய அஞ்செ ழுத்துமே.

74. உருவு மல்ல வெளியுமல்ல
ஒன்றை மேவி நின்றதல்ல
மருவு வாசல் சொந்தமல்ல
மற்ற தல்ல அற்றதல்ல
பெரிய தல்ல சிறியதல்ல
பேச லான தானுமல்ல
உரிய தாகி நின்றநேர்மை
யாவர் காண வல்லரே.

---

72. சக்கரங்களில் எழுத்துக்களை அடைத்து எந்திரபூசனை செய்வது கிரியை என்னும் வழி பற்றிய முறையாகும். இதையே பாவனையிலே இயற்றி நுட்பமான சூக்கும எந்திர பூசனை செய்வது ஞானி செயல்!

73. யோகப் பயிற்சி முறையிலே எழுத்துக்களை அடைப்பது என்பது அந்தந்த ஆதார நிலைகளிலே நின்று செய்கிற பயிற்சியாகும். இது யோகிகள் கையாள்கிற அஞ்செழுத்து!

74. இது ஞானி செய்கிற அஞ்செழுத்துப் பூசனை. எந்தக் கருவியும் பொருளும் இல்லாமல் தானே பொருளாகவும் தனது உள்ளமே கருவியாகவும் கொண்டு இயற்றுகிற ஞானமுறை அது.

75. ஆத்து மாஅ னாதியோ
அனாத்து மாஅ னாதியோ
பூத்தி ருந்த ஐம்பொறி
புலன்க ளும்அ னாதியோ
தாக்க மிக்க நூல்களும்
சதாசி வம்அ னாதியோ
வீக்க வந்த யோகிகாள்
விரைந்து ரைக்க வேணுமே.

76. அறிவி லேபி றந்திருந்து
ஆக மங்கள் ஓதுநீர்
நெறியி லேம யங்குகின்ற
நேர்மை யொன்ற றிகிலீர்
உறியி லேத யிரிருக்க
வூர்பு குந்து வெண்ணெய்தேடு
அறிவி லாத மாந்தரோடு
அணுகு மாற தெங்ஙனே.

77. இருவ ரங்க மும்பொ
ருந்தி என்புருகி நோக்கலீர்
உருவ ரங்க மாகிநின்ற
உண்மை யொன்றை யோர்கிலீர்
கருவ ரங்க மாகிநின்ற
கற்ப னைக டந்தபின்
திருவ ரங்க மென்றுநீர்
தெரிந்தி ருக்க வல்லிரே.

---

75. தோற்றத்தைக் கடந்து நிற்பது எது? உயிரா அல்லது அறிவா அல்லது ஐம்புலனா? அறிவு தந்த நூல்களா அல்லது அறிவுக்கு அறிவான பரம்பொருளா,

76. நமக்குள்ளேயே எல்லாம் பொதிந்துள்ளது - உறியிலே தயிர் உள்ளவாறு! அதைக் கடைந்தால் வெண்ணெய் கிடைக்கும்! இதை மறந்துவிட்டு வெண்ணெயைத் தேடி ஊர்சுற்றுவது எத்தகைய பேதமை!

77. திருவரங்கம் எது? உடம்பே அரங்கம் ஆகி நின்ற உண்மை தெரியாமல் உழல்கிறீர் - என்று இரக்கப்படுகிறார் சித்தர். பாடலிலே இருவரங்கம், உருவரங்கம், கருவரங்கம், திருவரங்கம் என்னும் முற்றெதுகைகளிலே கவிப்பண்போடு ஆழ்ந்த பொருண்மையும் கூடியுள்ளன.

78. கருக்கு ழியில் ஆசையாய்க்
காத லூற்று நிற்கிறீர்
கருக்கி ருக்கும் ஏழைகாள்
குலாவு கின்ற பாவிகாள்
திருத்தி ருத்தி மெய்யினாற்
சிவந்த அஞ்செ ழுத்தையும்
உருக்க ழிக்கும் முன்னமே
உரைஉ ணர்ந்து கொள்ளுதே.

79. மண்ணி லேபி றக்கவும்
வழக்க லாது ரைக்கவும்
எண்ணி லாத கோடிதேவர்
என்ன துன்ன தென்னவும்
கண்ணி லேகன் மணியிருக்கக்
கண்ம றைந்த வாறுபோல்
எண்ணில் கோடி தேவரும்
இதன்க ணால்வி ழிப்பதே.

80. மண்க லங்க வர்ந்தபோது
வைத்து வைத்த டுக்குவார்
வெண்க லங்க வர்ந்தபோது
வேணு மென்று பேணுவர்
நண்க லங்க வர்ந்தபோது
நாறு மென்று போடுவார்
எண்க லந்து நின்றமாயம்
என்ன மாயம் ஈசனே.

---

78. இந்த உடலம் அழியும் முன்பாக உடம்பின் ஞானநிலைகளைத் தெரிந்து செயற்பட வேண்டும் என்றபடி.

79. எல்லாம் உடனிருக்க ஏதுமற்றவர்போல் ஏழைமை நிலை அடைகிற புல்லறிவை வேறு எவ்வாறு கூறுவது?

80. மண்பானையை ஓரளவு பார்த்துக்கொள்கிறோம். வெண்கலத்தை மேலும் பேணுகிறோம். விலைக்கு வாங்குகிற பாண்டத்துக்கு வெளியே எறியாமல் இத்தனை மதிப்பு. ஆனால் நம்முடனேயே ஒட்டிய கலமான இந்த உடம்பாகிய பானை உடைந்தபோது, வைத்திருந்தால் நாற்றம் எடுக்கும் என்று உடனேயே அப்புறப் படுத்துகிறோம். ஆகா! இது என்ன மாயம்!

81. மிக்க செல்வ நீபடைத்த
விறகு மேவிப் பாவிகாள்
விறகு டன்கொ ளுத்துமேனி
வெந்து போவ தறிகிலீர்
மக்கள் பெண்டீர் சுற்றம்என்னும்
மாயை காணு மிவையெலாம்
மறலி வந்த ழைத்தபோது
வந்து கூட லாகுமோ.

82. ஒக்க வந்து மாதுடன்
செறிந்தி டத்தில் அழகியே
ஒருவ ராகி இருவராகி
இளமை பெற்ற ஊரிலே
அக்க ணிந்து கொன்றைசூடும்
அம்ப லத்தில் ஆடுவார்
அஞ்செ ழுத்தை ஓதிடில்
அனேக பாவம் அகலுமே.

83. மாடு கன்று செல்வமும்
மனைவி மைந்தர் மகிழவே
மாட மாளி கைப்புறத்தில்
வாழு கின்ற நாளிலே
ஓடி வந்து காலதூதர்
சடுதி யாக மோதவே
உடல்கி டந்து உயிர்கழன்ற
உண்மை கண்டும் உணர்கிலீர்

---

81. உடம்பின் நிலையாமை கூறி உடம்புறவைப் பேசுகிறது இந்தப் பாடல்.

82. பாவத்திற்கு விடுவிப்பு எது? ஐந்தெழுத்தே.

83. யாக்கை நிலையாமையைப் பேசுகிற ஞானமொழி! இந்த வகையான பாடல்கள் பிற்காலத்து எழுந்த சித்தரிலக்கியத்தும் பற்பலவாகக் காண்கிறோம். மூன்றாம் பகுதியிலே பட்டினத்தடிகளின் பாடல் என்ற தலைப்பில் இந்தக் கவிப்பொருள் பற்றி விரிவாகவே விளக்கம் சொல்லப் பட்டிருப்பது இந்தப் பாடலுக்கும் இதுபோன்ற நிலையாமை குறித்த பாடல்களுக்கும் பொருந்தும்.

84. பாடு கின்ற தும்புருக்கண்
தங்க ணாக்க ளுக்கியே
பாட லாத கன்மகூட்டம்
இட்ட எங்கள் பரமனே
நீடு செம்பொன் அம்பலத்துள்
ஆடு கொண்ட வப்பனே
நீல கண்ட காலகண்ட
நித்தி யகல் யாணனே.

85. கான மற்ற காட்டகத்தில்
வெந்தெ ழுந்த நீறுபோல்
ஞான மற்ற நெஞ்சகத்தில்
நல்ல தேதும் இல்லையே
ஊன மற்ற சோதியோடு
உணர்வு சேர்ந்த டக்கினால்
தேன கத்தில் ஊறல்போல்
தெளிந்த தேசி வாயமே.

86. பருகி யோடி யும்முளே
பறந்து வந்த வெளிதனை
நிருவி யேநி னைந்துபார்க்கில்
நின்ம லம்அ தாகுமே
உருகி யோடி யெங்குமாய்
உதய சோதி தன்னுளே
கருத டாஉ ணக்குநல்ல
கார ணம்ம தாகுமே.

---

84. இது ஒரு அடுக்குமொழியாலான சந்த விருத்தம். மற்றப் பாடல்களின் பாங்கினின்று சற்றே மாறுபட்ட விளிமொழிகளால் ஆன விருத்தப்பா!

85. உடம்புக்குள்ளே செய்கிற தவத்தின் இன்பம் தேனுக்குள் சுரக்கின்ற சுவை போன்றது.

86. இந்த உள்முக ஒடுக்கம் எத்துணை இன்பமானது என்பதை உணர்ச்சிப் பெருக்கோடு ஞானி கூறுகிறார். பாடலில் வருகிற "அடா" அந்தக் களிப்பை வெளிப்படுத்துகிறது.

87. சோதி யாதி யாகிநின்ற
சுத்த முப்ப வித்துவந்து
போதி யாத போதகத்தை
ஓது கின்ற பூரணா
வீதி யாக ஓடிவந்து
விண் ணடியின் ஊடுபோய்
ஆதி நாதன் நாதனென்று
அனந்த கால முள்ளதே.

88. இறைவனால் எடுத்த மாடத்து
தில்லை யம்ப லத்திலே
அறிவினால் அடுத்த காயம்
அஞ்ச னால்அ மர்ந்ததே
கருவில் நாதம் உண்டுபோய்
கழன்ற வாசல் ஒன்பதும்
ஒருவராய் ஒருவர் கோடி
உள்ளு ளேய மர்ந்ததே.

89. நெஞ்சி லேஇ ருந்திருந்து
நெக்கி யோடும் வாயுவை
அன்பி லால்இ ருந்துநீர்
அருகி ருத்த வல்லிரேல்
அன்பர் கோயில் காணலாம்
அகன்று மெண்டி சைக்குளே
தும்பி யோடி யோடியே
சொல்ல டாசு வாமியே.

---

87. இது ஒரு தன்னனுபவ வெளியீடு.

88. உடம்புக்குள் நடைபெறுகிற தில்லையம்பலக் கூத்தை ஞானக் கவிதையிலே பேசுகிறார் சிவவாக்கியர். ஞானமும் ஆனந்தமும் கூடுகிற ஆடலின்பம் என்பது இதுவே.

89. 'உருத்தெரித்த நாடியில்' என்று யோகநிலையைப் பேசுகிற பாடல் போலவே' இதுவும் காய வேள்வியைப் பேசுகிறது. அந்த ஆனந்தம் கவி வடிவிலே உருவெடுத்து ஒலிசெய்கிறது என்றால் பொருந்தும்.

90. தில்லை யைவ ணங்கிநின்று
தெண்ட னிட்ட வாயுவை
எல்லை யைக்க டந்துநின்று
ஏக போக மாய்கையோடு
எல்லை யைக்க டந்துநின்று
சொர்க்க லோக வெளியிலே
வெள்ளை யுஞ்சி வப்புமாகி
மெய்க லந்து நின்றதே.

91. உடம்பு யிர்எ டுத்ததோ
உயிரு டம்பெ டுத்ததோ
உடம்பு யிர்எ டுத்தபோ
துருவ மேது செப்புவீர்
உடம்பு யிர்இ றந்தபோது
உயிரி றப்ப தில்லையே
உடம்பு மெய்ம்ம றந்துகண்டு
உணர்ந்த ஞானம் ஓதுமே.

92. அவ்வெ னும்எ ழுத்தினால்
அகண்ட மேழும் ஆக்கினாய்
உவ்வெ னும்எ ழுத்தினால்
உருத்த ரித்து நின்றனை
மவ்வெ னும்எ ழுத்தினால்
மயங்கி னார்கள் வையகம்
அவ்வு முவ்வும் அவ்வுமாய்
அமர்ந்த தேசி வாயமே.

---

90. இது முற்றிலும் சகமார்க்கப் பயிற்சியாகும். ஞானசர நூலில் இதன் நுட்பம் ஒருவாறு சொல்லப்பட்டது. இதன் விரிவு செம்பொருள் கூறுகிற பகுதியிலும் ஆராயப்பட்டது. ஒளிக்காட்சியை உள்ளடக்கிய யோக அனுபவம் இது.

91. உடம்பும் உயிரும் ஒன்று கூடிய மூலகாரணத்தை ஆய்வு செய்கிற கேள்வி இது. தானே பார்த்துத் தனக்குள்ளே தெளிய வேண்டிய மெய்யறிவு என்பதே இதன் விடை.

92. அ, உ, ம் என்ற எழுத்தின் சேர்க்கை குறித்து, ஓங்காரப் பிரணவ விளக்கத்தில் சிவயோகியாரின் உரைப்பகுதியைக் காண்க.

93. மந்தி ரங்கள் உண்டுநீர்
மயங்கு கின்ற மானிடீர்
மந்தி ரங்கள் ஆவது
மறத்தி லூறல் அன்றுகாண்
மந்தி ரங்கள் ஆவது
மதர்த்தெ ழுந்த வாயுவே
மந்தி ரத்தை உண்டவர்க்கு
மான மேதும் இல்லையே.

94. என்ன வென்று சொல்லுவேன்
இலக்க ணம்இ லாததைப்
பன்னு கின்ற செந்தமிழ்ப்
பதங்க டந்த பண்பென
மின்ன கத்தில் மின்னொடுங்கி
மின்ன தான வாறுபோல்
என்ன கத்துள் ஈசனும்
யானு மல்ல தில்லையே.

95. ஆல வித்தில் ஆலொடுங்கி
ஆல மான வாறுபோல்
வேறு வித்தும் இன்றியே
விளைந்து போகம் எய்திடீர்
ஆறு வித்தை யோர்கிலீர்
அறிவி லாத மாந்தரே
பாரு மித்தை யும்முளே
பரபப்பி ரம்ம மானதே.

---

93. பூசனை செய்கிற சற்புத்திரனுக்கும், ஆதார நிலைகளில் யோக சாதனை புரிகிற சகனுக்கும் உள்ள வேறுபாடு கூறுவதே இப்பாடலின் மையக் கருத்தாகும்.

94. அரிய பாடல்; ஞானியின் வியப்புக்கு உள்ள அழகே அழகு! மொழிகடந்த பண்பை எப்படிப் பேசுகிறது இந்தக் கவிமொழி! மின்னகத்தில் மின் ஒடுங்கி என்ன ஆகிறது? மின்னல் ஆகிறது! அது போலவே என் அகத்தில் ஈசன்! ஆகா, என்ன அழகிய உவமை பாருங்கள்.

95. ஆலம் வித்துக்குள்ளே ஆலமரம் ஒடுங்கி உட்கார்ந்திருக்கிறது. பரப்பிரும்மம் இந்த உடம்புக்குள் ஒடுங்கியிருப்பதை வேறு எப்படிச் சொல்வது! ஞானி கவிஞனாகும்போது அவனுடைய கவிமொழி எப்படி வருகிறது பாருங்கள்.

96. அவ்வு தித்த மந்திரம்
மகார மாய்உ காரமாய்
எவ்வெ ழுத்து அறிந்தவர்க்கு
எழுபி றப்பது இங்கிலை
சவ்வு தித்த மந்திரத்தை
தற்ப ரத்தி ருத்தினால்
அவ்வு மிவ்வும் மவ்வுமாய்
அமர்ந்த தேசி வாயமே.

97. நவ்வி ரண்டு காலதாய்
நவின்ற மவ்வ யிறதாய்
சிவ்வி ரண்டு தோளதாய்
சிறந்த வவ்வு வாயதாய்
அவ்வி ரண்டு கண்ணதாய்
எழுந்து நின்ற நேர்மையிற்
செவ்வை யொத்து நின்றதே
சிவாய மஞ்செ ழுத்துமே.

98. இரண்டு மொன்றும் மூலமாய்
இயங்கு சக்க ரத்துளே
சுருண்டு மூன்று வளையமாய்ச்
சுணங்கு போற்கி டந்தநீ
முரண்டெ ழுந்த சங்கினோசை
மூல நாடி யூடுபோய்
அரங்கன் பட்ட ணத்திலே
அமர்ந்த தேசி வாயமே.

---

95. அட்சரத்தின் நுட்பம் அறிந்து பயின்றவர்கள் பிறப்பிறப்பை வென்று சிவாயமாவார்கள் என்றபடி.

97. மேலே கண்ட அட்சர நுட்பத்தின் விரிவு.

98. பாம்புக்கனல் என்றும், குண்டலினி நெருப்பு என்றும், மண்டலமிட்ட பாம்பு என்றும் பற்பல உருவங்களிலே கூறுகிற ஆன்ம ஆற்றல் படமெடுக்கும் போது என்னென்ன ஓசைகள் எவ்வெப்போது எழுகின்றன என்பதைத் திருமூலர் விரிவாக மொழிகிறார்.

99. கடலிலே திரியு மாமை
கலையி லேறி முட்டையிட்டுக்
கடலிலே திரிந்த போது
ரூப மான வாறுபோல்
மடலுளே யிருக்கு மெங்கள்
மணிய ரங்க சோதியை
உடலுளே நினைந்து நல்ல
உண்மை யான துண்மையே.

100. மூன்று மண்ட லத்திலும்
முட்டி நின்ற தூணிலும்
நான்ற பாம்பின் வாயிலும்
நவின்றெ ழுந்த அட்சரம்
ஈன்ற தாயும் அப்பரும்
எடுத்து ரைத்த மந்திரம்
தோன்று மோர்எ ழுத்துளே
சொல்ல வெங்கு மில்லையே.

101. மூன்று மூன்று மூன்றுமே
மூவர் தேவர் தேடிடும்
மூன்று மஞ்செ ழுத்துமாய்
முழங்கு மவ்வெ ழுத்துளே
ஈன்ற தாயும் அப்பரும்
இயங்கு கின்ற நாதமும்
தோன்று மண்ட லத்திலே
சொல்ல வெங்கு மில்லையே.

---

99. பாவனை என்ற ஆற்றல் எத்தகையது? 'மனம் கொண்டது மாளிகை' என்ற வசனத்தின் தத்துவப் பொருளும் அதுவே. சந்தோக்கிய உபநிடதம் போன்ற வடமொழி நூல்களிலும், பதஞ்சலி யோகசூத்திரத்திலும், மேனாட்டு ஞானிகளின் ஆங்கிலத் தத்துவ ஆய்வுகளிலும் இந்த ஆற்றலை ஒரே குரலில் பேசுகிறார்கள்.

100. உடம்பு உள்ளம் ஆன்மா என அனைத்துலகிலும், பிண்டத்தோடு அண்டத்தும் எல்லாம் ஒன்றாக அளாவிநிற்கும் அதிர்வே இந்த மந்திர எழுத்தாகும்.

101. பருஉடல், நுண்ணுடல் அனைத்தையும் இயக்குகிற ஒளிஉடலும் ஒலி உடலுமாக நிற்பது இதே தத்துவந்தான்.

102. சோறு கின்ற பூதம்போற்
சுணங்கு போற்கி டந்தநீர்
நாறு கின்ற கும்பியின்
நவின்றெ ழுந்த மூடரே
சீறு கின்ற ஐவரைச்
சிணுக்க றுக்க வல்லிரேல்
ஆறு கோடி வேணியார்
ஆறி லொன்றி லாவிரே.

103. வட்ட மென்று நும்முளே
மயங்கி விட்ட தில்வெளி
அட்ட வக்க ரத்துளே
அடக்க மும்ஒ டுக்கமும்
எட்டும் எட்டும் எட்டுமாய்
இயங்கு சக்க ரத்துளே
எட்ட லாமு தித்தெம்பி
ரானை நான்அ றிந்தபின்.

104. பேசு வானும் ஈசனே
பிரம ஞானம் உம்முளே
ஆசை யான ஐவரும்
அலைந்த லைகள் செய்கிறார்
ஆசை யான ஐவரை
அடக்கி யோர்எ ழுத்திலே
பேசி டாதி ருப்பரேல்
நாதம் வந்தொ லிக்குமே.

---

102. ஐவரை வெல்வது என்பது ஐவரின் சிக்கலிலிருந்து விடுபடுவதே ஆகும். ஐவரின் சிணுக்கை அறுப்பது என்பதே தவத்தின் ஆரம்பப் பாடல்.

103. இந்த உடம்புக்குள் உள்ள பயிற்சி நிலைகளை ஆசானிடம் கேட்டறிவதோடு, ஆசானால் தொட்டுணர்த்தப் பெறவேண்டும். அப்போது அடங்குதலும் ஒடுங்குதலும் கைகூடும்.

104. ஐம்புலன் ஒடுங்கும் இடத்தைப் பற்றி நின்றால், கடவுள் ஒலிகள் நம்மோடு பேசக் கேட்கலாம். 'டெலிவிஷன்' அனுபவம் போலே ஒளியில் ஒலி கேட்கும் இன்பம் சித்திக்கும்.

105. நமசி வாய வஞ்செழுத்தும்
நல்கு மேல்நி லைகளும்
நமசி வாய வஞ்சுமஞ்சும்
புராண மான மாயையும்
நமசி வாயம் அஞ்செழுத்தும்
நம்மு ளேஇ ருக்கவே
நமசி வாய வுண்மையை
நன்கு ரைசெய் நாதனே.

106. பரமு னக்கு எனக்குவேறு
பயமி லைப ராபரா
சுரமெ டுத்து நிற்றலுங்
குவித்தி டக்க டவதும்
சிரமு ருகிஅ முதளித்த
சீரு லாவு நாதனே
உரமெ னக்கு நீயளித்த
ஓம்ந மச்சி வாயமே.

107. பச்சை மண்ப துப்பிலே
பழுப்ப திந்த வேட்டுவன்
நித்த மும்நி னைத்திட
நினைந்த வண்ணம் ஆயிடும்
பச்சை மண்இ டிந்துபோய்
பரந்த தும்பி யாயிடும்
பித்தர் காள றிந்துகொள்க
பிரானி ருந்த கோலமே.

---

105. இந்த உடம்பின் நிலைகளைப் படம் வரைந்து காட்டியுள்ள சித்தர் இலக்கியம் ஆய்வு நூலின் முதலாவது பகுதியிலே 344ஆம் பக்கம் பார்க்க.

106. இந்தப் பாடலின் நுட்பத்தை முதலாம் பகுதி 331ஆம் பக்கத்திலுள்ள படம் சித்திரிக்கிறது.

107. உலகம் தோன்றியதும் உயிர் தோன்றியதும் பாவனையிலே என்பது ஆதார ஞானம். நிற்பன, நடப்பன ஆகிய தோற்றங்கள் அனைத்தும் பேருள்ளத்தின் இயக்கமே என்பது மெய்ஞ்ஞானம்.

108. ஒளிய தான காசிமீது
வந்து தங்கு வோர்க்கெலாம்
வெளிய தான சோதிமேனி
விசுவ னாத னானவன்
தெளியு மங்கை யுடனிருந்து
செப்பு கின்ற தாரகம்
வெளிய தோர்இ ராமராம
நாம மிந்த நாமமே.

109. விழியி னோடு புனல்விளைந்த
வில்ல வல்லி யோனியும்
வெளியி லேபி தற்றலாம்
விளைவு நின்ற தில்லையே
வெளிப ரந்த தேகமும்
வெளிக்குள் மூல வித்தையும்
தெளியும் வல்ல ஞானிகள்
தெளிந்தி ருத்தல் திண்ணமே.

110. ஓம்ந மச்சி வாயமே
யுணர்த்து மெய்யு ணர்ந்தபின்
ஓம்ந மச்சி வாயமே
யுணர்ந்து மெய்தெ ளிந்தபின்
ஓம்ந மச்சி வாயமே
யுணர்ந்து மெய்யு ணர்ந்தபின்
ஓம்ந மச்சி வாயமே
உட்க லந்து நிற்குமே.

---

108. சித்தர்களுடைய ஞானத்திலே கண்கொண்டு செய்கிற தவம், செவிகொண்டு செய்கிற தவம் என்று இரண்டு உண்டு. இந்த இரண்டிலுமே சூரியனாகிய வலப்பக்கமும் சந்திரனாகிய இடப்பக்கமும் இயங்குவதோடு வன்னியாகிய நடுவும் முக்கியம் பெறுகின்றது. இரண்டு, மூன்று என்று சொல்லாமல் சொல்லுவதும், ஆறு என்று இந்த இரண்டையும் மூன்றையும் இயக்கி ஆறு ஆதார நிலைகளைச் செயற்படுத்துவதும் பற்பல குறிச் சொற்களிலே உணர்த்தப்படுகின்றன. இதோடு இந்த உடம்பினில் அஞ்செழுத்தில் ஒவ்வொன்றும் எங்கு நிற்கிறது என்பதும் பேசப் படுகிறது. இவற்றை நேர்முகமாகக் கற்றுத் தெளிந்தால் இந்தப் பாடலும் இதை அடுத்து வருகிற பாடல்களும் கூறுகிற ஆன்ம தத்துவம் புலனாகும்.

109 - 110. மேலே உள்ள குறிப்பினோடு முதலாவது பகுதியிலுள்ள விளக்கப் படத்தையும் காண்க.

111. அல்லல் வாசல் ஒன்பதும்
அறுத்த டைத்த வாசலும்
சொல்லும் வாசல் ஒரைந்தும்
சொம்மி விம்மி நின்றதும்
நல்ல வாச லைத்திறந்து
ஞான வாச லூடுபோய்
எல்லை வாசல் கண்டவர்
இனிப்பி றப்ப தில்லையே.

112. ஆதி யான தொன்றுமே
யனேக னேக ரூபமாய்
சாதி பேத மாயெழுந்து
சர்வ சீவ னானபின்
ஆதி யோடும் ஆடுகின்ற
மீண்டு மிந்த சென்மமாம்
சோதி யான ஞானியர்க்கும்
சுத்த மாய்இ ருப்பரே.

113. மலர்ந்த தாது மூலமாய்
வைய கம்ம லர்ந்ததும்
மலர்ந்த பூம யக்கம்வந்து
அடுத்த தும்வி டுத்ததும்
புலன்க ளைந்தும் பொறிகலங்கி
பூமி மேல்வி ழுந்ததுமே
இலங்க லங்கி நின்றமாயம்
என்ன மாயம் ஈசனே.

---

111. ஒன்பது வாசல் என்பது இந்த உடம்பின் ஒன்பது திறப்புகளை அறுத்தடைத்த வாசல் தொப்புள். சொல்லும் வாசல் ஐந்து என்பது ஐம்பொறிகளை. நல்ல வாசலும் ஞான வூாசலும் ஆசான் உணர்த்துகிற பயிற்சி முனைகள்.

112. ஒன்றே பலவாக, பற்பலவாக விரிந்தது என்பதே படைப்பின் தத்துவம்.

113. ஒன்று இரண்டு மூன்றாவதும் பற்பலவாகக் கவர்வதும் எதனால்? பின் பலவாகத் கிளைத்த நிலையிலே மாயக் கலத்திலே மயங்கியது எங்ஙனம்? இந்த வினாவுக்கு விடையே மெய்ஞ்ஞானம்.

114. பார டங்க வுள்ளதும்
பரந்த வானம் உள்ளதும்
ஓரி டமும் இன்றியே
வொன்றி நின்ற வொண்சுடர்
ஆரி டம்மும் அன்றியே
யகத்து ளும்பு றத்துளும்
சீரி டங்கள் கண்டவர்
சிவன்தெ ரிந்த ஞானியே.

115. மண்கி டார மேசுமந்து
மலையு ளேறி மறுகுறீர்
எண்ப டாத காரியங்கள்
இயலு மென்று கூறுவீர்
தம்பி ரானை நாள்கடோறுந்
தரையி லேத லைபடக்
கும்பி டாத மாந்தரோடு
கூட வாழ்வ தெங்ஙனே.

116. நாவி நூல்அ ழிந்ததும்
நலம்கு லம்ம ழிந்ததும்
மேவு தேர்அ ழிந்ததும்
விசார முங்கு றைந்ததும்
பாவி காள்இ தென்னமாயம்
வாம நாடு பூசலாய்
ஆவி யார்அ டங்கினால்
ஐவ ரும்அ டங்குவார்.

---

114 - 116. அண்டத்திலும் பிண்டத்திலும் அதாவது புற உலகிலும் இந்த உடம்பிலும் எல்லாம் ஒரே தத்துவந்தான் என்பதை ஒளிகண்டு, ஒலிகொண்டு உணர்ந்தவரே ஞானிகள். இந்த ஞானம் காட்சியாகவும் கேள்வியாகவும் அனுபவித்து வருவதாகும். அந்த ஞான அனுபவம் பெறுவதற்காகவே உலகம் எங்கும் பல நாடுகளிலும் ஞானிகள் தோன்றி நன்னெறிகளை மக்களுக்குக் காட்டியுள்ளார்கள். சித்தர்கள் கூறுகிற பயிற்சி முறைகள் நேர்முகக் கல்வியாக வழங்கி வருவதற்குரிய காரணம், இந்த உண்மைகளைச் சொல்லினால் கூறிப் பயனில்லை, கண்ணினால் காணும்படி காட்ட வேண்டும் என்பதே. இத்தகைய அனுபவ மாற்றங்களையே இம்மூன்று பாடல்களும் மொழிகின்றன.

117. வீடெ டுத்து வேள்விசெய்து
மெய்ய ரோடு பொய்யுமாய்
மாடு மக்கள் பெண்டீர்சுற்றம்
என்றி ருக்கும் மாந்தர்காள்
நாடு பெற்ற நண்பர்கையில்
ஓலை வந்த ழைத்தபோது
ஆடு பெற்ற தவ்விலை
பெறாது காணும் இவ்வுடல்.

118. இல்லை இல்லை இல்லையென்று
இயம்பு கின்ற வேழைகாள்
இல்லை யென்று நின்றதொன்றை
இல்லை யென்ன லாகுமோ
இல்லை யல்ல வொன்றுமல்ல
இரண்டு மொன்றி நின்றதை
எல்லை கண்டு கொண்டபேர்
இனிப்பி றப்ப தில்லையே.

119. கார கார காரகார
காவ லூழி காவலன்
போர போர போரபோர
போரில் நின்ற புண்ணியன்
மார மார மாரமார
மரங்க ளேழும் எய்தசீ
ராம ராம ராமராம
ராம வென்னும் நாமமே.

---

117. இந்த உடம்பில் உயிர் இருக்கும் வரைதான் ஆட்டபாட்ட சாட்டங்கள். எனவே உயிர் இருக்கும்போதே நிலையான செயல்கள் இயற்றிட வேண்டும்.

118. இல்லை என்று நின்றது அது! அதாவது இல்லை என்று சொல்லும் படி கண்ணுக்குத் தெரியாமல் இருப்பது அது! அதை இல்லையென்று சொல்லிவிட்டால் சரியாகிவிடுமா? இல்லை உண்டு என்ற இரு நிலையும் ஒன்றிய நிலை அது. அதாவது கண்ணைத் திறந்தால் இல்லை, கண்ணை மூடினால் உண்டு! அதாவது அகக்கண்ணுக்குப் புலப்படுவது புறக்கண்ணுக்குத் தெரியாதது!

119. மராமரத்தைத் துளைத்த ராமனைச் சொல்வது போலக் கடவுள் தத்துவத்தை இயம்புகிற ஓசைநயம் மிகுந்த பாடல்.

120. நீடு பாரி லேபிறந்து
நேய மான மாயந்தான்
வீடு பேரி தென்றபோது
வேண்டி யின்பம் வேண்டுமோ
பாடு நாலு வேதமும்
பாரி லேப டர்ந்தவோ
நாடு ராம ராமராம
ராம வென்னும் நாமமே.

121. உயிரு நன்மை யாலுடல்
எழுந்து வந்தி ருந்திடும்
உயிரு டம்பொ ழிந்தபோதில்
ரூப ரூப மாயிடும்
உயிர்சி வத்தின் மாய்கையாகி
ஒன்றை யொன்று கொன்றிடும்
உயிரும் சத்தி மாய்கையாகி
ஒன்றை ஒன்று தின்னுமே.

122. நெட்டெ ழுத்து வட்டமோ
நிறைந்த பல்லி யோனியும்
நெட்டெ ழுத்தில் வட்டம்ஒன்று
நின்ற தொன்று கண்டிலேன்
குட்டெ ழுத்தில் உற்றதென்று
கொம்பு_கால்கு றித்திடில்
நெட்டெ ழுத்தில் வட்டமொன்றில்
நேர்ப டான்நம் ஈசனே.

---

120. ஆய்வதற்கு அப்பாலானது; உச்சரிப்புக்குள் நிற்பது. அந்த நுட்பத்தைப் பாடியவாறு!

121. உயிரும் உடம்பும் பெற்ற உறவு எத்தகையது? ஒன்றை ஒன்று மன்னுவதும் தின்னுவதுமான உறவைப் பாடுகிறார் சிவவாக்கியர்.

122. அவ்வை குறளுக்குரியவிளக்கப் படத்தில் வரைந்து காட்டிய நுட்பம் குழூஉச் சொற்களிலே பாடப் பெறுகிறது.

123. விண்ணி லுள்ள தேவர்கள்
அறியொ ணாத மெய்ப்பொருள்
கண்ணி லாணி யாகவே
கலந்து நின்ற தெம்பிரான்
மண்ணி லாம்பி றப்பறுத்து
மலர டிகள் வைத்தபின்
அண்ண லாரும் எம்முளே
அமர்ந்து வாழ்வ துண்மையே.

124. விண்க டந்து நின்றசோதி
மேலை வாச லைத்திறந்து
கண்க ளிக்க வுள்ளுளே
கலந்து புக்கி ருந்தபின்
மண்பி றந்த மாயமும்
மயக்க மும்ம றந்துபோய்
எண்க லந்த ஈசனோடு
இசைந்தி ருப்ப துண்மையே.

125. மூல மான மூச்சதில்
மூச்ச றிந்து விட்டபின்
நாலு நாளும் உன்னிலோரும்
நாட்ட மாகி நாட்டிடில்
பால னாகி நீடலாம்
பரப்பி ரம்மம் ஆகலாம்
ஆல முண்ட கண்டரானை
அம்மை யானை உண்மையே.

---

123. காட்சிப் பயிற்சியிலுள்ள அனுபவம் பேசப்பெறுகிறது. முதலாவது தீட்சையை யடுத்து இரண்டாவது தீட்சையில் இந்தப் பயிற்சியின் பயனை ஞானக்கல்வி பயிலும் மாணவர்கள் கற்றுத் தெரிந்து கொள்வார்கள்.

124. இதுவும் மேலே சொன்ன பயிற்சியினால் காண்கிற கண்களிக்கும் அனுபவமாகும்.

125. இது மூன்றாவது தீட்சையின் உட்பொருளாகும். சர நூல்களிலும் இந்த முறை பேசப்பெறுகிறது.

126. மின்னெ ழுந்து மின்பரந்து
மின்னொ டுங்கு மாறுபோல்
என்னுள் நின்ற என்னுளீசன்
என்னு ளேஅ டங்குமே
கண்ணுள் நின்ற கண்ணினேர்மை
கண்ண றிவ்வி லாமையால்
என்னுள் நின்ற என்னையன்றி
யான றிந்த தில்லையே.

127. இருக்க லாம்இ ருக்கலாம்
அவனி லேஇ ருக்கலாம்
அரிக்கு மால்பி ரம்மனும்
அகண்ட மேழ்அ கற்றலாம்
கருக்கொ ளாத குழியிலே
காலி லாத கண்ணிலே
நெருப்ப றைதி றந்தபின்பு
நீயு நானும் ஈசனே.

128. ஏக போக மாகியே
இருவ ரும்ஒ ருவராய்
போக மும்பு ணர்ச்சியும்
பொருந்து மாற தெங்ஙனே
ஆக லும்அ ழிதலும்
அதன்க ணேய தானபின்
சாக லும்பி றக்கலும்
இல்லை யில்லை இல்லையே.

---

126. 'வட்டம் சுற்றல்' என்ற பயிற்சியைச் செய்கிற மாணவர்களுக்கு இப்பாடலில் கூறப்படுகிற அனுபவம் கிடைக்கும்.

127. சதுரப்பாடு அமைந்த அரிய பாடல் இது. தீட்சை என்கிற ஞானக்கல்வியின் பாடங்களைக் கற்று நாளும் பயின்று முன்னேறுகிற சீடர்கள் 'கருக்கொளாத குழியிலே நெருப்பறை திறந்து காண முடியும்!

128. சித்தர்கள் கூறுகிற 'பரியங்கி யோகம்' என்ற பயிற்சி நுட்பம் இது.

129. வேத னாலு பூதமாய்
விரவு மங்கி நீரதாய்ப்
பாத மேவி லிங்கமாய்ப்
பரிந்து பூசை பண்ணினால்
காதில் நின்று கடைதிறந்து
கட்ட றுத்த ஞானிகள்
ஆதி யந்த முங்கடந்தி
தரிய வீட தாகுமே.

130. பருத்தி நூல்மு றுக்கியிட்டுப்
பஞ்சி யோது மாந்தரே
துருத்தி நூல்மு றுக்கியிட்டுத்
துன்ப நீங்க வல்லிரேல்
கருத்த நூல்க லைப்படும்
கால நூல்க ழிந்திடும்
திருந்திநூல் கரவரும்
சிவாய வஞ்செ ழுத்துமே.

131. சாவ தான தத்துவச்
சடங்கு செய்யும் ஊமைகாள்
தேவர் கல்லு மாவரோ
சிரிப்ப தன்றி என்செய்வேன்
மூவ ராலும் அறியொணாத
முக்க ணன்மு தற்கொழுந்து
காவ லாக வும்முளே
கலந்தி ருப்பன் காணுமே.

---

129. கண்ணப்ப சுவாமிகள் வழங்குகிற நான்காவது தீட்சை கற்றவர்கள் இந்தப் பாடலைக் களிப்புடன் அனுபவிக்க முடியும். ராதாசுவாமி மார்க்கிகளும் இந்த இரகசியம் அறிவார்கள்.

130. நயனப் பயிற்சியிலே பூணூல் என்ற ஒரு சடங்கை ஒரு தீட்சையாகவே குருமார்கள் தருவதுண்டு. அதன் உள்ளுறை இப்பாடலில் அடங்கியுள்ளது.

131. 'நடுகல்' என்ற சின்னத்திலே குறிக்கப்பெறுகிற தத்துவம் எது? சிந்தனையைத் தூண்டுகிற பாடல்.

132. காலை மாலை நீரிலே
முழுகும் மந்த மூடர்காள்
காலை மாலை நீரிலே
கிடந்த தேரை யென்பெறும்
கால மேயெ ழுந்திருந்து
கண்கள் மூன்றில் ஒன்றினால்
மூல மேநி னைந்திராகில்
முத்தி சித்தி யாகுமே.

133. எங்கள் தேவர் உங்கள்தேவர்
என்றி ரண்டு தேவரோ
அங்கு மிங்கும் ஆகிநின்ற
ஆதி மூர்த்தி ஒன்றலோ
அங்கு மிங்கும் ஆகிநின்ற
ஆதி மூர்த்தி ஒன்றெனில்
வங்க வாரம் சொன்னபேர்கள்
வாய்பு ழுத்து மாள்வரே.

134. அறையறை யிடைக்கி டந்த
அன்று தூமை என்கிறீர்
முறையறிந்து பிறந்த போது
மன்று தூமை என்கிறீர்
துறையறிந்து நீர்கு ளித்தால்
அன்று தூமை என்கிறீர்
பொறியிலாத நீச ரோடும்
பொருந்து மாற தெங்ஙனே.

---

132. உண்மையான 'நீராடல்' எது என்பதைச் சித்திரிக்கிறது இந்த ஞானப்பாடல்.

133. ஒற்றுமையில் வேற்றுமை காண்பது தீது. வேற்றுமையில் ஒற்றுமை காண்பது ஞானம்.

134. பிறப்பதற்கு முன்பு இருந்த இடம் எது? இப்போது அதை என்ன சொல்லுகிறீர்கள்? இரண்டும் வெவ்வேறா?

135. சத்தம் வந்த வெளியிலே
சலமி ருந்து வந்ததும்
சுத்த மாக நீரிலே
துவண்டு மூழ்கு மூடரே
சுத்த மேது கெட்டதேது
தூய்மை கண்டு நின்றதேது
பித்த காய முற்றதேது
பேத மேது போதமே.

136. மாத மாதம் தூமைதான்
மறந்து போன தூமைதான்
மாத மற்று நின்றலோ
வளர்ந்து ரூப மானது
நாத மேது வேதமேது
நற்கு லங்கள் ஏதடா
வேத மோதும் வேதியர்
விளைந்த வாறும் பேசடா.

137. தூமை யற்று நின்றலோ
சுதீப மற்று நின்றது
ஆண்மை யற்று நின்றலோ
வழக்கம் அற்று நின்றது
தாண்மை யற்ற ஆண்மையற்று
சஞ்சலங்கள் அற்றுநின்ற
தூமை தூமை யற்றகாலம்
சொல்லு மற்று நின்றதே.

---

135. கேடு எது, தூய்மை எது? சுத்தப்படுத்துவது எது? பரு உடலா அல்லது நுண்ணுடலா?

136. கெட்டது என்று நிந்திக்கிற பொருள்தான் வித்தாகி மலர்கிறது என்ற உயிர்ப்புண்மையைப் பாடியவாறு.

137. எதுகெட்டது என்று தூற்றுகிறோமோ, அதன் உண்மையை உணர்வதில்லை. எது எதுவாக மாறுகிறது என்பதே நல்லது கெட்டதன் உண்மை நிலையாகும்.

138. ஊறி நின்ற தூமையை
யுறைந்து நின்ற சீவனை
வேறு பேசி மூடனே
விளைந்த வாற தேதடா
நாறு கின்ற தூமையல்லோ
நற்கு லங்கள் ஆவன
சீறு கின்ற மூடனேயத்
தூமை நின்ற கோலமே.

139. தூமை கண்டு நின்றபெண்ணின்
தூமை தானும் மூடியே
சீமை யெங்கும் ஆணும் பெண்ணும்
சேர்ந்து லோகம் கண்டதே
தூமை தானும் ஆசையாய்
துறந்தி ருந்த சீவனை
தீமை யற்றுக் கொண்டிருந்த
தேச மேது தேசமே.

140. வேணும் வேணும் என்றுநீர்
வீணு முன்று தேடுவீர்
வேணு மென்று தேடினும்
உள்ள தல்ல தில்லையே
வேணு மென்று தேடுகின்ற
வேட்கை யைத்து றந்தபின்
வேணு மென்ற அப்பொருள்
விரைந்து காண லாகுமே.

---

138. உயிரின் தோற்றம், அதன் வளருமிடம், பிறகு அதன் வளர்ச்சி ஆகிய அனைத்தையும் விண்டு கூறியவாறு.

139. இதுவும் மேலே யுள்ள பாட்டின் விரிவாக்கமே.

140. வேட்கை தணியும் இடம், குறிக்கோள் கிட்டுகிற நிலையாகும் என்பதை அழகுடன் இயம்பியவாறு.

141. சிட்ட ரோது வேதமும்
சிறந்த ஆக மங்களும்
நட்ட கார ணங்களும்
நவின்ற மெய்ம்மை நூல்களும்
கட்டி வைத்த போதகங்
கதைக்கு கந்த பித்தெலாம்
பெட்ட தாய்மு டிந்ததே
பிரானை யான்அ றிந்தபின்.

142. நூறு கோடி ஆகமங்கள்
நூறு கோடி மந்திரம்
நூறு கோடி நாளிருந்தும்
ஓதி னால தென்பயன்
ஆறு மாறு மாறுமாய்
அகத்தி லோர்எ ழுத்துமாய்
ஏறு சீர்எ ழுத்தையோ
ஈசன் வந்து பேசுமே.

143. காலை மாலை தம்மிலே
கலந்து நின்ற காலனார்
மாலை காலை யாச்சிவந்த
மாய மேது செப்பிடீர்
காலை மாலை யற்றுநீர்
கருத்தி லேயொ டுங்கினால்
காலை மாலை யாகிநின்ற
கால னில்லை யில்லையே.

---

141. பொருளையே கண்டபின், அந்தப் பொருளைப் பற்றிய ஆராய்ச்சிக்கு என்ன இடம்? சுரைக்காய் எதிரே இருக்கும்போது ஏடும், ஏட்டுச் சுரைக்காயும் ஏன்?

142. ஊர்போய்ச் சேர்ந்தவனுக்கு வழிகாட்டிப் புத்தகம் எதற்கு?

143. காலம் கடந்த நிலையில் நிற்போருக்குக் காலம் என்பது எது?

144. எட்டு மண்ட லத்துளே
யிரண்டு மண்ட லம்வளைத்து
இட்ட மண்ட லத்திலே
யெண்ணி யாறு மண்டலம்
தொட்ட மண்ட லத்திலே
தோன்றி மூன்று மண்டலம்
நட்ட மண்ட லத்திலே
நாத னாடி நின்றதே.

145. நாலி ரண்டு மண்டலத்துள்
நாத னின்ற தெவ்விடம்
காலி ரண்டு மூலநாடி
கண்ட தங்கு ருத்திரன்
சேலி ரண்டு கண்கலந்து
திசைக ளெட்டு மூடியே
மேலி ரண்டு தான்கலந்து
வீசி யாடி நின்றதே.

146. அம்மை யப்ப னுப்புநீர்
அறிந்த தேய றிகிலீர்
அம்மை யப்ப னுப்புநீர்
யரிய யன்ன ரனுமாய்
அம்மை யப்ப னுப்புநீர்
ஆதி யாதி யானபின்
அம்மை யப்பன் நின்றையன்றி
யாரு மில்லை யானதே.

---

144. இந்தப் பருஉடலை ஆராய்ந்து மண்டலங்கள் வகுத்த அதே முறையில் நுண்ணுடலையும் ஆராய்ந்து அதன் நுட்பங்களை வகைசெய்து, அந்தந்த இயக்கங்களையும் விரிவாகப் பேசுகிறது சகமார்க்க விளக்கம். இவற்றோடு பின்னி நிற்பதே நாடி நுட்பம்.

145. இந்த உடம்புக்குள் நடைபெறுகிற நடன நுட்பத்தைச் சிவயோகி இரத்தினசபாபதியாரின் உரைக்குறிப்பிலிருந்து தந்துள்ள திருவாசக ஞான விளக்கத்தில் காண்க.

146. நாழி அப்பும் நாழி உப்பும் பற்றிய முந்திய பாடலை ஒப்பு நோக்குக.

147. உருத்த ரிப்ப தற்குமுன்
உடல்க லந்த தெங்ஙனே
கருத்த ரிப்ப தற்குமுன்
கார ணங்கள் எங்ஙனே
பொருத்தி வைத்த போகமும்
பொருந்து மாற தெங்ஙனே
குருத்தி ருத்தி வைத்தசொல்
குறித்து ணர்ந்து கொள்ளுமே.

148. ஆதி யுண்டு அந்தமில்லை
யன்று நாலு வேதமில்லை
சோதி யுண்டு சொல்லுமில்லை
சொல்லி றந்த தேதுமில்லை
ஆதி யான மூவரில்
அமர்ந்தி ருந்த வாயுவும்
ஆதி யன்று தன்னையும்இங்
காரறிவர் அண்ணலே.

149. புலால்புலால் புலால தென்று
பேதை மைகள் பேசுநீர்
புலாலை விட்டு எம்பிரான்
பிரிந்தி ருந்த தெங்ஙனே
புலாலு மாய்ப்பி தற்றுமாய்
பேரு லாவுந் தானுமாய்
புலாலி லேமு ளைத்தெழுந்த
பித்தன் காணும் அத்தனே.

---

147. முந்திய பாடல்களிலும் இப்பொருள் பேசப்பட்டுள்ளது. இதில் இதன் திறவுகோல் ஆசான் உணர்த்துகிற மெய்யுணர்வு என்பதைக் குறிப்பிடுகிறார்.

148. ஆதியான பொருளுக்கு அந்தமில்லை என்றாலும் ஆதிப் பொருள் நிலையானது அல்லவா?

149. பருமையும் நுண்மையும் ஒன்றையொன்று சார்ந்த தன்மை ஒரு முரண்பாடு போலக் காண்கிற மெய்ம்மையாகும். இதையே இன்றைய விஞ்ஞானமும் சொல்கிறது.

150. உதிர மான பால்குடித்து
ஒக்க நீர்வ ளர்ந்ததும்
இதர மாய்இ ருந்ததொன்று
இரண்டு பட்ட தென்னலாம்
மதிர மாக விட்டதேது
மாங்கி சம்பு லாலதென்று
சதிர மாய்வ ளர்த்ததேது
சைவ ரான மூடரே.

151. உண்ட கல்லை யெச்சிலென்று
உள்ளெ றிந்து போடுறீர்
கண்ட எச்சில் கையலோ
கரும னுக்கும் வேறதொ
கண்ட எச்சில் கேளடா
கலந்த பாவி யப்பிலே
கொண்ட சுத்த மேதடா
குறிப்பி லாத மூடரே.

152. ஓதி வைத்த நூல்களும்
உணர்ந்து கற்ற கல்வியும்
மாது மக்கள் சுற்றமும்
மறக்க வந்த நித்திரை
ஏது புக்கொ ளித்ததோ
எங்கு மாகி நின்றதோ
சோதி புக்கொ ளித்த மாயம்
சொல்ல டாசு வாமியே.

---

150. பருமையிலிருந்து நுண்மை தோன்றுவதும், அதிலேயே அது வளர்வதுமான இயற்கை இரகசியத்தைச் சிந்திக்க வைக்கிறது இந்தப் புரட்சி வினா.

151. எச்சில் என்று புறப்பொருளை உதறுகிற தன்மை, நுண்ணுடற் கூற்றில் எப்படி இயங்கும்? தண்ணீரைத் தண்ணீரினால் கழுவுகிற ஒரு செயல் போன்ற மனநிலை எத்தகையது?

152. எல்லாம் மெய்யாகத் தோன்றுகிற நனவுலகம் உறக்கத்திலே என்ன ஆகிறது? எது எங்கே போய் எப்படி மறைந்தது?

153. ஈனும் எருமை யின்கழுத்தில்
இட்ட பொட்ட ணங்கள்போல்
மூணு நாலு சீலையில்
முடிந்த விழ்க்கு மூடர்களின்
மூணு நாலு லோகமும்
முடிவி லாத மூர்த்தியை
ஊணி யூணி நீர்முடிந்த
உண்மை யென்ன உண்மையே.

154. சாவல் நாலு குஞ்சதஞ்சு
தாய தான வாறுபோல்
காவ லான கூட்டிலே
கலந்து சண்டை கொள்ளுதே
கூவ மான கிழநரியைக்
கூட்டி லேபு குந்தபின்
சாவல் நாலு குஞ்சதஞ்சும்
தானி றந்து போனதே.

155. மூல மாங்கு ளத்திலே
முளைத்தெ ழுந்த கோரையை
கால மேயெ ழுந்திருந்து
நாலு கட்ட றுப்பிரேல்
பால னாகி வாழலாம்
பரப்பி ரம்மம் ஆகலாம்
ஆல முண்ட கண்டர்பாதம்
அம்மை பாதம் உண்மையே

---

153. இந்தப் பாடலும் இதைத் தொடர்ந்து வருகிற அடுத்த இரண்டு பாடல்களும் பரிச தீட்சையிலே வருகிற ஞானத் தெளிவைப் பெறாதவர்கள் ஆராய்ந்து காண முடியாத நுட்பம் என்பதையும், இந்தப் பருஉடல் தத்துவம் ஞான குருவினால் அடைகிற மாறுதல்களையும், யோகப் பயிற்சியின் வாயிலாக மலங்கள் நீங்கிப் பக்குவம் கைகூடுகிற முறையையும் பாடுகின்றன.

156. செம்பி னிற்க ளிம்புவந்த
சீத கங்கள் போலவே
அம்பி னில்எ ழுதொணாத
அணிய ரங்க சோதியை
வெம்பி வெம்பி வெம்பியே
மெலிந்து மேல்க லங்கிட
செம்பி னிற்க ளிம்புவிட்ட
சேதி யேது காணுமே.

157. சாடி நாடி யும்முளே
நயந்து காண வல்லிரேல்
ஓடி யோடி மீளுவார்
உம்மு ளேய டங்கிடும்
தேடி வந்த காலனும்
திகைத்தி ருந்து போய்விடும்
கோடி கோடி காலமும்
குறைவி லாதி ருப்பரே.

158. பிணங்கு கின்ற தேதடா
பிரக்ஞை கெட்ட மூடரே
பிணங்கி லாத பேரொளிப்
பிராண னைய றிகிலீர்
பிணங்கு மோர்இ ருவினைப்
பிணக்க றுக்க வல்லிரேல்
பிணங்கி லாத பெரியவின்பம்
பெற்றி ருக்க லாகுமே.

---

156. இந்தப் பாடலும் இதையடுத்த இரு பாடல்களுகம் சோதி தரிசனம் என்ற பயிற்சியனுபவத்தைப் பேசுகின்றன. அடங்கி நிற்கிற ஒளியைப் பொருத்திக் காட்டுகிற ஆசிரியன், அவ்வாறு அந்த ஒளிக்காட்சியைக் காட்டியபிறகு, மீண்டும் மீண்டும் அந்தப் பயிற்சியைச் செய்ய அந்த ஒளிக் காட்சியைத் துய்க்கத் தொடங்கிவிட்டால் 'பெரிய இன்பத்தைப்' பிணங்காமற் பெற்றுய்யலாம் என்பது ஞானியர் வாக்காம்.

159. மீனி றைச்சி தின்றதில்லை
அன்று மின்றும் வேதியர்
மீனி ருக்கு நீரலவோ
மூழ் வதும்கு டிப்பதும்
மானி றைச்சி தின்றதில்லை
அன்று மின்றும் வேதியர்
மானு ரித்த தோலலோ
மார்பு நூல்அ ணிவதும்.

160. ஆட்டி றைச்சி தின்றதில்லை
அன்று மின்றும் வேதியர்
ஆட்டி றைச்சி அல்லவோ
யாகம் நீங்க ளாற்றலே
மாட்டி றைச்சி தின்றதில்லை
அன்று மின்றும் வேதியர்
மாட்டி றைச்சி யல்லவோ
மரக்க றிக்கு இடுவது.

161. அக்கி டர்அ னைத்துயிர்க்கும்
ஆதி யாகி நிற்பது
முக்கி டர்உ மைப்பிடித்தும்
உத்த ரித்து விட்டது
மைக்கி டர்பி றந்திறந்து
மாண்டு மாண்டு போவதும்
ஒக்கி டர்உ மக்குநான்
உணர்த்து வித்தது உண்மையே.

---

159. நீராடுவதும், சின்னம் புனைவதுமான கோலங்களைக் கண்டு நகைக்கிற சித்தனின் சிரிப்பொலி இந்தப் பாடலிலே கேட்கிறது.

160. கோலங்கள் மட்டுமா? சடங்குகளின் தன்மையும் அதுவே!.

161. கோலங்களும், சடங்குகளும் அல்ல நம்மை ஈடேற்றுகிற வழி! அகச்செயல் என்று ஒரு பெரிய வினை இருக்கிறது. அதைச் செய்தால் ஒழிய ஈடேற்றம் இல்லை. பிறந்தும் இறந்தும் மாறிமாறிச் சுழல்கிற சுழற்சியைக் கண்டாவது இந்தத் தெளிவைப் பெறவேண்டும்.

162. ஐயன் வந்து மெய்யகம்
புகுந்த வாற தெங்ஙனே
செய்ய திங்கள் அங்குரும்பை
நீர்பு குந்த வண்ணமே
ஐயன் வந்து மெய்யகம்
புகுந்து கோயில் கொண்டபின்
வைய கத்தில் மாந்தரோடு
வாய்தி றப்பது இல்லையே.

163. நவ்வு மவ்வை யுங்கடந்து
நாடொ ணாத சிய்யின்மேல்
வவ்வு யவ்வு ளுஞ்சிறந்த
வண்மை ஞான போகதம்
ஒவ்வு சுத்தி யுண்ணிறைந்தது
உச்சி யூடு ருவியே
இவ்வ கைய றிந்தபேர்கள்
ஈச னாணை யீசனே.

164. அக்க ரம்அ னாதியோ
சாத்து மம்ம னாதியோ
புக்கி ருந்த பூதமும்
புலன்க ளும்ம னாதியோ
தக்க மிக்க நூல்களும்
சாத்தி ரம்அ னாதியோ
நற்ப ரத்தை யூடறுத்த
சற்கு ருஅ னாதியோ.

---

162. 'செய்ய தெங்கில்' என்று தொடங்குகிற பாடலே பிறிதொரு வடிவத்தில் வந்துள்ளது. இதுவும் சற்ற மாறுபட்ட ஓர் எழிற்கவியே.

163. சூக்கும ஓங்கார ஒலி என்றும் சூக்கும பஞ்சாக்கர ஒலி என்றும் வருவதை முன்பகுதிகளில் விளக்கியிருப்பதோடு, வரைபடங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

164. எல்லாமே பிறப்புக்குட்பட்ட சுழற்சிதான். வடிவமெடுத்த உயிர்வடிவம் எடுப்பது என்ற செயலுக்கு உள்ளாவது இதுவே. ஆசானும் இதற்கு விதிவிலக்கு இல்லையல்லவா?

165\. பார்த்த தேது பார்த்திடும்
பார்வை யூடு அழித்திடும்
கூர்த்த தாய்இ ருப்பிரேல்
குறிப்பி லார்சி வமதாம்
பார்த்த பார்த்த போதெலாம்
பார்வை் யும்இ கந்துநீர்
பூத்த பூவும் காயுமாய்ப்
பொருந்து வீர்பி றப்பிலே.

166\. நெற்றி பற்றி உழலுகின்ற
நீல மாவி ளக்கினைப்
பற்றி யொற்றி நின்றுநின்று
பற்ற றுத்த தென்பலன்
உற்றி ருந்து பாரடா
உள்ளொ ளிக்கு மேலொளி
அத்த னாய்அ மர்ந்திடம்
அறிந்த வன்அ னாதியே!

167\. நீரை யள்ளி நீரில்விட்டு
நீர்நி னைந்த காரியம்
ஆரை யுன்னி நீரெல்லாம்
அவத்தி லேயி றைக்கிறீர்
வேரை யுன்னி வித்தையுன்னி
வித்தி லேமு ளைத்தெழும்
சீரை யுன்ன வல்லிரேல்
சிவப தங்கள் சேரலாம்.

---

165\. பார்வை வெளிமுகமாகப் போவதுதான் உயிர்ச் சக்கரத்தின் சுழற்சி. பூ, காயாவது அப்படித்தான்!

166\. ஒளியில் ஒளிபோய் ஒடுங்குதல் என்ற அரிய காட்சி பயிற்சியினால் வருவதாகும். அவ்வையின் குறள் இந்த ஒளியின் நுட்பங்களை நன்கு விளக்கியுள்ளது. முதற்பகுதி காண்க.

167\. கிரியைகள் என்ற வெறுஞ் சடங்குகளாலே பயனில்லை என்பதைப் பூசனையில் நீர் பெய்யும் செயலிலே ஏற்றிச் சொல்லியிருக்கிறது.

168\. நெற்றி யில்த யங்குகின்ற
நீல மாம்வி ளக்கினை
உய்த்து ணர்ந்து பாரடா
உள்ளி ருந்த சோதியைப்
பத்தி யிற்தொ டர்ந்தவர்
பரம மயம தானவர்
அத்த லத்தி ருந்தபேர்கள்
அவரெ னக்கு நாதரே.

169\. கருத்த ரிக்கு முன்னெலாம்
காயம் நின்ற தெவ்விடம்
உருத்த ரிக்கு முன்னெலாம்
உயிர்ப்பு நின்றது எவ்விடம்
அருட்ட ரிக்கு முன்னெலாம்
ஆசை நின்றது எவ்விடம்
திருக்க றுத்துக் கொண்டதோ
சிவாய மென்று கூறுவீர்.

170\. கருத்த ரிக்கு முன்னெலாம்
காயம் நின்ற தேயுவில்
உருத்த ரிக்கு முன்னெலாம்
உயிர்ப்பு நின்றது அப்புவில்
அருட்ட ரிக்கு முன்னெலாம்
ஆசை நின்ற வாயுவில்
திருக்க றுத்துக் கொண்டதே
சிவாய மென்று கூறுமே.

---

168\. இதற்குமுன் 166-ம் பாடலிலும் வேறு சில பாடல்களிலும் நீல ஒளியைப் பற்றிய குறிப்பு வருகிறது. அந்தக் காட்சி கிட்டும்போது அதற்கு ஊடாக மேலே வருகிற அடுத்த ஒளியே பெருஞ்சோதி என்பது.

169\. இக்கருத்து பற்பல வடிவங்களிலே இந்த நூலில் மீண்டும் மீண்டும் வற்புறுத்தப் பெறுகிறது.

170\. கேள்விகளுக்கு விடைகளைத் தருகிறது இந்தப் பாடல். ஐம்பூதக் கலப்பின் இறைமையை உணர்த்தியவாறு.

171. தாத ரான தாதரும்
தலத்தி லுள்ள சைவரும்
கூத ரைப்ப றைச்சிமக்கள்
கூடிச் செய்த காரியம்
வீதி போகு ஞானியை
விரைந்து கல்எ றிந்ததும்
பாத கங்கள் ஆகவே
பலித்த தேசி வாயமே.

172. ஓடி யோடிப் பாவிழைத்து
உள்ளங் கால்வெ ளுத்ததும்
பாவி யான பூனைவந்து
பாலி லேகு தித்ததும்
பணிக்கன் வந்து பார்த்ததும்
பார மில்லை யென்றதும்
இழைய றுந்து போனதும்
என்ன மாயம் ஈசனே.

173. சதுரம் நாலு மறையுமிட்டு
தான தங்கி மூன்றுமே
எதிர தான வாயுவாறு
எண்ணும் வட்ட மேவியே
உதிரந் தான்வ ரைகளெட்டும்
எண்ணு மென்சி ரசின்மேல்
கதிர தான காயத்தில்
கலந்தெ ழுந்த நாதமே.

---

171. இந்தப் பாடலும் இதையடுத்த பாடல்களும் திருமந்திரத்தில் காண்கிற சூனிய சம்பாஷணை என்ற பகுதியைப் போன்ற உருவங்கள். ஆய்வு நூலின் முதலாவது பகுதியிலே 211-ஆம் பக்கம் தொடங்கி இந்த உருவங்களின் உண்மைகள் ஆய்வு செய்யப் பெற்றுள்ளன. அவற்றை ஒப்பு நோக்குக.

174. நாலொ டாறு பத்துமேல்
நாலு மூன்றும் இட்டபின்
மேலு பத்து மாறுடன்
மேதி ரண்ட தொன்றுமே
கோலி யஞ்செ ழுத்துளே
குருவி ருந்து கூறிடில்
தோலு மேனி நாதமாய்த்
தோன்றி நின்ற கோசமே.

175. கோச மாய்எ ழுந்ததும்
கூடும் உருவி நின்றதும்
தேச மாய்ப்பி றந்ததும்
சிவாய மஞ்செ ழுத்துமே
ஈச னார்இ ருந்திடம்
அனேக னேக மந்திரம்
ஆச னம்நி றைந்துநின்ற
அம்பத் தோர்எ ழுத்துமே.

176. அங்க லிங்க பீடமா
வையி ரண்டெ ழுத்திலும்
பொங்கு தாம ரையினும்
பொருந்து வார்அ கத்தினும்
பங்கு கொண்ட சோதியும்
பரந்த அஞ்செ ழுத்துமே
சிங்க நாத வோசையும்
சிவாய மல்ல தில்லையே.

---

174. இதுமுதல் மூன்று பாடல்களின் நுட்பத்தை உணர உதவுகிற ஞானச் செய்திகள்:

பிரவணத்தில் உள்ள அகர கலை உயிர் எழுத்தாகவும், அந்த எழுத்தே ஐம்பத்தொரு அக்கரமாக விரிகின்றது. ஆ. உ, ம சேர்வதில் அர்த்தமாத்திரைப் பிரவணம் உதிக்கிறது. இதைச் சோதி எழுத்து என்று சித்தர் ஞானம் உரைக்கிறது. இதன் வாயிலாகக் காணப்பெறுகிற கலைகளின் விரிவை முதலாவது பகுதி 200ஆம் பக்கத்தில் காணலாம்.

177. உவமை யில்லாப் பேரொளிக்குள்
உருவ மானது எவ்விடம்
உவமை யாகி அண்டத்துள்
உருவி நின்றது எவ்விடம்
தவம தான பரமனார்
தரித்து நின்றது எவ்விடம்
தற்ப ரத்தில் ஜலம்பிறந்து
தங்கி நின்றது எவ்விடம்?

178. சுகமா களரு துமூன்று
கன்றை யீன்றது எவ்விடம்
சொல்லு கீழு லோகமேழும்
நின்ற வாறது எவ்விடம்
அளவ தான மேருவும்
அமைவ தானது எவ்விடம்
அவனு மவளும் ஆடலால்
அருஞ்சீ வன்பி றந்ததே.

179. உதிக்கு மென்றது எவ்விடம்
ஒடுங்கு கின்றது எவ்விடம்
கதிக்கு நின்றது எவ்விடம்
கண்ணு றக்கம் எவ்விடம்
மதிக்க நின்றது எவ்விடம்
மதிம யக்கம் எவ்விடம்
விதிக்க வல்ல ஞானிகாள்
விரித்து ரைக்க வேணுமே.

---

177. ஒளி என்பது ஆற்றல். அது தோன்றுவதும் அடங்குவதும் பருப்பொருள்! அது தோற்றுவிப்பதும் பருப்பொருள் என்பது எத்தகைய உண்மை!

178. உடம்பும் உடம்பும் சேர்வதால் மட்டும் உயிர் தோன்றுகிறதா? சூரிய, சந்திரன், கனல் என்ற மூன்றும் ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்றும் எப்படி இணைகின்றன? எங்கே இணைகின்றன?

179. நினைவு ஒடுங்குவதும் மீண்டும் உதிப்பதும் எந்த இடம்? அதுவே மதிமயக்கமும் மதி உதிப்புமாகிய நுண்ணுடல் இயக்கமும் ஆம்.

180. திரும்பி யாடு வாசலெட்டு
திறமு ரைத்த வாசலெட்டு
மருங்கி லாத கோலமெட்டு
வன்னி யாடு வாசலெட்டு
துரும்பி லாத கோலமெட்டு
சுத்தி வந்த மருளரே
அரும்பி லாத பூவுமுண்டு
ஐய னாணை உண்மையே.

181. நாளி ருந்து மூலவங்கி
தணலெ ழுப்பி வாயுவால்
தேனி ருந்து வரைதிறந்து
சித்தி யொன்றும் ஒத்தவே
வானி ருந்த மதியமூன்று
மண்ட லம்பு குந்தபின்
ஊனி ருந்த ளவுகொண்ட
யோகி நல்ல யோகியே.

182. முத்த னாய்நி னைந்தபோது
முடிந்த அண்டத் துச்சிமேல்
பத்த னாகும் அம்மையும்
பரிந்து ஆட லாடினார்
சித்த ரான ஞானிகாள்
தில்லை யாட லென்பிர்காள்
அத்த னாடல் உற்றபோது
அடங்க லாடல் உற்றதே.

---

180. உள்ளும் புறமுமாக நிற்கிற நுண்ணாற்றல்களுக்கு யோக முறையிலே இயற்றப்பெறுகிற வழிபாட்டுக்கு அங்கி தாரணை என்று பெயர். இதனுடைய நுட்பத்தைக் கூறியவாறு.

181. உள்ளும் புறமும் பொருந்துமாறு ஒளியாற்றலை இயக்கினால், இருள் அகன்று அக உடம்பு ஒளிமயமாகும். இந்நிலையை அடைந்தவன் நல்ல யோகியாவான்.

182. யோக தந்திரம் என்று அழைக்கப்பெறுகிற பயிற்சிமுறை கைவந்தவர்கள் சித்தமாகிய வெளியிலே ஆடல் காண்கிறார்கள். இந்த ஆடல் அகப்பார்வையில் நிகழ்வது கண்ணின்றிக் காண்பதும் செவியின்றிக் கேட்பதுமான ஆடலும் பாடலும் இந்த அனுபவத்தின் பாற்பட்டவை.

183. ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே
உலக னைத்தும் ஒன்றுமே
அன்று மின்றும் ஒன்றுமே
அனாதி யான தொன்றுமே
கன்றல் நின்ற செம்பொனைக்
களிம்ப றுத்து நாட்டினால்
அன்று தெய்வம் உம்முளே
அறிந்த தேசி வாயமே.

184. நட்ட தாவ ரங்களும்
நவின்ற சாத்தி ரங்களும்
இட்ட மான ஓமகுண்டம்
இசைந்த நாலு வேதமும்
கட்டி வைத்த புத்தகம்
கடும்பி தற்றி தற்கெலாம்
பெட்ட தாய்மு டிந்ததே
பிரானை யான்அ றியவே.

185. வட்ட மான கூட்டிலே
வளர்ந்தெ ழுந்த அம்புலி
சட்ட மீப டத்திலே
சங்கு சக்க ரங்களாய்
விட்ட தஞ்சு வாசலில்
கதவி னால்அ டைத்தபின்
முட்டை யில்எ ழுந்தசிவன்
விட்ட வாற தெங்ஙனே.

---

183. ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது அரிச்சுவடிக் கணக்கு. ஒன்றும் ஒன்றும் ஒன்று என்பது யோகம்! 'யுஜ்' என்ற வித்திலிருந்து முளைத்த சொல் யோகம். ஒன்றுதல் என்பதும் கூடிக்கலத்தல் என்பதும் இதுவே.

184. ஆன்மக் காட்சி கிட்டிய பிறகு படிப்பும் சடங்குகளும் ஏன்?

185. பஞ்ச பூதங்களுக்குள்ளே கனலைப் பாய்ச்சுதல் என்று ஒரு யோகப்பயிற்சி முறை உள்ளது. அது கைகூடினால் தொட்டதும் விட்டதும் தொட்க்கறும் நிலையைக் காணலாம் என்பது சித்தர் ஞானம்.

186. கோயில் பள்ளி யேதடா
குறித்து நின்ற தேதடா
வாயி னால்தொ ழுதுநின்ற
மந்தி ரங்கள் ஏதடா
ஞான மான பள்ளியில்
நன்மை யாய்வ ணங்கினால்
காய மான பள்ளியிற்
காண லாம்இ றையையே.

187. நல்ல வெள்ளி யாறதாய்
நயந்த செம்பு நாலதாய்
கொல்லு நாக மூன்றதாய்
குலாவு செம்பொன் இரண்டதாய்'
வில்லி னோசை யொன்றுடன்
விளங்க ஊத வல்லிரேல்
எல்லை யற்ற சோதியை
எட்டும் ஆற்றல் ஆகுமே.

188. மனத்த கத்து அழுக்கறாத
மவுன ஞான யோகிகள்
வனத்த கத்து இருக்கினும்
மனத்த கத்து அழுக்கறார்
மனத்த கத்து அழுக்கறுத்த
மவுன ஞான யோகிகள்
முலைத்த டத்து இருக்கினும்
முனைப்ப றுத்தி ருப்பரே.

---

186. முன் பாடல்கள் சிலவற்றிலும் இதே கருத்துப் பேசப்படுகிறது. சன்மார்க்க நிலையில் பரிபக்குவம் பெற்றுத் திகழ்கிற தவஞானியின் நிலை இது. அவனுக்குப் புறத்தே எதுவும் வேண்டாம். எதுவும் இல்லை என்றபடி. திருமூலரும் இக்கருத்தை வேறுமுறைகளில் கூறுகிறார்.

187. இரசவாத வித்தையைப் பேசுகிற குழூஉச் சொற்களைக் கையாண்டு ஆதார நிலைகளிலே குண்டலினி யோகம் இயற்றுவதன் நுட்பத்தைக் கூறுகிறது இந்த அரிய பாடல். முன்பகுதிகளில் குண்டலினி பற்றிய விளக்கத்தில் இதன்விரிவு சொல்லப் பட்டுள்ளது.

188. இறுதி அடி 'முலைத்தடத்து' என்றும் 'பிணத்தடத்து' என்றும் பாடம். பிறப்பறுத்து, முனைப்பறுத்து என்ற இரு பாடங்களும் நாலாவது சீருக்கு உள்ளன.

189. உருவ மல்ல வொளியுமல்ல
வொன்ற தாகி நின்றதே
மருவு மல்ல கந்தமல்ல
மந்த நாடி யுற்றதல்ல
பெரிய தல்ல சிறியதல்ல
பேசு மாவி தானுமல்ல
அரிய தாக நின்றுநேர்மை
யாவர் காண வல்லிரே.

190. ஓரெ ழுத்து உலகெலாம்
உதித்த அட்ச ரத்துளே
ஈரெ ழுத்து இயம்புகின்ற
இன்ப மேது அறிகிலீர்
மூவெ ழுத்து மூவராய்
மூண்டெ ழுந்த மூர்த்தியை
நாலெ ழுத்து நாவிலே
நவின்ற தேசி வாயமே.

191. ஆதி யந்த மூலவிந்து
நாதம் ஐந்து பூதமாய்
ஆதி யந்த மூலவிந்து
நாதம் ஐந்தெ ழுத்துமாய்
ஆதி யந்த மூலவிந்து
நாதம் மேவி நின்றதும்
ஆதி யந்த மூலவிந்து
நாத மேசி வாயமே.

---

189. பரம்பொருள் எத்தன்மையானது? அடுக்கு அடுக்காக மொழிகள் வருகின்றன!

190. ப்ரணவத்தில் உள்ளுறையாக இருப்பது 'அர்த்தமாத்திரைப் பிரணம்' ஆகும். அது விந்து நாதமாக விரிகிறது. பிரணவம் அ, உ, ம என்று மூன்றாகி மும்மூர்த்திகளைக் குறிக்கும்.

191. நாதாந்த தத்துவத்தில் உயர்த்தப் பெறுகிற சிவம் ஐந்தொழிலையும் கடந்தது. அது எவ்விதத் தோற்றக் கேடுகளும் இல்லாததாய், அதன் முன்னிலையில் ஐந்தொழிலும் நடைபெறுகிறதாகச் சித்தர் வாக்கு

192. அன்ன மிட்ட பேரெலாம்
அனேக கோடி வாழவே
சொன்ன மிட்ட பேரெலாம்
துரைத்த னங்கள் பண்ணலாம்
வின்ன மிட்ட பேரெலாம்
வீழ்வர் வெந்ந ரகிலே
கன்ன மிட்ட பேரெலாம்
கடந்து நின்ற தின்னமே.

193. ஓதொ ணாமல் நின்றநீர்
உறக்கம் ஊணும் அற்றநீர்
சாதி பேதம் அற்றநீர்
சங்கை யன்றி நின்றநீர்
கோதி லாத அறிவிலே
குறிப்பு ணர்ந்து நின்றநீர்
ஏது மின்றி நின்றநீர்
இயங்கு மாற தெங்ஙனே.

194. பிறந்த போது கோவணம்
இலங்கு நூல்கு டுமியும்
பிறந்து டன்பி றந்ததோ
பிறங்கு நாற்ச டங்கெலாம்
மறந்து நாலு வேதமும்
மனத்து ளேஉ தித்தவோ
நிலம்பி ளந்து வானிடிந்து
நின்ற தென்ன வல்லிரே.

---

192. 'அன்னம் இடுதல்', 'சொன்னம் இடுதல்', 'கன்னம் இடுதல்' என்பன யோகநெறி முறையிலே செய்கிற உத்திகள் என்று பேசப்பெறுகின்றன.

193. மனம் புறத்தே செல்வதையும் வாசனை அறிவதையும் பிட்டபோது மறைந்து இருந்த சிவம் வெளிப்படுகிறது.

194. நம்மோடு வந்தது எது, நாம் கொண்டது எது என்ற அறிவே மெய்யறிவாகும் என்றபடி.

195. துருத்தி யுண்டு கொல்லருண்டு
சொன்ன மான சோதியுண்டு
திருத்த மாய்ம னதிலுன்னித்
திகழ வூத வல்லிரேல்
பெருத்த தூண்இ லங்கியே
பிழம்ப தாய்வி ரிந்திடும்
நிருத்த மான சோதியும்
நீயு மல்ல தில்லையே.

196. வேட மிட்டு மின்துலக்கி
மிக்க தூப தீபமாய்
ஆடறுத்துக் கூறுபோட்ட
அவர்கள் போலும் பண்ணுறீர்
தேடி வைத்த செம்பெலாம்
திரள்ப டப்ப ரப்பியே
போடு கின்ற புட்பபூசை
பூசை யென்ன பூசையே.

197. முட்டு கண்ட தூமையின்
முளைத்தெ ழுந்த சீவனை
கட்டிக் கொண்டு நின்றிடம்
கடந்து நோக்க வல்லிரேல்
முட்டு மற்றுக் கட்டுமற்று
முடியி னின்ற நாதனை
எட்டுத் திக்கும் கையினால்
இருந்த வீட தாகுமே.

---

195. மூலக் கனலை எழுப்புகிற முறை பற்றிய விளக்கம் ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது. அதன் விரிவே இது.

196. பூமலர்ப் பூசை யென்றும், மனமலர்ப்பூசை என்றும் இரண்டு உண்டல்லவா? அதைப் பாடுகிறார் ஞானி.

197. கட்டுப் பாட்டுக்குள் நின்றே, கட்டுக்களைக் கடந்தவனைக் கட்டிப் பிணிக்கவேண்டும். கைகூடி விட்டால் பிறகு அண்டமும் பிண்டமும் ஒன்றே.

198. அருக்க னோடு சோமனும்
அதற்கு மப்பு றத்திலே
நெருக்கி யேறு தாரகை
நெருங்கி நின்ற நேர்மையை
உருக்கி யோர்எ ழுத்துளே
ஒப்பி லாத வெளியிலே
இருக்க வல்ல வேரலோ
இனிப்பி றப்ப தில்லையே.

199. மூல வ''ட்ட மீதிலே
முளைத்த அஞ்செ ழுத்தின்மேல்
கோல வட்ட மூன்றுமாய்க்
குலைந்த லைந்து நின்றநீர்
ஞால வட்ட மன்றுளே
நவின்ற ஞான மாகிலோ
ஏல வட்ட மாகியே
இருந்த தேசி வாயமே.

200. சுக்கி லத்தி சையுளே
சுரோணி தத்தின் வாசலுள்
முச்ச துரமெட் டுளேஅம்
மூலா தார வளையிலே
அச்ச மற்ற சவ்வுளே
அரிய ரன்அ யனுமாய்
உச்ச ரிக்கும் மந்திரம்
உண்மை யேசி வாயமே.

---

198. குண்டலினியின் ஏறுவழியைப் பார்த்தோமானால், மூலாதாரம் தொடங்கி சூக்கும சக்கரம் வரையுள்ள பாதையிலே ஏற்படுகின்ற நிகழ்ச்சிகளை இப்பாடல் விளக்குவதன் தெளிவைக் காணலாம் - பக்.332 (முதலாம் பகுதி)

199. சித்தர்களின் முறைகளைக் கற்பிக்கிற ஆசான்கள் மந்திர மேனிச் சக்கரம் என்று வரைந்து காட்டுவதுண்டு. 'ந' வில் தொடங்கி மேலேறும்போது அகர நிலையிலே 'வ' காணலாம்.

200. படைப்புக்கு ஆதாரமான நிலையின் விளக்கம்; மந்திர மேனிச் சக்கரத்தின் எழுத்துநிலையைக் கூறுகிறது.

201. பூவு நீரும் என்மனம்
பொருந்து கோயில் என்னுளம்
ஆவி யோடி லங்கமாய்
அகண்ட மெங்கும் ஆகிலும்
மேவு கின்ற ஐவரும்
விளங்கு தீப தீபமாய்
ஆடு கின்ற கூத்தனுக்கோர்
அந்தி சந்தி இல்லையே.

202. உருக்க லந்த பின்னலோ
வுன்னை நான்அ றிந்ததும்
இருக்கி லென்பி றக்கிலென்
இளைத்தி ருந்த போதெலாம்
உருக்க லந்து நின்றபோது
நீயு நானும் ஒன்றலோ
திருக்க லந்த போதலோ
தெளிந்த தேசி வாயமே.

203. சிவாய மஞ்செ ழுத்திலே
தெளிந்து தேவ ராகலாம்
சிவாய மஞ்செ ழுத்திலே
தெளிந்து வான மாளலாம்
சிவாய மஞ்செ ழுத்திலே
தெளிந்து கொண்ட வான்பொருள்
சிவாய மஞ்செ ழுத்திலே
தெளிந்து கொள்ளும் உண்மையே.

---

201. 'உள்ளம் பெருங்கோயில் என்ற திருமந்திரம் நினைவுகூரத் தக்கது. கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே' என்ற அடியை இப்பாடலின் மூன்றாம் அடியோடு ஒப்பிடலாம்.

202. நானும் நீயும் ஒன்றாகிவிட்டால் பிறகு நினைப்பு என்றும் மறப்பு என்றும் சொல்ல இடம் ஏது? இதே கருத்தைப் பிற ஞானிகளும் பாடியுள்ளனர். திருமந்திரத்தில் பல இடங்களில் இவ்வாறு பேசுகிறார் திருமூலர். தூ மொழீ வாசகம் சொல்லுமின் எனக்கேட்டு இதே கேள்வியை எழுப்புகிறார்.

203. சிவவாக்கியர் தமது பாடல்களில் பல அடிகளில் அஞ்செழுத்து மொழிந்து அதன் ஆற்றலைப் பலபடக் கூறுகிறார். இது ஒருநிலை. மந்திரங்கள் ஏதடா என்று கேட்பது பிறிதொரு நிலை.

204. பொய்க்கு டத்தில் ஐந்தொதுங்கிப்
போக வீசு மாறுபோல்
இச்சட மும்இந் திரியமும்
நீரு மேல்அ லைந்ததே
அக்குடஞ் சலத்தை மொண்டு
அமர்ந்தி ருந்த வாறுபோல்
இச்சடஞ் சிவத்தை மொண்டு
உகந்த மர்ந்து இருப்பதே.

205. பட்ட மும்க யிறும்போலப்
பறக்க நின்ற சீவனை
பார்வை யாலே பார்த்துநீ
பருமு டிக்சுப் போடடா
திட்ட வும்ப டாதடா
சீவ னைவி டாதடா
கட்ட டாநீ சிக்கெனக்
களவ றிந்த கள்ளனை.

206. அல்லி றந்து பகலிறந்து
அகப்பி ரமம்அ றிந்துபோய்
அண்ட ரண்ட மும்கடந்தது
அனேக னேக ரூபமாய்ச்
சொல்லி றந்து மனமிறந்த
சுகசொ ரூப உண்மையைச்
சொல்லி யாற வென்னில்வேறு
துணைவ ரில்லை யானதே.

---

204. இதே கருத்து உபநிடதங்களிலும் கூறப்பெறுகிறது. குடத்திலே நீர் இருப்பதால் குடம் நீராகிவிடுமா?

205. கண்ணப்ப சுவாமிகள் கற்பிக்கிற தீட்சைகளிலே இந்தப் பருமூச்சுப் போடுவது பற்றி அடிக்கடி சொல்வதுண்டு. கண்களால் பார்த்து ஒருவரை மயங்கச் செய்வதைப் பார்க்கிறோம். இது சாதாரணம். மயக்கத்தில் இருப்பவரைக் கண்கள்கொண்டு எழுப்புவது ஞானக்கல்வியின் பாற்படும்.

206. 'இரவுபகல் அற்ற இடம்' என்று தாயுமானவரும் அவரைப் போன்ற ஞானக்கவிஞர்களும் பாடுகிற ஒடுக்கநிலை இதுவே.

207. ஐயி ரண்டு திங்களாய்
அடங்கி நின்ற தூமைதான்
கையி ரண்டு காலிரண்டு
கண்ணி ரண்டும் ஆகியே
மெய்தி ரண்டு சத்தமாய்
விளங்கி இரச கந்தமும்
துய்ய காய மானதும்
சொல்லு கின்ற தூமையே.

208. அங்க லிங்க பீடமும்
அகவை மூன்றெ ழுத்தினுஞ்
சங்கு சக்க ரத்திலும்
சகல வான கத்தினும்
பங்கு கொண்ட யோகிகள்
பரம வாசல் அஞ்சினும்
சிங்க நாத வோசையும்
சிவாய மல்ல தில்லையே.

209. அஞ்செ ழுத்து மூன்றெழுத்தும்
என்று ரைத்த அன்பர்காள்
அஞ்செ ழுத்து மூன்றெழுத்தும்
அல்ல காணும் அப்பொருள்
அஞ்செ ழுத்து நஞ்சழுத்தி
அவ்வெ ழுத்து அறிந்தபின்
அஞ்செ ழுத்து வவ்வின்வண்ணம்
ஆன தேசி வாயமே.

---

207. இந்தப் பருஉடம்பு உண்டானது எப்படி? மின்ஆற்றல் தோற்றுவிப்பதற்கு மின்கலம் ஆக்குகிற பான்மை அது!

208. பிரணவம். அ, உ, ம என்ற மூன்று உறுப்புகளைக் கொண்டது. இந்த மூன்றும் விரிவுடைவதும், விரிவைப் பின் ஒருமுகப்படுத்துவதும் யோகமாகும்.

209. எழுத்து என்றதும் வரிவடிவத்தினை எண்ணுவது மனித இயல்பு. உண்மை அப்படியில்லை. எழுத்து என்பது ஒலி. ஒலி என்பது அதிர்வு. இதை உணர்வதே ஞானம்.

210. ஆத ரித்த மந்திரம்
அமைந்த வாக மங்களும்
மாதர் மக்கள் சுற்றமும்
மயக்க வந்த நித்திரை
ஏது புக்கு ஒளித்ததோ
வெங்கு மாகி நின்றதோ
சோதி புக்கு ஒளித்திடம்
சொல்ல டாசு வாமியே.

211. அக்க ரம்ம னாதியோ
ஆத்து மாவ னாதியோ
புக்கி ருந்த பூதமும்
புலன்க ளும்அ னாதியோ
தக்க மிக்க நூல்களுஞ்
சதாசி வம்அ னாதியோ
மிக்க வந்த யோகிகாள்
விரைந்து ரைக்க வேணுமே.

212. ஒன்ப தான வாசல்தான்
ஒளியு நாள்இ ருக்கையில்
என்ப தாமி ராமராம
ராம வென்னு நாமமே
வன்ம மான பேர்கள் வாக்கில்
வந்து நோய்அ டைப்பதாம்
அன்ப ரான பேர்கள்வாக்கில்
வாழ்ந்த மைந்து இருப்பதே.

---

210. இதே கருத்து வேறு வடிவத்திலும் வந்துள்ளது.

211. 'ஆத்துமா அனாதியோ' என்ற கேள்வியோடு இதை ஒப்பிடலாம். அடிப்படையான வித்தாக அமைவது படைப்பின் ஆதார அமைப்பேயாகும். இந்த ஆதாரத்துக்குள்ளே புகுந்து பார்க்கும்போது, தத்துவங்கள் அனைத்தும் ஒரே பான்மையில் விரிகின்றன என்றபடி.

212. இராம நாமத்தின் மகிமையைச் சிவவாக்கியர் பல பாடல்களில் மொழிகிறார். அஞ்செழுத்து, எட்டெழுத்து என்பது போலவே, சிவாயமும் இராமநாமமும் சிவ வாக்கியரும் திருமழிசையுமாகிய ஞானியின் தவ ஆற்றிலே கவி வடிவம் எடுத்து மந்திர ஆற்றலோடு ஒலிமாண்பு வழங்குகின்றன.

213. அள்ளி நீரை யிட்டதேது
அகங்கை யில்கு ழைந்ததேது
மெள்ள வேமு ணமுணென்று
விளம்பு கின்ற மூடர்காள்!
கள்ள வேட மிட்டதேது
கண்ணை மூடி விட்டதேது
மெள்ள வேகு ருக்களே
விளம்பி டீர்வி ளம்பிடீர்.

214. அன்னை கர்ப்பத் தூமையில்
அவத ரித்த சுக்கிலும்
முன்னை யேத ரித்ததும்
பனித்து ளிபோ லாகுமே
உன்னி தொக்கு ளழலுந்
தூமையுள்ளு ளேய டங்கிடும்
பின்னை யேபி றப்பதுந்
தூமை காணும் பித்தரே.

215. அழுக்க றத்தி னம்குளித்து
அழுக்க றாத மாந்தரே
அழுக்கி ருந்த தெவ்விடம்
அழுக்கி லாத தெவ்விடம்
அழுக்கி ருந்த அவ்விடத்து
அழுக்க றுக்க வல்லிரேல்
அழுக்கி லாத சோதியோடு
அணுகி வாழ லாகுமே.

---

213. இந்த உலக மக்களை வியப்பில் ஆழ்த்துகிற செயலாக முடிகிறது சடங்குமுறை! ஆனால் மெய்யான இறையின்பம் இதில் இல்லை!

214. பெண்களின் உடல் அமைப்பில் உள்ள நுட்பத்தை உணர்ந்து தெளிவதே பேரறிவு. அதை ஏளனம் செய்வது மடமை.

215. உடம்பைக் கழுவுகிறோம். உள்ளத்தைக் கழுவுகிற முறை எது? அகத்திற்குத் திருமஞ்சனம் ஆட்டுகிற 'ஞானஸ்நானம்' எது என்பதே தீட்சைமுறையாகும்!

216. அணுத்தி ரண்ட கண்டமாய்
அனைத்தும் பல்லி யோனியாய்
மனுப்பி றந்தோ திவைத்த
நூலி லேம யங்குறீர்
சனிப்ப தேது சாவதேது
தாவ ரத்தின் ஊடுபோய்
நினைப்ப தேது நிற்பதேது
நீர்நி னைந்து பாருமே.

217. ஆதி யாகி யண்டரண்டம்
அப்பு றத்தும் அப்புறம்
சோதி யாகி நின்றிலங்கு
சுருதி நாம சோமனை
பேதி யாமல் தம்முளே
பெற்று ணர்ந்த ஞானிகள்
சாதி பேத மென்பதொன்று
சற்று மில்லை இல்லையே.

218. ஆக்கை மூப்ப தில்லையே
ஆதி காரணத் தினாலே
நாக்கை மூக்கை உள்மடித்து
நாத நாடி யூடுபோய்
ஏக்க றுத்தி ரெட்டையும்
இருக்க மூத்த வல்லிரேல்
பார்க்கப் பார்க்க திக்கெலாம்
பரப்பி ரம்ம மாகுமே.

---

216. "Matter can neither be created nor destroyed" என்பது இன்றைய விஞ்ஞானம். அதுவே மெய்ஞ்ஞானமுமாகும்!

217. எல்லாம் ஒன்று என்று காண்பது வெறும் புற உலகப் பார்வையன்று. உள்ளத்தினுள்ளே நிலைபெற வேண்டிய ஞானமாகும்.

218. யோகப் பயிற்சியிலே நாக்கும் மூக்கும் முக்கியமான பணியைச் செய்கின்றன. அந்த முக்கியமான பயிற்சி முறையைப் பாடியபடி.

219. அஞ்சும் அஞ்சும் அஞ்சும்அஞ்சும்
அல்லல் செய்து நிற்பதும்
அஞ்சும் அஞ்சும் அஞ்சுமே
அமர்ந்து ளேஇ ருப்பதும்
அஞ்சும் அஞ்சும் அஞ்சுமே
ஆத ரிக்க வல்லிரேல்
அஞ்சும் அஞ்சும் உம்முளே
அமர்ந்த தேசி வாயமே.

220. அஞ்செ ழுத்தின் ஆதியாய்
அமர்ந்து நின்றது ஏதடா
நெஞ்ச ழுத்தி நின்றுகொண்டு
நீசெ பிப்ப தேதடா
அஞ்செ ழுத்தின் வாளதால்
இறுப்ப தான தேதடா
பிஞ்செ ழுத்தின் நேர்மைதான்
பிரித்து ரைக்க வேணுமே.

221. உயிரி ருந்த தெவ்விடம்
உடம்பெ டுத்த தன்முனம்
உயிர தாவது ஏதடா
உடம்ப தாவது ஏதடா
உயிரை யும்உ டம்பையும்
ஒன்று விப்பது ஏதடா
உயிரி னால்உ டம்பெடுத்த
உண்மை ஞானி சொல்லடா.

---

219. பூதங்கள் ஐந்து, புலன்கள் ஐந்து. அதாவது, கர்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து. ஐந்து எழுத்துக்கள் நிற்கும் நிலைகளும் ஐந்து.

220. வாசல்களைத் திறப்பது மனம். ஆனால் அதற்குரிய திறவுகோலைத் தருபவன் குரு. திறவுகோலை எங்கே செருகுவது என்று செருகிக் காட்டுபவனும் அவனே.

321. ஓர் உடம்பு உருவாகி அதற்குள் உயிர்புகுந்து பொருந்துவதற்குத் தந்தையும் தாயும் இணைவது மட்டும் போதவில்லை என்பதே மெய்ஞ்ஞானம். ஒவ்வொரு மனிதப்புணர்ச்சியும் ஒரு கரு ஆவதில்லை. ஐம்பூத ஆற்றலும் இறையாற்றலும் இணையவேண்டும்.

222. சுழித்த வோர்எ ழுத்தையும்
சொன்மு கத்தி ருத்தியே
துன்ப வின்ப முங்கடந்து
சொல்லு மூல நாடிகள்
அழுத்த மான அக்கரம்
அங்கி யுள்ளெ ழுப்பியே
ஆறு மங்கை யுட்கலந்
தப்பு றத்த லத்துளே.

223. உருத்த ரிப்ப தற்குமுன்
உயிர்பு குந்த நாதமும்
கருத்த ரிப்ப தற்குமுன்
காய மென்ன சோணிதம்
அருள்த ரிப்ப தற்குமுன்
அறிவு மூலா தாரமாம்
குருத்த றிந்து கொள்ளுவீர்
குணங்கெ டுங்கு ருக்களே.

224. எங்கு முள்ள வீசனார்
எம்மு டல்பு குந்தபின்
பங்கு கூறு பேசுவார்
பாடு சென்ற ணுகிலார்
எங்கள் தெய்வம் உங்கள்தெய்வம்
என்றி ரண்டு பேதமோ
உங்கள் பேதம் அன்றியே
உண்மை யிரண்டும் இல்லையே.

---

222. இது முழுவதும் பயிற்சிமுறையைச் சொல்லுவதாகும்.

223. நுண்ணுடல் தோன்றிப் பருவுடல் தோன்றும் பான்மையைப் பற்றிக் கூறியவாறு.

224. எல்லாமாய் எங்குமாய் நிறைந்த தத்துவம் உடம்புக்குள் புகுந்து கலந்த பின்பு வேறுபாடுகளுக்கு இடம் ஏது?

225. அரியு மாகி யயனுமாகி
அண்ட மெங்கும் ஒன்றதாய்
பெரிய தாகி உலகுதன்னில்
நின்ற பாதம் ஒன்றுளே
விரிவ தென்று வேறுசெய்து
வேட மிட்ட மூடரே
அறிவி னோடு பாருமிங்கும்
அங்கு மெங்கும் ஒன்றதே.

226. வெந்த நீறு மெய்க்கணிந்து
வேட முந்த ரிக்கிறீர்
சிந்தை யுள்நி னைந்துமே
தினஞ்செ பிக்கும் மந்திரம்
முந்து மந்தி ரத்திலோ
மூல மந்தி ரத்திலோ
எந்த மந்தி ரத்திலோ
ஈசன் வந்து இயங்குமே.

227. அகார கார ணத்திலே
அனேக னேக ரூபமாய்
உகார கார ணத்திலே
உருத்த ரித்து நின்றனன்
மகார கார ணத்திலே
மயங்கு கின்ற வையகம்
சிகார கார ணத்திலே
தெளிந்த தேசி வாயமே.

---

225. முன்கூறிய கருத்தையே மேலும் இயம்புகிறார். அரியென்றும் அயனென்றும் வெவ்வேறு பெயர்ச்சொல்லி அழைக்கும் எல்லா நிலைகளும் ஒன்றே என.

226. வேடங்கள் புனைந்து வெறுஞ்சொற்களை உச்சரித்தால் போதாது. அந்தந்த ஒளிக்குரிய இடம் மெய்யிலே எங்குள்ளது என்ற இரகசியத்தைத் தெரிந்துகொண்டாலன்றி வெறும் சொற்களால் பயனில்லை.

227. எழுத்தின் நிலை எத்துணை முக்கியமானது என்பதை வற்புறுத்துகிறார்.

228. அவ்வெ ழுத்தில் உவ்வுவந்த
அகார மும்ச னித்ததோ
எவ்வெ ழுத்தும் அவ்வெழுத்துட்
ஒன்றை யொன்றி நின்றதோ
செவ்வை யொத்து நின்றலோ
சிவப தங்கள் சேரிலும்
இவ்வை யொத்த ஞானிகள்
விரித்து ரைக்க வேணுமே.

229. ஆதி யான வஞ்சிலும்
அனாதி யான நாலிலும்
சோதி யான மூன்றிலும்
சொரூப மற்ற ரெண்டிலும்
நீதி யானது ஒன்றிலே
நிறைந்து நின்ற வஸ்துவை
ஆதி யானது ஒன்றுமே
அற்ற தஞ்செ ழுத்துமே.

230. வானி லாதது ஒன்றுமில்லை
வானு மில்லை வானிடில்
ஊனி லாதது ஒன்றுமில்லை
ஊனு மில்லை ஊனிடில்
நானி லாதது ஒன்றுமில்லை
நாலு மில்லை நண்ணிடில்
தானி லாதது ஒன்றுமே
தயங்கி யாடு கின்றதோ.

---

228. எழுத்தும் நிலையும் என்ற பகுதியில் இந்த அட்சரத் தோற்றம் பற்றிய சிவயோகியாரின் விளக்கம் காண்க.

229. இதுவும் மேலே கண்டதன் விரிவேயாகும்.

230. ஒன்று பிரிந்து ஒன்றுக்கு மேற்படும்போது ஏற்படுகிற மாற்றங்கள் இவை! வித்திலிருந்து செடி தோன்றிய பிறகு வித்து மறைந்து விடுகிறது. அதாவது செடி தோன்றுகிறவரை வித்தின் இயக்கம் வேலை செய்கிறது. பிறகு வித்து செடியிலே ஒடுங்கி விடுகிறது அல்லவா?

231. சுழித்த தோர்எ ழுத்தையுன்
சொல்மு கத்தி ருத்தியே
துன்ப வின்ப முங்கடந்து
சொல்லு நாடி யூடுபோய்
அழுத்த மான வக்கரத்தின்
அங்கி யைஎ ழுப்பியே
ஆறு பங்க யங்கடந்து
அப்பு றத்து வெளியிலே.

232. விழித்த கண்கு வித்தபோது
அடைந்து போய்எ ழுத்தெலாம்
விளைத்து விட்ட இந்திரசால
வீட தான வெளியிலே
அழுத்தி னாலும் மதிமயங்கி
அனுப விக்கும் வேளையில்
அவனு முண்டு நானுமில்லை
யாரு மில்லை யானதே.

233. நல்ல மஞ்ச னங்கள்தேடி
நாடி நாடி ஓடுறீர்
நல்ல மஞ்ச னங்களுண்டு
நாத னுண்டு நம்முளே
எல்லை மஞ்ச னங்கள்தேடி
யேபூ சை பண்ணினால்
தில்லை மேவு சீவனும்
சிவப தத்துள் ஆடுமே.

---

231. மூல நாடி எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதையும் அதன் பின்னால் முறையும் ஏற்கெனவே விளக்கம் செய்யப்பட்டுள்ளன.

232. கண் இமைகளை மூடிச் செய்கிற தவத்திலே ஒளிசெய்கின்ற கோலங்கள் அற்புதமானவை. நான் அவனாகிற அந்த நிலையில் ஏற்படுகிற முயக்கின்பம் இரண்டும் ஒன்றும் அற்ற பேரின்பமே.

234. உயிர கத்தில் நின்றிடும்
உடம்பெ டுத்த தற்குமுன்
உயிர காரம் ஆயிடும்
உடலு காரம் ஆயிடும்
உயிரை யும்உ டம்பையும்
ஒன்று விப்பது அச்சிவம்
உயிரி னால்உ டம்புதான்
எடுத்த வாறு உரைக்கிறேன்.

235. அண்ட மேழும் உழலவே
அனந்த யோனி யுழலவே
பண்டு மால்அ யனுடன்
பரந்து நின்றும் உழலவே
எண்டி சைக டந்துநின்று
இருண்ட சத்தி உழலவே
அண்ட ரண்டம் ஒன்றதாய்
ஆதி நட்டம் ஆடுமே.

236. உருவ நீர்உ றுப்புகொண்டு
உருத்த ரித்து வைத்திடும்
பெரிய பாதை பேசுமோ
பிசாசை யொத்த மூடரே
கரிய மாலும் அயனுமாகக்
காணொ ணாத கடவுளை
உரிமை யாக உம்முளே
உணர்ந்து ணர்ந்து கொள்ளுமே.

---

234. உயிரின் இயக்கத்தில் இந்த உடம்பு இணைந்தது. இந்த இரண்டையும் இணைத்து இயக்குவது பரம்பொருள்.

235. இந்த உலக உயிர்வர்க்கத் தோற்றம் கூறியவாறு. காகபுசுண்டர் இந்தத் தோற்றத்தை விளக்குகிற முறையில் பல நூறு பாடல்களிலே சித்திரிக்கிறார்.

236. ஆற்றலாக இருப்பது பருமை பெறுகிற பரிணாமம் மிக நுட்பமான முறையிலே கண்டுணர்ந்து சொல்வது சித்தர் இலக்கியமேயாகும். அயனும் மாலும் காணாத தத்துவம் அகப்பார்வையிலே துலங்குகிறது என்ற அடிப்படையைக் கூறுகிறார்.

237. பண்ணி வைத்த கல்லையும்
பழம்பொ ருளது என்றுநீர்
எண்ணி முற்றும் என்னபேர்
உரைக்கி றீர்கள் ஏழைகாள்
பண்ண வும்ப டைக்கவும்
படைத்து வைத்து அழிக்கவும்
ஒண்ணு மாகி யுலகளித்த
ஒன்றை நெஞ்சில் உன்னுமே.

238. நால தான யோனியுள்
நவின்ற விந்தும் ஒன்றதாய்
ஆல தான வித்துளே
அமர்ந்தொ டுங்கும் ஆறுபோல்
சூல தான வுற்பனஞ்
சொல்வ தான மந்திரம்
மேல தான ஞானிகாள்
விரித்து ரைக்க வேணுமே.

239. அருவ மாய்இ ருந்தபோது
உன்னை யங்கு அறிந்திலை
உருவ மாய்இ ருந்தபோது
உன்னை நான்அ றிந்தனன்
குருவி னால்தெ ளிந்துகொண்டு
கோதி லாத ஞானமாம்
பருவ மான போதிலோ
பரப்பி ரம்ம மானதே.

---

237. ஆதிப் பழம்பொருள் என்று வணங்கித் துதிக்கிற கடவுளைக் கல்லிலே படைத்துவிடுகிறோம் அல்லவா நாம்! பண்ணுதல், படைத்தல், வைத்தல், அழித்தல் ஆகிய தொழில் செய்யும் அந்த ஒன்றை உள்ளத்தில் எண்ணிப் பாருங்கள்.

238. 'அண்டசம்' முதலான நால்வகை யோனியில் தோன்றுகிற உயிர்கள் அனைத்துக்கும் வித்து எது? சிந்தித்துப் பார்த்தீர்களா?

239. நுண்மையை உணர்வதில்லை. நுண்மை திண்மை பெற்றபோது காண்கிறோம். இந்நிலையில் நுண்மையைக் காட்டுகிற குருவானவன் உணர்த்த உணர்ந்து தெளிகிறோம். அப்போது பரப்பிரம்மம் புரிகிறது.

240. பிறப்ப தும்இ றப்பதும்
பிறந்தி டாது இருப்பதும்
மறப்ப தும்நி னைப்பதும்
மறந்த தைத்தெ ளிந்ததும்
துறப்ப தும்தொ டுப்பதும்
சுகித்து வாரி உண்பதும்
பிறப்ப தும்இ றப்பதும்
பிறந்து வீடு அடங்குமே.

241. கண்ணி லேஇ ருப்பனே
கருங்க டல்க டைந்தமால்
விண்ணி லேஇ ருப்பனே
மேவி யங்கு நிற்பனே
தன்னு ளேஇ ருப்பனே
தராத லம்ப டைத்தவன்
என்னு ளேஇ ருப்பனே
எங்கு மாகி நிற்பனே.

242. ஆடு நாடு தேடினும்
ஆனை சேனை தேடினும்
கோடி வாசி தேடினும்
குறுக்கே வந்து நிற்குமோ
ஓடி யிட்ட பிச்சையும்
உகந்து செய்த தர்மமும்
சாடி விட்ட குதிரைபோல்
தர்மம் வந்து நிற்குமே.

---

240. பிறவிச்சக்கரத்தின் இயக்கமே மனத்தின் இயக்கம். மனம் நிலையானதைப் பற்றி இயங்கத் தொடங்கிவிட்டால், வீடுபேறு என்ற ஒண்மையிலே எல்லாம் ஒடுங்கிவிடும்.

241. சிக்கனம் பாறை கண்ணப்பசுவாமிகள் முதலாவது திட்சை வழங்கும்போது பாடுகிற மிக அழகிய பாடல் இது. என்னுள் இருக்கக்கூடிய இறைவன் எங்கு வதிகிறான் என்பதைக் கூறுகிறது,

242. மரணத்தின்போது துணை செய்வது எது? ஆழமான சிந்தனையில் ஆழ்த்துகிற அழகு பாடல்.

243. எள்ளி ரும்பு கம்பிளி
இடும்ப ருத்தி வெண்கலம்
அள்ளி யுண்ட நாதனுக்கோர்
ஆடை மாடை வத்திரம்
உள்ளி ருக்கும் வேதியர்க்கு
உற்ற தான மீதிரால்
மெள்ள வந்து நோயனைத்தும்
ஈண்டி டும்சி வாயமே.

244. ஊரி லுள்ள மனிதர்காள்
ஒருமை மனதாய்க் கூடியே
தேரி லேவ டத்தையிட்டுச்
செம்பை வைத்து இழுக்கிறீர்
ஆரி னாலும் அறியொணாத
ஆதி சித்த நாதரை
பேதை யான மனிதர்பண்ணும்
புரளி பாரும் பாருமே.

245. மருள்ப ழுத்த சிந்தையால்
மயங்கு கின்ற மாந்தரே
குருக்கொ டுத்த மந்திரங்
கொண்டு நீந்த வல்லிரேல்
குருக்கொ டுத்த தொண்டரும்
குகனொ டிந்த பிள்ளையும்
பருத்தி பட்ட பன்னிரண்டு
பாடு தான்ப டுவரே.

---

243. இந்த மூன்று பாடல்களும் உருவ வழிபாட்டில் ஈடுபடுவதைச் சீறுவதுபோல் காணலாம். உண்மை அது இல்லை. பருப்பொருள்களுக்குள்ளே ஊடுருவி நிற்கிற பரமானந்தப் பொருள் எது என்பதை உணரவேண்டும். வெறும் சடங்குகளுக்கு முக்கியம் கொடுப்பதோடுகூட, இந்தத் தோற்றங்களை வைத்துக்கொண்டு எத்தனைபேர் எப்படியெல்லாம் புரளி பண்ணுகிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

246. அன்னை கர்ப்ப அறையதற்குள்
அங்கி யின்பி ரகாசமாய்
அந்த றைக்குள் வந்திருந்து
அரிய விந்து ரூபமாய்த்
தன்னை யொத்து நின்றபோது
தடைய றுத்து வெளியதாய்த்
தங்க நற்பெ ருமைதந்து
தலைவ னாய்வ ளர்ந்ததே.

247. உன்னை யற்ப நேரமும்
மறந்தி ருக்க லாகுமோ
உள்ள மீது உறைந்தனை
மறைப்பி லாத சோதியே
பொன்னை வென்ற பேரொளிப்
பொருவி லாத ஈசனே
பெண்ண டிப்பி றப்பிலாமை
என்றும் நல்க வேணுமே.

248. பிடித்த தண்டு மும்மதோ
பிரம மான பித்தர்காள்
தடித்த கோல மத்தைவிட்டுச்
சாதி பேதம் கொண்மினோ
வடித்தி ருந்த தோர்சிவத்தை
வாய்மை கூற வல்லிரேல்
திடுக்க முற்ற ஈசனைச்
சென்று கூட லாகுமோ?

---

246. கருவுருக்குள்ளேயே வந்து, அதோடு வளர்ந்து வெளியாகிற தத்துவம் அது, தலைவனால் வளர்கிற தத்துவம் அது.

247. பிறவிச் சுழலிலிருந்து விடுதலை கோரியவாறு.

248. தண்டு பிடித்து வேடந்தாங்கி வளைய வருவதாலும் உயர்வுதாழ்வு பேசி வாழ்வதாலும் இறைமை அடைந்து விட முடியுமா?

249. சத்தி நீத யவுநீ
தயங்கு சங்கின் ஓசைநீ
சித்தி நீசி வனும்நீ
சிவாய மாம்எ ழுத்துநீ
முத்தி நீமு தலுநீ
மூவ ரான தேவர்நீ
அத்தி றமும்உம் முள்ளே
அறிந்து ணர்ந்து கொள்ளுமே.

250. சட்டை யிட்டு மணிதுலக்கும்
சாத்தி ரச்ச மூக்கரே
பொத்தக த்தை மெத்தவைத்துப்
போத மோதும் பொய்யரே
நிட்டை யேது ஞானமேது
நீரி ருந்த அட்சரம்
பட்டை யேது சொல்லிரே
பாத கக்க படரே.

251. உண்மை யான சுக்கிலம்
உபாய மாய்இ ருந்ததும்
வெண்மை யாகி நீரிலே
விரைந்து நீர தானதும்
தண்மை யான காயமே
தரித்து ரூப மானதும்
தெண்மை யான ஞானிகாள்
தெளிந்து ரைக்க வேணுமே.

---

249. எல்லா இயல்புகளுமாய் நிற்பது பரம்பொருளே. அதுவே உள்ளுக்குள்ளும் புகுந்து நிற்கிறது.

250. வெளிவேடங்கள், படிப்பு, ஆடம்பரங்கள் எல்லாம் வெறும் கபடம், மெய்யாகா.

251. திரவமாக இருந்த உயிராற்றல் திண்மை பெற்று உடம்பாகிற தன்மையை எப்படிச் சொல்லி விளக்குவது? ஆயிற்று என்பது உண்மை; எப்படி ஆயிற்று என்பதை எவ்வாறு விளக்குவது?

252. வஞ்ச கப்பி றவியை
மனத்து ளேவி ரும்பியே
அஞ்செ ழுத்தின் உண்மையை
அறிகி லாத மாந்தர்காள்
வஞ்ச கப்பி றவியை
வகைத்தி டவ்வும் வல்லிரேல்
அஞ்செ ழுத்தின் உண்மையை
அறிந்து கொள்ள லாகுமே.

253. காயி லாத சோலையில்
கனிபு குந்த வண்டுகாள்
ஈயி லாத தேனையுண்டு
இராப்ப கல்லு றங்குறீர்
பாயி லாத கப்பலேறி
அக்க ரைப்ப டுமுனே
வாயி னால்உ ரைப்பதாகு
மோ மவுன ஞானமே.

254. பேய்கள் பேய்க ளென்கிறீர்
பிதற்று கின்ற பேயர்காள்
பேய்கள் பூசை கொள்ளுமோ
பிடாரி பூசை கொள்ளுமோ
ஆதி பூசை கொள்ளுமோ
அனாதி பூசை கொள்ளுமோ
காய மான பேயலோ
கணக்க றிந்து கொண்டதே.

---

252. இந்தப் பிறவியின் மோகம் தொலையவேண்டும். அது நீங்கினால் அஞ்செழுத்து என்ற மெய்ம்மை புலனாகும்.

253. பொய்யை மெய்யாக மயங்குகிற அறியாமை உறக்கத்தைப் பாடியபடி.

254. பேய் என்பது எது? பூசை கொள்வது எது? அடிப்படையான கேள்விகள். சிந்தித்துப் பார்த்தால் உடம்பாகிய பேய் செய்கிற காரியங்களே அனைத்தும்.

249. சத்தி நீத யவுநீ
தயங்கு சங்கின் ஓசைநீ
சித்தி நீசி வனும்நீ
சிவாய மாம்எ ழுத்துநீ
முத்தி நீமு தலுநீ
மூவ ரான தேவர்நீ
அத்தி றமும்உம் முள்ளே
அறிந்து ணர்ந்து கொள்ளுமே.

250. சட்டை யிட்டு மணிதுலக்கும்
சாத்தி ரச்ச முக்கரே
பொத்தக த்தை மெத்தவைத்துப்
போத மோதும் பொய்யரே
நிட்டை யேது ஞானமேது
நீரி ருந்த அட்சரம்
பட்டை யேது சொல்லிரே
பாத கக்க படரே.

251. உண்மை யான சுக்கிலம்
உபாய மாய்இ ருந்ததும்
வெண்மை யாகி நீரிலே
விரைந்து நீர தானதும்
தண்மை யான காயமே
தரித்து ரூப மானதும்
தெண்மை யான ஞானிகாள்
தெளிந்து ரைக்க வேணுமே.

---

249. எல்லா இயல்புகளுமாய் நிற்பது பரம்பொருளே. அதுவே உள்ளுக்குள்ளும் புகுந்து நிற்கிறது.

250. வெளிவேடங்கள், படிப்பு, ஆடம்பரங்கள் எல்லாம் வெறும் கபடம், மெய்யாகா.

251. திரவமாக இருந்த உயிராற்றல் திண்மை பெற்று உடம்பாகிற தன்மையை எப்படிச் சொல்லி விளக்குவது? ஆயிற்று என்பது உண்மை; எப்படி ஆயிற்று என்பதை எவ்வாறு விளக்குவது?

252. வஞ்ச கப்பி றவியை
மனத்து ளேவி ரும்பியே
அஞ்செ ழுத்தின் உண்மையை
அறிகி லாத மாந்தர்காள்
வஞ்ச கப்பி றவியை
வகைத்தி டவ்வும் வல்லிரேல்
அஞ்செ ழுத்தின் உண்மையை
அறிந்து கொள்ள லாகுமே.

253. காயி லாத சோலையில்
கனிபு குந்த வண்டுகாள்
ஈயி லாத தேனையுண்டு
இராப்ப கல்லு றங்குறீர்
பாயி லாத கப்பலேறி
அக்க ரைப்ப டுமுனே
வாயி னால்உ ரைப்பதாகு
மோ மவுன ஞானமே.

254. பேய்கள் பேய்க ளென்கிறீர்
பிதற்று கின்ற பேயர்காள்
பேய்கள் பூசை கொள்ளுமோ
பிடாரி பூசை கொள்ளுமோ
ஆதி பூசை கொள்ளுமோ
அனாதி பூசை கொள்ளுமோ
காய மான பேயலோ
கணக்க றிந்து கொண்டதே.

---

252. இந்தப் பிறவியின் மோகம் தொலையவேண்டும். அது நீங்கினால் அஞ்செழுத்து என்ற மெய்ம்மை புலனாகும்.

253. பொய்யை மெய்யாக மயங்குகிற அறியாமை உறக்கத்தைப் பாடியபடி.

254. பேய் என்பது எது? பூசை கொள்வது எது? அடிப்படையான கேள்விகள். சிந்தித்துப் பார்த்தால் உடம்பாகிய பேய் செய்கிற காரியங்களே அனைத்தும்.

255. மூல மண்ட லத்திலேயும்
முச்ச துரம் ஆதியாய்
நாலு வாசல் எம்பிரான்
நடுவு தித்த மந்திரம்
கோலி யெட்டி தழுமாய்க்
குளிர்ந்த லர்ந்த தீட்டமாய்
மேலும் வேறு காண்கிலேன்
விளைந்த தேசி வாயமே.

256. ஆதி கூடு நாடியோடிக்
காலை மாலை நீரிலே
சோதி மூலம் ஆனநாடி
சொல்லி றந்த தூவெளி
ஆதி கூடி நெற்பறித்து
அகார மாதி யாகமம்
பேத பேத மாகியே
பிறந்து டல்லி றந்ததே.

257. பாங்கி னோடு இருந்துகொண்டு
பரம னஞ்செ ழுத்துளே
ஓங்கி நாடி மேலிருந்தாங்கு
உச்ச ரித்த மந்திரம்
மூங்கில் வெட்டி நாருரித்து
முச்சில் செய்வி தத்தினின்
ஆய்ந்த நூலிற் தோன்றுமே
அறிந்து ணர்ந்து கொள்ளுமே.

---

255. மூல மண்டலத்தின் அமைப்பையும் நிலையையும் முதலாம் பகுதியுள்ள படத்தை ஒப்புநோக்கிப் புரிந்துகொள்ளலாம். மனோன்மணித் தாமரை என்ற சித்திரத்தைக் காண்க.

256. இதுவும் அடுத்த பாடலும் உருவங்கள். முதலாவது பகுதியில் உண்மையும் உருவகமும் என்ற தலைப்பில் இத்தகைய உருவங்களின் மாண்பைப் பழைய உரைகளின் மேற்கோளுடன் விளக்கியிருப்பதைக் காண்க.

257. அஞ்செழுத்தின் விரிவும் உருவகங்களும் அவ்வையின் குறள் விளக்கத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளமை காண்க.

258. புண்ட ரீகம் மத்தியில்
உதித்தெ ழுந்த சோதியை
மண்ட லங்கள் மூன்றொடு
மன்னு கின்ற மாயனை
அண்ட ரண்டம் ஊடறுத்து
அறிந்து ணர வல்லிரேல்
கண்ட கோயில் தெய்வமென்று
கையெ டுப்ப தில்லையே.

259. அம்ப லங்கள் சந்தியில்
ஆடு கின்ற வம்பனே
அன்ப னுக்குள் அன்பனாய்
நிற்ப னாதி வீரனே
அன்ப ருக்குள் அன்பனாய்
நின்ற வாதி நாதனே
உம்ப ருக்கும் உண்மையாய்
நின்ற உண்மை உண்மையே.

260. அண்ண லாவது ஏதடா
அறிந்து ரைத்த மந்திரம்
தண்ண லாக வந்தவன்
சகல புராணம் கற்றவன்
கண்ண னாக வந்தவன்
காரண த்து உதித்தவன்
ஒண்ண தாவது ஏதடா
உண்மை யான மந்திரம்.

---

258. தாமரைத் தவத்திலே நடுவில் உள்ள நாடியூடு எழுந்து ஓங்குகின்ற ஒளியின் வல்லமையே ஆன்ம ஆற்றலின் செறிவாகும். இந்த மெய்யொளி கண்டவர் புறக்காட்சிகளை வென்றவர்.

259. சிரசில் உள்ள ஒளிமண்டலமே எல்லாத் தத்துவங்களையும் அடக்குவதும் வெளிப்படுத்துவதும் ஆகும்.

260. உண்மையான மந்திரத்தின் அனுபவம் என்பது, உடம்பில் மறைந்திருக்கும் சிவன் சிரசிலே ஒளியாக எழுவதேயாம்.

261. உள்ள தோபு றம்பதோ
உயிரொ டுங்கி நின்றிடம்
மெள்ள வந்து கிட்டினீர்
வினவ வேணும் என்கிறீர்
உள்ள தும்பு றம்பதும்
ஒத்த போது நாதமாம்
கள்ள வாச லைத்திறந்து
காண வேணும் மாந்தரே.

262. ஆர லைந்து பூதமாய்
அளவி டாத யோனியும்
பார மான தேவரும்
பழுதி லாத பாசமும்
ஓரொ ணாத அட்டமும்
உலோக லோக லோகமும்
சேர வந்து போயிருந்த
தேக மேது செப்புமே.

263. என்ன கத்துள் என்னைநான்
எங்கும் நாடி ஓடினேன்
என்ன கத்துள் என்னைநான்
அறிந்தி லாத தன்மையால்
என்ன கத்துள் என்னைநான்
அறிந்து மேதெ ரிந்துபின்
என்ன கத்துள் என்னையன்றி
யாது மொன்றும் இல்லையே.

---

261. நம்முடைய உடம்புக்குள்ளே 'அகலிடம்' இருக்கிறது. அங்கே பார்க்க வேண்டும். புறத்தே பார்த்துப் பயனில்லை.

262. உடம்புக்குள் நிற்கும் ஒளியே உயிரின் ஒளி. அதுவே இந்த உயிரைத் தாங்குகிற ஐம்பூதச் சேர்க்கையான உடம்புக்குத் தாதுக்களாக விளைகிறது.

264. பிரணவத்தில் உள்ள ஒளியே உடம்பாகவும், உடம்பின் அறிவாகவும், உடம்பை இயக்குகிற ஆற்றலாகவும் உள்ளது. இதை உள்ளுணர்ந்து கொண்டால் இந்த மெய்ம்மையைத் தவிர மற்ற அனைத்தும் பொய் என்பதைக் காண்போம்.

264. விண்ணி னின்று மின்னெழுந்து
மின்னொ டுங்கு மாறுபோல்
என்னுள் நின்று எண்ணுமீசன்
என்ன கத்து இருக்கையால்
கண்ணி னின்று கண்ணில்தோன்றும்
கண்ண றிவுஇ லாமையால்
என்னுள் நின்ற என்னையும்
யான றிந்தது இல்லையே.

265. அடக்கி னம்அ டக்கொணாத
அம்ப லத்தின் ஊடுபோய்
அடக்கி னும்அ டக்கொணாமல்
அன்பி ருக்கும் என்னுளே
கிடக்கி னும்இ ருக்கினும்
கிலேசம் வந்து இருக்கினும்
நடக்கி னும்இ டைவிடாத
நாத சங்கு ஒலிக்குமே.

266. மட்டு லாவு தண்டுழாய்
அலங்க லாய்பு னற்கழல்
விட்டு வீழில் தாகபோக
விண்ணில் நண்ணில் வெளியினும்
எட்டி னோடு இரண்டினும்
இதத்தி னால்அ மைந்தனை
கட்டி வீடி லாதுவைத்த
காத லின்ப மாகுமே.

---

264. சீவன் ஒளி அணுக்களால் ஆனது. அவ்வொளி உடம்பு முழுவதும் பரவியுள்ளது. இதை அறிவதே தன்னறிவாம்.

265. பிரணவத்தின் ஒளியே ஐந்து புலன்களிலும் ஆற்றலாகச் செயற்படுகிறது. இந்தப் பிரணவத்தில் உண்டாகிற ஓசையை அறிவதே சிவஞானம் எனப்படும்.

366. அறிவின் மயமான பிரணவத்தை அறிந்து, அதுவே சிவம் என்ற தெளிவைப் பெற்றுவிட்டால், ஞானக் காதலின் முழுமை இன்பமும் அதுவேயாகத் துய்க்கலாம்.

261. உள்ள தோபு றம்பதோ
உயிரொ டுங்கி நின்றிடம்
மெள்ள வந்து கிட்டினீர்
வினவ வேணும் என்கிறீர்
உள்ள தும்பு றம்பதும்
ஒத்த போது நாதமாம்
கள்ள வாச லைத்திறந்து
காண வேணும் மாந்தரே.

262. ஆர லைந்து பூதமாய்
அளவி டாத யோனியும்
பார மான தேவரும்
பழுதி லாத பாசமும்
ஓரொ ணாத அட்டமும்
உலோக லோக லோகமும்
சேர வந்து போயிருந்த
தேக மேது செப்புமே.

263. என்ன கத்துள் என்னைநான்
எங்கும் நாடி ஓடினேன்
என்ன கத்துள் என்னைநான்
அறிந்தி லாத தன்மையால்
என்ன கத்துள் என்னைநான்
அறிந்து மேதெ ரிந்துபின்
என்ன கத்துள் என்னையன்றி
யாது மொன்றும் இல்லையே.

---

261. நம்முடைய உடம்புக்குள்ளே 'அகலிடம்' இருக்கிறது. அங்கே பார்க்க வேண்டும். புறத்தே பார்த்துப் பயனில்லை.

262. உடம்புக்குள் நிற்கும் ஒளியே உயிரின் ஒளி. அதுவே இந்த உயிரைத் தாங்குகிற ஐம்பூதச் சேர்க்கையான உடம்புக்குத் தாதுக்களாக விளைகிறது.

264. பிரணவத்தில் உள்ள ஒளியே உடம்பாகவும், உடம்பின் அறிவாகவும், உடம்பை இயக்குகிற ஆற்றலாகவும் உள்ளது. இதை உள்ளுணர்ந்து கொண்டால் இந்த மெய்ம்மையைத் தவிர மற்ற அனைத்தும் பொய் என்பதைக் காண்போம்.

264. விண்ணி னின்று மின்னெழுந்து
மின்னொ டுங்கு மாறுபோல்
என்னுள் நின்று எண்ணுமீசன்
என்ன கத்து இருக்கையால்
கண்ணி னின்று கண்ணில்தோன்றும்
கண்ண றிவுஇ லாமையால்
என்னுள் நின்ற என்னையும்
யான றிந்தது இல்லையே.

265. அடக்கி னம்அ டக்கொணாத
அம்ப லத்தின் ஊடுபோய்
அடக்கி னும்அ டக்கொணாமல்
அன்பி ருக்கும் என்னுளே
கிடக்கி னும்இ ருக்கினும்
கிலேசம் வந்து இருக்கினும்
நடக்கி னும்இ டைவிடாத
நாத சங்கு ஒலிக்குமே.

266. மட்டு லாவு தண்டுழாய்
அலங்க லாய்பு னற்கழல்
விட்டு வீழில் தாகபோக
விண்ணில் நண்ணில் வெளியினும்
எட்டி னோடு இரண்டினும்
இதத்தி னால்அ மைந்தனை
கட்டி வீடி லாதுவைத்த
காத லின்ப மாகுமே.

---

264. சீவன் ஒளி அணுக்களால் ஆனது. அவ்வொளி உடம்பு முழுவதும் பரவியுள்ளது. இதை அறிவதே தன்னறிவாம்.

265. பிரணவத்தின் ஒளியே ஐந்து புலன்களிலும் ஆற்றலாகச் செயற்படுகிறது. இந்தப் பிரணவத்தில் உண்டாகிற ஓசையை அறிவதே சிவஞானம் எனப்படும்.

366. அறிவின் மயமான பிரணவத்தை அறிந்து, அதுவே சிவம் என்ற தெளிவைப் பெற்றுவிட்டால், ஞானக் காதலின் முழுமை இன்பமும் அதுவேயாகத் துய்க்கலாம்.

267. ஏக முற்றி மூன்றுமுற்றி
நாலு முற்றி நன்மைசேர்
போக முற்றிப் புண்ணியத்தில்
முற்றி யன்று முற்றியாய்
நாத முற்ற சயனமாய்
நலங்க டல்க டந்ததீ
யாக முற்றி யாகிநின்றது
என்கொ லாதி தேவனே.

268. மூன்று முப்பத்து ஆறினோடு
மூன்று மூன்று மாயமாய்
மூன்று முத்தி யாகிமூன்று
மூன்று மூன்று மூன்றுமாய்த்
தோன்று சோதி மூன்றதாய்த்
துலக்க மில்வி ளக்கதாய்
ஏன்றெ னாவின் உள்புகுந்தது
என்கொ லோவெம் ஈசனே.

269. ஐந்து மைந்தும் ஐந்துமாய்
அல்ல வற்றுள் ஆயுமாய்
ஐந்து மூன்றும் ஒன்றுமாய்
நின்ற வாதி தேவனே
ஐந்தும்ஐந்தும் ஐந்துமாய்
அமைந்த னைத்து நின்றநீ
ஐந்து மைந்தும் ஆயநின்னை
யாவர் காண வல்லரே.

---

267. மூலக்கனலாகிய பெருந்தீயை மேலெழும்பச் செய்யும் போது, பெருவிரலிலிருந்து அந்தந்தத் தானங்களில் தாரணை எவ்வாறு செயற்படுகிறது என்பதை விளக்குகிறது இந்தப் பாடல்.

268. சூரியன், சந்திரன், அங்கி ஆகிய மூன்றும் பயிற்சியினால் எப்படி இயங்குகின்றன என்பதை விரிவுபடுத்திப் பேசுகிறார்.

269. ஐந்து பூதங்களும், ஐம்புலன்களும் ஒன்பதாக விரிகிற நிலையை ஆசான் வாயிலாக அறிந்து, ஆறு ஆதாரங்களுக்கும் அடிப்படையான சுழுமுனை

நாடியில் ஏகமாய்த் திகழ்கிற சிவ உருவத்தைக் காண்பதே ஞானக் காட்சியாகும்.

270. ஆறு மாதம் ஆறுமாய்ஓர்
ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய்
ஏறு சீரி ரண்டுமூன்றும்
ஏழு மாறும் எட்டுமாய்
வேறு வேறு ஞானமாகி
மெய்யி னோடு பொய்யுமாய்
ஊறு மோசை யாயமர்ந்த
மாய மாய மாயனே.

271. எட்டு மெட்டும் எட்டுமாய்ஓர்
ஏழு மேழும் ஏழுமாய்
எட்டு மூன்றும் ஒன்றுமாகி
நின்ற வாதி தேவனே
எட்டு மாய பாதமோடு
இறைஞ்சி நின்ற வண்ணமே
எட்டெ ழுத்தும் ஓதுவார்கள்
அல்லல் நீங்கி நிற்பரே.

272. பத்தி னோடு பத்துமாய்ஓர்
ஏழி னோடும் ஒன்பதாய்
நத்து நாற்றி சைக்குணின்ற
நாடு பெற்ற நன்மையாய்
அத்து மாய கொத்தமோடு
மத்த லமிக் காதிமால்
பத்தர் கட்கு அலாதுமுத்தி
முத்தி முத்தி யாகுமே.

---

270. இந்தப் பாடலும் இதையடுத்த இரண்டு பாடல்களும் தாரணை என்பதன் இயல்பையும் பயனையும் பேசுகின்றன. பிரணவமும் பஞ்சேந்திரியை ஆற்றல்களும் சேரும்படி, பிரணவ நடுவீட்டில் கனலை எழுப்பினால், புறக்கருவிகள் செயலற்றுவிடும். ஐம்பத்தொரு ஒலிகளாக விரிகின்ற பான்மைகளைச் சாதகன் கண்டு துய்க்கத் தொடங்கினால், தேவர்களுடைய ஒளியாக அது சுடரும். இந்தப் பயிற்சி முதிரும்போது வீடுபேறு கிட்டுகிறது. அவ்வை குறளில் அங்கி தாரணையில் இதன் இயல்புகள் கூறப்படுகின்றன.

273. வாசி யாகி நேசமொன்றி
வந்தெ திர்த்த தென்னுக
நேச மாக நாளுலாவ
நன்மை சேர்ப வங்களில்
வீசி மேல்நி மிர்ந்ததோளும்
இல்லை யாக்கி னாய்கழல்
ஆசை யால்ம றக்கலாது
அமர ராக லாகுமே.

274. எளிய தான காயமீது
எம்பி ரான்இ ருப்பிடம்
அளிவு றாது நின்றதே
அகார மும்உ காரமும்
கொளுகை யான சோதியும்
குலாவி நின்ற தவ்விடம்
வெளிய தாகும் ஒன்றிலே
விளைந் ததே சிவாயமே.

275. அஞ்செ ழுத்தும் மூன்றெழுத்தும்
என்று ரைக்கும் அன்பர்காள்
அஞசெ ழுத்தும் மூன்றெழுத்தும்
அல்ல காணும் அப்பொருள்
அஞ்செ ழுத்தை நெஞ்சழுத்தி
அவ்வெ ழுத்து அறிந்தபின்
அஞ்செ ழுத்து மூன்றெழுத்தும்
அவ்வு பாயம் சிவாயமே.

---

273. இரேசக, பூரக, கும்பகம் என்ற பயிற்சியில் இடகலை, பிங்கலைகளை மாறி மாறி விதிப்படி செய்தால், பிரணவ உச்சியானது நடுநிலையில் நின்று ஆயுளை நீட்டிக்கும் ஆற்றல் சுரக்கிறது.

274. அங்காத்தல் என்பதிலே தோன்றியெழுகிற அகரமும், குவிந்து ஒலிப்பதால் தோன்றியெழுகிற உகரமும் குலாவி நிற்கிற பிரணவத்திலேதான் தெய்வ ஆற்றல் விளைகிறது.

275. இதே கருத்து முன் பாடல்களிலும் கூறப்பட்டுள்ளது. எழுத்தும் நிலையும் என்ற தலைப்பில் இதன் விரிவு காண்க.

276. பொய்யு ரைக்கப் போதமென்று
பொய்ய ருக்கு இருக்கையால்
மெய்யு ரைக்க வேண்டுதில்லை
மெய்யர் மெய்க்கு இலாமையால்
வைய கத்தின் உண்மைதன்னை
வாய்தி றக்க அஞ்சினேன்
நைய வைத்தது என்கொலோ
நமசி வாய நாதனே.

277. ஒன்றை யொன்று கொன்றுகூட
உணவு செய்து இருக்கினும்
மன்றி லூடு பொய்களவு
மாறு வேறு செய்யினும்
பன்றி தேடும் ஈசனைப்
பரிந்து கூட வல்லிரேல்
அன்று தேவம் உம்முளே
அறிந்து ணர்ந்து கொள்ளுமே.

278. மச்ச கத்து ளேயிவர்ந்து
மாயை பேசும் வாயுவை
அச்ச கத்து ளேயிருந்து
அறிவு ணர்த்திக் கொள்விரேல்
அச்ச கத்து ளேயிருந்து
அறிவு ணர்த்திக் கொண்டபின்
இச்சை யற்ற எம்பிரான்
எங்கு மாகி நிற்பனே.

---

276. மிக அருமையான பாடல். பொய்யருக்குப் பொய்தான் ஞானமாக இருக்கிறது. மெய்யர்கள் மெய்பற்றித் தவம் செய்வதில்லை. எனவே, உண்மையைப் பேசுவதற்கு அஞ்சுகிறேன்.

277. பன்றி தேடும் ஈசன் - திருமால் வராகமாகித் தேடிய சிவன். தேவம் - இறைமை.

278. இவர்ந்து - வாசி (குதிரை) என்று பெயரானதால் அதன் செலவை இவர்தல் என்கிறார்.

273. வாசி யாகி நேசமொன்றி
வந்தெ திர்த்த தென்னுக
நேச மாக நாளுலாவ
நன்மை சேர்ப வங்களில்
வீசி மேல்நி மிர்ந்ததோளும்
இல்லை யாக்கி னாய்கழல்
ஆசை யால்ம றக்கலாது
அமர ராக லாகுமே.

274. எளிய தான காயமீது
எம்பி ரான்இ ருப்பிடம்
அளிவு றாது நின்றதே
அகார மும்உ காரமும்
கொளுகை யான சோதியும்
குலாவி நின்ற தவ்விடம்
வெளிய தாகும் ஒன்றிலே
விளைந் ததே சிவாயமே.

275. அஞ்செ ழுத்தும் மூன்றெழுத்தும்
என்று ரைக்கும் அன்பர்காள்
அஞ்செ ழுத்தும் மூன்றெழுத்தும்
அல்ல காணும் அப்பொருள்
அஞ்செ ழுத்தை நெஞ்சழுத்தி
அவ்வெ ழுத்து அறிந்தபின்
அஞ்செ ழுத்து மூன்றெழுத்தும்
அவ்வு பாயம் சிவாயமே.

---

273. இரேசக, பூரக, கும்பகம் என்ற பயிற்சியில் இடகலை, பிங்கலைகளை மாறி மாறி விதிப்படி செய்தால், பிரணவ உச்சியானது நடுநிலையில் நின்று ஆயுளை நீட்டிக்கும் ஆற்றல் சுரக்கிறது.

274. அங்காத்தல் என்பதிலே தோன்றியெழுகிற அகரமும், குவிந்து ஒலிப்பதால் தோன்றியெழுகிற உகரமும் குலாவி நிற்கிற பிரணவத்திலேதான் தெய்வ ஆற்றல் விளைகிறது.

275. இதே கருத்து முன் பாடல்களிலும் கூறப்பட்டுள்ளது. எழுத்தும் நிலையும் என்ற தலைப்பில் இதன் விரிவு காண்க.

276. பொய்யு ரைக்கப் போதமென்று
பொய்ய ருக்கு இருக்கையால்
மெய்யு ரைக்க வேண்டுதில்லை
மெய்யர் மெய்க்கு இலாமையால்
வைய கத்தின் உண்மைதன்னை
வாய்தி றக்க அஞ்சினேன்
நைய வைத்தது என்கொலோ
நமசி வாய நாதனே.

277. ஒன்றை யொன்று கொன்றுகூட
உணவு செய்து இருக்கினும்
மன்றி லூடு பொய்களவு
மாறு வேறு செய்யினும்
பன்றி தேடும் ஈசனைப்
பரிந்து கூட வல்லிரேல்
அன்று தேவம் உம்முளே
அறிந்து ணர்ந்து கொள்ளுமே.

278. மச்ச கத்து ளேயிவர்ந்து
மாயை பேசும் வாயுவை
அச்ச கத்து ளேயிருந்து
அறிவு ணர்த்திக் கொள்விரேல்
அச்ச கத்து ளேயிருந்து
அறிவு ணர்த்திக் கொண்டபின்
இச்சை யற்ற எம்பிரான்
எங்கு மாகி நிற்பனே.

---

276. மிக அருமையான பாடல். பொய்யருக்குப் பொய்தான் ஞானமாக இருக்கிறது. மெய்யர்கள் மெய்பற்றித் தவம் செய்வதில்லை. எனவே, உண்மையைப் பேசுவதற்கு அஞ்சுகிறேன்.

277. பன்றி தேடும் ஈசன் - திருமால் வராகமாகித் தேடிய சிவன். தேவம் - இறைமை.

278. இவர்ந்து - வாசி (குதிரை) என்று பெயரானதால் அதன் செலவை இவர்தல் என்கிறார்.

279. வரகி லேமு ளைத்தசெந்நெல்
களைய தான வாறுபோல்
உலகி னோரும் உண்மைகூறின்
ஒவ்வு மாற தங்஗னே
விரகி லேமு ளைத்தெழுந்த
மெய்ய லாது பொய்யதாய்
நரகி லேபி றந்திருந்து
நாடு பட்ட பாடதே.

280. ஆடு கின்ற எம்பிரானை
அங்கு மிங்கும் என்றுநீர்
தேடு கின்ற பாவிகாள்
தெளிந்த ஒன்றை ஓர்கிலீர்
காடு நாடு வீடுவின்
கலந்து நின்ற கள்வனை
நாடி யோடி உம்முளே
நயந்து ணர்ந்து பாருமே.

281. ஆடு கின்ற அண்டர்கூடும்
அப்பு றம்ம திப்புறம்
தேடு நாலு வேதமும்
தேவ ரான மூவரும்
நீடு வாழி பூதமும்
நின்ற தோர்நி லைகளும்
ஆடு வாழின் ஒழியலாது
அனைத்து மில்லை இல்லையே.

---

279. வரகுக்கு நடுவிலே நெல்லே முளைத்திருந்தாலுங்கூட அது வரகில்லை. களைதான் என்று பிடுங்கவேண்டிய நிலையல்லவா! பொய்க்கு நடுவிலே மெய்யின் நிலை என்ன? விரகு - காம உணர்ச்சி.

280. பாவிகாள் என்றது அந்தப் புண்ணியம் இல்லை என்ற காரணத்தால் கள்வன் என்றது மறைந்துநின்றான் என்பதால்.

281. வேதங்கள் தேடுகிற இடம் மனம் வாக்குக்கு அப்பாற் பட்ட வெளி.

282. ஆவ தும்ப ரத்துளே
அழிவ தும்ப ரத்துளே
போவ தும்ப ரத்துளே
புகுவ தும்ப ரத்துளே
தேவ ரும்ப ரத்துளே
திசைக ளும்ப ரத்துளே
யாவ ரும்ப ரத்துளே
யானும் அப்ப ரத்துளே.

283. ஏழு பாரெ ழுகடல்இ
பங்க ளெட்டு வெற்புடன்
சூழு வான்கி ரிகடந்து
சொல்லு மேழு லகமும்
ஆழி மால்வி சும்புகோள்பிர்
மாண்ட ரண்ட அண்டமும்
ஊழி யானொ ளிக்குள்ளே
யுதித்து டன்ஒ டுங்குமே.

284. கயத்து நீர்இ றைக்கிறீர்
கைகள் சோர்ந்து நிற்பதேன்
மனத்துள் ஈர மொன்றிலாத
மதியி லாத மாந்தர்காள்
மனத்து ளீரம் கொண்டுநீர்
அழுக்க றுக்க வல்லிரேல்
நினைத்தி ருந்த சோதியும்
நீயும் நானும் ஒன்றலோ

---

282. எல்லாம் பரத்துளே என்று ஒவ்வொன்றாகப் பாடி வந்தவர் முடிவில் நானும் அப்பரத்துளே என்ற கவிநயம் உய்த்துணர்ந்து துய்ப்பதற்குரியது.

283. ஏழுபார் - கீழேயுள்ள ஏழுலகங்கள். இபங்கள் - யானைகள். இங்கே திருக்குரிய எட்டு யானைகள். இரண்டாம் அடியில் வருகிற ஏழுவான் மேலே உள்ள ஏழ் உலகங்கள்.

284. ஊற்றுள்ள பெருங்கலத்தில் நீர் இறைப்பது போன்று வீணான முயற்சி செய்கிறீர் என்றவாறு. மனத்துள் ஈரம் என்றது உள்ளத்தின் உருக்கத்தை.

285. நீரி லேபி றந்திருந்து
நீர்ச்ச டங்கு செய்கிறீர்
ஆரை யுன்னி நீரெலாம்
அவத்தி லேஇ றைக்கிறீர்
வேரை யுன்னி வித்தையுன்னி
வித்தி லேமு ளைத்தெழும்
சீரை யுன்ன வல்லிரேல்
சிவப தம்அ டைவீரே.

286. பத்தொ டொத்த வாசலிற்
பரந்து மூல வக்கரம்
முத்தி சித்தி தொந்தமென்று
இயக்கு கின்ற மூலமே
மத்த சித்த ஐம்புலன்
மகார மான கூத்தையே
அத்தி யூரர் தம்முளே
அமைந்த தேசி வாயமே.

287. அணுவி னோடும் அண்டமாய்
அளவி டாத சோதியைக்
குணம தாகி உம்முளே
குறித்தி ருக்கின் முத்தியாம்
முணமு ணென்று உம்முளே
விரலை யொன்றி மீளவும்
திலந்தி னம்ம யங்குவீர்
செம்பு பூசை பண்ணியே.

---

285. அவம் - வீண்செயல். வேர் - அடிப்படையான ஆதார வஸ்துவான பரம்பொருள்.

286. மூலவக்கரம் - மூலமான அட்சரம். எழுத்துநிலை பற்றிய விளக்கம் காண்க.

287. விரலை யொன்றி - மந்திரம் ஓதும்போது விரலை அசைப்பதும் எண்ணுவதுமாகிய செயல். முணுமுணென்று - வாயிலே மந்திர உச்சாடணம் செய்து.

288. மூல மான அக்கரம்
உகப்ப தற்கு முன்னெலாம்
மூல மாக மூடுகின்ற
மூட மேது மூடரே
கால னான அஞ்சுபூதம்
அஞ்சி லேயொ டுங்கினால்
ஆதி யோடு கூடுமோ
அனாதி யோடு கூடுமோ?

289. முச்ச துரமூ லமாகி
முடிவு மாகி யோகமாய்
அச்ச துரமா கியேஅ
டங்கி யோர்ள மூத்துமாய்
மெய்ச்ச துர மெய்யுளே
விளங்கு ஞான தீபமாய்
உச்ச ரிக்கும் மந்திரத்தில்
உண்மை யேசி வாயமே.

290. வண்டு லங்கு போலுநீர்
மனத்து மாசு அறுக்கிலீர்
குண்டு ரங்கள் போலுநீர்
குடத்தி லேமு ழுகிறீர்
பண்டு முங்கள் நான்முகன்
பறந்து தேடிக் காண்கிலான்
கண்டி ருக்கும் உம்முளே
கலந்தி ருப்பர் காணுமே.

---

288. மூலமான அக்கரம் - பிரணவத்தின் ஆதி அட்சரம். அஞ்சிலே ஒடுங்கல் - பஞ்சபூத ஒடுக்கம்.

289. முச்சதுர மூலம் - மந்திர மேனி பற்றிய படத்தில் உள்ள குறிப்பு. ஞானதீபம் - பேரறிவுச் சுடர்.

290. நான்முகன் காணான். ஆனால் நீங்கள் உட்புகுந்து பாருங்கள், காணலாம் என்றபடி!

291. நின்ற தன்று இருந்ததன்று
நேரி தன்று கூரிதன்று
பந்த மன்று வீடுமன்று
பரவ சங்கள் அற்றது
கெந்த மன்று கேள்வியன்று
கேடி லாத வானிலே
அந்த மின்றி நின்றதொன்ற
தெங்ஙு னேஉ ரைப்பதே.

292. பொருந்து நீரும் உம்முளே
புகுந்து நின்ற காரணம்
எருதி ரண்டு கன்றையீன்ற
ஏக மொன்ற ஓர்கிலீர்
அருகி ருந்து உசாவுகின்ற
ஆவை யும்ம றிந்திலீர்
குருவி ருந்து உலாவுகின்ற
கோல மென்ன கோலமே.

293. அம்ப ரத்துள் ஆடுகின்ற
அஞ்செ ழுத்து நீயலோ
சிம்பு ளாய்ப்ப றந்துநின்ற
சிற்ப ரமும் நீயலோ
எம்பி ரானும் எவ்வுயிர்க்கும்
ஏக போகம் ஆதலால்
எம்பி ரானும் நானுமாய்
இருந்த தேசி வாயமே.

---

291. வீடு - விடுதலை. கெந்தம் - வாசனை. அந்தமின்றி - எல்லையற்றதாய்

292. அன்னம், எருது, குதிரை போன்ற குழூஉக்குறி விளக்கம் முந்திய பகுதிகளில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

293. அம்பரம் - ஆகாயம், இங்கே உச்சித்தானமாகிய நடனவெளி. சிம்புள் - எட்டுக்கால்கள் கொண்ட சரபம் என்கிற புள்.

294. ஈரோ ளியதிங் களேஇ
யங்கி நின்ற தற்பரம்
ஏரொ ளியதிங் களேயஃது
யாவ ரும்அ றிகிலீர்
காரொ ளியப டலமும்க
டந்து போன தற்பரம்
பேரொ ளிப்பெ ரும்பதமும்
ஏக நாத பாதமே.

295. கொள்ளொ ணாது மெல்லொணாது
கோத றக்கு தட்டடா
தள்ளொ ணாது அணுகொணாது
ஆத லான்ம னத்துளே
தெள்ளொ ணாது தெளியொணாது
சிற்ப ரத்தின் உட்பயன்
விள்ளொ ணாத பொருளைநான்
விளம்பு மாற தெங்ஙனே.

296. வாக்கி னாலம னத்தினால்
மதித்த கார ணத்தினால்
நோக்கொ ணாத நோக்கையுன்னி
நோக்கை யாவர் நோக்குவார்
நோக்கொ ணாத நோக்குவந்து
நோக்க நோக்க நோக்கிடில்
நோக்கொ ணாத நோக்குவந்து
நோக்கை யெங்க ணோக்குமே.

---

294. தற்பரம் - அனைத்திலும் மேம்பட்டது. பரம்பொருள். "தணித்தலும் அளித்தலும் தடிந்தோன் தற்பரன்".

295. குதட்டுதல் - மெல்லுதல். விள்ளொணாது - வெளியிட்டுப் பேச முடியாது.

296. நோக்கொணாத நோக்கு - அகப்பார்வை; பார்வை என்று சொல்ல முடியாத பார்வை அது.

297. உள்ளி னும்பு றம்பினும்
உலக மெங்க ணும்பரந்து
எள்ளில் எண்ணெய் போலநின்று
இயங்கு கின்ற எம்பிரான்
மெள்ள வந்தென் உட்புகுந்து
மெய்த்தவம்பு ரிந்தபின்
வள்ள லென்ன வள்ளலுக்கு
வண்ண மென்ன வண்ணமே.

298. வேத மொன்று கண்டிலேன்
வெம்பி றப்பி லாமையால்
போத நின்ற வடிவதாய்ப்
புவன மெங்கும் ஆயினாய்
சோதி யுள்ஒ ளியுமாய்த்
துரிய மோடு அதீதமாய்
ஆதி மூலம் ஆதியாய்
அமைந்த தேசி வாயமே.

299. சாணி ரும்ம டங்கினாற்
சரிந்த கொண்டை தன்னுளே
பேணி யப்ப திக்குளே
பிறந்தி றந்து உழலுவீர்
தோணி யான ஐவரைத்
துறந்த றுக்க வல்லிரேல்
காணி கண்டு கோடியாய்க்
கலந்த தேசி வாயமே.

---

297. அவன் வந்து நானாகக் கலந்தபின் அவனுக்குரிய வண்ணம் ஏது என்றபடி.

298. சோதியுள் ஒளி - சுடருக்குள்ளே ஒளியாற்றலாக நிற்பது. துரியமோடு அதீதம் - துரிய துரியாதீதம்.

299. தோணியான ஐவர் - இதே உருவகம் முந்திய பாடல்களிலும் வந்துள்ளமை காண்க.

300. அஞ்சு கோடி. மந்திரம்
அஞ்சு ளேஅ டங்கினால்
நெஞ்சு கூர உம்முளே
நினைப்ப தோர்எ ழுத்துளே
அஞ்சு நாலும் மூன்றதாகி
உம்மு ளேஅ டங்கினால்
அஞ்சு மோர்எ ழுத்ததாய்
அமைந்த தேசி வாயமே.

301. அக்க ரந்த அக்கரத்தில்
உள்க ரந்த அக்கரம்
சக்க ரத்துச் சிவ்வையுண்டு
சம்பு ளத்து இருந்ததும்
எட்க ரந்த எண்ணெய்போல்
எவ்வெ ழுத்தும் எம்பிரான்
உட்க ரந்து நின்ற நேர்மை
யாவர் காண வல்லரே.

302. ஆக மத்தின் உட்பொருள்
அகண்ட மூல மாதலால்
தாக போகம் இன்றியே
தரித்த தற்ப ரமுநீ
ஏக பாதம் வைத்தனை
யுணர்த்து மஞ்செ ழுத்துளே
ஏக போக மாகியே
யிருந்த தேசி வாயமே.

---

300. நெஞ்சுகூர்தல் - நெஞ்சம் நிறைந்து, நெஞ்சின் முழுதுமாக நிற்றல்.

301. சூக்குமப் பிரணவத்தின் நுண்மை உணர்த்தியவாறு.

302. தற்பரம் - வேட்கைகளைக் கடந்து மேம்பட்ட பொருள் என்ற கருத்திலே இங்கே ஆளப்பட்டது.

303. மூல வாசல் மீதுளேயோர்
முச்ச துர மாகியே
நாலு வாசல் எண்விரல்
நடுவு தித்த மந்திரம்
கோல மென்று மஞ்சுமாகும்
இங்கு அலைந்து நின்றநீ
வேறு வேறு கண்டிலேன்
விளைந்த தேசி வாயமே.

304. சுக்கி லத்தி டியுளே
சுழித்த தோர்எ ழுத்துளே
அக்க ரத்தி டியுளே
அமர்ந்த வாதி சோதிநீ
உக்க ரத்த டியுளே
உணர்ந்த அஞ்செ ழுத்துளே
அக்க ரம்ம தாகியே
அமர்ந்த தேசி வாயமே.

305. குண்ட லத்து ளேயுளே
குறித்த சுத்து நாயகன்
கண்ட வந்த மண்டலம்
கருத்த ழித்த கூத்தனை
விண்ட லர்ந்த சந்திரன்
விளங்கு கின்ற மெய்ப்பொருள்
கண்டு கொண்ட மண்டலம்
சிவாய மல்லது இல்லையே.

---

303. சிவாயம் எழுத்துநிலைப் படம் காண்க.

304. அகர உகர மகரம் பற்றிய அவ்வை குறளில் கூறப்பட்ட விளக்கமே இதுவும்.

305. சந்திர கலையின் ஏறுமுகத்தைத் தெளிந்து அந்தத் தாரணையைச் செய்யும்போது அதுவே சிவாய விளக்கமாகக் கூடுகிறது.

306. சுற்று மைந்து கூடமொன்று
சொல்லி றந்த தோர்வெளி
சத்தி யும்சி வனுமாக
நின்ற தன்மை யோர்கிலீர்
சத்தி யாவ தும்முடல்
தயங்கு சீவ னுட்சிவம்
பித்தர் காள்அ றிந்திலீர்
பிரானி ருந்த கோலமே.

307. மூல மென்ற மந்திரம்
முளைத்த அஞ்செ ழுத்துளே
நாலு வேத நாவுளே
நவின்ற ஞான மெய்யுளே
ஆல முண்ட கண்டனும்
அரிய யனும் ஆதலால்
ஓல மென்ற மந்திரம்
சிவாய மல்லது இல்லையே.

308. தத்து வங்கள் என்றுநீர்
தமைக்க டிந்து போவீர்காள்
தத்து வம்சி வமதாகில்
தற்ப ரமும்நீ ரல்லோ
முத்தி சீவன் நாதமே
மூல பாதம் வைத்தபின்
அத்த னாரும் உம்முளே
அறிந்து ணர்ந்து கொள்ளுமே.

---

306. ஐம்பூத அமைப்புக்குள்ளே ஐம்புல இயக்கத்துள்ளே சத்தியும் சிவனும் கூடி நிற்கும் தன்மையை அறிவதே மெய்ஞ்ஞானம்.

307. சிவாய மந்திரத்துக்குள் எல்லா ஒலி அதிர்வுகளும் அடங்கி விடுகின்றன என்பதை விளக்கியவாறு.

308. உடலின் தத்துவங்கள் அனைத்தும் ஆன்ம ஒளியின் பாய்ச்சலுக்குள் வந்துவிட்டால், இந்த உடம்பு சிவமயமாகி விடுகிறது.

309. மூன்று பத்து மூன்றையும்
மூன்று சொன்ன மூலனே
தோன்று சேர ஞானிகாள்
துய்ய பாதம் என்றலை
ஒன்று வைத்த வைத்தபின்
இயம்பு மஞ்செ ழுத்தையும்
தோன்று வோத வல்லிரேல்
துய்ய சோதி காணுமே.

310. உம்பர் வான கத்திலும்
உலக பாரம் ஏழிலும்
நம்பர் நாடு தன்னிலும்
நாவ லென்ற தீவினும்
செம்பொன் மாட மல்குதில்லை
அம்ப லத்துள் ஆடுவான்
எம்பி ரான லாதுதெய்வம்
இல்லை இல்லை இல்லையே.

311. பூவி லாய ஐந்துமாய்ப்
புனலில் நின்ற நான்குமாய்த்
தீயி லாய மூன்றுமாய்ச்
சிறந்த கால்இ ரண்டுமாய்
வேயி லாயது ஒன்றுமாய்
வேறு வேறு தன்மையாய்
நீய லாமல் நின்றநேர்மை
யாவர் காண வல்லரே.

---

309. எண்களால் குறிக்கப்பெறுபவை உடல் தத்துவங்கள்.

310. அண்ட சராசரம் அனைத்துமே இறைவனுடைய ஆடலுக்குட்பட்டவை.

311. பஞ்சபூதக் கூறுகளில் எது எதில் எத்தனை எத்தனை பங்கு என்பதை முதலாவது பகுதியில் உள்ள விளக்கம் காண்க. இதே பாடலின் வேறொரு வடிவம் திவ்வியப் பிரபந்தம் திருச்சந்த விருத்தம் என்ற திருமழிசை ஆழ்வார் பாசுரமாக அமைந்துள்ளது. இது பற்றிய குறிப்பைக் காண்க. பாட்டு 551ம் இதுவும் ஒப்பிடுக.

312. அந்த ரத்தில் ஒன்றுமாய்
அசைவு காலி ரண்டுமாய்ச்
செந்த மூலில்மூன் றுமாகிச்
சிறந்த அப்பு நான்குமாய்
ஐந்து பாரில் ஐந்துமாய்
அமர்ந்தி ருந்த நாதனைச்
சிந்தை யிற்தெ ளிந்தமாயை
யாவர் காண வல்லரே.

313. மனவி காரம் அன்றுநீர்
மதித்தி ருக்க வல்லிரேல்
நினைவி லாத மணிவிளக்கு
நித்த மாகி நின்றிடும்
அனைவ ரோதும் வேதமும்
அகம்பி தற்ற வேணுமேற்
கனவு கண்டது உண்மைநீர்
தெளிந்த தேசி வாயமே.

314. இட்ட குண்டம் ஏதடா
இருக்கு வேதம் ஏதடா
சுட்ட மட்க லத்திலே
சுற்று நூல்கள் ஏதடா
முட்டி நின்ற தூணிலே
முளைத்தெ ழுந்த சோதியைப்
பற்றி நின்றது ஏதடா
பட்ட நாத பட்டனே.

---

312. ஐந்து பூதங்களின் கூறுகள் எத்தனை எத்தனை இணைந்து சூக்கும தத்துவம் இயங்குகிறது என்பதைக் கூறுகிறது.

313. மனவிகாரம் - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், இடும்பு, அசூயை என எண் எட்டாக விரியும்.

314. வேதாகமச் சடங்குகளைச் சாடுவது போலே அக ஒளியின் மேம்பாட்டைப் பாடுகிறார்.

315. நீரிலே முளைத்தெ ழுந்த
தாம ரையின் ஓரிலை
நீரினோடு கூடி நின்றும்
நீரி லாத வாறுபோல்
பாரிலே முளைத்தெ ழுந்த
பண்டி தப்ப ராபரம்
பாரி னோடு கூடிநின்ற
பண்பு கண்டு இருப்பரே.

316. உறங்கி லென்வி ழிக்கிலென்
உணர்வு சென்று ஒடுங்கிலென்
சிறந்த வைம்பு லன்களும்
திசைத்தி சைகள் ஒன்றிலென்
புறம்பு முன்னும் எங்கணும்
பொதிந்தி ருந்த தேகமாய்
நிறைந்தி ருந்த ஞானிகாள்
நினைப்ப தேது மில்லையே.

317. ஓது வார்கள் ஓதுகின்ற
வோரெ ழுத்தும் ஒன்றதே
வேத மென்ற தேகமாய்
விளம்பு கின்ற தன்றிது
நாத மொன்று நான்முகன்
மாலும் நானும் ஒன்றதே
ஏது மின்றி நின்றதொன்றை
யானு ணர்ந்த நேர்மையே.

---

315. அற்புதமான பாடல். பாரின் உட்பொருள் பாரோடு பற்றுமை இலாத தன்மையைத் தாமரையின் இலையை உவமையாக்கியது அழகும் ஆழமும் கொண்ட அற்புதமான எடுத்துக்காட்டு.

316. எந்தச் செயலும் பரம்பொருளோடு கூடியநிலையில் எவ்வகையிலும் பாதிப்பதில்லை.

317. உச்சரிப்பும், ஒலியும், நுட்பநிலையிலே ஒன்றாகக் காண்கிறது. ஒன்றாகக் காண்கிற காட்சியிலே ஒன்றாகக் கேட்கிற கேள்வி இது!

318. பொங்கியே தரித்த அச்சுப்
புண்ட ரீக வெளியிலே
தங்கியே தரித்த போது
தாது யாது ளையதாம்
அங்கியுள் சரிந்த போது
வடிவு கள்ளொ ளியுமாய்க்
கொம்புமேல் வடிவு கொண்டு
குருவி ருந்த கோலமே.

319. மண்ணு ளோரும் விண்ணுளோரும்
வந்த வாறது எங்கெனில்
கண்ணி னோடு சோதிமேற்
கலந்த நாத விந்துவும்
அண்ண லோடு சத்தியும்
அஞ்சு பஞ்ச பூதமும்
பண்ணி னோடு கொத்தழிப்பப்
பாரொ டேழும் இன்றுமே.

320. ஒடுக்கு கின்ற சோதியும்
உந்தி நின்ற ஒருவனும்
நடுத்த லத்தில் ஒருவனும்
நடந்து காலில் ஏறியே
விடுத்து நின்ற இருவரோடு
மெய்யி னோடு பொய்யுமாய்
அடுத்து நின்று அறிமினோ
அனாதி நின்ற வாதியே.

---

318. கரு கருப்பையிலே தங்கி வெளிவருகிற செயலின் தத்துவ நுட்பத்தைக் கூறியவாறு.

319. கரு உண்டாவதற்குக் காரணமாகக் கூடுகிற அனைத்து ஆற்றல்களையும் இயம்பியபடி.

320. மணிபூரகத்திலிருந்து அனாகதம் வரையுமான ஒளி ஏற்றம் இது.

321. உதித்த மந்தி ரத்தினும்
ஒடுங்கும் அக்க ரத்தினும்
மதித்த மண்ட லத்தினும்
மறைந்து நின்ற சோதிநீ
மதித்த மண்ட லத்துளே
மரித்து நீயி ருந்தபின்
சிரித்த மண்ட லத்துளே
சிறந்த தேசி வாயமே.

322. திருத்தி வைத்த சற்குருவைச்
சீர்பெற வணங்க கில்லீர்
குருக்கொ டுக்கும் பித்தரே
கொண்டு நீந்த வல்லிரோ
குருக்கொ டுக்கும் பித்தரும்
குருக்கொள் வந்த சீடனும்
பருத்தி பட்ட பாடுதான்
பன்னி ரண்டும் பட்டதே.

323. விழித்த கண்து திக்கவும்
விந்து நாத வோசையும்
மேரு வுங்க டந்தஅண்ட
கோள முங்க டந்துபோய்
எழுத்தெ லாம்அ றிந்துவிட்ட
இந்திர சால வெளியிலே
யானு நீயு மேகலந்த
தென்ன தன்மை ஈசனே.

---

321. ஒளியின் தாரணைக் கிரமம் சிவாயம் என்பதை முன் பாடல்களிலும் சொல்லப்பட்டது. அதே கருத்து பிறிதொரு வடிவத்திலே இங்கு மொழியப்படுகிறது.

322. இந்தப் பாடலின் கடைசி அடி முன்பாடலிலும் வந்துள்ளது. சித்தர் இலக்கியத்தில் சற்குரு என்னும் நேர்முக ஆசானுக்குள்ள இடம் மிகவும் உன்னதமானது. அதுபோலவே பொருந்தாத குருவைக் கண்டித்துள்ள அடிகளும் முக்கியமானவை.

323. பர வெளியிலே கொள்கிற ஞானமுயக்கம் என்று வருணிக்கப்படுகிற ஒடுக்கம்.

324. ஓம்ந மோவென் றும்முளே
உபாதை யென்ற றிந்தபின்
பாலு டற்க ருத்துளே
பாவை யென்ற றறிந்தபின்
நானு நீயும் உண்டடா
நலங்கு லமது ண்டடா
ஊனு மூனு மொன்றுமே
உணர்ந்தி டாய்உ னக்குளே.

325. ஐம்புலனை வென்ற வர்க்கிங்கு
அன்ன தானம் ஈவதால்
நன்புலன்கள் ஆகி நின்ற
நாத ருக்க தேறுமா
ஐம்புலனை வென்றி டாதே
அவத்த மேயு முன்றிடும்
வம்ப ருக்கும் ஈவதும்
கொடுப்ப தும்ம வத்தமே.

326. ஆணி யான ஐம்புலன்கள்
அவையு மொக்குள் ஒக்குமோ
யோனி யிற்பி றந்திருந்த
துன்ப மிக்கு மொக்குமோ
வீணர் காள்பி தற்றுவீர்
மெய்ம்மை யேயு ணர்திரேல்
ஊனு றக்க போகமும்
உமக்கெ னக்கும் ஒக்குமே.

---

324. தன்னில் பிரியாத தன்மை எது? அந்த நிலையிலே விளங்குவது எது? விளங்கப்படுவது எது?

325. சற்பாத்திரம் அறிந்து ஈவதன் உயர்வைப் பாடியவாறு 'நடமாடும் கோயில்' என்று திருமூலர் கூறுகிற பாடலை ஒப்புநோக்குக.

326. பரு உடம்புக்குள் வித்தியாசம் என்ன உண்டு? மாறுபாடும் வேறுபாடும் ஏற்படுவது நுண்ணுடலிலே!

327. ஓடு கின்ற ஐம்புலன்
ஒடுங்க அஞ்செ ழுத்துளே
நாடு கின்ற நான்மறை
நவிலு கின்ற ஞானிகாள்
கூடு கின்ற கண்டித
குணங்கள் மூன்றெ ழுத்துளே
ஆடு கின்ற பாவையாய்
அமைந்த தேசி வாயமே.

328. புவன சக்க ரத்துளே
பூத நாத வெளியிலே
பொங்கு தீப அங்கியுள்
பொதிந் தெழுந்த வாயுவைத்
தவள சோமர் இருவரும்
தாமி யங்கும் வாசலில்
தண்டு மாறி யேறிநின்ற
சரச மான வெளியிலே.

329. மவுன அஞ்செ ழுத்திலே
வாசி யேறி மெள்ளவே
வான ளாய்நி றைந்தசோதி
மண்ட லம்பு குந்தபின்
அவனு நானு மெய்கலந்து
அனுப வித்த அளவிலே
அவனு முண்டு நானுமில்லை
யாரு மில்லை யானதே.

---

327. அ, உ, ம என்ற மூன்றுக்குள் எல்லாம் அடங்கிவிடும்.

328. வாயு தாரணை பற்றிய குறள்விளக்கம் காண்க.

329. வாசி யோகத்தின் முயக்கநிலை சொல்லப்படுகிறது. காற்றிலேறி மண்டலம் புகுதல் என்பது இதுவே.

330. வாளு றையில் வாளடக்கம்
வாயு றையில் வாய்வடக்கம்
ஆளு றையில் ஆளடக்கம்
அருமை என்ன வித்தைகாண்
தாளு றையில் தாளடக்கம்
தன்மை யான தன்மையும்
நாளு றையில் நாளடக்கம்
நானும் நீயும் கண்டதே.

331. வழுத்தி டான்அ ழித்திடான்
மாய ரூப மாகிடான்
கழன்றி டான்வெ குண்டிடான்
கால கால காலமும்
துண்டி டான்அ சைந்திடான்
தூய தூபம் ஆகிடான்
சுவன்றி டான்உ ரைத்திடான்
சூட்ச சூட்ச சூட்சமே.

332. ஆகி கூவென் றேயுரைத்த
அட்ச ரத்தின் ஆனந்தம்
யோகி யோகி யென்பர்கோடி
யுற்ற றிந்து கண்டிடார்
பூக மாய்ம னக்குரங்கு
கொங்கு மங்கும் இங்குமாய்
ஏக மேகம் ஆகவே
இருப்பர் கோடி கோடியே.

---

330. அற்புதமான உவமையோடு கூடிய பாடல். வாளுறை தெரியும். அதை வாயுறையோடு மோனிக்கும் போது என்ன அழகு! ஆளுறை என்பது யூனிபார்ம்! தாளுறை என்பது 'ஸ்டாக்கிங்' அல்லது 'சாக்ஸ்'.

331. சூக்குமப் பிரமத்தின் இலக்கணம் கூறியவாறு.

332. பூகம் - இயல்பு, சுபாவம். ஏகம் ஏகம் அகவே - வடமொழியில் கூறப்படுகிறது கேவல நிலை என்பது.

333. கோடி கோடி கோடிகோடி
குவல யத்தோர் ஆதியை
நாடி நாடி நாடிநாடி
நான கன்று வீண்தாய்த்
தேடித் தேடித் தேடித்தேடித்
தேக முங்க சங்கியே
கூடிக் கூடிக் கூடிக்கூடி
நிற்பர் கோடி கோடியே.

334. கருத்தி லான்வெ ளுத்திலான்
பரனி ருந்த காரணம்
ஒருத்தி லான்ஒ ளித்திலான்
ஒன்றி ரண்டும் ஆகிலான்
ஒருத்தி லான்ம ரித்திலான்
ஒழிந்தி டான்அ ழிந்திடான்
கருத்திற் கீயும் கூவுமுற்றோன்
கண்ட றிந்த வாதியே.

335. வாதி வாதி வாதிவாதி
வண்டலைஅ றிந்திடான்
ஊதி ஊதி ஊதிஊதி
ஒளிம ழுங்கி உளறுவான்
வீதி வீதி வீதிவீதி
விடையெ ருப்பு ரக்குவோன்
சாதி சாதி சாதிசாதி
சாக ரத்தைக் கண்டிடான்.

---

333. வழித்தடம் தெரியாது ஞானப் பாதையிலே அலைகிறவர்களின் தன்மை கூறியவாறு.

334. பராபரனுடைய கைவல்லியம் கூறியவாறு.

335. ஆழமாகப் புகுந்து பார்க்க அறியாமல் நுனிப்புல் மேய்வதும் எருப்புரக்குவதும் ஒன்றே.

336. ஆண்மை யாண்மை யாண்மையாண்மை
ஆண்மை கூறும் அசடரே
காண்மை யான வாதிரூபங்
கால கால காலமும்
பான்மை யாகி மோனமான
பாச மாகி நின்றிடும்
நாண்மை யான நிரலைவாயில்
நங்கு மிங்கும் அங்குமே.

337. மிங்கு வென்று அட்சரத்தின்
மீட்டு வாகிக் கூவுடன்
துங்க மாகச் சோமனோடு
சோமன் மாறி நின்றிடும்
அங்க மாமு னைச்சுழியில்
ஆகு மேக வாகையாய்க்
கங்கு லற்றுக் கியானமுற்றுக்
காணு வாய்சு டரொளி.

338. சுடரெ ழும்பும் சூட்சமும்
சுழிமு னையின் சூட்சமும்
அடரெ ழும்பி யேகமாக
அமர்ந்து நின்ற சூட்சமும்
திடர தான சூட்சமும்
திரியின் வாலை சூட்சமும்
கடலெ ழும்பு சூட்சமும்
கண்ட றிந்தோன் ஞானியே.

---

336. நாண்மை- கூச்சம். நரலை - ஓசை. நங்க - பரிகாசம். நங்குதல் - ஏளனம் செய்தல்.

337. நெற்றிக்கு நேரே காண்கிற ஒளி பற்றிய விளக்கம் முன்பகுதிகளில் விரிவாகக் கூறப்பட்டுள்ளமை காண்க.

338. ஒளியைக் கண்டு அதனோடு ஒடுங்க வல்லவனே மெய்யான ஞானியாம்.

339. ஞானி ஞானி என்றுரைத்த
நாய்கள் கோடி கோடியே
வானி லாத மழைநாளென்ற
வாதி கோடி கோடியே
தானி லான சாகரத்தின்
தன்மை காணா மூடர்கள்
மூனி லாமற் கோடிகோடி
மூன்ன றிந்த தென்பரே.

340. சூட்ச மான கொம்பிலே
சுழுமுனைச் சுடரிலே
வீச்சு மான வீயிலே
விபுலை தங்கும் வாயிலே
கூச்ச மான கொடியிலே
குடியி ருந்த கோவிலே
தீட்சை யான தீவிலே
சிறந்த தேசி வாயமே.

341. பொங்கி நின்ற மோனமும்
பொதிந்து நின்ற மோனமும்
தங்கி நின்ற மோனமுந்
தயங்கி நின்ற மோனமும்
கங்கை யான மோனமுங்
கதித்து நின்ற மோனமும்
திங்க ளான மோனமும்
சிவனி ருந்த மோனமே.

---

339. வேடாதரிகளை வெகுண்டு கூறியமை.

340. வீ-மலர். விபுலை - மனப்பரியாய ஞானத்தின் மயமானவள்.

341. மோனத்தின் கூறுகளும் அவ்வவற்றின் நிலை வேறுபாடுகளும் கூறிச் சிவபெருமான் நிற்கிற மோனமாகிய பரமோனம் என்னும் நிலையைப் பாடுகிறார்.

342. மோன மான வீதியில்
முளைச்சு ழியின் வாலையில்
பான மான வீதியில்
பசைந்த செஞ்சு டரினில்
ஞான மான மூலையில்
நரலை தங்கும் வாயிலில்
ஓன மான செஞ்சுடர்
உதித்த தேசி வாயமே.

343. உதித்தெ ழுந்த வாலையும்
முயங்கி நின்ற வாலையும்
கதித்தெ ழுந்த வாலையும்
காலை யான வாலையும்
மதித்தெ ழுந்த வாலையும்
மறைந்து நின்ற ஞானமும்
கொதித்தெ ழுந்து கும்பலாகிக்
கூவும் கீயும் ஆனதே.

344. கூவுங் கீயும் மோனமாகிக்
கொள்கை யான கொள்கையை
மூவி லேயு தித்தெழுந்த
முச்சு டர்வி ரிவிலே
பூவிலே நறைகள் போலப்
பொருந்தி நின்ற பூரணம்
ஆவி யாவி யாவியாவி
அன்ப ருள்ளம் உற்றதே.

---

342. வாலை - திரவம் வடிகிற பாண்டம். நரலை - ஓசை. ஓனம் - பொருந்துளை.

343. வாலை - சத்திகளுள் இளமை மிக்க ஆற்றல். ஞானச் செயல்கள் அனைத்திற்கும் தோற்றமும் இயக்கமுமாகச் செயல்புரிவது இந்த ஆற்றலே. இதுபற்றியே வாலைக்கும்மி எழுந்தது.

344. பூவிலே நறைகள் - மலர்களிலுள்ள வகைவகையான தேனின் வேறுபாடுகள்.

345. ஆண்மை கூறு மாந்தரே
அரக்க னோடும் வதியை
காண்மை யாகக் காண்பிரே
கசட றுக்க வல்லிரே
தூண்மை யான வாதிசூட்சம்
சோப மாகும் ஆகுமே
நாண்மை யான வாயிலில்
நடித்து நின்ற நாதமே.

346. நாத மான வாயிலில்
நடித்து நின்ற சாயலில்
வேத மான வீதியில்
விரிந்த முச்சு டரிலே
கீத மான கீயிலே
கிளர்ந்து நின்ற கூவிலே
பூத மான வாயிலைப்
புகல றிவன் ஆகியே.

347. ஆவி யாவி யாவியாவி
ஐந்து கொம்பின் ஆவியே
மேவிமேவி மேவிமேவி
மேதி னியின் மானிடர்
வாவி வாவி வாவிவாவி
வண்டல் கள்அ றிந்திடார்
பாவி பாவி பாவிபாவி
படியி லுற்ற மாந்தரே.

---

345. அரக்கனோடும் விதி - பாம்பு நெளிந்து செல்லும் பாதை. இதுவே அரக்கி நடக்கும் மூலக் கனலாகிய பாம்பின் ஆற்றல்.

346. நாதமான வாயில் - உள்ளொலியாகிய நாதங்கள் கேட்கிற இடம்.

347. வாவி வண்டல் அறிந்திடார் - மேல்முகமாகச் செல்லும் ஆற்றலுக்கும் கீழ்முகமாகச் செல்லும் ஆற்றலுக்கும் உள்ள வேறுபாடு காணாத, அடிப்படை அறியாத மாந்தர்.

348. வித்திலே முளைத்த சோதி
வில்வ ளையின் மத்தியில்
உத்திலே ஒளிவ தாகி
மோன மான தீபமே
நத்திலே திரட்சி போன்ற
நாத னைஅ றிந்திடார்
வத்திலே கிடந்து மூன்று
வாலை யான சூட்சமே.

349. மாலை யோடு காலையும்
வடிந்து பொங்கு மோனமே
மாலை யோடு காலையான
வாற றிந்த மாந்தரே
மூலை யான கோணமின்
முளைத்தெ ழுந்த முச்சுடர்
காலை யோடு பானகன்று
தங்கி நின்ற மோனமே.

350. மோன மான வீதியில்
மூடு கின்ற நாதமே
ஈன மின்றி வேகமான
வேக மென்ன வேகமே
கான மான மூலையிற்
கனிந்தி ருந்த வாலையில்
ஞான மான செஞ்சுடர்
நடந்த தேசி வாயமே.

---

348. வித்து - மூலாதார அடிப்படை. வில் - முதுகந்தண்டாகிய வில். உத்திலே - அண்ணாந்த உச்சியில். வத்திலே கிடந்துமூன்று - உலகப் பொருள்களில் சிக்கித் தவித்து.

349. காலமும் - இடமும் கடந்த மூலை என்பது மனஒடுக்கம் கூடுகிற அகத்தானம்.

350. மூடுகின்ற நாதம் - ஒன்று கூடுகின்ற அணைக்கும் ஓசை. ஈனமின்றி - நெய்தல் நலிதலில்லாமல்.

351. உச்சி மத்தி வீதியில்
ஒழிந்தி ருந்த சாதியில்
பச்சி யுற்ற சோமனும்
பரந்து நின்று உலாவவே
செச்சி யான தீபமே
தியான மான மோனமே
கச்சி யான மோனமே
கடந்த தேசி வாயமே.

352. அஞ்சு கொம்பின் நின்றநாதம்
ஆலை போல்ள ழும்பியே
பிஞ்சி னோடு பூமலர்ந்து
பெற்றி யுற்ற சுத்தமே
செஞ்சு டர்உ தித்தபோது
தேசி கன்சு முன்றுடன்
பஞ்ச பூத மானதே
பரந்து நின்ற மோனமே.

353. சடுதி யான கொம்பிலே
தத்து வத்தின் உறீயிலே
அடுதி யான ஆவிலே
அரனி ருந்த உறவிலே
இடுதி யென்ற சோலையில்
இருந்த முச்சு டரிலே
நடுதி யென்று நாதமோடி
நன்குற அமைந்ததே.

---

351. பச்சியுறுதல் - பின்புறம் தொழிற்படுதல். செச்சியான - முழுமைபெற்ற செஞ்சுடரான.

352. ஐம்புலனும் ஒன்றி ஒடுங்கிய மோனத்திலே ஒலிக்கும் உள்நாதம் செஞ்சுடர் உதித்தபோது கேட்கிற ஓசையனுபவம்.

353. ஓசையின் வேறுபாடு நுட்பங்களை ஒலிக்குறியிலே கூறியவாறு.

354. அமையு மான மோனமும்
அரனி ருந்த மோனமும்
சமையும் பூத மோனமும்
தரித்தி ருந்த மோனமும்
இமையுங் கொண்ட வேகமும்
இலங்கு முச்சி மோனமும்
தமைய றிந்த மாந்தரே
சடத்தை யுற்று நோக்கிலார்.

355. பாய்ச்ச லூர்வ ழியிலே
பரணி ருந்த சுழியிலே
காய்ச்ச கொம்பின் நுனியிலே
கனியி ருந்த மலையிலே
வீச்சு மானது ஏதடா
விரிவு தங்கும் இங்குமே.
.................................................
.................................................

356. சோதி சோதி என்றுநாடித்
தோற்ப வர்சி லவரே
ஆதி ஆதி என்றுநாடும்
ஆட வர்சி லவரே
வாதி வாதி என்றுசொல்லும்
வம்ப ருஞ்சி லவரே
நீதி நீதி நீதிநீதி
நின்றி டுமு மூச்சுடர்.

---

354. முன்பாடல்களில் கூறு செய்யப்பெற்ற மோனநிலையின் பிரிவுகளை மேலும் கூறி, சடம் கடந்தநிலை பேசுகிறார்.

355. மூச்சும் ஒளியும் பாய்கிற நிலைக்குரிய பாதையைப் பாய்ச்சலூர் வீதியென்றும் மேலைவாசல் வீதியென்றும் அழைப்பது மரபு.

356. பயிற்சி செய்பவர் வேறு, சர்ச்சை செய்பவர் வேறு.

357. சுடர தாகி எழும்பியங்குத்
தூப மான காலமே
இடர தாய்ப்பு வியும்விண்ணும்
ஏக மாய்அ மைக்கமுன்
படர தாக நின்றவாதி
பஞ்ச பூத மாகியே
அடர தாக அண்டமெங்கும்
ஆண்மை யாக நின்றதே.

358. நின்றி ருந்த சோதியை
நிலத்தி லுற்ற மானிடர்
கண்ட றிந்து கண்குளிர்ந்து
காத லுற்று உலாவுவோர்
கண்ட முற்ற மேன்முனையின்
காட்சி தன்னைக் காணுவார்
நன்றி யற்று நரலை பொங்கி
நாத மும்ம கிழ்ந்திடும்.

359. வயங்கு மோனச் செஞ்சுடர்
வடிந்த சோதி நாதமும்
கயங்கள் போலக் கதறியே
கருவூ றற்ற வெளியிலே
பயங்கொ டின்றி யின்றியே
படர்ந்து நின்ற பான்மையே
நயங்கிள் கோவென் றேநடுங்கி
நங்கை யான தீபமே.

---

357. இதுவும் இதையடுத்த இரண்டு பாடல்களும் ஒளி என்ற தத்தவமானது தடித்துத் தடித்து, ஆற்றல் என்ற நிலையிருந்து பருமை பெற்று, வடிவமாகிப் பின்பு நிற்பனவும் அசைவனவுமாகிய தோற்றங்களாகப் பரிணமிக்கிறது என்ற வளர்ச்சியைப் பாடுகின்றன. காகபுசுண்டரும் இந்த ஆற்றல் வரலாற்றை அற்புதமாகப் பாடியுள்ளார்.

360. தீப வுச்சி முனையிலே
திவா கரத்தின் சுழியிலே
கோப மாறு கூவிலே
கொதித்து நின்ற தீயிலே
தாப மான மூலையிற்
சமைந்து நின்ற சூட்சமும்
சாப மான மோட்சமுந்
தடிந்து நின்று இலங்குமே.

361. தேசி கன்சு முன்றதே
திரிமு னையின் வாலையில்
வேச மோடு வாலையில்
வியனி ருந்த மூலையில்
நேச சந்தி ரோதயம்
நிறைந்தி ருந்த வாயிலில்
வீசி வீசி நின்றதே
விரிந்து நின்ற மோனமே.

362. உட்க மலமோ னமீதில்
உயங்கி நின்ற நந்தியை
விக்க லோடு கீயுமாகி
வில்வ ளைவின் மத்தியில்
முட்பொ திந்த தென்னவே
முடுகி நின்ற செஞ்சுடர்
கட்சு வைகள் போலவுங்
கடிந்து நின்ற காட்சியே.

---

360. திவாகரத்தின் சுழி - சூரியச் சுழி; சமைந்து நின்ற சூட்சம் - முயங்கிப் பக்குபவப்பட்டு நின்ற நுண்மை.

361. தேசிகன் - ஒளியாற்றல்; திரிமுனை - சூரிய சந்திர அங்கி முனைச்சந்தி. வியன் - மன ஆகாயம்.

362. உட்கலம் - மேனிச் சக்கரத்தின் அடித்தாமரை. வில்வளை - வீணா தண்டம். முட்பொதிதல் - ஊடுருவி நிற்றல்.

363. உந்தி யிற்சு ழிவழியில்
உச்சி யுற்ற மத்தியில்
சந்தி ரன்ஒ ளிக்கிரணம்
தாண்டி நின்ற செஞ்சுடர்
பந்த மாக வில்வளையிற்
பஞ்ச பூத விஞ்சையாம்
கிந்து போலக் கீயில்நின்று
கீச்சி மூச்சும் என்றதே.

364. செச்சை யென்ற மூச்சினோடு
சிகார மும்வ காரமும்
பச்சை யாகி நின்றதே
பரவெ ளியின் பான்மையே
இச்சை யான உறவிலே
இருந்தெ ழுந்த உறியிலே
உச்சி யான கோணத்தில்
உதித்த தேசி வாயமே.

365. ஆறு மூலைக் கோணத்தில்
அமைந்த வொன்பது ஆத்திலே
நாறு மென்று நங்கையான
நாவி யும்தெ ரிந்திடக்
கூறு மென்று ஐவரங்குக்
கொண்டு நின்ற மோனமே
பாறு கொண்டு நின்றது
பரந்த தேசி வாயமே.

---

363. உந்தியிற் சுழிவழி - கனல் எழுப்புதல் என்ற செயலின் செலவு. இந்து - சந்திரன்.

364. வாசியினால் ஒளிகண்டு ஒலிகேட்கும் அனுபவம் இது. சிவப்பு, பச்சை முதலிய நிறங்களுக்கெல்லாம் ஆன்ம வளச்சிப் பொருள் இருப்பதை இன்றைய அறிவியல் ஆய்வுகளும் உறுதி செய்கின்றன.

365. ஆதாரங்களின் ஒவ்வொரு மையத்திலும் எழுகின்ற ஆற்றல்களின் தோற்றமும் ஒடுக்கமுமே சிவாயமாகும்.

366. பறந்த தேக றந்தபோது
பாய்ச்ச லூரின் வழியிலே
பிறந்த தேபி ராணனன்றிப்
பெண்ணு மாணும் அல்லவே
துறந்த தோசி றந்ததோ
தூய துங்க மானதோ
இறந்த போதில் அன்றதே
இலங்கி டுஞ்சி வாயமே.

367. அருளி ருந்த வெளியிலே
அருக்க னின்ற இருளிலே
பொருளி ருந்த சுழியிலே
புரண்டெ ழுந்த வழியிலே
தெருளி ருந்த கலையிலே
தியங்கி நின்ற வலையிலே
குருவி ருந்த வழியினின்று
உறவும் உறியும் ஆனதே.

368. ஆன தோர்எ ழுத்திலே
அமைந்து நின்ற ஆதியே
கான மோடு தாளமீதிற்
கண்ட றிவதில் லையே
தானுந் தானும் ஆனதே
சமைந்த மாலை காலையில்
வேன லோடும் ஆறுபோல்
விரிந்த தேசி வாயமே.

---

366. பாய்ச்சலூர் - மூச்சு சென்று புகுகின்ற அகத்தானம். பிராணன் என்ற நிலையிலே அது ஆண்பெண் பேதம் இல்லாததே நிலையாகும்.

367. அருக்கன் - சூரியன், வலப்புற ஆற்றல். குரு - ஒளி.

368. எழுத்து - ஒலிநிலை; அதிர்வுமையம். வேனல் - வெப்பம்.

369. ஆறு கொண்ட வாரியும்
அமைந்து நின்ற தெய்வமும்
தூறு கொண்ட மாரியும்
துலங்கி நின்ற தூபமும்
வீறு கொண்ட மோனமும்
விளங்கு முட்க மலமும்
மாறு கொண்ட ஹீவிலே
மடிந்த தேசி வாயமே.

370. வாயில் கண்ட கோணமில்
வயங்கு மைவர் வைகியே
சாயல் கண்டு சார்ந்ததும்
தலைமன் னாரு றைந்ததும்
காய வண்டு கண்டதும்
கருவூ ரங்குச் சென்றதும்
பாயு மென்று சென்றதும்
பறந்து தேசி வாயமே.

371. பறந்த தேது றந்தபோது
பாய்ச்ச லூரின் வழியிலே
மறந்த தேகவ் வுமுற்ற
வாணர் கையின் மேவியே
பிறந்த தேஇ றந்தபோதிற்
பீடி டாமற் கீயிலே
சிறந்து நின்ற மோனமே
தெளிந்த தேசி வாயமே.

---

369. ஆறு கொண்ட வாரி - நதியைச் சங்கமித்துக் கொண்ட கடல்; தூறு கொண்ட மாரி - தூற்றல் செய்கிற மழை. வீறுகொண்ட மோனம் - ஆற்றல் விம்முகிற ஒடுக்கம்.

370. சாயல் - அகக்காட்சி. தலைமன்னார் - உச்சித்தலம். காயவண்டு கண்டதும் - உள்முகப் பார்வை.

371. மூச்சுப் பயிற்சியின் கல்விமுறையைக் கூறியவாறு.

372. வடிவு பத்ம வாசனத்
திருத்தி மூல வனலையே
மாரு தத்தி னாலெழுப்பி
வாச லைந்து நாலையும்
முடிவு முத்தி ரைப்படுத்தி
மூல வீணா தண்டினால்
முளரி யால யங்கடந்து
மூல நாடி யூடுபோம்.

373. அடிது வக்கி முடிஎயவும்
ஆறு மாநி லங்கடந்து
அப்பு றத்தில் வெளிகடந்த
ஆதி யெங்கள் சோதியை
உடுப திக்கண் அமுதருந்தி
உண்மை ஞான உவகையுள்
உச்சி பட்டு இறங்குகின்ற
யோகி நல்ல யோகிறே.

374. மந்தி ரங்கள் உண்டுநீர்
மயங்கு கின்ற மாந்தரே
மந்தி ரங்கள் ஆவதும்
மரத்தி லூறல் அன்றுகாண்
மந்தி ரங்கள் ஆவதும்
மதித்தெ ழுந்த வாயுவே
மந்தி ரத்தை உண்டவர்க்கு
மரண மேதும் இல்லையே.

---

372. அற்புதமான யோக ஒடுக்கச் சித்திரம் இது. முன் பகுதிகளில் 'மூலக்கனல்' என்ற தலைப்பில் இந்த ஒடுக்க முறை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆதாரத்திலிருந்து கனலை எழுப்பும் பயிற்சி இதுவே.

373. ஆறு ஆதாரங்களிலே புகுந்து சென்று அனாகதம் கடந்து விசுத்தி தாண்டி நடனப் பேரின்பத்திலே அமுதம் உண்ணுகிற முறை சித்தர்களின் நேர்முகக் கல்வியாகும்.

374. மயங்குகின்ற - வீணே மருண்டு நிற்கிற. ஊதல் - ஏறுதல். மந்திரம் ஆவதும் - உண்மையான மந்திரம் என்று சொல்லப் படுவது. வாயுவே - வாசியோகமே.

375. மந்தி ரங்கள் கற்றுநீர்
மயங்கு கின்ற மாந்தரே
மந்தி ரங்கள் கற்றநீர்
மரித்த போது சொல்விரோ
மந்தி ரங்கள் உம்முளே
மதித்த நீறும் உம்முளே
மந்தி ரங்கள் ஆவது
மனத்தி னைந்து எழுத்துமே.

376. உள்ள தோபு றம்பதோ
உயிரொ டுங்கி நின்றிடம்
மெள்ள வந்து கிட்டிநீர்
வினாவ வேண்டும் என்கிறீர்
உள்ள தும்பு றத்ததும்
ஒத்த போது நாதமாம்
கள்ள வாச லைத்திறந்து
காண வேண்டும் மாந்தரே.

377. ஓரெ ழுத்து லிங்கமாய்
ஓது மட்ச ரத்துளே
ஓரெ ழுத்தி யங்குகின்ற
உண்மை யைஅ றிகிலீர்
மூவெ ழுத்து மூவராய்
முளைத்தெ ழுந்த சோதியை
நாவெ ழுத்து நாவுளே
நவின்ற தேசி வாயமே.

---

375. மரித்த போது - மரணத்திற்குப் பிறகு. மனத்தின் ஐந்து எழுத்து - மனத்தின் வேக அலைகளான ஐந்து அதிர்வுகள்.

376. உள்ளதொ - அகத்தில் இருப்பதோ. புறம்பதோ - வெளியே காணப்படுவதோ. உள்ளதும் - உள்ளே இருப்பதும். புறத்ததும் - வெளி மண்டலமும். ஒத்த போது ஒன்றி இணைந்த காலத்தில்.

377. அகரத்தை ஆதியெழுத்து என்று சொல்வதையே ஓரெழுத்து என்றார். மூவெழுத்து என்பது அ, உ, ம.

378. முத்த சித்தி தொந்தமா
முயங்கு கின்ற மூர்த்தியை
மற்று தித்த வப்புலன்கள்
ஆகு மத்தி மப்புலன்
அத்தர் நித்தர் கானகண்டர்
அன்பி லால்அ னுதினம்
உச்ச ரித்து உளத்திலே
அறிந்து ணர்ந்து கொண்மினே.

379. மூன்றி ரண்டும் ஐந்துமாய்
முயன்றெ ழுந்த தேவராய்
மூன்றி ரண்டு மைந்தராய்
முயன்ற தேயு லகெலாம்
ஈன்ற தாயும் அப்பனும்
இயங்கு கின்ற நாதமாய்த்
தோன்று மோர்எ ழுத்தினோடு
சொல்ல ஒன்றும் இல்லையே.

380. வெளியு ருக்கி அஞ்செழுத்தும்
விந்து நாத சத்தமும்
தளியு ருக்கி நெய்கலந்து
சகல சுத்தி ஆனதும்
வெளியி லுமவ்வி னையிலும்
இருவ ரைய றிந்தபின்
தெளிக லந்த தன்மையால்
தெளிந்த தேசி வாயமே.

---

378. உடம்புக்குள்ளே தெய்வ ஆற்றல் எழுந்து வெவ்வேறு பிரிவுகளில் இயங்குகின்ற தன்மை கூறியவாறு.

379. இதுவும் அடுத்த பாடலும் முந்திய பாடல்களில் சொன்ன உற்பத்தியும் தோற்றமும் பற்றிப் பிறிதொரு வடிவிலே கூறியவாறாம். முன்விளக்கங்கள் காண்க.

381. முப்பு ரத்தில் அப்புறம்
முக்க ணன்வி ளைவிலே
சிற்ப ரத்துள் உற்பனஞ்
சிவாய மஞ்செ ழுத்துமாம்
தற்ப ரமுதித் துநின்று
தானு வெங்கும் ஆனபின்
இப்புற மொடுங்கும் ஓடி
எங்கும் லிங்க மானதே.

382. ஆடி நின்ற சீவனோர்
அஞ்சு பஞ்ச பூதமோ
கூடி நின்ற சோதியோ
குலாவி நின்ற மூலமோ
நாடு கண்டு நின்றதோ
நாவு கற்ற கல்வியோ
வீடு கண்டு விண்டிடின்
வெட்ட வெளியும் ஆனதே.

383. உருத்த ரித்த போதுசீவன்
ஒக்க நின்ற உண்மையும்
திருத்த முள்ளது ஒன்றிலும்
சிவாய மஞ்செ ழுத்துமாம்
இருத்து நின்று உருத்தடங்கி
ஏக போக மானபின்
கருத்தி னின்று உதித்ததே
கபால மேந்து நாதனே.

---

381. 'முப்புர மாவது மும்மல காரியம்' என்றும், 'அப்புரம் எய்தமை யாரறி வாரே' என்றும் திருமூலர் சொன்னதை ஒப்புநோக்கு.

382. உயிரின் ஆட்டமும் கூட்டமும் நாட்டமும் ஆராய்ந்து பார்த்தால் அது புறத்தே கண்டு நின்ற பார்வையா, நாவினால் கற்ற கல்வியா?

383. சீவன் உடம்போடு கலந்த நுட்பத்தை முன் பாடல்களில் கேள்வியாகவும் விடையாகவும் கூறியுள்ளமை காண்க.

384. கருத்த ரித்து உதித்தபோது
கமல பீடம் ஆனதும்
கருத்த ரித்து உதித்தபோது
கார ணங்கள் ஆனதும்
கருத்த ரித்து உதித்தபோது
காணி ரண்டு கண்களாய்க்
கருத்தி னின்று உதித்ததே
கபால மேந்து நாதனே.

385. ஆன வன்னி மூன்று கோணம்
ஆறி ரண்டும் எட்டிலே
ஆன சீவன் அஞ்செழுத்து
அகார மிட்டு அலர்ந்ததும்
ஆன சோதி உண்மையும்
அனாதி யான உண்மையும்
ஆன தான தானதாய்
அவல மாய்ம றைந்திடும்.

386. ஈன்றெ ழுந்த எம்பிரான்
திருவ ரங்க வெளியிலே
நான்ற பாம்பின் வாயினால்
நாலு திக்கும் ஆயினான்
மூன்று மூன்று வளையமாய்
முப்பு ரங்க டந்தபின்
ஈன்றெ ழுந்த அவ்வினோசை
எங்கு மாகி நின்றதே.

---

384. கரு உண்டாகும்போது எல்லாப் பகுதிகளுக்கும் அடிப்படையாக அமைவது எது? உயிரின் மையம், ஒளி மையம், மன மையம் இவையெல்லாம் கருத்திலிருந்து உதித்தவையல்லவா? அதாவது மனமே ஆதியென்றவாறு.

385. கோண் - கோணம். அகாரம் - ஆதிமையம்.

386. முதற்பகுதி 356ஆம் பக்கத்திலுள்ள ஆதாரநிலையின் விளக்கப்படம் காண்க.

387.. எங்கும் எங்கும் ஒன்றலோவீர்
ஏழு லோகம் ஒன்றலோ
அங்கு மிங்கும் ஒன்றலோ
அனாதி யானது ஒன்றலோ
தங்கு தாப ரங்களும்
தரித்து வார தொன்றலோ
உங்க ளெங்கள் பங்கினில்
உதித்த தேசி வாயமே.

388. அம்ப ரத்தில் ஆடுஞ்சோதி
ஆன வன்னி மூலமாம்
அம்ப ரம்மும் அம்பரமும்
அகோர மிட்டு அலர்ந்ததும்
அம்ப ரக்கு ழியிலே
அங்க மிட்டு ருக்கிட
அம்ப ரத்தில் ஆதியோடு
அமர்ந்த தேசி வாயமே.

389. வாடி லாத பூமலர்ந்து
வண்டு இசை நாவிலே
ஓடி நின்று உருவெடுத்து
உகார மாய்அ லர்ந்ததும்
ஆடி ஆடி அங்கமும்
அகப்ப டக்க டந்தபின்
கூடி நின்று லாவுமே
குருவி ருந்த கோலமே.

---

387. ஒரே பொருள்தான் எல்லாமாய் எங்குமாய் விரிந்து பரந்துள்ளது.

388. நெருப்பு சோதியாகிறது. அதை எதை உருக்கி எந்த நிலையிலே அமர்கிறது என்பதே அங்கி தாரணையின் நுட்பமாகும்.

389. வாடாத பூ மலர்வது என்பதே ஞானத்தின் உதயமாகும். பிறப்பின் தோற்றமும் அதுவே. பதியிருப்பது எப்படி நிலையோ அவ்வாறே பசு இருப்பதும் ஆகும்.

390. விட்டடி விரைந்த தோஅவ்
வேரு ருக்கி நின்றதோ
எட்டி நின்ற சிவனுமீர்
ஏழு லோகம் கண்டதோ
தட்டு ருவமா கிநின்ற
சதாசி வத்தொ ளிய்தோ
விட்ட வீட றிந்தபேர்கள்
வான தேவர் ஆவரே.

391. வான வர்நி றைந்தசோதி
மானி டக்க ருவிலே
வான தேவர் அத்தனைக்குள்
வந்த டைவர் வானவர்
வான கம்மு மண்ணகம்மும்
வட்ட வீட றிந்தபின்
வானெ லாம்நி றைந்துமன்னு
மாணிக் கங்கள் ஆனவே.

392. பன்னி ரண்டு நால்நிறுத்திப்
பஞ்ச வண்ணம் உற்றிடில்
மின்னல் யேவெ ளிக்குள்நின்று
வேறி டந்துஅ மர்ந்ததும்
சென்னி யாந்தி லத்திலே
சீவ னின்றி யங்கிடும்
பன்னி யுன்னி யாய்ந்தவர்
பரப்பி ரம்மம் ஆனதே.

---

390. அண்டமும் பிண்டமும் ஒன்றே. எனினும் எது எதை வேட்டது? இதுவே இரகசியக் கல்வி என்னும் ஞானமாம்.

391. மானிடக் கரு எனினும் அதற்குள் நிற்கும் சோதி எது? இந்த ஆற்றல் மையங்களிலே தொழில் செய்கிறவர்கள் தேவர்களே!

392. சென்னியாம் தலத்தில் - உச்சி முகட்டிலே உள்ள வெளியில். அதுவே ஆதாரங்களின் உச்சநிலை.

393. உச்சி கண்டு கண்கள்கட்டி
உண்மை கண்டது எவ்விடம்
மச்சு மாளி கைக்குள்ளே
மானி டங்க லப்பிரேல்
எச்சி லான வாசலும்
ஏக போகம் ஆய்விடும்
பச்சை மாலும் ஈசனும்
பரந்த தேசி வாயமே.

394. வாயி லிட்டு நல்லுரிசை
அட்ச ரத்து ஒளியிலே
கோயி லிட்டு வாவியும்மங்
கொம்பி லேஉ லர்ந்ததும்
ஆயி லிட்ட காயமும்
அனாதி யிட்ட சீவனும்
வாயு விட்ட வன்னியும்
வளர்ந்த தேசி வாயமே.

395. அட்ச ரத்தை உச்சரித்து
அனாதி யங்கி மூலமாய்
அட்ச ரத்தை யுந்திறந்த
கோர மிட்ட லர்ந்ததும்
அட்ச ரத்தில் உட்கரம்
அகப்ப டக்க டந்தபின்
அட்ச ரத்தில் ஆதியோடு
அமர்ந்த தேசி வாயமே.

---

393. அக்ரை என்ற இடத்தின் மகிமைகள் உலவுவதே 'மச்சு மாளிகை' என்பது.

394. இதுவும் அடுத்த பாடலும் மூலக்கனற் பயிற்சியிலே ஒளியில் ஒளி சென்று ஒடுங்குகிற இன்பத்தைப் பாடுகின்றன.

395. அட்சரத்தில் ஆதியோடு அமர்தல் - ஆதார நிலைகளிலே கனலைச் செலுத்திக் கடந்துசென்று பேரொளியிலே கலந்து நிற்கிற இன்பநிலை.

396. கோயி லுங்கு ளங்களும்
குறியி னிற்கு ருக்களாய்
மாயி றும்ம டியிலும்
மனதி லேம யங்குறீர்
ஆய னைஅ ரனையும்
அறிந்து ணர்ந்து கொள்விரேல்
தாயி னும்த கப்பனோடு
தான மர்ந்த தொக்குமே.

397. கோயி லெங்கும் ஒன்றலோ
குளங்கள் நீரும் ஒன்றலோ
தேயு வாயு ஒன்றலோ
சிவனு மங்கே ஒன்றலோ
ஆய சீவன் எங்குமாய்
அமர்ந்து வார தொன்றலோ
காய மீது அறிந்தபேர்கள்
காட்சி யாவர் காணுமே.

398. காது கண்கள் மூக்குமாய்
கலந்து பாரது ஒன்றலோ
கோதி யிட்டெ டுத்ததுஞ்
சுகங்க ளஞ்சும் ஒன்றலோ
ஓதி வைத்தி சாத்திரம்
உதித்த பாரது ஒன்றலோ
நாத வீட றிந்தபேர்கள்
நாத ராவர் காணுமே.

---

396. குறியீடுகளிலேயே மனத்தைச் செலுத்துவதை விடுத்து இறையாற்றல் செயற்படுகிற மையங்களைக் காணுங்கள் என்றவாறு.

397. ஐம்பூதச் சேர்க்கைகள் எல்லாம் ஒன்றே. இந்த உண்மையை உடலுட் சென்று கண்டால் அதுவே மெய்யான காட்சி.

398. ஐம்புலனுகர்ச்சிகளும் ஒன்று என்பதைப் புலனொடுக்கம் என்ற யோகத்திலே கண்டுணர்ந்தவர்கள் நாதம் ஒலிப்பதும் நாதன் அமர்ந்ததுமான மையம் கண்டவர்கள். அவர்கள் நாதராகிய ஞானத்தலைவர்களே யாவர்.

399. அவ்வு தித்த அட்சரத்தின்
உள்க லந்த அட்சரம்
சவ்வு தித்த மந்திரம்
சம்ப வத்தி ருந்ததால்
மவ்வு தித்த மாய்கையால்
மயங்கு கின்ற மாந்தர்காள்
உவ்வு தித்த தவ்வுமாய்
உருத்த ரித்த உண்மையே.

400. அகார மென்னும் அக்கரத்தில்
அக்க ரம்ஒ ழிந்ததோ
அகார மென்னும் அக்கரத்தில்
அவ்வு வந்து உதித்ததோ
உகார மும்ம காரமும்
ஒன்றி நன்று நின்றதோ
விகார மற்ற ஞானிகாள்
விரித்து ரைக்க வேணுமே.

401. சத்தி யாவது உன்னுடல்
தயங்கு சீவன் உட்சிவம்
பித்தர் காள்இ தற்குமேல்
பிதற்று கின்ற தில்லையே
சுத்தி யைந்து கூடமொன்று
சொல்லி றந்த தோர்வெளி
சத்தி சிவமும் ஆகிநின்று
தண்மை யாவது உண்மையே.

---

399. முந்திய பாடல்களிலே சொன்ன அட்சர விளக்கதின் விரிவு.

400. ஓம் என்பது அ, உ, ம் சேர்ந்த ஒலி இணைப்பு. இதன் நுட்பத்தைப் பாடியவாறு.

401. முன் பாடல்களில் இதே கருத்து வேறு வடிவத்தில் வந்துள்ளது காண்க.

402. சுக்கி லத்து ளையிலே
சுரோணி தக்க ருவுளே
முச்ச துரவா சல்தன்னில்
முளைத்தெ ழுந்த வோட்டினில்
மெய்ச்ச துரமெய் யுள்ளேவி
ளங்கு ஞான தீபமாய்
உச்ச ரிக்கும் மந்திரம்
ஓம்ந மச்சி வாயமே.

403. அக்க ரம்அ னாதியல்ல
ஆத்து மம்அ னாதியல்ல
புக்கி ருந்த பூதலும்
புலன்க ளும்அ னாதியல்ல
தக்க மிக்க நூல்களும்
சாத்தி ரம்அ னாதியல்ல
ஒக்க நின்று டன்கலந்த
உண்மை காண்அ னாதியே.

404. மென்மை யாகி நின்றதேது
விடடு நின்று தொட்டதேது
உண்மை யாக நீயுரைக்க
வேணு மெங்கள் உத்தமா
பெண்மை யாகி நின்றதொன்று
விட்டு நின்று தொட்டதை
உண்மை யாய்உ ரைக்க முத்தி
உட்க லந்து இருந்ததே.

---

402. கரு உற்பத்தியும், எழுச்சி நிலையும் எது? ஓம் நமச்சிவாயமே என்பதை விளக்குகிறார். இதன் வரைபடம் காண்க.

403. புக்கிருந்த பூதம் - உடம்பின் அமைப்பில் கலந்துள்ள ஐம்பூதச் சேர்க்கை. உண்மை சத் என்று அழைக்கப்படுகிற மெய்ப்பொருள்.

404. மென்மை - 'Subtle' என்று ஆங்கிலத்தில் தத்துவ ஞானிகள் சொல்வதன் நேர் தமிழ்ச்சொல்.

405. அடக்கி னால்அ டங்குமோ
அண்ட மஞ்செ ழுத்துளே
உடக்கி னாய்எ டுத்தகாயம்
உண்மை யென்று உணர்ந்துநீ
சடக்கி லாறு வேதமும்
தரிக்க வோதி லாமையால்
விடக்கு நாயு மாய்வோதி
வேறு வேறு பேசுமா?

406. உண்மை யான சக்கரம்
உபாய மாய்இ இருந்ததும்
தன்மை யான காயமும்
தரித்த ரூபம் ஆனதும்
பெண்மை யாகி நீரிலே
விளைந்து நின்றது ஆனதும்
உண்மை யான ஞானிகாள்
விரித்து ரைக்க வேணுமே.

407. எள்ள கத்தின் எண்ணெய்போல
எங்கு மாகி எம்பிரான்
உள்ள கத்தி லேயிருக்க
ஊச லாடும் மூடர்காள்
கொள்ளை நாயின் வாலினைக்
குணக்கெ டுக்க வல்லிரேல்
வள்ள லாகி நின்றசோதி
காண லாகும் மெய்ம்மையே.

---

405. அஞ்செழுத்து என்பது அண்டங்களின் எல்லையைக் கடந்த மெய்ப்பொருள் என்பது கருத்து.

406. ஆற்றல் வடிவிலே இயங்குவது நின்றுவிட்டால் கட்புலனுக்குத் தெரிவதில்லை. ஆனால் உருவமான பொருள் அழிவது நன்கு தெரிகிறது.

407. எள்ளுக்குள் எண்ணெய் போன்று உட்கலந்து நிற்கும் மெய்ப்பொருளை ஊரகத்தே தேடுவது பயனற்ற முயற்சி. நாய் வாலை நிமிர்த்துகிற காரியம் அது.

408. வேணு மென்ற ஞானமும்
விரும்பு கின்ற நூலிலே
தாணு வுண்டங்கு என்கிறீர்
தரிக்கி லீர்ம றக்கிலீர்
தாணு வொன்று மூலநாடி
தன்னுள் நாடி உம்முளே
காணு மன்றி வேறியாவும்
கனாம யக்கம் ஒக்குமே.

409. வழக்கி லேயு ரைக்கிறீர்
மனத்து ளேது விக்கிறீர்
உழக்கி லாது நாழியான
வாறு போலும் ஊமைகாள்
உழக்கு நாலு நாழியான
வாறு போல உம்முளே
வழக்கி லேயு ரைக்கிறீர்
மனத்து ளீசன் மன்னுமே.

410. அறத்தி றங்க ளுக்குநீ
அண்டம் எணதி சைக்கும்நீ
திறத்தி றங்க ளுக்குநீ
தேடு வார்கள் சிந்தைநீ
உறக்கு நீஉ ணர்வுநீ
உட்க லந்த சோதிநீ
மறக்கொ ணாத நின்கழல்
மறப்பி னும்கு டிகொளே.

---

408. நூலைப் படித்து அகப்பார்வை பற்றிச் சொல்வோர், பயிற்சியில் அதைச் செய்வதில்லை அது ஒன்றே நனவு. மற்றது வெறும் கனா மயக்கம்.

409. கணக்குப் போடுவது மாதிரி வழக்குப் பேச்சு சரியாகச் சொல்லுகிறார்கள். ஆனால், மனத்திலே ஈசனை மன்னுவதில்லை.

410. துதி போன்ற அழகான பாடல். எல்லாம் நீயாக நிற்கிறாய். மறக்க ஒண்ணாதது நின்கழல். மறந்தாலும் நீ குடிகொள்ள வேண்டும்.

411. ஆடு கின்ற எம்பிரானை
அங்கு மிங்கும் நின்றுநீர்
தேடு கின்ற வீணர்காள்
தெளிவ தொன்றை ஓர்கிலீர்
நாடி நாடி உம்முளே
நவின்று நோக்க வல்லிரேல்
கூடொ ணாத தற்பரங்
குவிந்து கூடல் ஆகுமே.

412. சுத்தி யைந்து கூடமொன்று
சொல்லி றந்த தோர்வெளி
சத்தி யுஞ்சி வமுமாகி
நின்ற தன்மை ஓர்கிலீர்
சத்தி யாவ தும்உடல்
தயங்கு சீவ னுட்சிவம்
பித்தர் காள்அ றிந்துகொண்ம்
பிரானி ருந்த கோலமே.

413. அகார மானது அம்பலம்
அனாதி யானது அம்பலம்
உகார மானது அம்பலம்
உண்மை யானது அம்பலம்
மகார மானது அம்பலம்
வடிவ மானது அம்பலம்
சிகார மானது அம்பலம்
தெளிந்த தேசி வாயமே.

---

411. ஆடுகின்ற எம்பிரான் - இந்த உடம்புளே நடனம் செய்கிற பரம்பொருள். நாடிநாடி - திரும்பத்திரும்ப நாடி எனவும், நாடியை நாடி எனவும் சிலேடை.

412. சத்தியும் சிவமும் இந்த உடம்புக்குள் செயற்படுகிற பான்மை சொல்லியவாறு. முன்பாடல்களிலும் இதே கருத்து காண்க.

413. பிரணவ எழுத்தின் ஒலியே அம்பலம். சிவாயம் ஆவது இதனைத் தெளிந்து நிற்றலே.

414. சக்க ரம்ப றந்தோடிச்
சக்க ரம்போல் பலகையாய்ச்
செக்கி லாடும் எண்ணெய்போல்
சிங்கு வாயு தேயுவும்
உக்கி லேயொ ளிகலந்து
யுகங்க ளுங்க லக்கமாய்ப்
புக்கி லேபு குந்தபோது
போன வாறது எங்ஙனே.

415. வளர்ந்தெ ழுந்த கொங்கைதன்னை
மாய மாம்என்று எண்ணநீர்
வளங்கொள் சீவ ராம்உடம்பை
உண்மை யாகத் தேர்வீர்காள்
விளங்கு ஞானம் மேவிய
மிக்கோர் சொல்லைக் கேட்பிரேல்
களங்க மற்று நெஞ்சுளே
கருத்து வந்து புக்குமே.

416. நாலு வேதம் ஓதுகின்ற
ஞான மொன்று அறிவிரோ
நாலு காமம் ஆகியே
நவின்ற ஞான போதமாய்
ஆல முண்ட கண்டனும்
அயனு மந்த மாலுமாய்ச்
சால வுன்னி நெஞ்சுளே
தரித்த தேசி வாயமே.

---

414. சிங்கு வாயு - சிங்கு என்றும் சிங்குவை என்றும் அழைக்கப்பெறுவது. பத்து நாடிகளில் ஒன்று. சிங்குவை எனினும் ஒக்கும். புக்கு, புக்கில் - உடம்பு.

415. உடம்பு கண்டு மயங்கும் காமத்தைச் சீறியது.

416. வாயசைப்பினால் என்ன பயன்? நெஞ்சுக்குள் முற்படுகின்ற அதிர்வுகளே எல்லாம்.

417. சுற்ற மென்று சொல்வதும்
சுருதி முடிவில் வைத்திடீர்
அத்த னித்த மாடியே
அமர்ந்தி ருந்தது எவ்விடம்
பத்தி முற்றி அன்பர்கள்
பரத்தி லொன்று பாழது
பித்த ரேஇ தைக்கருதிப்
பேச லாவ தெங்ஙனே.

418. எங்ங னேவி ளக்கதுக்கு
ளேற்ற வாறு நின்றுதான்
எங்ங னேயி ருந்தருளி
யீச னேசர் என்பரேல்
அங்ங னேயி ருந்தருளும்
ஆதி யான தற்பரம்
சிங்க மண்மி யானைபோலத்
திரிம லங்கள் அற்றவே.

419. அற்ற வுள்ள கத்தையும்
அலக்கி டும்மெ ழுக்கிடும்
மெத்த தீப மிட்டதிற்ப்ர
வாத பூசை ஏத்தியே
நற்ற வம்பு ரிந்தும்ஏக
நாதர் பாதம் நாடியே
கற்றி ருப்ப தேசரிகை
கண்டு கொள்ளும் உம்முளே.

---

417. அத்தன் - அப்பனாகிய இறைவன். நித்தம் ஆடியே - எப்போதும் ஆடிக்கொண்டே.

418. ஏது முறையில் ஏத்துவீரோ, அம்முறையில் அவன் இருந்தருளுவன்.

419. சரியை வழியில் சென்று தொண்டு நெறியை விளக்கியவாறு.

420. பார்த்து நின்றது அம்பலம்
பரம னாடும் அம்பலம்
கூர்த்து நின்றது அம்பலம்
கோர மான்து அம்பலம்
வார்த்தை யானது அம்பலம்
வன்னி யானது அம்பலம்
சீற்ற மானது அம்பலம்
தெளிந்த தேசி வாயமே.

421. சென்று சென்றி டந்தோறும்
சிறந்த செம்பொ னம்பலம்
அன்று மின்று நின்றதோர்
அனாதி யான தம்பலம்
என்று மென்றி ருப்பதோர்
இறுதி யான அம்பலம்
ஒன்றி யொன்றி நின்றதுள்
ஒழிந்த தேசி வாயமே.

422. தந்தை தாய்த மரும்நீ
சகல தேவ தையும்நீ
சிந்தை நீதெ ளிவுநீ
சித்தி முத்தி தானும்நீ
விந்து நீவி ளைவுநீ
மேல தாய வேதம்நீ
எந்தை நீஇ றைவநீ
என்னை யாண்ட ஈசனே.

---

420. கொண்டது கோயில் என்றவாறு எல்லாம் அம்பலம் என்று மனப்பான்மை ஏற்பட்டால் அதுவே முன்பாடலிற் சொல்லிய சரியையின் விரிவாகும்.

421. சென்று வழிபடும் தொண்டுநெறியின் மொழியிலே பாடி, உடம்புக்குள் உள்ள அம்பலத்தைப் பாடுகிறார்.

422. பத்தர்களின் பாங்கிலேயே சரியை கிரியையாளர்களின் பாங்கிலே பாடப்பெற்ற அழகான துதிப்பாடல் இது.

423. எப்பி றப்பி லும்பிறந்து
இறந்த ழிந்த ஏழைகாள்
இப்பி றப்பி லும்பிறந்து
என்ன நீறு பூசுறீர்
அப்பு டன்ம லமறுத்தே
ஆசை நீக்க வல்லிரேல்
செப்பு நாத வோசையிற்
தெளிந்து காணல் ஆகுமே.

424. மந்தி ரங்கள் கற்றுநீர்
மயங்கு கின்ற மாந்தரே
மந்தி ரங்கள் கற்றுநீர்
மரித்த போது சொல்விரோ
மந்தி ரங்கள் உம்முளே
மதிக்க நீறு மும்முளே
மந்தி ரங்கள் ஆவது
மனத்தி னைந்தெ ழுத்துமே.

425. எட்டு யோக மானதும்
இயங்கு கின்ற நாதமும்
எட்டு வக்க ரத்துளே
உகார மும்ம காரமும்
விட்ட லர்ந்த மந்திரம்
வீணா தண்டின் ஊடுபோய்
அட்ட வக்க ரத்துளே
அமர்ந்த தேசி வாயமே.

---

423. எத்தனையோ பிறவிகள் பிறந்தாகிவிட்டது. இந்தப் பிறவியிலாவது பயனுள்ளதைச் செய்யுங்கள்.

424. இதே பாடலும் முந்திய பாடலும் இதே மொழியிற் பேசினாலும் உண்மையான மந்திரம் மனத்தில் நிற்கும் ஐந்து ஞான நிலைகளான ஐந்து எழுத்துக்களே.

425. அட்டாங்க யோகம், எட்டு அக்கரம் ஆகியன கூறி, வீணா தண்டின் ஊடாகக் குண்டலினி எழுப்புதலைப் பேசுகிறார்.

426. பிரான்பி ரான்பி ரானென்று
பினாத்து கின்ற மூடரே
பிரானை விட்டும் எம்பிரான்
பிரிந்த வாற தெங்ஙனே
பிரானு மாப்பி ரானுமாய்ப்
பேரு லகந் தானுமாய்ப்
பிரானி லேழு ளைத்தெழுந்த
பித்தர் காணும் உம்முடல்.

427. ஆதி யில்லை அந்தமில்லை
ஆன நாலு வேதமில்லை
சோதி யில்லை சொல்லுமில்லை
சொல்லி றந்த தூவெளி
நீதி யில்லை நேசமில்லை
நிச்ச யப்ப டாததும்
ஆதி கண்டு கொண்டபின்
அஞ்செ ழுத்தும் இல்லையே.

428. அம்மை யப்பன் அப்பன்நீர்
அமர்ந்த போத றிகிலீர்
அம்மை யப்பன் ஆனநீர்
ஆதி யான பாசமே
அம்மை யப்பன் நின்னையன்றி
யாரு மில்லை யானபின்
அம்மை யப்பன் நின்னையன்றி
யாரு மில்லை இல்லையே.

---

426. 'பிரான்' என்பது வெளியிலில்லை. இந்த உடல் வந்ததே அங்கிருந்துதானே.

427. பாழ் கடந்த பாழாகிச் சூனியமான வெளிதான் ஞானக் கல்வியின் இலக்கு.

428. 'அகம் பிரம்மாஸ்மி' என்று சொன்னால் போதுமா? அம்மையப்பன் என்ற தத்துவம் யார்?

429. நூறு கோடி மந்திரம்
நூறு கோடி ஆகமம்
நூறு கோடி நாளிருந்தூ
டாடி னாலும் என்பயன்
ஆறும் ஆறும் ஆறுமாய்
அகத்தி லோரெ ழுத்ததாய்ச்
சீரை ஓத வல்லிரேல்
சிவப தங்கள் சேரலாம்.

430. முந்த ஓரெ ழுத்துளே
முளைத்தெ ழுந்த நெஞ்சுடர்
அந்த ஓரெ ழுத்துளே
பிறந்து காயம் ஆனதும்
அந்த ஓரெ ழுத்துளே
அனேக மாகி நின்றதும்
அந்த ஓரெ ழுத்தையும்
அறிந்து ணர்ந்து கொள்ளுமே.

431. கூட்ட மிட்டு நீங்களும்
கூடி வேதம் ஓதுறீர்
ஏட்ட கத்துள் ஈசனும்
இருப்ப தென்னெ ழுத்துளே
நாட்ட மிட்டு நாடிடு
நாலு மூன்று தன்னுளே
ஆட்ட கத்துள் ஆடிடும்
அம்மை ஆணை உண்மையே.

---

429. அகத்துவம் ஒன்றே சிவபதம் சேர ஒரே வழி.

430. ஒரே எழுத்தான அகரத்திலே எல்லாம் அடங்கும் என்கிற அவ்வையின் குறள்விளக்கம் காண்க.

431. நாட்டத்தை உள்ளே செலுத்தினால் தன்னுளே அனைத்தும்.

432. காக்கை மூக்கை ஆமையார்
எடுத்து ரைத்த காரணம்
நாக்கை ஊன்றி உள்வளைத்து
ஞான நாடி ஊடுபோய்
ஏக்கை நோக்க அட்சரம்
இரண்டெ ழுத்தும் ஏத்திடில்
பார்த்த பார்த்த திக்கெலாம்
பரப்பி ரம்மம் ஆனதே.

433. கொள்ளொ ணாது குறிக்கொணாது
கோத றக்கு லைக்கொணாது
அள்ளொ ணாது அதுகொணாது
ஆதி மூல மானதை
தெள்ளொ ணாது தெளியொணாது
சிற்ப ரத்தின் உட்பயன்
விள்ளொ ணாத பொருளையானும்
விளம்பு மாற தெங்ஙனே.

434. ஓசை யுள்ள கல்லைநீர்
உடைத்தி ரண்டு செய்துமே
வாச லிற்ப தித்தகல்லை
மழுங்க வேமி திக்கிறீர்
பூச னைக்கு வைத்தகல்லிற்
பூவும் நீரும் சாத்துறீர்
ஈச னுக்கு கந்தகல்லும்
எந்தக் கல்லோ சொல்லுமே.

---

432. இந்தப் பயிற்சி ஆசானின் மேற்பார்வையில் கற்றுக்கொள்ள வேண்டிய, நாக்கை வளைத்துச் செய்யும் ஞானவினையாம்.

433. ஏற்கவும், எடுக்கவும், ஒண்ணாத பரிபூரணமூலம் அது. சொல்ல முடியாத, சொல்லுக்கு அடங்காத அந்தப் பொருளை எவ்வாறு சொல்லுவேன்.

434. படிக்கல்லும் கல்தான், சிலையும் கல்தான், இறைவனுக்கு உகந்த கல் எது என்று எண்ணுகிறீர்?

435. ஒட்டு வைத்துக் கட்டிவீர்
உபாய மான மந்திரம்
சுட்டுப் பட்ட போதிலும்
கருத்தன் அங்கு வாழுமோ
எட்டும் எட்டும் எட்டுளே
இயங்கு கின்ற வாயுவை
வட்ட மிட்ட அவ்விலே
வைத்து ணர்ந்து பாருமே.

436. இந்த ஊரில் இல்லையென்று
எங்கு நாடி ஓடுறீர்
அந்த ஊரில் ஈசனும்
அமர்ந்து வாழ்வ தெங்ஙனே
அந்த மான பொந்திலாரில்
மேவி நின்ற நாதனை
அந்த மான சீயிலவ்வில்
அறிந்து ணர்ந்து கொள்ளுமே.

437. புக்கி ருந்த தும்முளே
பூரி யிட்ட தோத்திரம்
தொக்கிச் சட்சு சிங்குவை
யாக்கி ராணன் சூழ்ந்திடில்
அக்கு மணியும் கொன்றைசூடி
அம்பலத்துள் ஆடுவார்
மிக்க சோதி அன்புடன்
விளம்பி டாது பின்னையே.

---

435. மந்திர ஸ்தாபிதம் என்ற நுட்பத்தைப் பாடுகிறார்.

436. ஊர்தோறும் தேடித் திரிகிற மெய்ப்பொருள் எந்த எழுத்து நிலையில் நிற்கிறது என்பதை விளக்கியவாறு.

437. தசநாடியின் நுட்பம் சொல்லியவாறு. இது குருநாதன் தொட்டு எழுப்பவேண்டிய ஆற்றலாகும்.

438. பின்னெ ழுந்த மாங்கிசத்தைப்
பேதை யர்கண் பற்றியே
பின்பு மாங்கி சத்தில்போக
பேத மாங்கை பண்ணினால்
துன்பு றும்வி னைகள்தாம்
சூழ்ந்தி ரும்பின் என்றலோ
அன்ப ராயி ருந்தபோர்கள்
ஆறு நீந்தல் போல்விரே.

439. விட்டி ருந்த தும்முளே
விதன மற்றி ருக்கிறீர்
கட்டி வைத்த வாசல்மூன்று
காட்சி யான வாசலொன்று
கட்டி வைத்த வாசலும்
கதவு நான்தி றந்துபோய்த்
திட்ட மான ஈசனைத்
தெளியு மாங்கி சத்துளே.

440. ஆகும் ஆகும் ஆகுமே
அனாதி யான அப்பொருள்
ஏகர் பாதம் நாடிநாடி
ஏத்தி நிகக வல்லிரேல்
பாகுசே மொழியு மைக்குப்
பாலன் ஆகி வாழலாம்
வாகு டன்நீர் வன்னியை
மருவி யேவ ருந்திடீர்.

---

438. மாங்கிசம் - மாமிசம். கடத்த வேண்டிய காம இச்சைக்கு அது இருப்பிடம் என்றவாறு.

439. பூட்டைத் திறக்க வேண்டும் - அந்த வாசல் அடைத்திருப்பதால்! இந்த மாமிசத்துக்குள்ளேயே அது இருக்கிறது என்பதைத் தெரியவேண்டும்.

440. அனாதியான அப்பொருள் வசமாகும். வன்னி - நெருப்பு. வாகு - திறமை, வல்லமை.

441. உண்மை யான தொன்றதொன்றை
உற்று நோக்கி உம்முளே
வண்மை யான வாசியுண்டு
வாழ்த்தி ஏத்த வல்லிரேல்
தண்மை பெற்றி ருக்கலாம்
தவமும் வந்து நேரிடும்
கன்ம தன்மம் ஆகுமீசர்
காட்சி தானும் காணுமே.

442. பால னாக வேணுமென்று
பத்தி முற்றும் என்பதே
நாலு பாதம் உண்டதில்
நனைந்தி ரண்ட டுத்ததால்
மூல நாடி தன்னில்வன்னி
மூடி அந்த நீருண
ஏலவர் குழலி யூடே
ஈசர் பாதம் எய்துமே.

443. எய்து நின்னை அன்பினால்
இறைஞ்சி ஏத்த வல்லிரேல்
எய்தும் உண்மை தன்னிலே
இறப்பி றப்ப கற்றிடும்
மையி லங்கு கண்ணிபங்கன்
வாசி வானில் ஏறிமுன்
செய்த வல்வி னைகளும்
சிதறும் அஃது திண்ணமே.

---

441. உண்மையான - மெய்ப்பொருளான. ஒன்றதொன்றை - ஒன்றேயான அந்த ஒன்றை.

442. நாலு பாதம் - சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம். ஈசர்பாதம் - சாயுச்சிய பதவியாகிய நாலாம்பாதம்.

443. மையிலங்கு கண்ணி பங்கன் - மைப்படிந்த கண்ணாளின் பங்கனான சிவன். வாசிவானில் ஏறல் - மூச்சாகிய குதிரையில் இவர்ந்து சிதாகாசப் பெருவெளி சேரல்.

444. திண்ண மென்று சேதிசொன்ன
செவ்வி யோர்கள் கேண்மினோ
அண்ண லன்பு ளன்புருகி
யறிந்து நோக்க லாயிடும்
மண்ணு மதிர விண்ணு
மதிர வாசியை நடத்திடில்
நண்ணி யெங்க ளீசனும்
நமது டல்லி ருப்பனே.

445. இருப்ப னெட்டெட் டெண்ணிலே
இருந்து வேற தாகுவன்
நெருப்பு வாயு நீருமண்ணும்
நீள்வி சும்பு மாகுவன்
கருப்பு குந்து காலமே
கலந்த சோதி நாதனைக்
குருப்பு னலில் மூழ்கினார்
குறித்து ணர்ந்து கொள்வரே.

446. கொள்ளு வார்கள் சிந்தையிற்
குறிப்பு ணர்ந்த ஞானிகள்
விள்ளு வார்கள் டக்குவத்தில்
வேண்டி வேண்டி யேத்தினால்
உள்ளு மாய்ப்பு றம்புமா
யுணர்வ தற்கு உணர்வுமாய்த்
தெள்ளி தாகி நின்ற
சோதி செம்மை யைத்தெளிந்திடே.

---

444. இறைவன் நம்முடலில் கோளில் கொள்வது எப்படி? வாசியாகிய காற்றை, பரியை நடத்தினால்.

445. குருப்புனலில் மூழ்குதல் - ஒளிவெள்ளத்திலே நீராடுதல்

446. உள்ளுமாய் - அகத்துளே மறைந்து. புறம்புமாய் - புறத்தே வெளிப்பட்டு.

447. தெளிந்தநற் சரியை தன்னில்
சென்று சாலோ கம்பெறும்
தெளிந்தநற் கிரியை பூசை
சேர லாஞ்சா மீபமே
தெளிந்த நல்லி யோகந்தன்னில்
சேர லாகுஞ் சாரூபம்
தெளிந்த ஞானம் நான்கிலும்
சேர லாஞ்சா யுச்சயமே.

448. சேரு வார்கள் ஞான
மென்று செப்புவார் தெளிவுளோர்
சேரு வார்கள் நாலு
பாதச் செம்மையென்ற தில்லையே
சேரு வார்கள் சிவகதி
திருவ ருளைப் பெற்றபேர்
சேரு மாறு கண்டு
நாலுஞ் செய்தொழில் திடப்படே.

449. திறம லிக்கு நாலு
பாதஞ் செம்மையுந் திறப்படார்
அறிவி லிகள் தேசநாடி
அவத்தி லேய லைவதே
குறிய தனைக்காட் டியுட்கு
றித்து நோக்க வல்லிரேல்
வெறிகமழ் சடையு டையோன்
மெய்ப்ப தம்ம டைவிரே.

---

447. நான்கு வழிகளில் வழிபடுவோர் அடையும் பதங்கள் நான்கையும் கூறியவாறு.

448. இந்த நான்கு பதங்களில் நன்னெறி என்னும் சன்மார்க்கச் சிறப்பு கூறியவாறு.

449. நாடும் தேசமும் அலைவார்கள் அறிவிலிகள். அகப்பார்வை கைவரப் பெற்றவர்கள் மெய்ப்பத மாகிய சாயுச்சிய பதம் அடைவார்கள்.

450. அடைவு ளோர்கள் முத்தியை
யறிந்தி டாத மூடரே
படையு டைய தத்துவமும்
பாத கங்க ளல்லவோ
மடைதி றக்க வாரியின்
மடையி லேறு மாறுபோல்
உடலில் மூல நாடியை
யுயர வேற்றி யூன்றிடே.

451. ஊன்றி யேற்ற மண்டல
முருவி மூன்று தாள்திறந்
தான்று தந்தி யேறிடில்
லமுதம் வந்தி றங்கிடும்
நான்றி தென்று தொண்ட
ருக்கு நாதனும் வெளிப்படும்
ஆன்றி யுமுயிர் பரம்பொரு
ருந்தி வாழ்வ தாகவே.

452. ஆக மூல நாடியி
லனலெ ழுப்பி யன்புடன்
மோக மான மாயையில்
முயல்வ தும்மொ ழிந்திடில்
தாக மேரு நாடியேக
னேக மான வாறுபோல்
ஏகர் பாத மன்புட
னிறைஞ்சி னார றிவரே.

---

450. மடையைத் திறக்க வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்? மடையின்மீது ஏறவேண்டும். அதை ஏற்ற வேண்டும். அவ்வாறே உடலின் மூலநாடியைப் பற்றி அதை மேலேற்ற வேண்டும்.

451. மும்மண்டலமும் ஏறிச்சென்று அமுதம் உண்ணுகிற அனுபவத்தைக் கூறியவாறு.

452. மூலக்கனலை எழுப்பினால் ஏகனாகிய இறைவனுடைய பாதம் சேரலாம்.

453. அறிந்து நோக்கி யும்முளே
யயன்தி யான மும்முளே
பிறந்தி றாமல் ஏகர்பாதம்
பெற்றி ருப்ப துண்மையே
அறிந்து மீள வைத்திடா
வகையு மரண மேத்தினார்
செறிந்து மேலை வாசலைத்
திறந்து பாரு மும்முளே.

454. சேதி யாக வும்முளே
தெளிந்து நோக்க வல்லிரேல்
சோதி வந்து தித்திடுந்
துரியா தீத முற்றிடும்
ஆதி சக்க ரத்தினி
லமர்ந்து தீர்த்த மாடுவன்
பேதி யாது கண்டுகொள்
பிராண னைத்தி ருத்தியே.

455. திருவு மாகிச் சிவனுமாகித்
தெளிந்து ளோர்கள் சிந்தையில்
மருவி லேயெ ழுந்துவீசும்
வாச னைய தாகுவன்
கருவி லேவி ழுந்தெழுந்த
கன்ம வாத னைபெலாம்
பருதி முன்னி ருளதாகிப்
பறியு மங்குப் பாருமே.

---

453. தியானம் நம்முளே என்று ஆகும்போது பிறப்பிறப்பு அறுந்துவிடும். அதுவே மேலைவாசலைத் திறந்து பார்ப்பதன் பயன்.

454. அகப்பார்வையினால் உண்டாகும் அரிய நற்பயன்களைக் கூறியவாறு.

455. மருக்கொழுந்தில் மணக்கிற வாசம்போல் "சீவனுக்குள்ளே சிவமணம்" கமழும். வினைகள் அனைத்தும் வெயிலின் பனிபோலப் பறந்துவிடும்.

456. பாரு மெந்தை யீசன்
வைத்த பண்பிலே யிருந்துநீர்
சேரு மேந டுவறிந்து
செம்மை யான அப்பொருள்
வேரை யும்மு டியையும்
விரைந்து தேடி மாலயன்
பாரி டந்து விண்ணிலே
பறந்துங் கண்ட தில்லையே.

457. கண்டிலா தயன்மா லென்று
காட்சி யாகச் சொல்கிறீர்
மண்டி னால ரனுவுடன்
மேவ லாயி ருக்குமோ?
தொண்டு பட்டு மன்புடன்
தொழுது நோக்க வல்லிரேல்
பண்டு முப்பு ரம்மெரித்த
பத்தி வந்து முற்றுமே.

458. முற்று மேய வனொழிந்து
முன்பி னொன்று காண்கிலே
பற்றி லாத தொன்றுதன்னைப்
பற்றி நிற்க வல்லது
கற்றி லாத வீசர்பாதம்
காண லாயி ருக்குமோ
பெற்ற பேரை யன்புடன்
பிரிய மாகக் கேளுமே.

---

456. அடிமுடிதேடி மால்அயன் காணமுடியாத அப்பொருள், உள்ளுக்குள்ளே பார்த்திடலாம்.

457. அயனும் மாலும் காணமுடியாத பொருள் என்கிறீர் அண்டி அணுகித் தொடர்ந்தால் அது கைகூடும். எங்கே? தொழுது நோக்கவேண்டும் உள்ளே!

458. பற்றுக பற்றற்ற பொருளை. அதைப் பற்றி நிற்க? பாதம் காணலாம். அப்பதம் பெற்றவர்களை அன்புடன் கேட்டுப் பார்த்தால் இந்த உண்மை தெரியும்!

459. கேட்டு நின்ற வுன்னிலை
கிடைத்த காலந் தன்னுளே
வாட்ட முள்ள தத்துவ
மயக்க மும்ம கற்றிடும்
வீட்டி லேவெ ளியதாகும்
விளங்க வந்து நேரிடும்
கூட்டி வன்னி மாருதங்
குயத்தை விட்டெ ழுப்புமே.

460. எழுப்பி மூல நாடியை
யிதப்ப டுத்த லாகுமே
மழுப்பி லாத சபையைநீர்
வலித்து வாங்க வல்லிரேல்
சுழுத்தி யுங்க டந்துபோய்ச்
சொப்ப னத்தி லப்புறம்
அழுத்தி யோரெ ழுத்துளே
யமைப்ப துண்மை யையனே.

461. அல்ல தில்லை என்றுதான்
ஆவி யும்பொ ருளுடல்
நல்ல வீசர் தாளிணைக்கும்
நாத னுக்கு மீந்திலை
எல்லு மென்னுன் நேசமும்
வாசி யைவ ருந்தினால்
தொல்லை யாம்வி னைவிடென்று
தூர தூர மானதே.

---

459. வீட்டிலே - இந்த உடம்புளே. வன்னி - மூலக்கனல். மாருதம் - வாசிக்காற்று. குயம் - மூலாதாரநிலை.

460. மூலக்கனலை எழுப்பி உச்சிக்குக் கொண்டு போகும் நெறியைச் சொல்லுகிறார்.

461. வாசியை வருந்தல் - மூச்சைக் கட்டுப்படுத்திப் பயிற்சி செய்தல்.

462. ஆன தேப தியதுயி
ரற்ற தேப சுபாசம்
போன தேம லங்களும்
புலன்க ளும்வி னைகளும்
கான கத்தி லிட்டதீயிற்
காற்று வந்த டுத்தலோ
ஊன கத்தில் வாயுவன்னி
யொன்றி யேயு லாவுமே.

463. உலாவு முவ்வு மவ்வுமோ
யுதித்த டர்ந்து நின்றதும்
உலாவி யைம்பு லன்களு
மொருத லத்தி ருந்திடும்
நிலாவு மங்கு நேசமாகி
நின்ற மிர்த முண்டுதாங்
குலாவு மெங்க ளீசனைக்
குறித்து ணர்ந்து கும்பிடே.

464. கும்பி டெங்க ருத்துளே
குகனை யைங்க ரனையும்
நம்பி யேயி டப்வலம்
நமக்க ளித்து நாடிட
எம்பி ரானு மம்மையு
மிருத்தி யேந டுவனைத்
தும்பி போல வாசகந்
தொடர்ந்து சோம்பி நீங்குமே.

---

462. பசுபாசம் அற்றதே - பசுவைப் பிணைத்திருந்த பாசம் நீங்கியது. ஆனதே பதியது உயிர் - உயிர் பதியது ஆனது; பதியை அடைந்தது. கானகத்தில் தீயும் காற்றும் கலந்தபோது எல்லாம் நீறாவதுபோல! உடம்பினுள் தீயும் காற்றும் உலாவுவதை உணரவேண்டும் என்றபடி.

463. பிரணவ நிலை தெரிந்து தெரிந்து அமுதம் உண்ணுவதைக் கூறியவாறு.

464. தேவதைகளும் ஆதார நிலைகளும் தெரிந்து நடுநாடியை இயக்கும்வழி கூறியவாறு.

465. நீங்கு மைம்பு லன்களும்
நிறைந்த வல்வி னைகளும்
ஆங்கா ரம்மா மாசையு
மருந்த டர்ந்த பாவமும்
ஓங்கா ரத்தி னுன்னிருந்த
ஒன்ப தொழிந்த தொன்றிலத்
தூங்க வீசர் சொற்படி
துணிந்தி ருக்க கத்தமே.

466. நினைப்ப தொன்று கண்டிலே
னீய லாது வேறிலை
நினைப்பு மாய்ம றப்புமாய்
நின்ற மாய்கை மாய்கையே
அனைத்து மாய கண்டமா
யனாதி முன்ன னாதியாய்
நினக்குன் நானெ னக்குள்நீ
நினைக்கு மாற தெங்ஙனே?

467. கருக்க லந்த காலமே
கண்டு நின்ற காரணம்
உருக்க லந்த போதலோ
வுன்னை நாறு ணர்ந்தது
விரிக்க லென்ம றைக்கிலென்
வினைக்கி சைந்த போதெலாம்
உருக்க லந்து நின்றபோது
நீயும் நானு மொன்றலோ?

---

465. ஐம்புல வாதனை நீங்கி வினைகள் அகன்று பிரணவ ஒடுக்கம் கைகூடுகிற நிலை கூறியவாறு.

466. இந்தப் பாடல் பல மாறுதல்களின் பல வடிவங்களிலே இந்நூலில் வந்துள்ளது. எல்லா வடிவ்களுமே எழிலார்ந்த கவிகளாக அமைந்துள்ளன.

467. பரம்பொருட் பிணைப்பு என்ற ஐக்கிய நிலையை உருக்கமாகப் பாடியது.

468. ஞான நூல்கள் தேடியே
நவின்ற ஞான யோகிகாள்
ஞான மான சோதியை
நாடி யுள்ள றிகிலீர்
ஞான மாகி நின்றதோர்
நாத னைய றிந்தபின்
ஞான மல்ல தில்லைவேறு
நாமு ரைத்த துண்மையே.

469. கருத்த ரிப்ப தற்குமுன்
காயம் நின்ற தெவ்விடம்
உருத்த ரிப்ப தற்குமுன்
உயிர்ப்பு நின்ற தெவ்விடம்
மருப்பொ திந்த சிந்தையில்
மயக்கம் நின்ற தெவ்விடம்
விருப்பு ணர்ந்த ஞானிகாள்
விரித்து ரைக்க வேணுமே.

470. கருவி னிற்க ருவதா
யெடுத்த வேழு தோற்றமும்
இருவி னைப்ப யத்தினால்
பிறந்தி றந்து நின்றிடும்
மறுவி னைப்பி றவிமூன்று
கால மும்வ குத்தபின்
உறுவி னைப்ப யனிதென்று
ணர்ந்த ஞானி சொல்லுமே.

---

468. அழகான பாடல். அதை அறிந்தபின் அது அல்லது வேறு எதுவுமில்லை.

469. இந்தக் கருத்து ஒரு சில மாற்றங்களுடன் பல வடிவங்களில் வந்துள்ளது. உயிரும் உடம்பும் ஒன்று கலந்து பிறப்பதற்கு முன் நிலை எவ்வாறு இருந்தது?

470. எழுவகைத் தோற்றம் : 1) தேவர், 2) மக்கள், 3) விலங்கு, 4) பறவை, 5) ஊர்வன, 6) நீர் வாழ்வன, 7) தாவரம்.

471. வாயி லெச்சில் போகவே
நீர்கு டித்துத் துப்புவீர்
வாயி ருக்க எச்சில்போன
வாயி லென்ப தெவ்விடம்
வாயி லெச்சி லல்லவோ
நீரு ரைத்த மந்திரம்
நாயி னைய றிந்தபோது
நாடு மெச்சி லேதுகொல்?

472. தொடக்க தென்று நீர்விழத்
தொடங்கு கின்ற வூமர்காள்
தொடக்கி ருந்த தெவ்விடம்
சுத்தி யான தெவ்விடம்
தொடக்கி ருந்த வாறறிந்து
சுத்தி பண்ண வல்லிரேல்
தொடக்கி லாத சோதியைத்
தொடர்ந்து காண லாகுமே.

473. மேதி யோடும் ஆவுமே
விரும்பி யேபு ணர்ந்திடில்
சாதி பேத மாயுருத்
தரிக்கு மாறு போலவே
வேத மோது வானுடன்
புலைச்சி சென்று மேவிடில்
பே தமாய்ப் பிறக்கி லாத
வாற தென்ன பேசுமே.

---

471. எச்சில் ஊறுகிற இடம் நமக்குள் இருக்கிறது. பின், எச்சில் போனது எப்படி? பேசும் மந்திரமும் எச்சில்தானே?

472. தொடக்கு - தீட்டு. சுத்தி பண்ணுதல் - தீட்டைக் களைந்து தூய்மை செய்தல். தொடக்கிலாத சோதி - மாசற்ற ஒளிப்பிழம்பு.

473. மேதி - எருமை. ஆ - பசு. இதே கருத்து கபிலர் அகவலிலும் வந்துள்ளமை காண்க.

474. வகைக்கு லங்கள் பேசியே
 வழக்கு ரைக்க மாந்தர்காள்
தொகைக்கு லங்க ளானநேர்மை
 நாடி யேயு ணர்ந்தபின்
மிகைத்த சுக்ல மன்றியே
 வேறு மொன்று கண்டிவீர்
.......... ........... ...............
 ........ .......... ............

475. ஓதும் நாலு வேதமு
 முரைத்த சாத்தி ரங்களும்
பூத தத்து வங்களும்
 பொருந்து மாக மங்களும்
சாதி பேத வுண்மையுந்
 தயங்கு கின்ற நூல்களும்
பேத பேத மாகியே
 பிறந்து முன்றி ருந்தவே.

476. உறங்கி லென்வி ழிக்கிலென்
 சிலதி சைக ளெட்டிலென்
திறம்பி லென்தி கைக்கிலென்
 சிலதி சைகள் எட்டிலென்
புறம்பு முள்ளு மெங்கணும்
 பொதிந்தி ருந்த தேகமாய்
நிறைந்தி ருந்த ஞானிகள்
 நினைப்ப தேது மில்லையே.

---

474. இந்தப் பாடலின் நாலாவது அடி பதிப்புகளிலும் சரி. கையேடுகளிலும் சரி காணக் கிடைத்திலது.

475. வேத சாத்திர ஆகம நூல்கள் அனைத்தும் வேறு பாடுகளைக் கூறி வேதனையில் உழல்கின்றன என்று ஞானி வருந்துகிறார்.

476. மெய்யான ஞானிகள் திடமாக நிற்பவர்கள். எதையும் அவர்கள் வகைவைப்பதில்லை.

477. அங்க லிங்கம் பூண்டுநீ
ரகண்ட பூசை செய்கிறீர்
அங்க லிங்கம் பூண்டுநீ
ரமர்ந்தி ருந்த மார்பரே
எங்கு மோடி யெங்குமெங்கும்
ஈட ழிந்து மாய்கிறீர்
செங்கல் செம்பு கல்லெலாஞ்
சிறந்து பார்க்கு மூடரே!

478. தீட்டந் தீட்ட மென்றுநீரில்
தினமு ழுகு மூடரே
தீட்ட மாகி யல்லவோ
திரண்டு காய மானதும்
பூட்ட காய மும்முளே
புகழு கின்ற பேயரே
தீட்ட வந்து கொண்டலோ
தெளிந்த தேசி வாயமே.

479. மூல நாடி தம்முளே
முளைத்தெ ழுந்த வாயுவை
நாளும் நாளும் உம்முளே
நடுவி ருத்த வல்லிரேல்
பால னாகு மும்முடல்
பறந்து போக லாய்விடும்
ஆல முண்ட கண்டர்பாத
மம்மை பாத முண்மையே.

---

477. வடிவ ஆராதனை, வடிவ வணக்கம், வடிவ மேவுதல் ஆகியன மகானுடைய நோக்கிலே மூட நிலைதானே?

478. தீட்டு என்று சொல்லிப் புறத்தே கழுவுவது என்செயும்? தூய்மை என்பது எது?

479. 'உருத்தரித்த நாடி' என்ற பாடலின் கருத்தே இதுவும்.

480. உந்தி மேலே நாலுமூன்றும்
ஓம்ந மசி வாயமாம்.
சந்தி சந்தி யென்றுநீர்
சாற்று கின்ற பேயரே
முந்த வந்து நம்முளே
மூல நாடி யூடுபோய்
அந்த சந்தி யற்றிடம்
அறிந்து ணர்ந்து பாருமே.

481. வன்னி மூன்று தீயினில்
வாழு மெங்கள் நாதனும்
கன்னி யான துள்ளிருக்கக்
காதல் கொண்ட தெவ்விடம்
சென்னி நாலு கையிரண்டு
சிந்தை யிலிரண் டிலொன்றும்
உன்னி யுன்னி உம்முளே
யுய்த்து ணர்ந்து பாருமே.

482. தொண்டு செய்து நீங்களுஞ்
சூழ வோடி மாள்கிறீர்
உண்டு மூன்று நும்முளே
யுற்று ணர்ந்து பார்க்கிலீர்
வண்டு லாவு சோலைசூழ்
வாழு மெங்கள் நாதனும்
பண்டு போல நும்முளே
பகுத்தி ருப்ப னீசனே.

---

480. உந்தி - ஆதார நிலை.
அந்தி சந்தி அற்றிடம் - கால தத்துவம் கடந்த சூக்குமநிலை.

481. சூரிய சந்திரரோடு அங்கியின் நிலை கூறியவாறு.

482. உற்றுணர்ந்து உள்ளே பார்த்தால் நாதன் அன்றுபோல என்றும் இருப்பது புலனாகும்.

483. அரிய தோர்ந மச்சிவாய
மாதி யந்த மானதும்
ஆறி ரண்டு நூறுகோடி
யளவி டாத மந்திரம்
தெரிய நாலு வேதமாறு
சாத்தி ரபு ராணமும்
தேடு மாறு மயனுஞ்சர்வ
தேவ தேவ தேவனே.

484. பரமு னக்கெ னக்குவேறு
பயமு மில்லை யாகையால்
கரமு னக்கு நித்தமுங்
கவித்தி டக்க டமையாம்
சிரமு ருக்கி யமுதளித்த
சீரு லாவு நாதனே
உரமெ னக்கு நீளித்த
உண்மை உண்மை யுண்மையே.

485. மூல வட்ட மீதிலே
முளைத்த வைந்தெ ழுத்திலே
கோல வட்ட மூன்றுமாய்க்
குளிர்ந்த லர்ந்து நின்றதீ
ஞால வட்ட மன்றுளோ
நவின்ற ஞானி மேலதாய்
ஏல வட்ட மாகியே
யிருந்த தேசி வாயமே.

---

483. இதே கருத்து ஒரு சில சொல் மாற்றங்களுடன் வேறு பாடல்களிலும் வந்துள்ளமை காண்க.

484. பரம் உனக்கு - எல்லாப் பொறுப்பும் உன்னடையது. என் கடமை உனக்குக் கரம்குவிப்பது. உரம் - தெம்பு.

485. இதே பாடல் சில மாறுதல்களுடன் வந்துள்ளமை காண்க.

486. என்ன கத்தி லென்னைநா
னெங்கு மோடி நாடினேன்
என்ன கத்தி லென்னையன்றி
ஏது மொன்று கண்டிலேன்
மின்னெ ழும்பி விண்ணகத்தின்
மின்னொ டுங்கு மாறுபோல்
என்ன கத்து ளீசனோடி
யானு மல்ல தில்லையே.

487. நாலு வேத மோதுகின்ற
ஞான மொன்ற றிவிரோ?
நாலு சாம மாகிய
நவின்ற ஞான போதுமாய்
ஆல முண்ட கண்டனு
மயனு மந்த மாலுமாய்ச்
சால வுன்னி நெஞ்சலே
தரித்த தேசி வாயமே.

488. முச்ச துரமூ லமாகி
மூன்ற தான பேதமாய்
அச்ச துரமும் முளேய
டங்கி வாசி யோகமாய்
மெய்ச்ச துரமெய் யுளேவி
ளங்கு ஞான தீபமாய்
உச்ச ரித்த மந்திரம்
ஓம்ந மச்சி வாயமே.

---

486. இதே பாடல் பிறிதொரு வடிவத்திலும் வந்துள்ளது. எனினும் எல்லா வடிவங்களும் எழிலார்ந்தன.

487. ஓதுதல் என்பது நாவின் செயல் என்பது சாதாரண வழக்கு. ஆனால் அது நெஞ்சின் துடிப்பு என்பது ஞானம்.

488. காற்றைப் பிடிக்கும் உபாயமும், ஒளியைக் காணும் உத்தியுமே. சித்தர் ஞானச் செவ்வழி. அதுவே மெய்யான நம சிவாயம்.

489. மூன்று மண்ட லத்துளே
ஓர்முச் சதுர மாயமாய்
நாலு வாச லென்விரலி
னடுவ தித்தி மந்திரங்
கோலி யொன்று மைந்துமாய்க்
குளிர்ந்த லர்ந்து நின்றநீ
மேலு மேலு நாடினேன்
விளைந்த தேசி வாயமே.

490. இடங்கள் பண்ணி சுத்திசெய்தே
யிட்ட பீட மீதிலே
அடங்க நீரும் பூசல்செய்
தருந்த லங்கள் பண்ணுவீர்
ஒடுங்கி நின்ற நாதனா
ருதிக்கு ஞான மெவ்விடம்
அடங்கு கின்ற தெவ்விடம்
அறிந்து பூசை செய்யுமே.

491. புத்த கங்க ளைச்சுமந்து
பொய்க ளைப்பி தற்றுவீர்
செத்திடம் பி றந்திடம்ம
தெங்க னென்ற றிகிலீர்
அத்த னைய சிந்தனை
யறிந்து நோக்க வல்லிரேல்
உத்த மத்து ளாயசோதி
யுணரும் போக மாகுமே.

---

489. முதல் இரண்டு அடிகள் மீட்டும் வேறு பாடல்களில் மடங்கி வந்துள்ளன.

490. அது பூசையா அல்லது பூசலா? ஞானம் அறிந்து பூசனை செய்வது எங்ஙனம்? சிந்தனையைத் தூண்டுகிற பாடல்.

491. வெறும் படிப்பும் பேச்சும் பயனற்றவை. சிந்தனை அறிந்து நோக்குவதே ஞானமும் துய்ப்பும் ஆம்.

492. அருளிலே பிறந்து தித்து
மாயை ரூப மாகியே
அருளிலே தயங்கு கின்ற
ஏழை மாந்தர் கேண்மினோ
பொருளிலோ தவம்புனைந்து
பொருந்தி நோக்க வல்லிரேல்
மருள தேது வன்னியின்
மறைந்த தேசி வாயமே.

493. கருக்க லந்த காலமே
கண்டி ருந்த காரணா
உருக்க லந்த போதலோ
வுன்னை யான றிந்தனன்
திருக்க லந்த சோதியைத்
தெளிந்தி யான றிந்தபின்
இருக்கி லேனி றக்கிலே
னிரண்டு மற்றி ருந்ததே.

494. தன்ம சிந்தை யாளவுந்
தலம றியாத் தன்மையாய்க்
கன்ம சிந்தை வெயிலுமுன்று
கருத்த ழிந்த கசடரே
சென்ம சென்மந் தேடியுந்
தெளியொ ணாத செல்வனை
நன்மை யாக வும்முளே
நயந்து காண வேண்டுமே.

---

492. பொருள் - சித்தர்களுடைய குழூஉக் குறியிலே மனம் ஒடுங்குகிற இடம். மருள் - அஞ்ஞானம். வன்னி - நெருப்பு.

493. அருமையான பாடல். திருக்கலந்த சோதி - மங்களமும் இன்பமும் நிரம்பிய ஒளிப்பிழம்பு. இறக்கிலேன் - மடியவில்லை. இருக்கிலேன் - புறஉலகப் பிணைப்புடன் வாழவில்லை.

494. தலம் - மையமான இடம். உட்பார்வையினால் காண்பதன்றி வேறு எவ்வகையிலும், எத்தனை பிறவியெடுத்தாலும் காண இயலாது அவனை!

495. கள்ள வுள்ள மேயிருக்கக்
கடந்த ஞான மோதுவீர்
கள்ள முள்ள ழுந்தபோது
கதியி தன்றிக் காண்கிலீர்
உள்ள மேவி ளக்குநித்தம்
ஒளியை யணுக வல்லிரேல்
தெள்ளு ஞான மும்முளே
சிறந்த தேசி வாயமே.

496. காண வேண்டு மென்றுநீர்
கடல்ம லைக ளேறுவீர்
ஆண வம்மஃ தல்லவோ
அறிவி லாத மாந்தரே
வேணு மென்நல் லீசர்பாத
மெய்யு ளேத ரிப்பிரேல்
தாணு வாக நின்றசிவன்
தான்சி வம தாகுமே.

497. அணுவி னோட கண்டமா
யளவி டாத சோதியைக்
குணம தாக வும்முளே
குறித்து நோக்கின் முத்தியாம்
மிணமி ணென்று விரலையெண்ணி
மீளொ ணாம யக்கமாய்த்
துணிவி லாத படியினாற்
றொடர்ந்து பூசை செய்குவீர்.

---

495. உள்ளத்தில் கள்ளம் இருக்கும்போது மெய்யைக் காண்பது எப்படி?

496. அவனைக் காணவேண்டும் என்று கடலும் மலையும் செல்கிறீர். அஃது ஆணவம். மெய்யினுள் புகுந்து பாரும் என்றவாறு.

497. உள்முகப் பார்வை அறியீர். மந்திரங்களை முணுமுணுப்பதால் என்ன பயன் என்றவாறு.

498. எச்சி லெச்சி லென்றுநீ
ரிடைந்தி ருக்கு மேழைகாள்
துச்சி லெச்சி வல்லவோ
தூய காய மானதும்
வைச்ச லெச்சில் தேனலோ
வண்டி னெச்சில் பூவலோ
கைச்சு தாவில் வைத்துடன்
கறந்த பாலு மெச்சிலே.

499. தீர்த்த லிங்க மூர்த்தியென்று
தேடி யோடுந் தீதரே
தீர்த்த லிங்க முள்ளிநின்ற
சீல னைத்தெ ளியுமே
தீர்த்த லிங்க மும்முளே
தெளிந்து காண வல்லிரேல்
தீர்த்த லிங்கந் தானதாய்ச்
சிறந்த தேசி வாயமே.

500. ஆடு கொண்டு கூடுசெய்
தமர்ந்தி ருக்கு மாறுபோல்
தேடு கின்ற செம்பினைத்
திடப்ப டப்ப ரப்பியே
நாடு கின்ற தம்பி
ரானு நம்முளே யிருக்கவே
போடு தர்ப்ப பூசையென்னும்
பூசை யென்ன பூசையே.

---

497. இந்த உடம்புக்கு ஆதாரம் எச்சில். தேன் என்ன? அதுவும் எச்சில். பூ பரிசுத்தமானதா? அதுவும் வண்டின் எச்சில். கறந்த பால் மட்டும் எப்படி?

499. தீர்த்தமும் லிங்கமும் உடம்புக்குள்ளே என்ற இதே கருத்து முன்பாடல்களிலும் வந்துள்ளமை காண்க. திருமூலர் மந்திரத்திலும் ஒப்பு நோக்குக.

500. பூசைக்குரிய தம்பிரான் நமக்குள்ளே உட்காரந்திருக்க யாரைத் தேடி எவருக்கு இந்தப் பூசனைகள்?

501. என்னை யற்ப நேரமும்
மறக்கி லாத நாதனே
ஏக னேஇ றைவனே
இராச ராச ராசனே
உன்னை யற்ப நேரமு
மொழிந்தி ருக்க லாகுமே
உனது நாம மெனதுநாவில்
உதவி செய்க ஈசனே.

502. எல்லை யற்று நின்ற
சோதி யேக மாயெரிக்கவே
வல்ல பூர ணப்ரகாச
யோக யோக மாகியே
நல்ல இன்ப மோனசா
கரத்தி லேய ழுத்தியே
நாடொ ணாத வமிர்தமுண்டு
நான ழிந்து நின்றநாள்.

503. ஆன வாற தாயிடும்
அகண்ட மான சோதியை
ஊனைக் கட்டி யும்முளே
யுகந்து காண வல்லிரேல்
ஊன காய மாளலா
முலக பார மாளலாம்
வான நாடு மாளலாம்
வண்ண நாட ராணையே.

---

501. பக்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பாடியது; அருமை மிகுந்த பாடல்.

502. அகச்சோதி எங்கும் பரந்து கிடக்கிறது - யோக நிலையில்! அந்த இன்ப சாகரமாகிய ஒளிக்கடலில் அழுந்தி அமுதம் உண்கிறார்கள் ஞானிகள்.

503. அழகான பாடல். ஊனுக்குள்ளே புகுந்து சோதியைக் கண்டுவிட்டால் இந்த உடம்பை ஆளலாம். உலகை ஆளலாம். வான்பதவியே கிட்டும்.

504. நித்த லும்ம ணிதுலக்கி
நீரு மூலை புக்கிருந்து
கத்தி யேக தறியே
கண்கள் மூடி யென்பயன்
எத்த னைபே ரெண்ணினு
மெட்டி ரண்டும் பத்தலோ
அத்த னுக்கி தேற்குமோ
அறிவி லாத மாந்தரே.

505. எட்டி ரண்டும் கூடியேயி
லிங்க மான தேவனை
மட்ட தாக வும்முளே
மதித்து நோக்க வல்லிரேல்
கட்ட மான பிறவியென்
கருங்க டல்க டக்கலாம்
இட்ட மான உளியினோடு
இசைந்தி ருப்பீர் காண்மினே.

506. உண்மை யான மந்திரம்
ஒளியி லேயிருந்திடும்
தன்மை யான மந்திரஞ்
சமைந்த ரூப மாகியே
வெண்மை யான மந்திரம்
விளைந்து நீற தானதே
உண்மை யான மந்திரம்
தொன்று மேசி வாயமே.

---

504. வகைதெரியாது வழிபடுவதனால் என்ன பயன்? எத்தனைபேர் எண்ணினாலும் எட்டும் இரண்டும் பத்துதானே? அதிகம் பேர் வழி தெரியாதிருப்பதால் அறியாமை என்பது ஏற்புடையதாகி விடுமா?

505. எட்டும் இரண்டும் பற்றி ஏற்கனவே நீண்ட விளக்கம் தரப்பட்டுள்ளது. அகப்பார்வையை மீண்டும் பாடுகிறார்.

506. மெய்யான மந்திரம் அகஒளியே என்பதைப் பாடுகிறார்.

501. என்னை யற்ப நேரமும்
மறக்கி லாத நாதனே
ஏக னேஇ றைவனே
இராச ராச ராசனே
உன்னை யற்ப நேரமு
மொழிந்தி ருக்க லாகுமே
உனது நாம மெனதுநாவில்
உதவி செய்க ஈசனே.

502. எல்லை யற்று நின்ற
சோதி யேக மாயெரிக்கவே
வல்ல பூர ணப்ரகாச
யோக யோக மாகியே
நல்ல இன்ப மோனசா
கரத்தி லேய ழுத்தியே
நாடொ ணாத வமிர்தமுண்டு
நான ழிந்து நின்றநாள்.

503. ஆன வாற தாயிடும்
அகண்ட மான சோதியை
ஊனைக் கட்டி யும்முளே
யுகந்து காண வல்லிரேல்
ஊன காய மாளலா
முலக பார மாளலாம்
வான நாடு மாளலாம்
வண்ண நாட ராணையே.

---

501. பக்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பாடியது; அருமை மிகுந்த பாடல்.

502. அகச்சோதி எங்கும் பரந்து கிடக்கிறது - யோக நிலையில்! அந்த இன்ப சாகரமாகிய ஒளிக்கடலில் அழுந்தி அமுதம் உண்கிறார்கள் ஞானிகள்.

503. அழகான பாடல். ஊனுக்குள்ளே புகுந்து சோதியைக் கண்டுவிட்டால் இந்த உடம்பை ஆளலாம். உலகை ஆளலாம். வான்பதவியே கிட்டும்.

504. நித்த லும்ம ணிதுலக்கி
நீரு மூலை புக்கிருந்து
கத்தி யேக தறியே
கண்கள் மூடி யென்பயன்
எத்த னைபே ரெண்ணினு
மெட்டி ரண்டும் பத்தலோ
அத்த னுக்கி தேற்குமோ
அறிவி லாத மாந்தரே.

505. எட்டி ரண்டும் கூடியேயி
லிங்க மான தேவனை
மட்ட தாக வும்முளே
மதித்து நோக்க வல்லிரேல்
கட்ட மான பிறவியென்
கருங்க டல்க டக்கலாம்
இட்ட மான உளியினோடு
இசைந்தி ருப்பீர் காண்மினே.

506. உண்மை யான மந்திரம்
ஒளியி லேயிருந்திடும்
தன்மை யான மந்திரஞ்
சமைந்த ரூப மாகியே
வெண்மை யான மந்திரம்
விளைந்து நீற தானதே
உண்மை யான மந்திரம்
தொன்று மேசி வாயமே.

---

504. வகைதெரியாது வழிபடுவதனால் என்ன பயன்? எத்தனைபேர் எண்ணினாலும் எட்டும் இரண்டும் பத்துதானே? அதிகம் பேர் வழி தெரியாதிருப்பதால் அறியாமை என்பது ஏற்புடையதாகி விடுமா?

505. எட்டும் இரண்டும் பற்றி ஏற்கனவே நீண்ட விளக்கம் தரப்பட்டுள்ளது. அகப்பார்வையை மீண்டும் பாடுகிறார்.

506. மெய்யான மந்திரம் அகஒளியே என்பதைப் பாடுகிறார்.

507. பன்னி ரண்டு நாளிருத்திப்
பஞ்ச வன்னம் ஒத்திட
மின்னி அவ்வெ ளிக்குணின்று
வேரெ டுத்த மர்ந்தது
சென்னி யான தலத்திலே
சீவ னின்றி யங்கிடும்
பன்னி யுன்னி ஆய்ந்தவர்
பரப்பி ரம்மம் ஆவரே.

508. தச்சி வாயி லுச்சிமேல்
ஆயி ரந்த லங்களாய்
முச்ச டருமூ விரண்டும்
மூண்டெ ழுந்த தீச்சுடர்
வச்சி ரம்ம தாகியே
வளர்ந்து நின்ற தெவ்விடம்
இச்சு டரும்இந் திரியமும்
ஏக மான தெங்ஙனே.

509. முத்தி சித்தி தொந்தமாய்
முயங்கு கின்ற மூர்த்தியை
மற்று தித்த ஐம்புலன்கள்
ஆகு மத்தி மப்புலன்
அத்தன் நித்த காளகண்டர்
அன்பி னால னுதினம்
உச்ச ரித்து ளத்திலே
அறிந்து ணர்ந்து கொள்ளுமே.

---

507. இதுவும் உச்சந்தலையிலே செய்கிற இருபதாவது தீட்சைமுறை சொன்னவாறு.

508. உச்சிமீது சகஸ்ரதளம் என்ற ஆயிரம் இதழ்த் தாமரையிலே ஞானியின் செயலினாலே ஒண்சுடரும் ஐம்புலனும் ஒன்றுகிற ஆற்றலைப் பாடியது.

509. உச்சரிப்பது என்றால் அது உதட்டின் அதிர்வு அன்று. சொல்லும் தானமும் ஒன்றிய உள்ளத்தின் அதிர்வு ஆகும்.

510. அண்ண லார னாதியா
யனாதி முன்ன னாதியாய்
பெண்ணு மாணு மொன்றலோ
பிறப்ப தற்கு முன்னெலாம்
கண்ணி லானில் சுக்கிலங்
கருத்தொ டுங்கி நிறையின்
மண்ணு ளோரும் விண்ணுளோரும்
வந்த வாற தெங்ஙனே?

511. எத்தி சைக்கு மெவ்வுயிர்க்கு
மெங்க ளப்பன் எம்பிரான்
முத்தி ஞான வித்துளே
முளைத்தெ ழுந்த செஞ்சுடர்
சித்தி னிற்றெ ளிந்தபோது
தேவர் கோயிற் சேர்ந்தனன்
அத்த னாடல் கண்டபோ
தடங்கி யாட லுற்றதே.

512. வல்ல வாச லொன்பதும்
மருத்த டைத்த வாசலும்
சொல்லும் வாச லோரைந்துஞ்
சொல்ல விம்மி நின்றதும்
நல்ல வாச லைத்திறந்து
ஞான வாச லூடுபோய்
எல்லை வாசல் கண்டபின்
இனிப்பி றப்ப தில்லையே.

---

510. ஆதியான தத்துவம் பான்மை கடந்தது. எல்லாப் பிறவிகளுக்கும் இது பொருந்தும்.

511. சித்-ஞானம். ஞானவித்து - பேரறிவாகிய விதை. அத்தன் ஆடல் - எம்பெருமானுடைய அகக்கூத்தும் புறக்கூத்தும் ஒன்றிய தாண்டவம்.

512. அற்புதமான பாடல். சில மாறுதல்களுடன் இதே பாடல் முன்னும் வந்துள்ளமை காண்க.

513. ஆதி யான தொன்றுமே
அநேக ரூப மாயமாய்ப்
பேதா பேத மாயெழுந்து
சருமு சிவ னானபின்
ஆதி யோடு கூடுமீண்டே
ழுந்து சன்ம மானபின்
சோதி யான ஞானி யாருஞ்
சுத்த மாயி ருப்பரே.

514. வண்டு பூமணங் களோடு
வந்தி ருந்த தேனெலாம்
வண்டு ளேய டங்குவண்ண
மோது லிங்க மூலமாய்க்
கண்டு கண்டு வேரிலே
கருத்தொ டுங்க வல்லிரேல்
பண்டு கொண்ட வல்வினை
பறந்தி டுஞ்சி வாயமே.

515. ஓரெ ழுத்தி லிங்கமாக
ஓது மக்க ரத்துளே
ஓரெ ழுத்தி யங்குகின்ற
வுண்மை யைய றிகிலீர்
மூவெ ழுத்தும் மூவராய்
முளைத்தெ ழுந்த சோதியை
நாலெ ழுத்து நாவுளே
நவின்ற தேசி வாயமே.

---

513. ஒன்றியிருந்தது பிரிந்தது. அதன்பின் வேறுபட்டது. ஆனால் ஞானியின் நிலை என்ன?

314. தேனுண்டு அடங்குகிற செயல்போன்றதே தன்னுளே தான் அடங்கி ஒடுங்கலும்.

515. அகரத்திலிருந்து விரிந்து பரந்த எழுத்து நிலையின் விளக்கம் முன்பக்கங்களில் காண்க.

516. தூர தூர தூரமுந்
தொடர்ந்தெ ழுந்த தூரமும்
பார பார மென்றுமே
பரிந்தி ருந்த பாவிகாள்
நேர நேர நேரமு
நினைந்தி ருக்க வல்லிரேல்
தூர தூர தூரமுந்
தொடர்ந்து கூட லாகுமே.

517. குண்ட லங்கள் பூண்டுநீர்
குளங்க டோறுஞ் சூழ்கிறீர்
மண்ட கங்கள் போலநீர்
மனத்தின் மாச றுக்கிலீர்
மண்டை யேந்து கையரை
மனத்தி ருத்த வல்லிரேல்
பண்டை மால யன்தொழப்
பணிந்து வாழ லாகுமே.

518. கூடு கட்டி முட்டை யிட்டுக்
கொண்டி ருந்த வாறுபோல
ஆடி ரண்டு கன்றையீன்ற
வம்ப லத்து ளாடுதே
மாடு கொண்டு வெண்ணையுண்ணு
மானி டப்ப சுக்களே
வீடு கண்டு கொண்டபின்பு
வெட்ட வெளி காணுமே.

---

516. பரிந்திருத்தல் - விலகியிருத்தல். நேரநேர நேரமும் - எந்த நேரத்திலும், இடைவிடாமல்.

517. அருமையான பாடல். வெளி ஆசாரங்கள் அல்ல முக்கியம். வேடங்கள் அல்ல முக்கியம். மனத்தில் இருத்தலே பயனுள்ள ஞானச் செயலாகும்.

518. மனமாசு நீக்கி உண்முக ஆடல் காண்பதை இதே உவமைகளுடன் முன்பாடல்களிலும் கூறியுள்ளமை காண்க.

519. உள்ள தோபு றம்பதோ
வுயிர்ப்ப டங்கி நின்றிடும்
மெள்ள வந்து கிட்டநீர்
வினவ வே ண்டு மென்கிறீர்
உள்ள தும்பு றம்பதும்
ஒத்த போது நாதமாம்
கள்ள வாச லைத்திறந்து
காண வேண்டு மாந்தரே.

520. நட்ட கல்லை தெய்வமென்று
நாலு புட்பஞ் சாத்தியே
சுற்றி வந்து முணமுணென்று
சொல்லு மந்த்ர மேதடா
நட்ட கல்லும் பேசுமோ
நாத னுள்ளி ருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவங்
கறிச்சு வைய றியுமோ?

---

519. உள்ளதோ - உள்ளே இருப்பதா. புறம்பதோ - வெளியே இருப்பதா. உயிர்ப்பு அடங்கி நின்றிடும் - இந்த இரண்டில் உயிர்ப்பு அடங்கி நிற்பது எது?

520. சுட்ட சட்டி - சமையலுக்குப் பயன்பட்ட பாத்திரம். சட்டுவம் - அகப்பை. இவற்றுக்கு அந்தக் குழம்பின் ருசி தெரியவா செய்யும்? தெரியாது. இவ்வாறுதான் சட்டியையும் சட்டுவத்தையும் கூறி என்று எண்ணுவது! தெய்வத்தின் தெய்விகம் கல்லுக்குள் சுவைக்காது என்றபடி. இப்பாடல் பலராலும் அடிக்கடி மேற்கொளாக ஓதப்படுவது. ஆனால் ஒரு மெய்ம்மையை நாம் மறந்துவிடக் கூடாது. நட்டகல் அவசியமில்லை என்பது எப்போது? நாதன் உள்ளே இருக்கும்போது! நாதனை உள்ளே இருத்திக் கொள்ளாதவர்களும் இதை மேற்கொள் சொல்வது போலித்தனம் ஆகும்! அதாவது, கடவுள் ஒருவன் உண்டு என்று நம்புகிற பெரியோர்கள் ஒரு பக்குவத்தினை அடைந்தபிறகு உருவ வழிபாட்டை ஏளனம் செய்யலாம். தெய்வ நம்பிக்கையே இல்லாதவரும் இதைச் சொல்வதில் பொருளில்லை. அது சாத்தான் வேதம் ஓதுவது போன்றதே.

521. நானு மல்ல நீயுமல்ல
நாத னல்ல ஓதுவேன்
வானி லுள்ள சோதியல்ல
சோதி நம்மு ளுள்ளதே
வானு நீயு மொத்தபோது
நாடிக் காண லாகுமே.
தான தான தத்ததான
நாத னான தானனா.

522. நல்ல தல்ல கெட்டதல்ல
நடுவில் நிற்ப தொன்றுதான்
நல்ல தென்ற போதது
நல்ல தாகி நின்றுபின்
நல்ல தல்ல கெட்டதென்றால்
கெட்ட தாகு மாதலால்
நல்ல தென்று நாடிநின்று
நாமஞ் சொல்ல வேண்டுமே.

523. பேய்கள் கூடிப் பிணங்கள்தின்னும்
பிரிய மில்லாக் காட்டிலே
நாய்கள் சுற்ற நடனமாடு
நம்பன் வாழ்க்கை யேதடா
தாய்கள் பாலு திக்குமிச்சை
தவிர வேண்டி நாடினால்
நோய்கள் பட்டு முல்வதேது
நோக்கிப் பாரு மும்முளே.

---

521. நானும் அவனும் ஒன்றான பிறகு நானேது? அதுமட்டுமா? அவன்தான் ஏது? வானில் உள்ள சோதி என்னுள்ளத்தில் அல்லவா இருக்கிறது! வானத்தில் இல்லை! அற்புதமான பாடல். கடைசி வரையிலுள்ள 'தான தான' சித்தரின் பரவசக் களிப்பை, அந்த ஞான உல்லாசத்தை அப்படியே வெளியிடுகிறது.

522. எப்படிக் கொள்கிறோமோ அப்படி அது! எனவே நல்லதெனவே கொள்க.

523. அழகிய ஓவியம் இது! சொற்களும் தாளமும் 'கும்மாளம்' போடுகின்றன. தாய்ப்பாலுக்குள்ள இச்சையை அதாவது பிறப்பின்பாற்பட்ட ஆசையை விட்டொழித்துவிட்டால் பின்னர் நோய் ஏது?

524. உப்பை நீங்கில் அழுகிப்போகும்
ஊத்தை யாகும் உடலில்நீ
அப்பி யாசை கொண்டிருக்க
லாகு மோசொ லறிவிலா
தப்பி லிப்பொய் மானங்கெட்ட
தடிய னாகு மனமேகேள்
ஒப்பி லாஞ்செஞ் சடையனாகு
மொருவன் பாத முண்மையே.

525. பிறப்ப தெல்லா மிறப்பதுண்டு
பேதை மக்கள் தெரிகிலா
திறப்ப தில்லை யென மகிழ்ந்தே
யெங்க ளுங்கள் சொத்தெனக்
குறிப்புப் பேசித் திரிவரன்றிக்
கொண்ட கோல மென்னவோ
நிறப்பும் பொந்தி யழிந்த போது
நேச மாமோ வீசனே.

526. சுட்டெ ரித்த சாந்துபூசுஞ்
சுந்த ரப்பெண்மதிமுகத்
திட்ட நெட்டெ ழுத்தறியா
தேங்கி நோக்கு மதவலீர்
பெட்ட கத்துப் பாம்புறங்கும்
பித்த லாட்ட மறியிரோ
கட்ட விழ்த்துப் பிரமன்பார்க்கில்
கதியு மக்கு மேதுகாண்.

---

524. உப்பு போனால் அழுகிப்போகிற உடம்பு இது! நிலையானது அவன் பாதமே.

525. நிலையாமையை உணராத பேதைமையைச்சாடியவாறு.

526. பெட்டிக்குள்ளே பாம்பு உறங்குகிறது என்பதில் அரிய பொருள் பொதிந்துள்ளது. புறப்பொருள் என்ன என்றால் உடலுறவுக்குப் பின்னால் அதனுள்ளே நஞ்சு இருக்கிறது என்பது! ஞானப்பொருள் என்னவென்றால் மூலக்கனலாகிய பாம்பு உறங்குகிறது இந்த உடம்புக்குள், அதை எழுப்பினால் வீடுபேறு கிட்டும் என்பதாம்.

527. வேத மோது வேலையோ
வீண தாகும் பாரிலே
காத காத தூரமோடிக்
காதல் பூசை வேணுமோ
ஆதி நாதன் வெண்ணெயுண்ட
அவனி ருக்க நம்முளே
கோது பூசை வேதமேது
குறித்துப் பாரு மும்முளே.

528. பரமி லாத தெவ்விடம்
பரமி ருப்ப தெவ்விடம்
அறமி லாத பாவிகட்குப்
பரமி லைய துண்மையே
கரமி ருந்தும் பொருளிருந்தும்
அருளி லாத போதது
பரமி லாத சூன்யமாகும்
பாழ்ந ரக மாகுமே.

529. மாதற் தோள்சே ராததேவர்
மாநி லத்தி லில்லையே
மாதர் தோள்பு ணர்ந்தபோது
மனிதர் வாழ்சி றக்குமே
மாத ராகுஞ் சக்தியொன்று
மாட்டிக் கொண்ட தாதலால்
மாத ராகும் நீலிகங்கை
மகிழ்ந்து கொண்டான் ஈசனே.

---

527. அவன் உள்ளே இருக்கையில், புறப்பூசனை ஏதுக்கு?

528. கையுண்டு, பொருளுண்டு, என்றாலும் தயை இல்லா விட்டால் என்ன பயன்? இறைமை இருந்தும் அதை எழுப்பும் சாதனம் இருந்தும் பான்மை இல்லையென்றால் ஏது பயன்?

529. இங்கே மாதர் என்றது சந்திரகலையின் ஆற்றலை. அதை மாதர் என்று சொல்லி இந்தப்பாடல் ஒரு விளையாட்டு விளையாடுகிறது! நகைச்சுவையை ரசிக்க வேண்டும். சிவபெருமானும் கங்கையும் நீலியாகிய உமையையும் மகிழ்ச்சியோடு உடலிற் கொண்டான் அல்லவா!

530. சித்த ரென்றும் சிறியரென்றும்
அறியொ ணாத சீவர்காள்
சித்த ரிங்கி ருந்தபோது
பித்த ரென்றே எண்ணுவீர்
சித்த ரிங்கி ருந்துமென்ன
பித்த னாட்டி ருப்பரே
அத்த னாடும் பித்தனாடும்
அவர்க ளுக்கெ லாமொன்றே.

531. மாந்தர் வாழ்வு மண்ணிலே
மறந்த போது விண்ணிலே
சாந்த னான ஆவியைச்
சரிப்ப டுத்த வல்லிரேல்
வேந்த னாகி மன்றுளாடும்
விமலன் பாதம் காணலாம்.
கூந்த லம்மை கோணலொன்றுங்
குறிக்கொ ணாதி துண்மையே.

532. சருக ருந்தி நீர்குடித்துச்
சாரல் வாழ்த வசிகாள்
சருக ருந்தில் தேகங்குன்றிச்
சஞ்ச லமுண் டாகுமே
வருவி ருந்தோ டுண்டுடுத்தி
வளர்ம னைசு கிப்பிரேல்
வருவி ருந்தோ னீசனாகி
வாழ்வ ளிக்குஞ் சிவாயமே.

---

530. சீவர்களாகிய சாதாரண மக்களுக்கு யார் பெரியர் யார் சிறியர் என்பது புலனாவதில்லை. சித்தர்களைப் பித்தர்களாக அதாவது கோட்டிக்காரர்கள் என்று உதாசீனம் செய்கிறது, இந்த உலகம். இந்த மக்களுக்கு அத்தனாகிய இறைவனுடைய ஆடலும் பித்தனுடைய ஆட்டபாட்டமும் எல்லாம் ஒன்றே! செக்குக்கும் சிவலிங்கத்துக்கும் வித்தியாசம் தெரியாது!

531. நம் ஆற்றல்கள் கீழே இழுக்கும்போது மண்ணாசை. மேலே இயங்கும்போது விண்பதம்!

532. அருமையான பாடல். வாழ்வையும் சுகங்களையும் துறப்பதால் என்ன பயன்? உடம்பு பலவீனமாகும்! விருந்தோடு உபசரித்துண்ணும்போது வருவிருந்தாளி ஈசனேயாவான்!

533. காடு மேடு குன்றுபள்ளம்
கானி னாற கற்றியும்
நாடு தேசம் விட்டலைவர்
நாதன் பாதங் காண்பரோ
கூடு விட்ட கன்றுன்னாவி
கூற்றன் ஊர்க்கே நோக்கலால்
வீடு பெற்ற ரன்பதத்தில்
வீற்றி ருப்ப ரில்லையே.

534. கட்டை யாற்செய் தேவருங்
கல்லி னாற்செய் தேவரும்
மட்டை யாற்செய் தேவரும்
மஞ்ச ளாற்செய் தேவரும்
சட்டை யாற்செய் தேவரும்
சாணி யாற்செய் தேவரும்
வெட்ட வெளிய தன்றிமற்று
வேறு தெய்வ மில்லையே.

535. தங்கள் தேகம் நோய்பெறின்
தனைப்பி டாரி கோயிலிற்
பொங்கல் வைத்தும் ஆடுகோழிப்
பூசைப் பலியை இட்டிட
நங்கச் சொல்லு நலிமிகுந்து
நாளுந் தேய்ந்து மூஞ்சூராய்
உங்கள் குலத் தெய்வமுங்க
ளுருக்கு லைப்ப துண்மையே.

---

533. காடு மேடு குன்று என்று வருந்துவதால் ஆவி யமனை நோக்கிச் செல்வதன்றி, வேறு பயனில்லை. வீடு பெற்றிருந்து அரன் பதத்தில் வீற்றிருப்பீராக!

534. கட்டையாற் செய்தேவர் - மரத்தில் செய்த கடவுளர் உருவங்கள். கல்லினால் - கற்சிலை. மட்டையால் - பனைமட்டை போன்ற பொருள்களால், மஞ்களால் - மஞ்சட்பொடியை உருட்டிவைத்துச் செய்த உருவம். சட்டையால் - துணியைச் சுருட்டி அதில் தேவதைகளை ஏற்றுதல். இது எல்லாம் மெய்யில்லை. வெட்டவெளியே மெய்யான பரம்பொருள்.

535. உடம்பு நோக்குப் பூசனைபோடுதலும் விரதமிருத்தலும் உடம்பு நலிவதற்கே இடமாகும். உங்கள் குலதெய்வம் உங்களை உருக்குலைப்பதாக முடிகிறது அல்லவா! அப்படி ஏது செய்யாது!

536. ஆசை கொண்ட னுதினமும்
அன்னி யர்பொ ருளினை
மோசஞ் செய்த பகரிக்க
முற்றி லும்அ லைபவர்
பூசை யோடு நேச்நிட்டை
பூரிக் கச்செய் பாதகர்
காசி னில்ள ழுநரகைக்
காத்தி ருப்ப துண்மையே.

537. நேச முற்றுப் பூசைசெய்து
நீறு பூசிச் சந்தனம்
வாச மோட ணிந்துநெற்றி
மைதி லர்த மிட்டுமே
மோசம் பொய்பு னைசுருட்டு
முற்றி லுஞ்செய் மூடர்காள்
வேச ரிக ளம்புரண்ட
வெண்ணீ றாகு மேனியே.

538. வாதஞ் செய்வேன் வெள்ளியும்பொன்
மாற்று யர்ந்த தங்கமும்
போத வேகு ருமுடிக்கப்
பொன்ப ணங்கள் தாவெனச்
சாத னைசெய் தெத்திச்சொத்துத்
தந்த தைக்க வர்ந்துமே
காத தூர மோடிச்செல்வர்
காண்ப தும்ம ருமையே.

---

536. பிறர் பொருளை வவ்வுதலும், மோசம் செய்தலும் நரகத்துக்கே வழியாம்.

537. பொய்யும் மோசடியும் செய்கிறவர்களை நோக்கி இந்த உடம்பின் மிச்சம் ஒரு பிடி சாம்பல் என்பதை நினைவூட்டுகிறார்.

538. இரசவாதம் செய்து தருவதாக ஏமாற்றிப் பொருள் பறித்து ஓடுவர். அவர்களைத் திரும்பத் தேடிப் பிடிப்பது இயலாது.

539. யோக சாடை காட்டுவார்
உயர வும்மெ ழும்புவார்
வேக மாக அட்டசித்து
வித்தை கற்று நெட்டுவார்
மோகம் கொண்டு மாதரின்
மூத்தி ரப்பை சிக்கிப்பின்
பேயது பிடித் தவர்போற்
பேரு லகிற் சாவரே.

540. காய காய முண்பதாகக்
கண்ட வர்ம தித்திட
மாய வித்தை செய்ததெங்கு
மடிப்பு மோசஞ் செய்பவர்
நேய மாக்கஞ் சாவடித்து
நேர பினைத் தின்பதால்
நாய தாக நக்கிமுக்கி
நாட்டி னில்ல லைவரே.

541. நீரி னிற்கு மிழியொத்த
நிலையி லாத காயமென்
நூரி நிற்ப நையபித்து
உதாரி யாய்த் திரிபவர்
சீரி னில்லு எக்குஞான
சித்தி செய்வேன் பாரெனா
நேரி னிற்பி றர்பொருளை
நீள வுங்கைப் பற்றுவர்.

---

539. அன்றும் இன்றும் நம் காலத்திலும் இனி எதிர்காலத்திலும் இத்தகைய கயமை உண்டு, பெரிய ஞானிகள் போல வேடமிட்டு, வித்தைகள் செய்து, ஜாலத்தினால் மயக்கிப் பெண்களை ஏமாற்றிக்கயமையிலேயே மாள்கிறார்கள்! இவர்களா சித்தர்கள் ! இல்லவே இல்லை. அழகிய பாடல். எல்லாரும் மனப்பாடம் செய்துகொள்ள வேண்டிய, மேற்கோளுக்குப் பயன்படுகிற பாடல்.

540. ஒடுக்கமுள்ள யோகி என்பதாகப் பொய்சொல்லி, அபின்தின்று, இறுதியில் நாய்போல் நக்கிமுக்கி அலைந்து மாள்வர்.

541. நீரிற் குமிழி என்றெல்லாம் வாய்வேதாந்தம் பேசி, அப்படிச் செய்வேன், இப்படிச் செய்வேன் என்றெல்லாம் பேசிப் பொருளை வஞ்சிக்கிறார்களே!

542. காவி யுஞ்ச டைமுடி
கமண்ட லங்க ளாசனம்
தாவு ருத்தி ராட்சம்யோகத்
தண்டு கொண்ட மாடுகள்
தேவி யைஅ லையவிட்டுத்
தேசம் எங்கும் சுற்றியே
பாவி யென்ன வீடெலாம்
பருக்கை கேட்ட லைவரே.

543. முத்தி சேறச் சித்தியிங்கு
முன்ன ளிப்பேன் பாரெனச்
சத்தி யங்கள் சொல்லியெங்குஞ்
சாமி வேடம் பூண்டவர்
நித்தி யம்வ யிறுவளர்க்க
நீதி ஞானம் பேசியே
பத்தி யாய்ப்ப ணம்பறித்துப்
பாழ்ந ரகில் வீழ்வரே.

544. செம்மை சேர்ம ரத்திலே
சிலைத லைகள் செய்கிறீர்
கொம்மை யற்ற கிளையில்பாத
குறடு செய்த ணிகிறீர்
நும்மு ளேவி ளங்குவோனை
நாடி நோக்க வல்லிரேல்
கும்ம ளம்மும் மும்மளமும்
எம்ம ளம்மும் இல்லையே!

---

542. வேடங்கள் புனைந்து குடும்பத்தைச் சீரழியவிடுத்துத் தேசமெல்லாம் சுற்றிப் பிச்சை புகுந்து திரிகிறார்களே.

543. வேடதாரியான போலிகளை எத்துணை துல்லியமாக எடை போட்டுப் பேசுகிறது இந்தப் பாடல்! ‘மக்களே போல்வர் கயவர்’ என்பது வள்ளுவர் காலத்திலும் சரி, சிவவாக்கியர் காலத்திலும் சரி, இன்றும் சரி, நித்திய உண்மை!

544. சிலைகளும் தலைகளும் செய்வதோடு, பாதக்குறடு மரத்திலே செய்து அணிந்து கொள்கிறார்கள். இந்தப் பொய்யும் புனைகளும் இல்லாமல் உள்நோக்கினால் எத்துணை சிறப்பாக இருக்கும்!

545. எத்தி சையெங் கெங்குமோடி
எண்ணி லாத நதிகளில்
சுற்றி யுந்த லைமுழுகச்
சுத்த ஞானி யாவரோ
பத்தி யோட ரன்பதம்
பணிந்தி டாத பாவிகாள்
முத்தி யின்றிப் பாழ்நரகில்
மூழ்கி நொந்த லைவரே.

546. கல்லு வெள்ளி செம்பிரும்பு
காய்ச்சி டுந்த ராக்களில்
வல்ல தேவ ரூபபேத
மங்க மைத்துப் போற்றிடின்
தொல்லை யற்றி டப்பெருஞ்
சுகந்த ருமோ சொல்லுவீர்
இல்லை இல்லை இல்லைஇல்லை
ஈச னாணை இல்லையே.

547. இச்ச கஞ்ச னித்ததுவும்
ஈச னைந்தெ ழுத்திலே
மெச்ச வுஞ்ச ராசரங்கள்
மேவு மைந்தெ ழுத்திலே
உச்சி தப்ப லவுயிர்கள்
ஓங்க லஞ்செ ழுத்திலே
நிச்ச யமெய்ஞ் ஞானபோதம்
நிற்கு மைந்தெ ழுத்திலே.

---

545. ஊரெல்லாம் அலைந்து நீராடுதல் எதற்கு? பக்தியோடு வழிபடாத பாவிகள் நரகில் வீழ்வர்.

546. படிமங்களும் சிலைகளும் செய்து போற்றுவதால் தொல்லையில்லாத சுகம் கிட்டுமோ? ஞான நிலையிருந்து பேசுகிறார். இல்லை இல்லை என்று!

547. தோற்றமும் நிலைபேறும் மேம்பாடும் எல்லாம் ஐந்தெழுத்திலேதாம்!

548. சாத்தி ரங்கள் பார்த்துப்பார்த்துத்
தாங்கு ருடா வதலால்
நேத்தி ரங்கெட வெய்யோனை
நேர்து திசெய் மூடர்காள்
பாத்தி ரமறிந்து மோன
பத்தி செய்ய வல்லிரேல்
சூத்தி ரப்படி யாவருஞ்
சுத்த ராவ ரங்ஙனே.

549. மனவு றுதிதா னிலாத
மட்டிப் பிண மாடுகள்
சினமு றப்பி றர்பொருளைச்
சேக ரித்து வைத்ததைத்
தினந்தி னம்மூ ரெங்குஞ்சுற்றித்
திண்டிக் கேஅ லைபவர்
இனம திற்ப லர்கள்வையும்
இன்ப மற்ற பாவிகள்.

550. சிவா யவசி என்னவுஞ்
செபிக்க இச்ச கமெலாம்
சிவா யவசி யென்னஞ்
செபிக்க யாவுஞ் சித்தியாம்
சிவா யவசி யென்னவுஞ்
செபிக்க வானம் ஆளலாம்
சிவா யவசி யென்பதே
இருத லைத்தீ யாகுமே.

---

548. நூல்கள் படித்துக் குருடாவதோடு, சூரிய வணக்கம் நேர்முகமாகச் செய்து கண்ணைக் கெடுத்துக்கொள்வர்!

549. பிறர் பொருளை வவ்வுவதைச் சீறியவாறு.

550. சிவாசிவ மகிமை பேசுகிற அழகான பாடல். இந்த உச்சாடனம், அதாவது அகத்தானங்கள் தெரிந்து இந்த எழுத்துநிலை தெரிந்து ஞானவழிபாடு செய்தலினால் இந்த உலகம் முழுதும் யாவும் நமது சித்தியாகும், வானம் ஆளலாம். இருத்தீ என்பது கேட்டை அழிக்கும் நெருப்பு, அதோடு வீட்டைக் காட்டும் ஒளி!

551. பூநி லாய வைந்துமாய்ப்
புனற்கண் நின்ற நான்குமாய்
தீநி லாய மூன்றுமாய்ச்
சிறந்த காலி ரண்டுமாய்
மீநி லாய தொன்றுமாகி
வேறு வேறு தன்மையாய்
நீநி லாய வண்ணநின்னை
யார்நி னைக்க வல்லரே.

552. ஆறு மாறு மாறுமாயொ
ரைந்து மைந்து மைந்துமாய்
ஏறு சீரி ரண்டுமூன்று
மேழு மாறு மெட்டுமாய்
வேறு வேறு ஞானமாகி
மெய்யி னோடு பொய்யுமாய்
ஊறொ டோசை யாயவைந்து
மாய ஆய மாயனே!

553. ஐந்து மைந்து மைந்துமாகி
யல்ல வற்று ளாயுமாய்
ஐந்து மூன்று மொன்றுமாகி
நின்ற வாதி தேவனே
ஐந்து மைந்து மைந்துமாகி
யந்த ரத்த ணைந்துநின்று
ஐந்து மைந்து மாயநின்னை
யாவர் காண வல்லரே?

---

551. இந்தப் பாடலிலிருந்து, திவ்வியப் பிரபந்தத் தொகுப்பில் நூற்றிருபது பாடல்கள் திருமழிசை ஆழ்வாரின் திருச்சந்த விருத்தம் என்ற தலைப்பில் வருகின்றன. ஆராய்ச்சிக் குறிப்புகளைக் காண்க.

இதே கருத்துள்ள பாடல் முன்பும் வந்துள்ளது. இவ்வாறே அடுத்த இரண்டு பாடல்களுமாம்.

554. மூன்று முப்ப தாறினோடொ
ரைந்து மைந்து மைந்துமாய்
மூன்று மூர்த்தி யாகிமூன்று
மூன்று மூன்று மூன்றுமாய்
தோன்று சோதி மூன்றுமாய்த்
துளக்க மில்வி ளக்கமாய்
ஏன்றெ னாவி யுள்புகுந்த
தென்கொ லோவெம் மீசனே!

556. நின்றி யங்கு மொன்றலாவு
ருக்க டோறும் ஆவியாய்
ஒன்றி யுள்க லந்துநின்ற
நின்ன தன்மை யின்னதென்று
என்றும் யார்க்கு மெண்ணிறந்த
ஆதி யாய்நின் னுந்திலாய்
அன்று நான்மு கற்பயந்த
வாதி தேவ னல்லையே?

557. நாக மேந்து மேருவெற்பை
நாக மேந்து மண்ணினை
நாக மேந்து மாகமாக
மாக மேந்து வார்புனல்
மாக மேந்து மல்குல்தீயோர்
வாயு லைந்த மைந்துகாத்து
ஏக மேந்தி நின்ற நீர்மை
நின்க ணேயி யன்றதே.

---

554. தொண்ணூற்றாறு தத்துவங்களும் பிற ஆற்றல்களுமாகி உடம்புக்குள்ளே தொழிற்படுகிற இறையாற்றலைப் பாடுகிறார்.

555. படைப்புக்கும் படைப்பாற்றலுக்குமே வித்து நீயே.

556. பாம்பு தூக்குறி பார் என்பது என்ன? எல்லாம் நின் ஆற்றலே.

557. ஒன்றி ரண்டு மூர்த்தியா
யுறக்க மோடு ணர்ச்சியாய்
ஒன்றி ரண்டு காலமாகி
வேலை ஞான மாயினாய்
ஒன்றி ரண்டு தீயுமாகி
யாய னாய மாயனே
ஒன்றி ரண்டு கண்ணினானு
முன்னை யேத்த வல்லனே?

558. ஆதி யான வானவர்க்கு
மண்ட மாய வப்புறத்து
ஆதி யான வானவர்க்கு
மாதி யான வாதிநீ
ஆதி யான வானவான
ரந்த காலம் நீயுரைத்தி
ஆதி யான காலநின்னை
யாவர் காண வல்லரே?

559. தாது லாவு கொன்றைமாலை
துன்னு செஞ்ச டைச்சிவன்
நீதி யால்வ ணங்குபாத
நின்ம லாதி லாயசீர்
வேத வாணர் கீதவேள்வி
நீதியான வேள்வியார்
நீதி யால்வ ணங்குகின்ற
நீர்மை நின்கண் நின்றதே.

---

557. திருமால் என்ற நிலையிலே வைத்துப் பரம்பொருளைப் பாடுகிற உத்தியிலே எல்லாம் அவனே என்று பாடுகிறார். இவ்வாறே சிவ மூர்த்தியையும் பாடியுள்ள பாடல்கள் முன்பு வந்துள்ளன. ஞானயோக சித்தனுக்கு எந்த வேறுபாடும் கிடையாது.

558. எல்லாத் தேவர்களுக்கும் தேவன் நீ. எல்லாருக்கும் முந்தியவனும் பிந்தியவனும் நீயே. 'முன்னைப்பழம்பொருட்கும்' என்ற திருவாசகத்தோடு ஒப்புநோக்குக.

559. சிவ தத்துவத்துக்கும் வழிபடுநிலையம் திருமால் தத்துவம் என்கிறார். இதில் முரண்பாடு இல்லை என்று காணவேண்டும்.

560. தன்னு ளேதி ரைத்தெழும்
தரங்க வெண்த டங்கடல்
தன்னு ளேதி ரைத்தெழுந்
தடங்கு கின்ற தன்மைபோல்
நின்னு ளேபி றந்திறந்து
நிற்ப வும்தி ரிபவும்
நின்னு ளேய டங்குகின்ற
நீர்மை நின்கண் நின்றதே.

561. சொல்லி னால்தொ டர்ச்சிநீ
சொலப்ப டும்பொ ருளும்நீ
சொல்லி னால்சொ லப்படாது
தோன்று கின்ற சோதிநீ
சொல்லி னால்ப டைக்கநீப
டைக்க வந்து தோன்றினார்
சொல்லி னால்சு ருங்கநின்கு
ணங்கள் சொல்ல வல்லரே.

562. உலகு தன்னை நீபடைத்தி
யுள்ளொடுக்கி வைத்திமீண்
டுலகு தன்னு ளேபிறத்தி
யோரி டத்தை யல்லையால்
உலகு நின்னொ டொன்றிநிற்க
வேறு நிற்றி யாதலால்
உலகில் நின்னை யுள்ளசூழல்
யாவ ருள்ள வல்லரே?

---

560. அலைகள் கடலிலிருந்து எழுந்து கிளம்பிக் கரையிலே மோதி மீண்டும கடலுனே கலந்து விடுகின்றன. அவ்வாறு தான் நின் தத்துவமும் என்கிறார். மிக அழகிய உவமை.

561. சொல் பேசுவது உன்னை, ஆனால் சொல்லைக் கடந்தவன் நீ.

562. உலகைப் படைத்து உன்னுள் வைத்திருப்பதோடு நீ உலகில் பிறப்பதும், உலகு உன்னோடு இணைவதும், நீ வேறாய் நிற்பதும் - அடடா, உனது தன்மையை யாவர்தாம் பேச வல்லவர்கள்? யாருமில்லை!

563. இன்னை யென்று சொல்லலாவ
தில்லை யாதும் இட்டிடைப்
பின்னை கேள்வ னென்பரும்பி
ணக்கு ணர்ந்த பெற்றிேேயார்
பின்னை யாய கோலமோடு
பேரு மூரு மாதியும்
நின்னை யார்நி னைக்கவல்லர்
நீர்மை யால்நி னைக்கிலே!

564. தூய்மை யோக மாயினாய்து
ழாய லங்கல் மாலையாய்
ஆமை யாகி யாழ்கடல்து
யின்றி லாதி தேவநின்
நாம தேய யின்னதென்ன
வல்ல மல்ல மாகிலும்
சாம வேத கீதனாய
சக்ர பாணி யல்லையே?

565. அங்க மாறும் வேதநான்கு
மாகி நின்ற வற்றுளே
தங்கு கின்ற தன்மையாய்த
டங்க டல்ப ணத்தலை
செங்கண் நாக ணைக்கிடந்த
செல்வ மல்கு சீரினாய்
சங்க வண்ண மன்னமேனி
சார்ங்க பாணி யல்லையே?

---

563. இன்ன தன்மையன் நீ என்று சொல்ல இயலாது. நப்பின்னை கேள்வன் என்பர் உன் காதலை உணர்ந்த வைணவர்கள். பின்னையான கோலமும் ஊர்பெயர்களும் தோற்றமும் யாவரால் எண்ணிப்பார்க்க முடியும்.

564. திருமாலின் மகிமைகளைச் சொல்லி ஏத்தியவாறு.

565. இதுவும் திருமாலின் பெருமைகளையும் கோல அழகுகளையும் துதித்தவாறு.

566. தலைக்க ணத்து கள்குழம்பு
சாதி சோதி தோற்றமாய்
நிலைக்க ணங்கள் காணவந்து
நிற்றி யேலும் நீடிருங்
கலைக்க ணங்கள் சொற்பொருள்
கருத்தி னால்நி னைக்கொணா
மலைக்க ணங்கள் போலுணர்த்தும்
மாட்சி நின்றன் மாட்சியே.

567. ஏக மூர்த்தி மூன்றுமூர்த்தி
நாலு மூர்த்தி நன்மைசேர்
போக மூர்த்தி புண்ணியத்தின்
மூர்த்தி யெண்ணில் மூர்த்தியாய்
நாக மூர்த்தி சயனமாய்ந
லங்க டல்கி டந்துமேல்
ஆக மூர்த்தி யாயவண்ண
மென்கொ லாதி தேவனே.

568. விடத்த வாயொ ராயிரமி
ராயிரம்கண் வெந்தழல்
விடத்த வீழ்வி லாதபோகம்
மிக்க சோதி தொக்கசீர்
தொடுத்து மேல்வி தானமாய
பௌவ நீர ராவணை
படுத்த பாயல் பள்ளிகொள்வ
தென்கொல் வேலை வண்ணனே.

---

566. நூல்களும் கலைகளும் கடந்தவன். மலைப்புத் தருகிற மலைபோன்ற மாட்சி உனது மாட்சி.

567. வடிவங்கள் பலவகை வண்ணங்களைத் துதித்தவாறு.

568. பாற்கடலிலே நாகப் படுக்கையிலே பள்ளி கொள்வதைப் பாடுகிறார்.

569. புள்ள தாகி வேதநான்கு
மோதி னாய்அ தன்றியும்
புள்ளின் வாய்பி ளந்துபுட்கொ
டிப்பி டித்த பின்னரும்
புள்ளை யூர்தி யாதலால
தென்கொல் மின்கொள் நேமியாய்
புள்ளின் மெய்ப்ப கைக்கடல்கி
டத்தல் காத லித்ததே.

570. கூசமொன்று மின்றிமாசு
ணம்ப டுத்து வேலைநீர்
பேச நின்ற தேவர்வந்து
பாட முன்கி டந்ததும்
பாசம் நின்ற நீரில்வாழு
மாமை யான கேசவா
ஏச வன்று நீகிடந்த
வாறு கூறு தேறவே.

571. அரங்க னே!த ரங்கநீர்க்
கலங்க வன்று குன்றுசூழ்
மரங்க டேய மாநிலம்கு
லுங்க மாசு ணம்சுலாய்
நெருங்க நீக டைந்தபோது
நின்ற சூர ரென்செய்தார்
குரங்கை யாளு கந்தவெந்தை
கூறு தேற வேறிதே.

---

569. மடக்கி மடக்கிப் பறவையின் இணைப்பு எப்படி என்று பாடுகிறார். திருமாலின் மகிமை கூறும் வரலாறுகளிலுள்ள புட்கதைகள் அடுக்கி வந்தன. அதோடு இறுதியில் புள்ளுக்குப் பகையான பாம்பிலே படுத்திருப்பதைப் பாடுகிறார்!

570. இதுவும் திருமால் வரலாறு கூறி ஏத்தியவாறு.

571. திருவரங்கனாக முன் நிறுத்திக் கடல் கடைந்ததும் குரங்குப் படைகள் இணைந்த ராமகதையும் கூறியவாறு.

572. பண்டு மின்று மேலுமாயோர்
பால னாகி ஞாலமேழ்
உண்டு மண்டி யாலிலைத்து
யின்ற வாதி தேவனே
வண்டு கிண்டு தண்டுழாய
லங்க லாய்!க லந்தசீர்ப்
புண்ட ரீக பாவைசேரு
மார்ப பூமி நாதனே.

573. வானிறத்தொர் சீயமாய்வ
ளைந்த வாளெ யிற்றவன்
ஊன்நி றத்து கிர்த்தலம
ழுத்தி னாய்உ லாயசீர்
நால்நி றத்த வேதநாவர்
நல்ல யோகி னால்வணங்கு
பால்நி றைக்க டல்கிடந்த
பற்ப நாப னல்லையே?

574. கங்கை நீர்ப யந்தபாத
பங்க யத்தெம் மண்ணலே
அங்கை யாழி சங்குதண்டு
வில்லும் வாளு மேந்தினாய்
சிங்க மாய தேவதேவ
தேனு லாவு மென்மலர்
மங்கை மன்னி லாழுமார்ப
ஆழி மேனி மாயனே.

---

572. அழகான பாசுரப் பண்போடு கூடிய தோத்திரம்.

573. திருமாலின் அவதார லீலைகளைக் கூறியவாறு.

574. ஆழ்வார் என்ற பான்மையிலே பஞ்ச ஆயுதங்களை ஏந்திய தன்மையை மனமுருகிப் பாடுகிற அழகான பக்திப் பாடல் இது. இவ்வாறே சிவனை ஏத்துகிற பாடல்களும் முன்னர் வந்துள்ளன. ஞானியர்களின் மன நிலையில் உருவங்களுக்கு முக்கியம் தராததோடு உருவங்களை ஏத்தும்போது அவற்றின் வேறுபாடுகளுக்கும் முக்கியம் இருப்பதில்லை. எல்லாம் ஒன்றே.

575. வரத்தி னில்சி ரத்தைமிக்க
வாளெ யிற்று மற்றவன்
உரத்தி னில்க ரத்தைவைத்து
கிர்த்த லத்தை யூன்றினாய்
இரத்தி நீயி தென்னபொய்யி
ரந்த மண்வ யிற்றுளே
கரத்தி உன்க ருத்தையாவர்
காண வல்லர் கண்ணனே!

576. ஆணி னோடு பெண்ணுமாகி
யல்ல வோடு நல்லவாய்
ஊணோ டோசை யூறுமாகி
யொன்ற லாத மாயையாய்
பூணி பேணு மாயனாகிப்
பொய்யி னோடு மெய்யுமாய்
காணி பேணும் மாணியாய்க்க
ரந்து சென்ற கள்வனே!

577. விண்க டந்த சோதியாய்வி
ளங்கு ஞான மூர்த்தியாய்
பண்க டந்த தேசமேவு
பாவ நாச நாதனே
எண்க டந்த யோகினோடி
ரந்து சென்று மாணியாய்
மண்க டந்த வண்ணம்நின்னை
யார்ம திக்க வல்லரே?

---

575. இரணியன் வதம், மாவலியிடம் யாசகம் ஆகிய இறை விளையாடல்களைச் சித்திரிக்கிறது இந்தச் சுந்தரக் கவிதை.

576. அவனுடைய மாயங்களை வாமன லீலையைச் சொல்லி ஏத்துகிற பாடல்.

577. திருவிக்கிரம அவதாரம் பாடியவாறு.

578. படைத்த பாரி டந்தளந்த
துண்டு மிழ்ந்து பௌவநீ:
படைத்த டைத்த திற்கிடந்து
முன்க டைந்த பெற்றியோய்
மிடைத்த மாலி மாலிமான்னி
லங்கு கால னூர்புக
படைக்க லம்வி டுத்தபல்ப
டைத்த டக்கை மாயனே!

579. பரத்தி லும்ப ரத்தையாதி
பௌவ நீர ணைக்கிடந்து
உரத்தி லும்மொ ருத்திதன்னை
வைத்து கந்த தன்றியும்
நரத்தி லும்பி றத்திநாத
ஞான மூர்த்தி யாயினாய்
ஒருத்த ரும்நி னாதுதன்மை
யின்ன தென்ன வல்லரே?

580. வான கம்மும் மண்ணகம்மும்
வெற்பு மேற்க டல்களும்
போன கம்செய் தாலினலத்து
யின்ற புண்ட ரீகனே
தேன கஞ்செய் தண்ணறும்ம
லர்த்து ழாய்நன் மாலையாய்
கூன கம்பு கத்தெறித்த
கொற்ற வில்லி யல்லையே?

---

578. இதுவும் திருமாலின் வல்லமைகள் கூறியவாறு.

579. பரம்பொருள், கடலிற் பாம்பணை, மார்பில் ஒருத்தி, மானுடமாகப் பிறவி, ஞானமூர்த்தி - இந்த முரண்பாடுகளை இன்னதென்று விளக்கவல்லார் யாருமில்லை.

580. வானும் மண்ணும் ஏழ்கடலும் போனகம் செய்து ஆலிலையில் துயில்கிறாய். கூனியின் முதுகிலே வில்லுண்டை அடித்தவன் நீ!

581. கால நேமி காலனே
கணக்கி லாத கீர்த்தியாய்
ஞால மேழு முண்டுபண்டோர்
பால னாய பண்பனே
வேலை வேவ வில்வளைத்த
வெல்சி னத்த வீரநின்
பால ராய பத்தாசித்தம்
முத்தி செய்யும் மூர்த்தியே!

582. குரக்கி னப்ப டைகொடு
குரைக டலின்மீது போய்
அரக்க ரங்க ரங்கவெஞ்ச
ரந்து ரந்த லாதிநீ
குரக்க மண்கொ டுத்தவற்கி
ரக்க மொன்று மின்றியே
பரக்க வைத்த ளந்துகொண்ட
பற்ப பாத னல்லையே?

583. மின்னி றத்தெ யிற்றரக்கன்
வீழ வெஞ்ச ரம்துரந்து
பின்ன வற்க ருள்புரிந்
தரச ளித்த பெற்றியோய்
நன்னி றத்தொ ரின்சொலேழை
பின்னை கேள்வ மன்னுசீர்
பொன்னி றத்த வண்ணனாய
புண்ட ரீக னல்லையே?

---

581. பக்தர்களுக்கு முக்தி அளிக்கும் மூர்த்தியைக் கண்ணன் திருவிளையாடல்கள் சொல்லித் துதித்தவாறு.

582. இராமாவதாரச் செயலையும் வாமனாவதாரச் செயலையும் சொல்லி வணங்கியவாறு.

583. அண்ணனைக் கொன்று தம்பிக்கு அரசளித்த இராமகதை சொல்லி நப்பின்னை கேள்வனைத் துதிக்கிறார்.

584. ஆதி யாதி யாதிநீயொ
ரண்ட மாதி யாதலால்
சோதி யாத சோதிநீ
அஃதுண் மையில்வி ளங்கினாய்
வேத மாகி வேள்வியாகி
விண்ணி னோடு மண்ணுமாய்
ஆதி யாகி யாயமாய
மாய மென்ன மாயமே?

585. அம்பு லாவு மீனுமாகி
யாமை யாகி ஆழியார்
தம்பி ரானு மாகிமிக்க
தன்பு மிக்க தன்றியும்
கொம்ப ராவு நுண்மருங்கு
லாயர் மாதர் பிள்ளையாய்
எம்பி ரானு மாயவண்ண
மென்கொ லோவெம் மீசனே!

586. ஆட கத்த பூண்முலைய
சோதை யாய்ச்சி பிள்ளையாய்
சாடு தைத்தோர் புள்ளதாவி
கள்ள தாய பேய்மகள்
வீட வைத்த வெய்யகொங்கை
ஐய பால முதுசெய்து
ஆட கக்கை மாதர்வா
யமுத முண்ப தென்கொலோ?

---

584. ஆதி அனாதிப் பரம்பொருளாகிய நீ அயனான மாயம் என்னே என்று வியந்தவாறு.

585. அவதாரச் செயல்கள் சொல்லி ஆய்ச்சியின் பிள்ளையான திறம் பாடியது.

586. கண்ணன் சாதனைகள் கூறிக் கோபியருடன் குலாவியது கூறல்.

587. காய்த்த நீள்வி ளங்கனிவு
ரித்தெ திர்ந்த பூங்குருந்தம்
சாய்த்து மாபி ளந்தகைத்த
லத்த கண்ண னென்பரால்
ஆய்ச்சி பாலை யுண்டுமண்ணை
யுண்டு வெண்ணெ யுண்டுபின்
பேய்ச்சி பாலை யுண்டுபண்டோ
ரேன மாய வாமனே!

588. கடங்க லந்த வன்கரிம
ருப்பொ சித்துஓர் பொய்கைவாய்
விடங்க லந்த பாம்பின்மேல்ந
டம்ப யின்ற நாதனே
குடங்க லந்த கூத்தனாய
கொண்டல் வண்ண தண்டுழாய்
வடங்க லந்த மாலைமார்ப
கால நேமி காலனே!

589. வெற்பெ டுத்து வேலைநீர்க
லக்கி னாய்அ தன்றியும்
வெற்பெ டுத்து வேலைநீர்வ
ரம்பு கட்டி வேலைசூழ்
வெற்பெ டுத்த இஞ்சிசூழ்இ
லங்கை கட்ட ழித்தநீ
வெற்பெ டுத்து மாரிகாத்த
மேக வண்ண னல்லையே?

---

587. கண்ணனாக அவதரித்துச் செய்த லீலைகள் கூறிப் பேய்ச்சி பாலை உண்ட திறம் கூறியது.

588. காளிங்கன் மீது நடம்புரிந்த நாதனைப் பாடியது.

589. வெற்பெடுத்த மேகவண்ணனின் ராம, கிருஷ்ண, அவதார மகிமைகளைப் பாடியது.

590. ஆனை காத்தொ ரானைகொன்ற
தன்றி யாயர் பிள்ளையாய்
ஆனை மேய்த்தி யானெயுணடி
அன்று குன்ற மொன்றினால்
ஆனை காத்து மையரிக்கண்
மாத ரார்தி றத்துமுன்
ஆனை யன்று சென்றடர்ந்த
மாய மென்ன மாயமே?

591. ஆய னாகி யாயர்மங்கை
வேய தோள்வி ரும்பினாய்
ஆய நின்னை யாவல்வல்ல
ரம்ப ரத்தொ டிம்பராய்
மாய மாய மாயைகொல்அ
தன்றி நீல குத்தலும்
மாய மாய மாக்கினாயுன்
மாய முற்று மாயமே.

592. வேறி சைந்த செக்கர்மேனி
நீர ணிந்த புன்சடை
கீறு திங்கள் வைத்தன்கை
வைத்த வன்க பால்மிசை
வீறு செங்கு ருதியால்நி
றைத்த கார ணந்தனை
ஏறு சென்ற டர்த்தவீச
பேசு கூச மின்றியே.

---

590. ஆனைகாத்த ஆதிமூலம், ஆனைகொன்ற கண்ணன், ஆன்களான பசுக்களை மேய்த்த கண்ணன் என்று பலவாறான லீலைகள் பேசுகிறார். ஆனை என்ற பலபொருள் குறித்த ஒரு சொல்லின் ஆட்சி நயமிக்கது.

591. அவன் மாயக்கண்ணன். அவன் செயல்கள் யாவும் மாயம்.

592. ஏறு அடர்த்த ஈசனாகக் கண்டு பாடியது.

593. வெஞ்சி னத்த வேழவெண்ம
ருப்பொ சித்து உருத்தமா
கஞ்ச னைக்க டிந்துமண்ண
ளந்து கொண்ட காலனே
வஞ்ச னத்து வந்தபேய்ச்சி
யாவி பாலுள் வாங்கினாய்
அஞ்ச னத்த வண்ணனாய
ஆதி தேவ னல்லையே.

594. பாலி னீர்மை செம்பொனீர்மை
பாசி யின்ப சும்புறம்
போலு நீர்மை பொற்புடைத்த
டத்து வண்டு விண்டுலாம்
நீல நீர்மை யென்றிலை
நிறைந்த காலம் நான்குமாய்
மாலி னீர்மை வையகம்
மறைத்த தென்ன நீர்மையே?

595. மண்ணு ளாய்கொல் விண்ணுளாய்கொல்
மண்ணு ளேம யங்கிநின்று
எண்ணு மெண்ண கப்படாய்கொள்
என்ன மாயை நின்தமர்
கண்ணு ளாய்கொல் சேயைகொல்அ
னந்தன் மேல்கி டந்தவெம்
புண்ணி யாபு னந்துழாய்அ
லங்க லம்பு னிதனே!

---

593. நீயே ஆதிதேவன் என்று கண்ணன் திருவிளையாடல்கள் கூறியவாறு.

594. நின் தன்மையை எளிதில் புரிந்துகொள்ள இயலுமா என்று வியந்தவாறு.

595. துளசி மாலை அணிந்த புண்ணியனே! நீ இருக்கும் இடம் எங்கெல்லாம் என்று சொல்வது!

596. தோடு பெற்ற தண்டுழாய
லங்க லாடு சென்னியாய்
கோடு பற்றி ஆழியேந்தி
அஞ்சி றைப்புள் ளூர்தியால்
நாடு பெற்ற நன்மை நண்ண
மில்லை யேனும் நாயினேன்
வீடு பெற்றி றப்பொடும்
பிறப்ப றுக்கு மாசொலே.

597. காரொ டொத்த மேனிநங்கள்
கண்ண விண்ணின் நாதனே
நீரி டத்த ராவணைக்கி
டத்தி யென்பர் அன்றியும்
ஓரி டத்தை யல்லையெல்லை
யில்லை யென்ப ராதலால்
சேர்வி டத்தை நாயினேன்
தெரிந்தி றைஞ்சு மாசொலே.

598. குன்றில் நின்று வானிருந்து
நீள்க டல்கி டந்து மண்
ஒன்று சென்ற தொன்றையுண்ட
தொன்றி டந்து பன்றியாய்
நன்று சென்ற நாளவற்றுள்
நல்லு யிர்ப டைத்தவர்க்கு
அன்று தேவ மைத்தளித்த
ஆதி தேவ னல்லையே?

---

596. இறப்பொடு பிறப்பை அறுக்கும் வழியான வீடுபேறு கிட்டும் வகை அருள்.

597. உன்னைக் கண்டு இறைஞ்சும் விதம் என்னவென்று கற்பிக்க வேண்டும் என்கிறார். இவ்வாறே இறைவனை எப்படி ஏத்துவது என்று அவனே கற்பிக்க வேண்டும் என்று சித்தராகிய திருமாளிகைத் தேவரும் பாடியுள்ளமை காண்க.

598. கடவுளர்க்குக் கடவுட்டன்மை அளித்த கடவுளே என்றபடி.

599. கொண்டை கொண்ட கோதைமீது
தேனு லாவு கூனிகூன்
உண்டை கொண்ட ரங்கவோட்டி
யுள்ம கிழ்ந்த நாதனூர்
நண்டை யுண்டு நாரைபேர
வாளை பாய நீலமே
அண்டை கொண்டு கெண்டை மேயு
மந்த ணீர ரங்கமே.

600. வெண்டி ரைக்க ருங்கடல்சி
வந்து வேவ முன்னோர்நாள்
திண்டி நல்சி லைக்கைவாளி
விட்ட வீரர் சேருமூர்
எண்டி சைக்க ணங்களுமி
றைஞ்சி யாடு தீர்த்தநீர்
வண்டி ரைத்த சோலைவேலி
மன்னு சீர ரங்கமே.

601. சரங்க ளைத்து ரந்துவில்வ
ளைத்து இலங்கை மன்னவன்
சிரங்கள் பத்த றுத்துதீர்த்த
செல்வர் மன்னு பொன்னிடம்
பரந்து பொன்நி ரந்துறுந்தி
வந்த லைக்கும் வார்புனல்
அரங்க மென்பர் நான்முகத்
தயன்ப ணிந்த கோயிலே.

---

599. கூனியின் வரலாறு முதலியன கூறி, ராமனை வணங்கி அவனுடைய ஊர் அரங்கம் என்றவாறு.

600. வில் வீரனாகிய எம்பிரானுடைய ஊர் சீரங்கம்.

601. பிரமன் விளங்கிநின்ற கோயில், இராவணனை வதம் செய்த இராமபிரானின் கோயில் சீரங்கம் என்றவாறு.

602. பொற்றை யுற்ற முற்றல்யானை
போரெ திர்ந்து வந்ததை
பற்றி யுற்று மற்றதன்
மருப்பொ சித்த பாகனூர்
சிற்றெ யிற்று முற்றல்மூங்கில்
மூன்று தண்ட ரொன்றினர்
அற்ற பற்றர் சுற்றிவாழு
மந்த னீர ரங்கமே.

603. மோடி யோடி லச்சையாய
சாப மெய்தி முக்கணான்
கூடு சேனை மக்களோடு
கொண்டு மண்டி வெஞ்சமர்
தோட வாண னாயிரம்
கரங்க ழித்த வாதிமால்
பீடு கோயில் கூடுநீர
ரங்க மென்ற பேரதே.

604. இலைத்த லைச்ச ரந்துரந்தி
லங்கை கட்ட ழித்தவன்
மலைத்த லைப்பி றந்திழிந்து
வந்து நுந்து சந்தனம்
குலைத்த லைத்தி றுத்தெறிந்த
குங்கு மக்கு ழம்பினொடு
அலைத்தொ ழுகுகா விரிய
ரங்க மேய வண்ணலே.

---

602. அற்ற பற்றர் - பற்றற்றவர். அவர்கள் சூழ்ந்து வாழும் ஊராகிய அரங்கமே எம் அண்ணல் ஊர்.

603. வாணனைக் கொன்றவனாகிய ஆதிமால் உறையும் ஊர் அரங்கமாகும்.

604. இலங்கேசுவரனாகிய இராவணனை அழித்தவன் மேய ஊர் எது? அரங்கமே.

605. மன்னு மாம லர்க்கிழந்தி
வைய மங்கை மைந்தனாய்
பின்னு மாயர் பின்னைதோள்ம
ணம்பு ணர்ந்த தன்றியும்
உன்ன பாத மென்னசிந்தை
மன்ன வைத்து நல்கினாய்
பொன்னி சூழ ரங்கமேய
புண்ட ரீக னல்லையே?

606. இலங்கை மன்ன னைந்தொடைந்து
பைந்த லைநி லத்துக
கலங்க வன்று சென்றுகொன்று
வென்றி கொண்ட வீரனே
விலங்கு நூலர் வேதநாவர்
நீதி யான கேள்வியார்
வலங்கொ ளக்கு டந்தையுள்கி
டந்த மாலு மில்லையே?

607. சங்கு தங்கு முன்கைநங்கை
கொங்கை தங்க லுற்றவன்
அங்க மங்க வன்று சென்ற
டர்த்தெ றிந்த வாழியான்
கொங்கு தங்கு வார்குழல்ம
டந்தை மார்கு டைந்தநீர்
பொங்கு தண்கு டந்தையுள்கி
டந்த புண்ட ரீகனே!

---

605. உன் பாதம் என் சிந்தையில் பொருந்தும்படி வைத்தனை, அரங்கம் மேய தாமரையாய்!

606. இலங்கை மன்னன் தலைகள் வீழ்த்தியவன், திருமால் கிடந்த ஊர் கும்பகோணமாகிய திருக்குடந்தை.

607. மாதர் குடைந்தாடும் நீர் பொங்குகிற திருக்குடந்தை அவன் தலம்.

608. மரங்கெட நடந்த டர்த்து
மத்த யானை மத்தகத்து
உரங்கெடப்பு டைத்தொர்கொம்பொ
சித்து கந்த வுத்தமா
துரங்கம் வாய்பி ளந்துமன்ன
ளந்த பாத வேதியர்
வரங்கொ ளக்கு டந்தையுள்கி
டந்த மாலு மல்லையே?

609. சாலி வேலி தண்வயல்த
டங்கி டங்கு பூம்பொழில்
கோல மாட நீடுதண்கு
டந்தை மேய கோவலா
கால நேமி வக்கரன்க
ரன்மு ரன்சி ரம்மலை
கால னோடு கூடலில்கு
னித்த விற்கை வீரனே!

610. செழுங்கொ ழும்பெ ரும்பனிபொ
ழிந்தி டல்உ யர்ந்தவேய்
விழுந்து லர்ந்தெ ழுந்துவிண்பு
டைக்கும் வேங்க டத்துள்நின்று
எழுந்தி ருந்து தேன்பொருந்து
பூம்பொ ழில்த ழைக்கொழுஞ்
செழுந்த டங்கு டந்தையுள்கி
டந்த மாலு மல்லையே!

---

608. மத்த யானையின் கொம்பை ஒடித்தவன் என்று ஏத்திக் குடந்தை பாடியது.

609. திருக்குடந்தை மேய கோவலனைப் பாடியது.

610. வேங்கடத்துள் நின்று குடந்தையுள் கிடந்தவன் எனத் திருமாலின் மகிமை பாடியவாறு.

611. நடந்த கால்கள் நொந்தவோ
நடுங்கு ஞால மேனமாய்
இடந்த மெய்கு லுங்கவோவி
லங்கு மால்வ ரைச்சுரம்
கடந்த கால்ப ரந்தகாவி
ரிக்க ரைக்கு டந்தையுள்
கிடந்த வாறெ ழுந்திருந்து
பேசு வாழி கேசனே!

612. கரண்ட மாடு பொய்கையுள்க
ரும்ப னைப்பெ ரும்பழம்
புரண்டு வீழ வாளைபாய்கு
றுங்கு டிநெடுந்த காஅய்
திரண்ட தோளி ரணியன்சி
னங்கொ ளாக மொன்றையும்
இரண்டு கூறு செய்துகந்த
சிங்க மென்ப துன்னையே.

613. நன்றி ருந்து யோகநீதி
நண்ணுவார்கள் சிந்தையுள்
சென்றி ருந்து தீவினைகள்
தீர்த்த தேவ தேவனே
குன்றி ருந்த மாடநீடு
பாட கத்து மூரகத்தும்
நன்றி ருந்து வெஃகணைக்கி
டந்த தென்ன நீர்மையே?

---

611. கானகமெல்லாம் நடந்த இராமனின் கால்கள் நொந்தனவோ! பன்றியாகி ஞாலத்தை இடந்த மேனி குலுங்கியதோ? என்றெல்லாம் கேட்பதில் எத்தனை அன்பார்ந்த ஈடுபாடு!

612. திருக்குறுங்குடி நெடுந்தகையே! நரசிங்கன் தானே நீ!

613. பாடகத்து நின்றும், ஊரகத்து அமர்ந்தும், வெஃகாவில் கிடந்தும், கோயில்கொண்ட எம்பெருமானை அழகொழுகப் பாடுகிறார் திருமழிசை ஆழ்வாரான சிவவாக்கியர்!

614. நின்ற தெந்தை யூரகத்தி
ருந்த தெந்தை பாடகத்து
அன்று வெஃக ணைக்கிடந்த
தென்னி லாத முன்னெலாம்
அன்று நான்பி றந்திலேன்பி
றந்த பின்ம றந்திலேன்
நின்ற தும்மி ருந்ததும்கி
டந்த தும்மென் நெஞ்சுளே.

615. நிற்ப தும்மொர் வெற்பகத்தி
ருப்பும் விண்கி டப்பதும்
தற்பெ ருந்தி ரைக்கடலுள்
நாணி லாத முன்னெலாம்
அற்பு தனைந் தசயன
னாதி பூதன் மாதவன்
நிற்ப தும்மி ருப்பதும்கி
டப்ப தும்என் நெஞ்சுளே.

616. இன்று சாதல் நின்றுசாத
லன்றி யாரும் வையகத்து
ஒன்றி நின்று வாழ்தலின்மை
கண்டு நீச றென்கொலோ
அன்று பார ளந்தபாத
போதை யுன்னி வானின்மேல்
சென்று சென்று தேவராயி
ருக்கி லாத வண்ணமே?

---

614. அற்புதமான பாட்டு. தமிழ் இலக்கியத்திலேயே சிரஞ்சீவிக் கவிதை என்று சொல்லக்கூடிய பாடல் வகையிலே சேரவேண்டிய உன்னதமான பாடல் இது! அவன் ஊரகத்தே நின்றதும், பாடகத்தே இருக்கை யமர்ந்ததும், வெஃகாவிலே பள்ளி கொண்டு கிடந்ததும், நான் பிறப்பதற்கு முன்பு நடந்தவை. நான் பிறந்தபின் நடந்த கதை என்ன? வினாடியும் நான் அவனை மறந்தறியேன். எனவே அவன் நின்றதும், இருந்ததும், கிடந்ததும் என் நெஞ்சுக்குள்ளேதான்!

615. நீ தங்குமிடம் என் நெஞ்சம் என்று மேலும் பாடியவாறு.

616. அமர நிலைக்கு ஒரே வழி உன்னை எண்ணுவதே.

617. சண்ட மண்ட லத்தினூடு
சென்று வீடு பெற்றுமேல்
கண்டி வீடி லாதகாத
லின்பம் நாளு மெய்துவீர்
புண்ட ரீக பாதபுண்ய
கீர்த்தி நுஞ்செ விமடுத்து
உண்டு நும்மு றுவினைத்
துயருள் நீங்கி யுய்ம்மினோ.

618. முத்தி றத்து வாணியத்தி
ரண்டி லொன்று நீசர்கள்
மத்த ராய்ம யங்குகின்ற
திட்ட திலிறந் துபோந்து
எத்தி றத்து முய்வதொரு
பாய மில்லை யுய்குறில்
தொத்து றுத்த துண்டுழாயநன்
மாலை வாழ்த்தி வாழ்மினோ.

619. காணி லும்மு ருப்பொலார்செ
விக்கி னாத கீர்த்தியார்
பேணி லும்வ ரந்தரமி
டுக்கி லாத தேவரை
ஆண மென்ற டைந்துவாழும்
ஆதர் காள்எம் மாதியால்
பேணி நும்பி றப்பெனும்பி
ணக்க றுக்க கிற்றிரே.

---

617. வருவினைகளினின்று உய்வதற்குரிய வழியை உணர்த்தியவாறாம்.

618. திருமாலை வாழ்த்துவதே நல்வாழ்வுக்குரிய நல்வழியாம்.

619. திருமாலை நினைந்துநினைந்து பிறவித் துயரை ஒழித்து வாழுங்கள் என்று உபதேசித்தவாறு.

620. குந்த மோடு சூலம்வேல்கள்
தோம ரங்கள் தண்டுவாள்
பந்த மான தேவர்கள்ப
ரந்து வான கம்முற
வந்த வாண னீரைஞ்ஞூறு
தோள்க ளைத்து ணித்தநாள்
அந்த வந்த வாகுலம்
அமர ரேய றிவரே.

621. வண்டு லாவு கோதைமாதர்
கார ணத்தி னால்வெகுண்டு
இண்ட வாண னீரைஞ்ஞூறு
தோள்க ளைத்து ணித்தநாள்
முண்ட னீறன் மக்கள்வெப்பு
மோடி யங்கி யோடிடக்
கண்டு நாணி வாணனுக்குஇ
ரங்கி னானெம் மாயனே.

622. போதில் மங்கை பூதலக்கி
முத்தி தேவி யன்றியும்
போது தங்கு நான்முகன்
மகன வன்ம கன்சொலில்
மாது தங்கு கூறன்ஏற
தூர்தி யென்று வேதநூல்
ஓது கின்ற துண்மையல்ல
தில்லை மற்று ரைக்கிலே.

---

620. வாணனுடைய தோள்களைத் துணித்த ஆற்றலைப் பாடியது.

621. அதே வாணனுக்கு இரக்கமும் காட்டிய தன்மையைப் பாடியது.

622. வேதங்கள் மொழிகின்ற கோபங்கள் அனைத்தும் உண்மையே. உண்மையன்றி வேறில்லை.

623. மரம்பொ தச்சரந் துரந்து
வாலி வீழ முன்னொர்நாள்
உரம்பொ தச்சரந் துரந்த
வும்ப ராளி யெம்பிரான்
வரம்கு றிப்பில் வைத்தவர்க்க
லாது வான மாளினும்
நிரம்பு நீடு போகமெத்தி
றத்தும் யார்க்கு மில்லையே.

624. அறிந்த றிந்து வாமன
னடியி ணைவ ணங்கினால்
செறிந்தெ ழுந்த ஞானமோடு
செல்வ மும்சி றந்திடும்
மறிந்தெ ழுந்த தெண்டிரையுள்
மன்னு மாலை வாழ்த்தினால்
பறிந்தெ ழுந்து தீவினைகள்
பற்ற றுதல் பான்மையே.

625. ஒன்றி நின்று நல்தவம்செய்
தூழி யூழி தோறெலாம்
நின்று நின்ற வன்குணங்க
ளுள்ளி யுள்ளம் தூயராய்
சென்று சென்று தேவதேவ
ரும்ப ரும்ப ரும்பராய்
அன்றி யெங்கள் செங்கண்மாலை
யாவர் காண வல்லரே!

---

623. வாலி வதம் கூறி ஏத்தியவாறு.

624. அரங்கனை வணங்கினால் தீவினைகள் அனைத்தும் நீங்குவது பான்மையான இயல்பாம்.

625. செங்கண் மாலான எங்கள் பிரானைக் காண வல்லவர்கள் யாவர்? தவச் சான்றோர்களே.

626. புன்பு லவழி யடைத்த
ரக்கி லச்சி னைசெய்து
நன்பு லவழி திறந்து
ஞான நற்சு டர்கொண்டு
என்பி லெள்கி நெஞ்சுருகி
யுள்க னிந்தெ ழுந்ததோர்
அன்பி லன்றி யாதியானை
யாவர் காண வல்லரே.

627. எட்டு மெட்டு மெட்டுமாயொ
ரேழு மேழு மேழுமாய்
எட்டு மூன்று மொன்றுமாகி
நின்ற வாதி தேவனை
எட்டி னாய பேதமோடி
றைஞ்சி நின்ற வன்பெயர்
எட்டெ ழுத்து மோதுவார்கள்
வல்லர் வான மாளவே.

628. சோர்வி லாத காதலால்தொ
டக்க றாம னத்தராய்
நீர ராவ ணைக்கிடந்த
நின்ம லன்ந லங்கழல்
ஆர்வ மோடி றைஞ்சிநின்ற
வன்பெ யரெட் டெழுத்தும்
வார மாக வோதுவார்கள்
வல்லர் வான மாளவே.

---

626. அன்பினால் மட்டுமே ஆ;்ியானைக் காணமுடியும். எப்படி;ப்பட்ட அன்பு? ஐம்புலனாகிய புன்புல வழியை அடைத்து 'சீல்' வைத்து, இலச்சினை செய்து, ஞான குகை வழியாக நல்புலவழி திறந்து நற்சுடரைக் கொளுத்தி ஞான தீபத்திலே என்பில் எள்கி நெஞ்சுருகி உள் கனியவேண்டும்!

627. எட்டெழுத்து ஓதுவார்கள் அமரராவர்.

628. அரங்கப் பள்ளியானின் அடிகளை இறைஞ்ச வானாட்சி கிட்டும்.

629. பத்தி னோடு பத்துமாயொ
ரேழி னோடொ ரொன்பதாய்
பத்தி னால்தி சைக்கணின்ற
நாடு பெற்ற நன்மையாய்
பத்தி னாய தோற்றமோடொ
ராற்றல் மிக்க வாதிபால்
பத்த ராம வர்க்கலாது
முத்தி முற்ற லாகுமே?

630. வாசி யாகி நேசமின்றி
வந்தெ திர்ந்த தேனுகன்
நாச மாகி நாளுலப்ப
நன்மை சேர்ப னங்கனிக்கு
வீசி மேல்நி மிர்ந்ததோளி
வில்லை யாக்கி னாயகழற்கு
ஆசை யாம வர்க்கலா
லமர ராக வாகுமே?

631. கடைந்த பாற்க டல்கிடந்து
கால நேமி யைக்கடிந்து
உடைந்த வாலி தன்பினுக்
குதவ வந்தி ராமனாய்
மிடைந்த வேழ்ம ரங்களும
டங்க வெய்து வேங்கடம்
அடைந்த மால பாதமே
யடைந்து நாளு முய்ம்மினோ.

---

629. தசாவதாரம் எடுத்த பிரானிடம் செலுத்துகிற பக்தியே வீடு பேறு நல்கும்.

630. கழலை ஏத்துவார் கதிபெறுவார்.

631. வேங்கடத்தானை அடைந்து உய்யுங்கள்.

632. எத்தி நத்து மொத்துநின்று
யர்ந்து யர்ந்த பெற்றியோய்!
முத்தி றத்து மூரிநீர
ராவ ணைத்து யின்றநின்
பத்து றுத்த சிந்தையோடு
நின்று பாசம் விட்டவர்க்கு
எத்தி றத்து மின்பமிங்கு
மங்கு மெங்கு மாகுமே.

633. மட்டு லாவு தணடுழாய
லங்க லாய்பொ லன்கழல்
விட்டு வீள்வி லாதபோகம்
விண்ணில் நண்ணி யேறினும்
எட்டி னோடி ரண்டெனும்க
யிற்றி னால்ம னந்தனைக்
கட்டி வீடி லாதுவைத்த
காத லின்ப மாகுமே.

634. பின்பி றக்க வைத்தனன்கொ
லன்று நின்று தன்கழற்கு
அன்பு றைக்க வைத்தநாள
றிந்த னன்கொ லாதியான்
தன்தி றத்தொ ரன்பிலா
லறிவி லாத நாயினேன்
என்தி றத்தி லென்கொலெம்பி
ரான்கு றிப்பில் வைத்ததே.

---

632. பற்றற்று நின் பற்றில் நிற்பாருக்கே எங்கெங்கும் பேரின்பம்.

633. ஈடில்லாத காதலுக்கு, இறையன்புக்கு, இன்பமே கிட்டும்.

634. என்மாட்டு எம்பிரான் எண்ணம் எது என்று அறியேனில்லை!

635. நச்ச ராவ ணைக்கிடந்த
நாத பாத போதினில்
வைத்த சிந்தை வாங்குவித்து
நீங்குவிக்க நீயினம்
மெய்த்தன் வல்லை யாதலால
றிந்த னன்றின் மாயமே
உய்த்து நின்ம யக்கினில்ம
யக்க லென்னை மாயனே!

636. சாடு சாடு பாதனே
சலங்க லந்த பொய்கைவாய்
ஆட ராவின் வன்பிடர்ந
டம்ப யின்ற நாதனே
கோடு நீடு கையசெய்ய
பாத நாளு முன்னினால்
வீட னாக மெய்செயாத
வண்ண மென்கொல் கண்ணனே!

637. நெற்றி பெற்ற கண்ண னவிண்ணி
னாத னோடு போதின்மேல்
நற்ற லத்து நாதனோடு
மற்று முள்ள வானவர்
கற்ற பெற்றி யால்வணங்கு
பாத நாத வேத நின்
பற்ற லாலொர் பற்றுமற்ற
துற்றி லேனு ரைக்கிலே.

---

635. என் அப்பனே, பாசங்களில் என்னை மாட்டிவைத்து மயக்காதே!

636. நச்சுப் பொய்கையிலே பாம்பின்மீது நடனம் செய்த நாதனைப் பாடியது.

637. மற்றுப் பற்று இல்லாதே நின்பற்றே பற்றினேன்.

638. வெள்ளை வேலை வெற்புநாட்டி
வெள்ளெ யிற்ற ராவளாய்
அள்ள லாக்க டைந்தவன்
றருவ ரைக்கொ ராமையாய்
உள்ள நோய்கள் தீர்மருந்து
வான வர்க்க ளித்தளம்
வள்ள லாரை யன்றிமற்றோர்
தெய்வம் நான்ம திப்பனே?

639. பார்மி குத்த பாரமுன்னோ
ழிச்சு வாண ருச்சனன்
தேர்மி குத்து மாயமாக்கி
நின்று கொன்ற வென்றிவேர்
மார தர்க்கு வான்கொடுத்து
வைய மைவர் பாலதாம்
சீர்மி குத்த நின்னலாலொர்
தெய்வம் நான்ம திப்பனே?

640. குலங்க ளாய வீரிரண்டில்
ஒன்றி லும்பி றந்திலேன்
நலங்க ளாய நற்கலைகள்
நாவி லும்ந வின்றிலேன்
புலன்க ளைந்தும் வென்றிலேன்
பொறியி லேன்பு னிதநின்
இலங்கு பாத மன்றிமற்றொர்
பற்றி லேனெம் மீசனே!

---

638. வானவர்க்கு அருமருந்தாம் அமுதம் வழங்கிய எம்பிரான் வள்ளல்!

639. பாண்டவருக்கு எப்படியெல்லாம் உதவி செய்தான் கண்ணபெருமான்!

640. புலன்களை வெல்லாதவன்தான் நான், ஆனாலும் நின் பொற்பாதமன்றி மற்றொரு பற்றிலேன் என்று மனித சமுதாயத்தின் குரலாகத் தமது குரலிலே பாடுகிறார் ஆழ்வார் ஆன சித்தர்.

641. பண்ணு லாவு மென்மொழிப்ப
டைத்த டங்க ணாள்பொருட்டு
எண்ணி லாவ ரக்கரைநெ
ருப்பி னால்நெ ருக்கினாய்
கண்ண லாலொர் கண்ணிலேன்க
லந்த சுற்றம் மற்றிலேன்
எண்ணி லாத மாயநின்னை
யென்னுள் நீக்க லென்றுமே.

642. விடைக்கு லங்க ளேழடர்த்து
வென்றி வேற்கண் மாதரார்
கடிக்க வந்த தோள்புணர்ந்த
காலி யாய வேலைநீர்
படைத்த டைத்த திற்கிடந்து
முன்க டைந்து நின்றனக்கு
அடைக்க லம்பு குந்தவென்னை
யஞ்ச லென்ன வேண்டுமே.

643. சுரும்ப ரங்கு தண்டுழாய்து
தைந்த லர்ந்த பாதமே
விரும்பி நின்றி றைஞ்சுவேற்கி
ரங்க ரங்க வாணனே
கரும்பி ருந்த கட்டியே,க
டல்கி டந்த கண்ணனே
இரும்ப ரங்க வெஞ்சரம்து
ரந்த வில்லி ராமனே!

---

641. என்றைக்கும் நீ என்னை விட்டு, நீங்கிவிடாதே.

642. அடைக்கலமாகச் சரணாகதியாக வந்தேன். என்னை அஞ்சல் என்று அபயம் தந்து ஆளவேண்டும்.

643. 'கருப்பங்கட்டியே' என்று கொஞ்சுகிறார். ராமன் புகழை ஏத்தி துதிக்கிறார்.

644. ஊனின் மேய ஆவிநீ
உறக்க மோடு உணர்ச்சிநீ
ஆனில் மேய ஐந்தும்நீஅ
வற்றுள் நின்ற தூய்மைநீ
வானி னோடு மண்ணும்நீவ
ளங்க டற்ப யனும்நீ
யானும் நீய தன்றியெம்பி
ரானும் நீயி ராமனே!

645. அடக்க ரும்பு லன்கள்ஐந்த
டக்கி யாசை யாமலை
தொடக்க றுத்து வந்துநின்தொ
ழிற்க ணின்ற வென்னைநீ
விடக்க ருதிமெய் செயாது
மிக்கொ ராசை யாக்கிலும்
கடற்கி டந்த நின்னலாலொர்
கண்ணி லேனெம் மண்ணலே!

646. வரம்பி லாத மாயைமாய!
வைய மேழும் மெய்ம்மையே
வரம்பி லூழி யேத்திலும்வ
ரம்பி லாத கீர்த்தியாய்
வரம்பி லாத பல்பிறப்ப
றுத்து வந்து நின்கழல்
பொருந்து மாதி ருந்துநீவ
ரஞ்செய் புண்ட ரிகனே!

---

644. எல்லாம் இறைவன் மயமாக நிற்கும் 'அனன்னியம்' என்னும் நிலை.

645. தொடக்கறுத்து வந்து எல்லாத் தொழிலும் நின் தொழில் என்று நின்றேன். கடல் கிடந்த நீயே என் தெய்வம்.

646. பொருந்து மாது இருந்தவனே, நின்கழல் பற்றிநிற்க வரம்தர வேண்டும்.

647. வெய்ய வாழி சங்குதண்டு
வில்லும் வாளு மேந்துசீர்க்
கைய செய்ய போதில்மாது
சேரு மார்ப நாதனே
ஐயி லாய வாக்கைநோய
றுத்து வந்து நின்னடைந்து
உய்வ தோரு பாயம்நீயெ
னக்கு நல்க வேண்டுமே.

648. மறம்து றந்து வஞ்சமாற்றி
யைம்பு லன்க ளாசையும்
துறந்து நின்க ணாசையேதொ
டர்ந்து நின்ற நாயினேன்
பிறந்தி றந்து பேரிடர்ச்சு
ழிக்க ணின்று நீங்குமா
மறந்தி டாது மற்றெனக்கு
மாய நல்க வேண்டுமே!

649. காட்டி னான்செய் வல்வினைப்ப
யன்ற னால்ம னந்தனை
நாட்டி வைத்து நல்லவல்ல
செய்ய வெண்ணி னாரென
கேட்ட தன்றி யென்னதாவி
பின்னை கேள்வ! நின்னொடும்
பூட்டி வைத்த வென்னைநின்னுள்
நீக்கல் பூவை வண்ணனே!

---

647. நான் கடைத்தேறுவதற்கு வழிசெய்ய வேண்டும்.

648. பேரிடர்ச்சுழியிலே இருந்து நீங்குமாறு எனக்கு வரந்தர வேண்டும். மறந்திடாதே.

649. உன்னிடமிருந்து என்னைப் பிரித்துவிடாதே. பூட்டி வைத்த - பிணைத்து இறுக்கிக்கொண்ட. நீக்கல் - நீக்கிவிடாதே.

650. பிறப்பி னோடு பேரிடர்ச்
சுழிக்கண் நின்றும் நீங்குமஃது
இறப்ப வைத்த ஞானநீச
ரைக்க ரைக்கொ டேற்றுமா
பெறற்க ரியநி ன்னபாத
பத்தி யான பாசனம்
பெறற்க ரியமா னனேஎ
னக்கு நல்க வேண்டுமே.

651. இரந்து ரைப்ப துண்டுவாழி
ஏம நீர்நி றத்தமா
வரந்த ரும்தி ருக்குறிப்பில்
வைத்த தாகில் மன்னுசீர்
பரந்த சிந்தை யொன்றிநின்று
நின்ன பாத பங்கயம்
நிரந்த ரம்நி னைப்பதாக
நீநி னைக்க வேண்டுமே.

652. விள்வி லாத காதலால்
விளங்கு பாத போதில்வைத்து
உள்ளு வேன் தூன நோயொ
ழிக்கு மாதெ ழிக்குநீர்
பள்ளி மாய பன்றியாய
வென்றி வீர குன்றினால்
துள்ளு நீர்வ ரம்புசெய்த
தோன்ற லொன்று சொல்லிடே.

---

650. பிறவிக் கடலைத் தாண்டிச் செல்வதற்கு நீயே அருள் செய்யவேண்டும்.

651. உன்னை இரந்து கேட்கிறேன், உன் பாத கமலத்தை நிலையாக நான் நினைத்திருக்கும்படி நீ நினைக்க வேண்டும்.

652. துண்டாகாத முழுமைக்காதலால் உன் பாதத்தைப் பற்றி நிற்கிறேன். இந்த ஊன் நோய் தீரும்படி ஒரு விதி சொல்.

653. திருக்க லந்து சேருமார்ப
தேவ தேவ தேவனே
இருக்க லந்த வேதநீதி
யாகி நின்ற நின்மலா
கருக்க லந்த காளமேக
மேனி யாய நின்பெயர்
உருக்க லந்தொ ழிவிலாது
ரைக்கு மாறு ரைசெயே.

654. கடுங்க வந்தன் வக்கரன்க
ரண்மு ரன்சி ரம்மலை
இடந்து கூறு செய்தபல்ப
டைத்த டக்கை மாயனே
கிடந்தி ருந்து நின்றியங்கு
போதும் நின்ன பொற்கழல்
தொடர்ந்து விள்வி லாததோர்தொ
டர்ச்சி நல்க வேண்டுமே.

655. மண்ணை யுண்டு மிழ்ந்துபின்னி
ரந்து கொண்ட ளந்துமண்
கண்ணு ளல்ல தில்லையென்று
வென்ற கால மாயினாய்
பண்ணை வென்ற வின்சொல்மங்கை
கொங்கை தங்கு பங்கயக்
கண்ண நின்ன வண்ணமல்ல
தில்லை யெண்ணும் வண்ணமே.

---

653. நின் திருநாமத்தையே நான் மொழியும்படி நீ செய்ய வேண்டும் திருமகள் பொருந்திய மார்பனே!

654. திருவடியை எப்போதும், கிடந்து இருந்து நின்று இயங்கும் போதெல்லாம், விடாத தொடர்பைத் தரவேண்டும்.

655. தாமரைக்கண்ணனே, நின்னைப் பற்றி எவ்வண்ணமும் நான் எண்ணும் வண்ணமன்று!

656. கறுத்தெ திரிந்த காலநேமி
காலனோடு கூடஅன்
றறுத்த வாழி சங்குதண்டு
வில்லும் வாளு மேந்தினாய்
தொறுக்க வந்த வூனமஃதொ
ழிக்க வன்று குன்றம்முன்
பொறுத்த நின்பு கழ்க்கலாலொர்
நேச மில்லை நெஞ்சமே.

657. காய்சி னந்த காசிமன்னன்
வக்க ரன்ப வுண்டிரன்
மாசி னத்த மாலிமான்சு
மாலி கேசி தேனுகன்
நாச முற்று வீழநாள்க
வர்ந்த நின்க ழற்கலால்
நேச பாச மெத்திறத்தும்
வைத்தி டேனெம் மீசனே.

658. கேடில் சீர்வ ரத்தனாய்க்கெ
டும்வ ரத்த யனரன்
நாடி னோடு நாட்டமாயி
ரத்தன் நாடு நண்ணினும்
வீட தான போகமெய்தி
வீற்றி ருந்த போதிலும்
கூடு மாசை யல்லதொன்று
கொள்வ னோகு றிப்பிலே?

---

656. உன் புகழுக்கல்லாமல் வேறு எதிலும் என் நெஞ்சில் வேறு நேசமில்லை.

657. உன் திருவடிகளையே நேசிப்பதல்லால் மற்றில்லை.

658. நின்னோடு கூடுகின்ற ஆசையன்றி வேறொன்றும் கொள்வேனலேன்.

659. சுருக்கு வாரை யின்றியேசு
ருங்கி னாய்சு ருங்கியும்
பெருக்கு வாரை யின்றியேபெ
ருக்க மெய்து பெற்றியோய்
செருக்கு வார்கள் தீக்குணங்கள்
தீர்த்த தேவ தேவனென்று
இருக்கு வாய்மு னிக்கணங்க
ளேத்த யானு மேத்தினேன்.

660. தூய னாயு மன்றியும்சு
ரும்பு லாவு தண்டுழாய்
மாய நின்னை நாயினேன்வ
ணங்கி வாழ்த்து மீதெலாம்
நீயு நின்கு றிப்பினிற்பொ
றுத்து நல்கு வேலைநீர்ப்
பாய லோடு பத்தர்சித்தம்
மேய வேலை வண்ணனே!

661. வைது நின்னை வல்லவாப
ழித்த வர்க்கும் மாறில்போர்
செய்து நின்னை செற்றதீயில்
வெந்த வர்க்கும் வந்துன்னை
எய்த லாகு மென்பராத
லாலெம் மாய நாயினேன்
செய்த குற்றம் நற்றமாக
வேகொள் ஞான நாதனே!

---

659. முனிவர்கள் எல்லாம் உன்னையே தீக்குணங்களைத் தீர்த்துவைத்த தேவதேவன் என்று ஏத்துவது காண்கிறேன். நானும் அவ்வாறே ஏத்துகிறேன்.

660. பக்தர்களின் சித்தத்தில் பாயலோடு மேயவன்நீ.

661. செய்த குற்றங்களை யெல்லாம் நற்றங்களாக, குணங்களாக, நீ கொள்ளவேண்டும்.

656. கறுத்தெ திரிந்த காலநேமி
கால னோடு கூடஅன்
றறுத்த வாழி சங்குதண்டு
வில்லும் வாளு மேந்தினாய்
தொறுக்க வந்த வூனமஃதொ
ழிக்க வன்று குன்றம்முன்
பொறுத்த நின்பு கழ்க்கலாலொர்
நேச மில்லை நெஞ்சமே.

657. காய்சி னந்த காசிமன்னன்
வக்க ரன்ப வுண்டிரன்
மாசி னத்த மாலிமான்சு
மாலி கேசி தேனுகன்
நாச முற்று வீழநாள்க
வர்ந்த நின்க ழற்கலால்
நேச பாச மெத்திறத்தும்
வைத்தி டேனெம் மீசனே.

658. கேடில் சீர்வ ரத்தனாய்க்கெ
டும்வ ரத்த யனரன்
நாடி னோடு நாட்டமாயி
ரத்தன் நாடு நண்ணினும்
வீட தான போகமெய்தி
வீற்றி ருந்த போதிலும்
கூடு மாசை யல்லதொன்று
கொள்வ னோகு றிப்பிலே?

---

656. உன் புகழுக்கல்லாமல் வேறு எதிலும் என் நெஞ்சில் வேறு நேசமில்லை.

657. உன் திருவடிகளையே நேசிப்பதல்லால் மற்றில்லை.

658. நின்னோடு கூடுகின்ற ஆசையன்றி வேறொன்றும் கொள்வேனலேன்.

659. சுருக்கு வாரை யின்றியேசு
ருங்கி னாய்சு ருங்கியும்
பெருக்கு வாரை யின்றியேபெ
ருக்க மெய்து பெற்றியோய்
செருக்கு வார்கள் தீக்குணங்கள்
தீர்த்த தேவ தேவனென்று
இருக்கு வாய்மு னிக்கணங்க
ளேத்த யானு மேத்தினேன்.

660. தூய னாயு மன்றியும்சு
ரும்பு லாவு தண்டுழாய்
மாய நின்னை நாயினேன்வ
ணங்கி வாழ்த்து மீதெலாம்
நீயு நின்கு றிப்பினிற்பொ
றுத்து நல்கு வேலைநீர்ப்
பாய லோடு பத்தர்சித்தம்
மேய வேலை வண்ணனே!

661. வைது நின்னை வல்லவாப
ழித்த வர்க்கும் மாறில்போர்
செய்து நின்னை செற்றதீயில்
வெந்த வர்க்கும் வந்துன்னை
எய்த லாகு மென்பராத
லாலெம் மாய நாயினேன்
செய்த குற்றம் நற்றமாக
வேகொள் ஞான நாதனே!

---

659. முனிவர்கள் எல்லாம் உன்னையே தீக்குணங்களைத் தீர்த்துவைத்த தேவதேவன் என்று ஏத்துவது காண்கிறேன். நானும் அவ்வாறே ஏத்துகிறேன்.

660. பக்தர்களின் சித்தத்தில் பாயலோடு மேயவன்நீ.

661. செய்த குற்றங்களை யெல்லாம் நற்றங்களாக, குணங்களாக, நீ கொள்ளவேண்டும்.

662. வாள்க ளாகி நாள்கள்செல்ல
நோய்மை குன்றி மூப்பெய்தி
மாளு நாள நாதலால் வ
ணங்கி வாழ்த்தென் நெஞ்சமே
ஆள தாகு நன்மையென்று
நன்கு ணர்ந்த தன்றியும்
மீள்வி லாத போகம்நல்க
வேண்டும் மால பாதமே.

663. சலங்க லந்த செஞ்சடைக்க
றுத்த கண்டன் வெண்டலைப்
புலன்க லங்க வுண்டபாத
கத்தன் வன்து யர்கெட
அலங்கல் மார்வில் வாசநீர்கொ
டுத்த லன்ன டுத்தசீர்
நலங்கொள் மாலை நண்ணும்வண்ண
மெண்ணு வாழி நெஞ்சமே!

664. ஈன மாய வெட்டுநீக்கி
யேத மின்றி மீதுபோய்
வான மாள வல்லையேல்வ
ணங்கி வாழ்த்தென் நெஞ்சமே
ஞான மாகி ஞாயிறாகி
ஞால முற்று மோரெயிற்று
ஏன மாயி டந்தமூர்த்தி
யெந்தை பாத மெண்ணியே.

---

662. மாறுபாடு இல்லாத நீங்கல் இல்லாத பேரின்பத்தை எனக்கு நல்கவேண்டும்.

663. நெஞ்சமே, நலங்கள் நிரம்பிய, நலங்களையே கொள்கிற திருமாலையே நீ எண்ணுவாயாக!

664. ஞானமாய், ஞாயிறாய், ஞாலமுழுதும் ஓர் பன்றியாகி இடந்தவன் என் அப்பனாகிய மூர்த்தியை வணங்கி வாழ்த்துவாய் நெஞ்சே!

665. அத்த னாகி யன்னையாகி
யாகு மெம்பி ரானுமாய்
ஒத்தொவ் வாத பல்பிறப்பொ
ழித்து நம்மை யாட்கொள்வான்
முத்த னார்மு குந்தனார்பு
குந்து நம்முள் மேவினார்
எத்தி னாலி டர்க்கடல்கி
டத்தி யேழை நெஞ்சமே!

666. மாறு செய்த வாளரக்கன்
நாளு லப்ப அன்றிலங்கை
நீறு செய்து சென்றுகொன்று
வென்றி கொண்ட வீரனார்
வேறு செய்து தம்முளென்னை
வைத்தி டாமை யால்நமன்
கூறு செய்து கொண்டமுந்த
குந்த மெண்ண வல்லனே.

667. அச்சம் நோயொ டல்லல்பல்பி
றப்பு வாய் மூப்பிவை
வைத்த சிந்தை வைத்தாக்கை
மாற்றி வானி லேற்றுவான்
அச்சு தனநந்த கீர்த்தி
யாதி யந்த மில்லவன்
நச்சு நாக ணைக்கிடந்த
நாதன் வேத கீதனே.

---

665. நெஞ்சமே, அவன் நம்முள் புகுந்து மேவினான். இனி ஏன் நீ இடர்க்கடலிலே கிடக்கிறாய், பேதையே!

666. இலங்கையை வென்ற கதைசொல்லி, எமவாதனை நீக்கும் எண்ணம் சொல்லி ஏத்துகிறார்.

667. அச்சம், நோய், அல்லல், பிறப்பிறப்புத் தொடர், மூப்பு ஆகிய அனைத்தையும் கைமாற்றுகிறவன் அச்சுதன், அனாதியான பரம்பொருள், வேதகீதன்!

668. சொல்லி னும்தொ ழிற்கனும்தொ
டக்க றாத வன்பினும்
அல்லு நன்ப கலினோடு
மான மாலை காலையும்
அல்லி நாண்ம லர்க்கிழத்தி
நாத பாத போதினை
புல்லி யுள்ளம் விள்விலாது
பூண்டு மீண்ட தில்லையே.

669. பொன்னி சூழ ரங்கமேய
பூவை வண்ண மாயகேள்
என்ன தாவி யென்னும்வல்வி
னையி னுள்கொ ழுந்தெழுந்து
உன்ன பாத மென்னநின்ற
வொண்சு டர்க்கொ ழுமலர்
மன்ன வந்து பூண்டுவாட்ட
மின்றி யெங்கும் நின்றதே.

670. இயக்க றாத பல்பிறப்பி
லென்னை மாற்றி யின்றுவந்து
உயக்கொள் மேக வண்ணன்நண்ணி
யென்னி லாய தன்னுளே
மயக்கி னான்தன் மன்னுசோதி
யாத லாலென் னாவிதான்
இயக்கெ லாம றுத்தறாத
வின்ப வீடு பெற்றதே.

---

668. திருமகள் கொழுநன் ஏத்தி அவன் பாத கமலத்தைப் புல்லிய உள்ளம் அதிலிருந்து மீண்டதில்லையே!

669. நின்னை நினைத்தாலே போதும். வாட்டம் இல்லாமல் இன்பமயம் ஆயிற்று என்று மனமுருகிப் பாடுகிறார் ஆழ்வார்.

670. எத்தனையோ பிறவிதனில் என்னை மாற்றி இன்றுவந்து என்னிலாய தன்னுள்ளே மயக்கினான். சோதியில் கூடினேன். ஆதலால் என் உயிர் தனது ஓட்டங்கள் நீங்கி, நீங்காத வீடுபேறு பெற்றது என்று மன உருக்கத்தோடு நெகிழ்கிறார் சித்தர்பெருமான்!

இதோடு நிறைவுபெறும் 120 பாடல்கள் அதாவது 551 முதல் இதுவரை திருமழிசை இயற்றிய என்று தொகுக்கப்பெற்று இந்தப் பாடலுடன் திவ்வியப் பிரபந்தம் திருச்சந்த விருத்தம் முடிவுறுகிறது. சிவ வாக்கியம் என்ற நூல் மேலும் செல்கிறது. இந்த 120 பாடல்களும் சிவவாக்கியம் என்னும் தொகுப்பின் நடுவில் இடம்பெற்றுப் பாடல்கள் தொடர்கின்றன.

671. ஊனெ ழுத்து யிரெழுத்து
ஊமை யெழுத் தானதும்
மானெ ழுத்து மாரெழுத்து
மாயெ ழுத்து வானதும்
பானெ ழுத்து பாரெழுத்து
பாசெ ழுத்து வானதும்
தோனெ ழுத்துக் கூடெழுத்து
கூர்ந. மச்சி வாயமே.

672. கல்லு வெள்ளி செம்பிரும்பு
கண்டு ருக்கள் செய்துமே
வல்ல தேவ ரூபபேத
மங்க மைத்துப் போற்றிடில்
தொல்லை பற்றி டப்பெருஞ்
சுகந்த ரும்மோ சொல்லவாய்
இல்லை யில்லை யில்லையில்லை
என்றும் இல்லை இல்லையே.

673. காடு மேடு குன்றுபள்ளம்
கானி னாறு சுற்றியும்
நாடு தேசம் என்றலைவர்
நாதன் பாதங் காண்பரோ
கூடு விட்ட கன்றுனாவி
கூத்த னூர்க்கே சேர்தலால்
வீடு பெற்றரன் பதத்தில்
வீற்றி ருக்க ஓர்ந்திடாய்.

---

671. எழுத்தும் நிலையும் என்ற பகுதியிலே விளக்கியுள்ள ஒலியாற்றலும் ஒளியாற்றலுமாகி உய்வுதரும் நிலைகளைப் பாடுகிறார் சிவவாக்கியர். திருமழிசை ஆழ்வாரின் பெயரில் தொகுக்கப்பெற்ற 120 பாடல்கள் சிவவாக்கியம் என்ற தொகுப்பின் மத்தியில் இடம்பெற்று 670ஆம் பாடலுடன் முடிகின்றன.

672. உருவ வேறுபாடுகள் ஆக்கிப் போற்றி செய்வதால் தொல்லை ஏற்படுமே தவிர சுகமில்லை என்பது ஞான நோக்கு. அதாவது தெய்வங்களுக்குள் போட்டியும் பொறாமையும் ஏற்றிவிடுகிறது மனித சமுதாயம் என்பது கருத்து!

673. இதுவும் முன் பாடலோடு இயைபு உடையது காண்க.

674. தங்கள் தேக நோய்பெறில்
தங்கள் கோயில் சென்றுமே
பொங்கல் வைத்தே நேர்ந்தவாறு
பூசை பலி யிட்டிட
அங்கம் மிக்க அவதியால
நாளுந் தேஞ்சி முஞ்சூராய்
உங்கள் குலதெய் வமுங்க
ளுருகு லைப்ப துண்மையே.

675. நேச முற்றுப் பூசைசெய்து
நீறு பூசித் சந்தனம்
வாச மோட ணிந்துகொண்டு
வாயி னாலே மந்திர
மோசம் பொய்பு னைசுருட்டு
முற்றி லுங்செய் மூடர்நான்
வேச ரிகளம் புரண்ட
வெண்ணீ ராரு மேனியே.

676. கட்டை யாந்செய் தேவருங்
கல்லி னாற்செய் தேவரும்
இட்ட மாக நிற்பர்முன்னே
எண்ணி லாத வகையிலே
சட்டை யாற்செய் தேவருஞ்
சாணி யாற்செய் தேவரும்
வெட்ட வெளிய தன்றிமற்ற
வேறு தெய்வ மில்லையே.

---

674. இதுவும் முன் பாடலோடு ஒத்தது. குலதெய்வ பூசனை இன்பம் தருகிற முறையில் இயற்றவேண்டும் என்றவாறு.

675. பொய்யும் மோசமும் செய்கிறவர்களின் இக்கதியை முன்பாடலிலும் இவ்வாறே கூறியுள்ளமை காண்க.

676. உருவ வழிபாடு பற்றி இந்தக் கருத்தை மீட்டும் மீட்டும் பாடுகிறார். சிவவாக்கியர். கருத்து ஒன்றே எனினும் கவிமொழி கருதித் தொகுப்பிலே சேர்கிறது.

677. பேரி ழவுக ருமஞ்செய்த
பிண்ட சாத உண்டையை
ஊரி லுள்ள பேர்கள்முன்னர்
காகத் திட்ட ருந்திடச்
சேர மோட்ச வீட்டிலே
செல்வ ரோரு திபெறப்
பாரி னில்மடிந் தோர்நாளும்
பாழ்ந ரகி லெய்வரே.

678. எத்தி சையெங் கெங்குமோடி
யெண்ணி லாந திகளிற்
சுத்தி யுந்த லைமுழுகச்
சுத்த ஞானம் எய்துமோ
பத்தி யோடு பாதையூடு
பணிந்தி டாத பாவிகாள்
முத்தி யின்றி பாழ்நரகில்
மூழ்கி நொந்த லைவிரே.

679. ஆசை கொண்ட னுதினமு
மன்னி யர்பொ ருளினை
மோசஞ் செய்த பகரிக்க
முற்றி லும்அ லைபவர்
பூசை யோடு நேமநிட்டை
பூரிக்கச்செய் பாதகாள்!
காசி னியிலே மூநரகைக்
காத்தி ருப்ப துண்மையே.

---

677. திதி கொடுத்தல், சிராத்தம் என்றெல்லாம் சடங்குகள் உள்ளன. இவைபற்றி இவ்வாறே கபிலரும் பாடுவது காண்க.

678. பல ஊர்கள் சென்று நீராடி விட்டால் ஞானி ஆகிவிட முடியுமா? இதய சுத்தியே முக்கியம் என்றவாறு.

679. பிறர் பொருளைக் கவர்கிறார்கள் பூசையும் வேடமும் கொண்டு ஏமாற்றுவார்கள். காசினியில் அவர்களின் முடிவு நரகமே.

680. காய கற்பம் செய்வதாகக்
கண்ட வர்கள் எண்ணிட
மாய வித்தை செய்துவித்த
மாய மோசஞ் செய்பவர்
நேய மாகக் கட்குடித்து
நேர பினைத் தின்பதால்
நாய தாக நக்கிமுக்கி
நாட்டி னில லைவரே.

681. நீரி னிற்கு மிழியொத்த
நிலையிலா தகாய மென்று
ஊரி லுள்ள பேர்கள்முன்
உரைத்து மோச மாகவே
சீரி னிலு னக்குஞான
சித்தி செய்வேன் பாரென
நேரி னிற்பிறர் பொருளை
நீள வுங்கைப் பற்றுவார்.

682. செம்மை சேர்ம ரத்திலே
சிலைத லைகள் செய்கிறீர்
கொம்மை யற்ற கிளையில்பாதக்
குறடு செய்து நடக்கிறீர்
நம்முளே விளங்குவோனைநாடி
நோக்க வல்லிரேல்
இம்மை யில்நீர் இன்பமாக
என்றும் வாழ லாகுமே.

---

680. இதே கருத்து முன் பாடலிலும் வந்துள்ளது.

681. இதுவும் அவ்வாறே. சிவவாக்கியர் காலத்தில் பல போலிகளைக் கண்டு அவர் சீறியுள்ளமை காண்க.

682. இதே பாட்டின் வரிமாற்றங்கள் முன்பாடலிலும் காண்க. சித்தர்களுக்கு உருவ வழிபாட்டிலே தோய்வில்லை என்பது ஒருபுறமிருக்க, ஆராதனை என்ற சடங்குகளை வைத்து மக்கள்முன் வேடதாரிகள் செய்கிற ஏமாற்றங்களைக் கண்டு விசனமும் வேதனையும் பொங்குகின்றன என்பது வெளிப்படை.

683. யோக ஜாடை காட்டுவார்
உயர வும்ள ழும்புவார்
வேக மாக அட்டசித்து
வித்தை காட்டி மருட்டுவார்
மோக மாக மாதரை
முயக்கி மயக்கிக் கவருவார்
பேயது பிடித் தவன்போற்
பேரு லகிற் சாவரே.

684. வாதஞ் செய்வேன் வெள்ளியும்பொன்
மாத்து யர்நத தங்கமும்
போத மாகச் செய்திடப்
பொன்ப ணங்கள் தாவென
நீத மான மோசமாய்க்கை
நீட்டி வாங்கி ஏமாற்றியே
காத தூர மோடிச்செல்வர்
கண்மறைத்து நொடியிலே.

685. காவி யுஞ்ச டைமுடி
கமண்ட லங்க ளாசனம்
கூவி வேலை வாங்குவதற்குக்
குருவே என்னும் சீடர்கள்
தேவி யைய லையவிட்டுத்
தேச மெங்கும் சுற்றியே
பாவி யெனவீ டெலாம்
பருக்கை கேட்ட லைவரே.

---

683. இதுவும் ஒரு சில மாற்றங்களுடன் முந்திய பாடலைப் போன்றதே.

684. இரசவாதம் என்ற மோசடியைச் செய்கிறவர்களும் மகான்கள் போலே வேட மோசடி செய்வதைச் சாடுகிறார். இதே போன்று முன்பாடலிலும் வந்துள்ளது.

685. இதுவும் சில மாற்றங்களுடன் வந்துள்ளது.

686. முத்தி சேர சித்தியிங்கு
முன்ன ளிப்பேன் பாரெனச்
சத்தி யங்கள் சொல்லியெங்குஞ்
சாமி வேடம் பூணடவர்
நித்தி யம்ப சிகள்ஆர
நீதி ஞானம் பேசியே
எத்தி யாய்ப்ப ணம்பறித்து
ஏழ்ந ரகில் வீழ்வரே.

687. பாதக் குறடிட் டுக்காலிற்
பாரச் சடை சுற்றியும்
போத னாசி ரியர்பக்கம்
போக்கு வரத்த தாகவும்
நீத மாய்மெள னச்செய்கை
நேரிற் காட்டிச் சாடைசெய்
சூது புரிசாமிகளாய்த்
தொல்லு லகு ழல்வரே.

688. எட்டெ ழுத்து ரெண்டெழுத்து
யேக மோரெ ழுத்துடன்
தொட்டெ ழுத்து விட்டெழுத்து
தோணு யிரெ ழுத்ததில்
கட்டெ ழுத்து காலெழுத்து
காட்சி யெழுத் தானதும்
ஒட்டெ ழுத்து வோரெழுத்து
வூமை யெழுத் தானதே.

---

686. ஆசாரியன் போன்று வெளிவேடம் செய்வது ஏமாற்றுக் கச்சவடம்! முன் பாடலினிற்று சில சொல் மாற்றங்களுடன் அமைந்துள்ளது இது.

687. சிவவாக்கியருக்குப் போலிகளிடம் உள்ள வேதனையும் வேகமும், மனித அபிமானத்திலிருந்து பிறப்பவை.

688. எழுத்துநிலை விளக்கம் காண்க.

689. அதி யாய ரிக்குமுன்னம்
அங்கெ ழுந்த வட்சரம்
சோதி யாய ரிக்குமுன்னஞ்
சொல்லு கின்ற வட்சரம்
வாதி யாய ரிக்குமுன்னம்
நிற்கு மந்த வட்சரம்
நீதி யாய ரிக்குமுன்னம்
நின்ற தஞ்செ ழுத்ததே.

690. ஊமை யெழுத் தானதே
வுடல தாய மைந்தது
ஓமெ ழுத்து வானதே
அகில மாய்ச னித்தது
ஆமெ ழுத்து வானதே
அகில மாக உதித்தது
தாமெ ழுத்து மூன்றிலுஞ்
சராச ரங்க ளானதே.

691. இச்ச கஞ்ச னித்ததுவு
மீச னைந்தெ ழுத்திலே
மெச்ச வுஞ்ச ராசரங்கள்
மேவு மைந்தெ ழுத்திலே
உச்சி தப்ப லவுயிர்கள்
ஓங்க லஞ்செ ழுத்திலே
நிச்ச யமெய்ஞ் ஞானபோத
நிற்கு மைந்தெ ழுத்திலே.

---

689. அஞ்செழுத்தின் தொன்மை பாடியவாறு.

690. ஓங்காரப் பிரணவத்தின் கூறு சொன்னவாறு.

691. ஐந்தெழுத்து பற்றிய முன் பாடல்கள் காண்க.

692. சாத்தி ரங்கள் பேசிப்பேசி
சமமெ லாம்பு ரட்டுசெய்து
நேத்தி ரங்கடெ வெய்யோனை
நேரி லேகண் பார்த்துநின்றீர்
பாத்தி ரம்அ றிந்துமோன
பத்தி செய்ய வல்லிரேல்
சூத்தி ரப்ப டியாருஞ்
சித்த ராவ ரங்ஙனே!

693. காணாது கிட்டா துகைத்தே
கண்டு கொள்ள எட்டாது
தோணா துதொ டர்ந்திடாது
தொட்டி டவந் திடாது
ஈனி டாதி சைந்திடாது
விங்கு மங்கு மல்லது
நாணா துநத் தாதுசொக்கி
நாடெங் கெங்கு முள்ளதே.

694. ஆய னைந்தெ ழுத்திலே
யானு மைந்தெ ழுத்திலே
மாய னைந் தெழுத்திலே
மதலி யைந்தெ ழுத்திலே
காய மைந்தெ ழுத்திலே
காட்சி யைந்தெ ழுத்திலே
வாயு மைந்தெ ழுத்திலே
வைய மைந்தெ ழுத்திலே.

---

692. வேடதாரிகளை வெகுண்ட முன் பாடலிலிருந்து சில சொற்கள் மாறுபட்டுள்ளன.

693. இரகசியப் பொருள் என்பது ஞானக் கல்வியின் நுட்பம். அது ஆற்றலின் வடிவானது. பருப்பொருள் அன்று என்பதைப் பாடுகிறார்.

694. ஐந்து பூதங்களும் தெய்வ ஆற்றல்களும் அனைத்தும் ஐந்தெழுத்தில் அடக்கம்.

695. அஞ்செ ழுத்து நெட்டெழுத்து
ஐம்பத் தோரெ ழுத்தது
நெஞ்சே ழுத்து நெட்டெழுத்து
நீடூழி தழைத்தது
தஞ்செ ழுத்துச் சுட்டெழுத்து
சூட்ச மாதி சூட்சமாம்
மிஞ்செ ழுத்து மெய்யெழுத்து
மேலே ழுத்தும் ஒன்றிலே.

696. ஏய்க்கும் ஐந்தெ ழுத்தினையும்
எண்ணி யேபி டித்திடார்
வாய்க்கு வந்த மட்டுளறி
சாதி பேதம் ஓதுவார்
நோய்க்கு ளேம டிந்துநாளும்
நுண்பொ ருள்தான் காண்கிலார்
பாய்க்கு ளேப டுத்துவாதைப்
பட்டு ழுன்று மாய்வரே.

697. சிதம்ப ரத்தின் சக்கரச்
சித்த றிந்தி லாதபேர்
நிதம்ப ரமசி வனையுமே
சிந்தனைசெய் பாதகர்
சதம்ப ரமத்தி யானியாகச்
சாத்தி ரநூல் ஆய்குவர்
அதம்ப ரவஉ லகினில்
அங்கும் இங்கும் அலைவரே.

---

695. எழுத்து நிலையின் பிறிதொரு வடிவம்.

696. ஐந்தெழுத்து என்பது இயக்கம் தெரியாதவரை ஏமாற்றிவிடும். திருமூலர் குதிரை கீழே தள்ளிவிடும் என்று பாடியவாறு.

697. சிதம்பர இரகசியம் என்ற ஆஞ்ஞா சக்கரம் உணராதவர் நிலையைப் பாடியது.

698. மனவு றுதி தானிலாத
மட்டிப் பிண மாடுகள்
சின முறப் பிறர்பொருளைச்
சேக ரித்து வைத்ததைத்
தினந் தின மூரெங்குச் சுற்றி
திண்டிக் கேய லைபவர்
இனமதிற் பலர்கள் வையு
மின்ப மற்ற பாவியே.

699. உப்புப் பாண்ட மோட்டவிங்
கோடி டுமு யிரடா
கப்ப டிக்கு ஊனடாமுற்
கால னுக்கி றையடா
ஒப்ப டிசெய் நெல்லடா
வுமிப்ப தர்க ரிக்கடா
எப்ப டிக்கி ருக்கினும்
இறப்ப துண்மை யுண்மையே.

700. உச்சி னேருண் ணாவின்மே
லோர்வி ளக்கெ ரியுதாம்
இச்சை யற்ற ஞானிகட்கு
எங்கி னுந்தெ ரியுதாம்
அச்ச மட்ட வாசிகுதிரைக்
கங்கு படியும் வைத்திடில்
உச்சி யிலெ றியுஞ்சோதி
யுள்ளொ ளியைக் காணுமே.

---

698. திண்டி - சாப்பாடு. பிறர் உழைப்பில் வயிறு வளர்ப்பவர் என்னும் நிலையில் உள்ள போலி ஆசாரக் காரரைச் சாடியது.

699. உயிருக்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பு எப்படி என்பதைச் சிரிப்பொடு பாடுகிறார்.

700. அழகான பாடல். உச்சிக்கு நேரே தெரிகிற தீபம் என்பது பற்றி முற்பகுதியில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. வாசி யோகமாகிய சரஞானமும் மூலக்கனலும் கண்டு தேர்ந்த ஞானியின் நிலையை அற்புதமாகச் சித்திரிக்கிற கவிதை.

701. எங்கு மாறு வீட்டிலெண்ணெய்
யில்லாத் தீப மேற்றியும்
மங்கி டாதெ ரியுதுபார்
மாணிக் கவொ ளியதாய்ப்
பொங்கு மாய்ம ணிவிளக்கைப்
பூரிக் கத்த ரிசித்தோர்
சங்கை யற்றுத் தன்னைத்தா
னறிந்த வர்க ளாவரே.

702. சங்கு வொன்று தாரைரெண்டு
சதங்கை யின்சி லம்பொலி
எங்கி னுமுழங் குவோசை
யிட்டு நன்ன டம்புரி
சங்க ரன்ச டாதரனந்
சாம்ப விம னோகரன்
திங்க ளைச்ச டையணிந்தோன்
சீர்ப தமுங் காண்பரோ.

703. வாசிக் குதிரை மீதிலேறி
மண்ட லங்கள் தாண்டியும்
நாசி வழியி லேறியோக
நாட்ட முமறி கிலார்
பூசிக் கவமு தமுண்டு
பொன்ம யமதா கினோர்
வீசிப் பாசக் கையுளோனை
வென்று விண்ணை யாள்வரே.

---

701. உள்ளே எரிகிற ஞான தீபமாகிய பெருஞ்சுடரைக் கண்டவர்கள் தன்னை அறிந்து இன்புறும் ஞானிகளாவர்!

702. உடம்புக்குள் 'செவியின்றிக் கேட்கும்' உள்ளொலி வினக்கும் இந்த அழகிய பாடல்!

703. வாசி யோகம் இயற்றி அமுதம் உண்ட ஞானியர் பாசக்கயிறு பிடித்த காலனை வென்று வானை ஆள்கிற அமரர்களே.

704. மூல மானு வீட்டினில்
முளைத்தெ ழுந்த முச்சுடர்
காலி ரண்டு மாறிமாறிக்
ககன மீதெ ழும்பியும்
தூல வீடு யெட்டடியிற்
சொக்கித் தூங்க வல்லவர்
சீல மேவு ஞானியாகிச்
சிற்ப ரலைக் காண்பரே.

705. நந்த வனமா றுமனை
நாலைந் துபேர் காவலர்
சொந்த வீடு காதமெட்டிற்
சுற்றி வர வல்லவர்
திந்தை பற்றுத் தில்லை வெளியில்
நிர்த்த னத்தைக் கண்டிட
சந்த தம்பி றப்பிறப்புத்
தான கன்று வாழ்வரே.

706. வீடு மேலு மாறடுக்கு
விண்ண ளாவக் கட்டியும்
கூடு தொண்ணூற் றாறுபேரைக்
கூட்டி யுற வாடியும்
தேடும் பொருள் வஸ்துஒன்றாய்
சிந்தை யில மைத்தவர்
நாடு தேசங் காடுவிட்டு
நற்ப தவி சேர்வரே.

---

704. மூலக்கனலை எழுப்பி மெய்யுறக்கமாகிய ஒழுக்கம் கூடியவர்கள் சிற்பரனைக் கண்டவர்கள்!

705. ஆறாதார நிலையம் கண்டு தில்லைவெளி கூடியவர் கூத்தனின் ஆடலைக்கண்டு பிறப்பிறப்பற்று வாழ்வர்.

706. தொண்ணூற்றாறு தத்துவங்களையும் கண்டு பழகி ஆறாதாரம் கூடியவர்கள் ஞானிகள். அவர்களே சிவபதமாகிய நற்பதம் கொண்டவர்கள்!

707. வெற்றி யாரடுக்கு மேலும்
விண்ண டுக்கு மானது
சுற்றி யெங்கும் வேவுகாரர்
தொடர்ந்து லாவு நற்றலம்
முற்றி லுமாக் கினைகொண்டு
மோக மற்று வாழ்பவர்
நெற்றி யிற்ச தாசிவனும்
மனோன் மணியும் நிற்பதே.

708. வழுத்த மாரடுக்கு மேலும்
வாய் வடுக்கு மானது
பழுத்தி டும்ப மமதுவாய்
பண்பு னது நற்றலம்
சுத்தி யில்வி சித்திகொண்டு
சுத்த மாயங் குள்ளவர்
கழுத்தி னில்ம யேஸ்வரன்
மயேஸ்வ ரியைக் காண்பதே.

709. வாரி லாற டுக்குமேலு
பத்த டுக்கு மானது
நேரி னில்ல மைந்தநித்தியா
னந்த மான நற்றலம்
சீரி ணீல னாகதத்திற்
சேர வுமங் குள்ளவர்
பாரி னில்ருத் திரன்ருத்திரி
வாழ்வி டவுங் காண்பரே.

---

707. ஆறு ஆதாரங்களைக் கடந்து ஆற்றல்களை ஆக்ஞை கொண்டு ஆக்ஞையிலே சேர்ந்தவர்கள் மோகமற்றவர்கள். நெற்றியில் சதாசிவனும் மனோன்மணியும் உடன் வாழ்வர்கள்.

708. ஆதார நிலைகளின் ஆற்றல்களைப் பாடியவாறு. மந்திர மேனிச் சக்கரம் காண்க.

709. அனாகதம் பற்றிய சிவயோகியார் மேற்கோளில் வந்துள்ள விளக்கம் காண்க.

710. சந்தி யாறடுக் குமேலு
சம்ப ரமான கட்டடம்
பந்தி யாய்ப்ப திதர்கூடி
பக்தி செயு நற்றலம்
முந்தி யும்ம ணிபூரக
மோக வுமங் குள்ளவர்
உந்தி யில்விஷ் ணுலட்சுமி
யோங்கி டவுங் காண்பரே.

711. ஞாலத் தினிலா றடுக்குமேல்
நளின கட்டடம்
கோலத் துடன் மாதவர்கள்
கூடி யுள்ள நற்றலம்
பாலத் திற்சு வாதிஷ்டான
பதியி லங் குள்ளவர்
மூலத் திற்பங் கயன்வாணி
முன்னி ருக்கக் காண்பரே.

712. வைய கத்தி லாறடுக்கு
மேல டுக்கு மானது
உய்ய வேமு னிவரங்
குலாவி யுற்ற நற்றலம்
பைய வுமு லாதாரத்திற்
பார்க்கு மங்குள் ளவர்
குய்யங் கணைங் கரன்வல்ல
பையைக் கூடக் காண்பரே.

---

710. இதுவும் அதே விளக்கத்தில் வந்துள்ள தலங்களைப் பாடியதே.

711. இதுவும் சுவாதிட்டான நிலை கூறித் தெய்வ ஆற்றலை விளக்குகிறது.

712. மூலாதார கணபதியின் நிலையை மிக நுட்பமாகக் கூறுகிறார் சிவவாக்கியர். சற்புத்திர மார்க்கத்தின் அடிப்படையான இரகசியம் இதில் பேசப்படுகிறது.

713. கோட்டை யொன்றான் வாசலிற்
கூடி யுள்ளோ ரைந்துபேர்
நோட்டக் கார ராறுபேர்க
ணோக்கர் தொண்ணூற் றாறுபேர்
மேட்டைச் சுற்றிக் கொல்லையெங்கும்
வேண விந்து தூவியும்
வாட்ட மாய்ப்ப யிர்விளைத்து
வாழ்ந்து கொண்டி ருப்பீர்காண்.

714. இவ்வி தத்தி லூனெடுத்
திருப்ப தையெ றிந்திடார்
செவ்வை யாயோ சிக்கிலூண்டு
உறங்கு தற்பெ ரிதென
ஔவியம் பொய் வஞ்சனைசூ
தான தையி யற்றியும்
கௌவு நாயைப் போலுழன்று
காசி னியிற் றிரிவரே.

715. கட்ட வேண்டுங் காளையைக்
கடக்க வேண்டு மாசையை
ஒட்ட வேண்டும் பூசையை
எடுக்க வேண்டும் வாசியை
எட்ட வேண்டும் புத்தியை
இருத்த வேண்டுங் காயத்தை
கிட்ட வேண்டும் ஞானத்தைக்
கிடைக்க வேண்டு முத்தியை.

---

713. கூடியுள்ளோர் ஐந்துபேர் - ஐம்புலன்கள். ஆறுபேர் - ஆறு ஆதார ஆற்றல்கள். தொண்ணூற்றாறு பேர் - இந்த உடம்பின் தொண்ணூற்றாறு தத்துவங்கள்.

714. இந்த உடம்பின் இந்த இரகசியங்களை ஓராமல் கெடுகிறார்கள்.

715. அழகான எளிமையான பாட்டு.

716. ஏற்றவும் வாசீ யினை
இறக்கவும் வாசீ யினை
மாற்றவும் வாசீ யினை
மடக்கவும் வாசீ யினை
நீற்றவும் வாசீ யினை
நிறுத்தவும் வாசீ யினை
நாற்றிசை வாசீ யினை
நடக்க விடும் வாசியே.

717. பூத் தது வரும்பிலே
புகுந் தது மலரிலே
மூத் தது மலரிலே
முத்தி யதும் பிஞ்சிலே
ஏத் ததவும் பிஞ்சிலே
யிறுகிய துங் காயிலே
காத் ததுவுங் காயதிலே
கண்டது கனியனே.

718. அஞ் சதிலே ரெண்டது
வறிந்த தில்லை யெங்கினும்
பிஞ் சதிலே பூவது
பொருந்து திலை காணவும்
நெஞ்சதிலே நின்றது
நிலைத்த திலை சொல்லவும்
கொஞ்ச சத்தினில் மிஞ்சமெத்த
கொண்டி யற்ற ஏலுமோ.

---

716. வாசியை இயக்கும் மாண்பு கூறியவாறு.

717. இந்த உடம்புக்குள்ளே இருக்கும் மலர்களைச் சித்திரமா வரைந்து காட்டியுள்ள முதற்பகுதி காண்க.

718. பயிற்சி மிகவும் கடினமானது. ‘கொஞ்சத்தில்’ முடியாதது. குருவின் நேர்முகக் கண்காணிப்பிலே நடக்க வேண்டிய கல்வி இது.

719. கையி லாத குட்டையனுங்
கட்டி யேய டித்ததும்
காலி லாத நெடடையனுங்
கையின் மேலு தைத்தும்
இய்யிலா மதுமுடலு
னேறி யங்கு வுண்டதும்
வைய மீத றிந்துகொண்டு
வான மேறி வாழுமே.

720. வேலூ ரென்ற கோட்டையுள்
விளக்கி ராப்ப கலெறித்
தாலூர் உள்ளோர் காண்பதில்லை
கண்டைத்த குருடர்காள்
கால தூரில் நூறுகாதம்
காடு சுற்று மட்டங்கண்
ணாலூ ரினுஞ் சென்றுவோட்ட
நாட்டங் கொள்வா ரில்லையே.

721. கண்ட மேல்முக் கோணக்கோட்டை
கட்டி யகொ டிமரம்
அண்டை யுளமாந்தர் யோக
பாணி யாக நின்றுமே
சண்டை செய்து ராணுவத்தைத்
தான்கெ லிப்பா ராயிடின்
எண்டி சையின் வல்லரால்
யெலரு மஞ்சி டுவரே.

---

719. சுழுமுனையாகிய வழியிலே கும்பமாகிய செயலின்மூலம் சூரிய சந்திரகலைகளை நெறிப்படுத்தி மது உண்பது என்ற இரகசியப் பயிற்சி முறையைப் பற்றியது.

720. விழிகள் கூடுகிற கோட்டையிலே ஞானச் செயல்புரிகிற ஞானி காரியத்தை உருவகமாகப் பாடியவாறு.

721. கழுத்துக்கு மேல உள்ள மண்டல நிலைகளையும் அங்கு செய்யும் பயிற்சி முறைகளையும் உருவகமாகச் சொன்னது. இத்தகைய இடங்களைக் குரு தொட்டுக் காட்டவேண்டுமே தவிர சொற்களால் அல்லது குறிப்பினால் சொன்னால் 'ஆட்டின் கழுத்தில் அதர்கறந்த' கதையாகும் என்றே இவ்வாறு பொத்தி அமுக்கிச் சொல்லப்பெற்றுள்ளது.

722. பாச மாம்வ லைக்குளே
பகட்டும் சொந்த வீட்டினை
நாச மாக்கித் தீயெரித்து
நாளு மேய ழிக்குமுன்
வாச முறவே சுழியின்
முனையை யோட்ட வல்லவர்
ஈச னார்நி லைமருவி
யின்ப மாயி ருப்பரே.

723. அன்ன மொன்றி ருந்துலாவும்
அழகு மண்ட பத்தினில்
முன்ன மொரு வான்புலி
வுரும்பிய மெதிர்த்திட
தன்னி டத்திலே அஞ்சு கிளிகள்
தாண்டி யதைச் சுற்றையில்
என்னில் மூன்று வாளிகள்
விழுங்க வும்பார்க் கின்றதே.

724. தோப்பி லோங்கு மாங்குயில்கள்
கூப்பி டுமவ் வேளையில்
மாப்பி ளைமார் வந்தங்ஙனே
சாப்பி டவேஅ ழைத்திட
ஏப்ப மிட்டு வைத்தாரந்தை
யெட்டி யெட்டிப் பார்க்கவும்
ஆப்ப டித்த டக்கவல்லோ
ராண் பிள்ளைக ளானாரே.

---

722. இந்த உடம்பராகிய வீட்டின் அக ஆற்றல்களைக் காமத்தீயினுக்கு இரையாக்காமல் சுழுமுனையில் செலுத்த வல்லவர்கள் சிவபதம் காண்பர்.

723. இதுவும் அடுத்த பாடலும் அழகான உருவங்கள். 'அன்னம் இரண்டுள ஆற்றின் கரையினில்' என்ற திருமந்திர விளக்கம் காண்க.

724. இந்த உடம்புக்குள் அசைவசத்தனவாக மன ஆற்றல்கள் செல்கின்றன. சிற்றின்ப ஏக்கங்கள் விழுங்க வருகின்றன. ஆப்பு கொண்டு அடித்தாற்போல் புறக்கதவுகளை அடைத்தவரே ஞான ஆண்மையுள்ளவர்கள்.

725. மீன்கள் ஆழ நீரினில்
மேய்ந்தி ருக்கும் வேளையில்
ஊன ருந்தும் நாரைவந்து
ஒவ்வொன் றாய்ப்பி டித்துண்ண
வான்மு கில்பொ ழியவேடு
வன்வ லையை வீசியும்
தான்மி கப்பி டிக்கவல்லோன்
தார ணிப்ர சித்தனே.

726. நாக மொன்று கொம்பிலேறி
நாலு பக்கம் பார்க்கையில்
வேக மாகச் சேவலொன்று
வெம்பி கொக்க ரித்திட
போக வெகுதூ ரமில்லை
பொட்டெ னப்பி டிக்கவும்
சோக மற்று சூக்ஷங்கண்டோர்
சுத்த ஞானி யாவரே.

727. மேலைப் பட்டி யேர்குளத்தில்
மேவ மக்க ளூரினில்
நாலு பக்கஞ் சேருமெத்த
நாட்டி லிடைக் காட்டினில்
பால தாகச் சுத்தஞ்செய்யும்
பண்பு ளாரைக் கொண்டுமே
மேலை யூரைக் கண்டுலாவி
மேவி யங்கி ருந்திடே.

---

725. உடம்பாகிய குளத்துநீரில் இருபத்தைந்து புறத்தத்துவங்களும் இருபத்துநான்கு அகத்தத்துவங்களும் மீன்கள்போல் உலவுகின்றன. இதன் உருவகம் இப்பாய். வான்முகில் என்றது உச்சிச்சுரப்பி தருகிற பொழிவை. வேடுவன் வலைவீசிப் பிடிப்பது ஞானஆற்றல் தத்துவங்களை அடக்குகிற செயலை.

726. நாகம் கொம்பில் ஏறுவதே மூலக்கனலாகிய பாம்பு உச்சி சேர்தல்.

727. மேலையூர் என்றது சகஸ்ர தளத்தை. நாட்டைச் சுத்தம் செய்வது அகக்கரண சுத்தி.

728. பாழ கான பாழ்கிணற்றுப்
பார்க்க ரெண்டு கெண்டைகள்
தாழ்வு றாதி ருக்கலஞ்சார்
காக மங்கு தாக்கிட
சூழ சோர்க முகுநோக்கி
சுற்றி வந்து கொல்லவும்
வீழ்ந்தி டாத தற்குத்தப்பி
மீண்டு கொண்ட தாருகான்.

729. ஆற்றி னில்மு தலையைந்து
அநேக நாளி ருக்கையில்
வேற்றி டங்க ரடிரெண்டு
வெம்பி யேமு ரண்டிட
கூற்று வனமூ வருடன்
குரூர பாசம் வீசியே
மாற்றி டப்பி டிப்பன்காலை
வாங்கி யுமகக் கியே.

730. முட்டை யிட்டொ ருபறவை
முன்ன வயங்காக் கையில்
செட்டை விரித் தோர்பறவை
வென்றி டவுங் காட்டினில்
மொட்டை கைகண் ணியில்வந்து
ஓடு மான்கள் சிக்கியுங்
கண்டுண் டுத விக்குதுபார்
காண வல்லோர் காணவே.

---

728. பாழ்கிணறு என்றது உலகவசப்பட்ட இந்த உடம்பை. இரண்டு கண்களால் பயில்கின்ற ஞானப்பயிற்சி முறையில் ஏற்படுகிற அனுபவங்களை உருவகமாகச் சித்தரித்தவாறு.

729. ஐந்து முதலைகள் என்றது ஐம்புலனை. இருவினைப் பாசம் முரண்டு செய்கிறதாய் யமவாதனைக்குள் சிக்குகிறது.

730. வினைப்பயனாக உடம்பு வந்தது. உயிர் இந்த உடம்பைப் பற்றியது வினைப்பயன். முட்டையிட்டுப் பறவை காப்பதுபோல் பேணப்பெற்றது. இச்சை தனது இறக்கையை விரிக்கவே கண்ணியில் புலன்கள் சிக்கித் தவிக்கின்றன.

731. காலி ரண்டிற் கோபுரமுங்
கட்டி யொன்றி ருப்பதில்
மேலி ருந்தி ழியழுந்த
மேய ருந்தி நாளுமே
கோலி ரண்டு வூதிவூதிக்
கும்பித் துத்தம் பிக்கவும்
மாலி ருந்து செய்யவல்ல
மாந்தர் சாவ தில்லையே.

732. அன்ன மும்பெ ரிதலாலதிற்
தண்ணீர் தான்பெ ரிதல்ல
சொன்ன மும்பெ ரிதலாலதிற்
சுவையே வைபெ ரிதல்ல
கன்ன லும்பெ ரிதலாலக்
கரும்ப துபெ ரிதல்ல
மன்ன வன்பெ ரிதலால்
மற்ற வர்பெ ரிதல.

733. மண்ண துவிலா மலெங்கும்
விண்ணு மில்லை கொஞ்சமும்
வாச மேயி லாமலெங்கு
மலர்க ளில்லை சொல்லவும்
பெண்ண துவிலா மலெங்கு
மாணு மில்லை காணவும்
போரொ ளிக்கு நேரிருள்
பார்ப்ப தில்லை இல்லையே

---

731. இந்திரிய நிலையமாகிய இந்த உடம்பாகிய கோவிலில் இரண்டு மூச்சும் இரண்டு கோபுரங்கள். அமுதம் சுரக்கிறது. சூரிய சந்திர மூச்சுக்களை ஊதி ஊதிக் கும்பித்தும் தம்பித்தும் பயிற்சி செய்யக்கூடிய மாந்தர்கள் மரணத்தை வென்றவர்கள்.

732. உடம்பையும் அதன் உறுப்புக்களையும் விடப்பெரியது உயிரே என்பதை வற்புறுத்தியவாறு.

728. பாழ கான பாழ்கிணற்றுப்
பார்க்க ரெண்டு கெண்டைகள்
தாழ்வு றாதி ருக்கலஞ்சார்
காக மங்கு தாக்கிட
சூழ சோர்க முகுநோக்கி
சுற்றி வந்து கொல்லவும்
வீழ்ந்தி டாத தற்குத்தப்பி
மீண்டு கொண்ட தாருகான்.

729. ஆற்றி னில்மு தலையைந்து
அநேக நாளி ருக்கையில்
வேற்றி டங்க ரடிரெண்டு
வெம்பி யேமு ரண்டிட
கூற்று வனமூ வருடன்
குரூர பாசம் வீசியே
மாற்றி டப்பி டிப்பன்காலை
வாங்கி யுமகக் கியே.

730. முட்டை யிட்டொ ருபறவை
முன்ன வயங்காக் கையில்
செட்டை விரித் தோர்பறவை
வென்றி டவுங் காட்டினில்
மொட்டை கைகண் ணியில்வந்து
ஓடு மான்கள் சிக்கியுங்
கண்டுண் டுத விக்குதுபார்
காண வல்லோர் காணவே.

---

728. பாழ்கிணறு என்றது உலகவசப்பட்ட இந்த உடம்பை. இரண்டு கண்களால் பயில்கின்ற ஞானப்பயிற்சி முறையில் ஏற்படுகிற அனுபவங்களை உருவகமாகச் சித்தரித்தவாறு.

729. ஐந்து முதலைகள் என்றது ஐம்புலனை. இருவினைப் பாசம் முரண்டு செய்கிறதாய் யமவாதனைக்குள் சிக்குகிறது.

730. வினைப்பயனாக உடம்பு வந்தது. உயிர் இந்த உடம்பைப் பற்றியது வினைப்பயன். முட்டையிட்டுப் பறவை காப்பதுபோல் பேணப்பெற்றது. இச்சை தனது இறக்கையை விரிக்கவே கண்ணியில் புலன்கள் சிக்கித் தவிக்கின்றன.

731. காலி ரண்டிற் கோபுரமுங்
கட்டி யொன்றி ருப்பதில்
மேலி ருந்தி ழியமுந்த
மேய ருந்தி நாளுமே
கோலி ரண்டு வூதிவூதிக்
கும்பித் துத்தம் பிக்கவும்
மாலி ருந்து செய்யவல்ல
மாந்தர் சாவ தில்லையே.

732. அன்ன மும்பெ ரிதலாலதிற்
தண்ணீர் தான்பெ ரிதல்ல
சொன்ன மும்பெ ரிதலாலதிற்
சுவையே வைபெ ரிதல்ல
கன்ன லும்பெ ரிதலாலக்
கரும்ப துபெ ரிதல்ல
மன்ன வன்பெ ரிதலால்
மற்ற வர்பெ ரிதல.

733. மண்ண துவிலா மலெங்கும்
விண்ணு மில்லை கொஞ்சமும்
வாச மேயி லாமலெங்கு
மலர்க ளில்லை சொல்லவும்
பெண்ண துவிலா மலெங்கு
மாணு மில்லை காணவும்
போரொ ளிக்கு நேரிருள்
பார்ப்ப தில்லை இல்லையே

---

731. இந்திரிய நிலையமாகிய இந்த உடம்பாகிய கோவிலில் இரண்டு மூச்சும் இரண்டு கோபுரங்கள். அமுதம் சுரக்கிறது. சூரிய சந்திர மூச்சுக்களை ஊதி ஊதிக் கும்பித்தும் தம்பித்தும் பயிற்சி செய்யக்கூடிய மாந்தர்கள் மரணத்தை வென்றவர்கள்.

732. உடம்பையும் அதன் உறுப்புக்களையும் விடப்பெரியது உயிரே என்பதை வற்புறுத்தியவாறு.

734. நாட்ட மான சோதிகாண
நானி லத்துள்ளவர்
பூட்ட கமறிந் திடார்கள்
பொய்க்கு ருவைத் தேடியே
வீட்ட கமிருந் துபொல்லா
வீண்க தைகள் பேசியுந்
தீட்ட கத்தில் மூழ்கியே
தெளிந்தி டாதி ருப்பரே.

735. பெண்ணு மாணுங் கூடியே
பெரிய அரங் கானது
எண்ணு நாத விந்தமு
மிருந்து கர்ப்ப மானதால்
மண்ணு விண்ணி லாவிடின்
மற்ற வைச னிக்குமோ
தண்ணீ ருமக் கனிபோலச்
சங்கற் பலி கற்பமே.

736. அன்று தித்த தென்பதும்பொய்
இன்று நாளுள யென்பதும்பொய்
ஒன்றி னைக்க ருதலும்பொய்
யுண்மையை விரும் பலும்பொய்
நன்ற தைச்செய் வதும்பொய்
நற்க ருத்துள் ளதும்பொய்
என்றைக் கிருப்ப தும்பொய்
இருப்ப துமெய் யெண்ணிடே.

---

734. அகக்கண்ணால் சோதி காண்பதற்குரிய பூட்டைத் திறக்கத் தெரியாமல், போலியான குருமார்களை அணுகி வீணாகிறார்கள் என்றபடி.

735. பெண்ணும் ஆணும் இருவேறு பான்மைகள். இவை கூடிய அரங்கிலே நாதமும் விந்துவும் இருந்து கருவாகியமை விண்ணும் மண்ணும் ஆகிய முரண்பாடுகள் இணைந்தவாறு.

736. காலக்கணக்கு என்பது பொய். கருதி எண்ணுவதும் பொய். நன்று தீது என்பதும் பொய். மெய் என்னும் 'சத்' ஒன்றே உண்மை!

749. வாணர் கள்வைத் தியர்கள்
மாத வர்கள் வேசையர்
வீணர் கள்சு யம்பாகி
நாவி தர்வேந் தர்சேவகர்
பாணர் கள்சூ னியர்கள்
பாத கர்கொ லைஞரை
நாண வும்ப கைத்திடாது
நல்லு றவாய் நில்லுமே.

750. தனது வீட்டிற் பெண்டிரைத்
தானி றுத்தி நாளுமே
அன்னி யர்தம் இடங்கள்சென்று
அங்ங னேகு டியதாய்
முன்னி ருக்கும் மூடர்பெண்டிர்
முற்றுங் கற்பு டையரோ
என்ன சொல்வீ ரிவ்வகைக்
கியம்பொ ணாதி யம்புமே.

751. சாதி பேதஞ் சொல்லுகின்ற
சண்டா ளர்கள் சந்ததம்
சூதி லாதன் னியரிடஞ்
சுவைய றிந்து மாறதாய்
தீது றுமிழி குலத்திற்
றிண்டிக் கேயு மூன்றுமா
நீதி மெத்த சொல்லுவார்காண்
நீள்நி லக்கு ருக்களே.

---

749. இங்கே பட்டியலிட்டவர்களை எட்டியும் எட்டாமலும் பகைத்திடாது சாமர்த்தியமாய் உறவுகொள்ள வேண்டும்.

750. தனது குடும்பத்தைக் கவனியாமல் பிறர்மனையிலே பழிகிடப்பவர்களை என்னென்று இகழ்வது! இதே கருத்து சில மாறுதல்களுடன் முன்பாடலிலும் வந்துள்ளது.

751. வேறுபாடுகள் பேசி உழல்கிற போலிகளைச் சாடியது.

752. பாலு நற்பழ முஞ்சீனி
பசியி லோது உண்பவர்
நாலு வகை பேசவல்ல
நாண யங்க ளுள்ளவர்
மேலுங் கீழும் பார்த்துவொன்றை
வெட்டி வெட்டிக் கொல்லுவர்
போலு மல்ல கெட்டியல்ல
பூட்ட கமாய்ப் பேசவே.

753. ஆர ணங்கள் சாத்திரங்கள்
ஆக மம்பு ராணங்கள்
கார ணங்கள காவியங்கள்
கலைக்கி யான ஞானங்கள்
பூர ணங்கள பூதபௌதி
காதி வர்த்த மானங்கள்
தோர ணையாய்ச் சொல்லவல்லோர்
சத்த ராவ ரில்லையே.

754. எல்லாம் வல்ல சித்தரென்றே
யெங்கி லுந்தி ரிபவர்
கல்லா தோர்க ளுக்கேதான்
காட்சி யாக வேண்டியும்
செல்லா தவ்வி டங்கள்சென்று
திண்டிக் கேய லைவதே
பொல்லா ததோர் காலமாய்ப்
போங்கா லம்மீ தாகுமே.

---

752. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிற தன்மை கூறியவாறு.

753. சுத்தர் என்ற சொல்லுக்குத் தகுதியானவர்கள் அல்லர், போலிப் பண்டிதர்கள்!

754. வேடதாரிகளை வெகுண்டது.

755. முத்தி முத்தியென்று சொல்லி
முன்னோ னைக்கா ணாமலே
கத்தி கத்தி கண்டவரின்
காலி னில் விழுபவர்
பத்தி பத்தியாய்த் துதித்துப்
பாடி யும் பரமனை
சுத்தி சுத்தி வந்துபலரி
சூதர் பதஞ்சேர் வரோ.

756. அரி திலு மரிது
மானிடப் பிறவி யாவது
அரி திலு மரிது
கூன் குருடு செவிடிலாதது
அரி திலு மரிது
வான திலறங்கள் செய்வது
அரி திலு மரிது
ஞான வீட டைவதொன்றுமே.

757. மாடு டங்கள் கழனிகாடு
மானி யங்கள் தேடியே
வீடு கட்டி மேடைகட்டி
மெத்தை மேலு லாவியும்
நாடு விட்டு தூரதேசம்
லாபந் தேட வோடிவீண்
பாடு பட்ட புல்லர்கள்
பதம டையக் கூடுமோ?

---

755. சூதாக வேடம் புனைபவர்கள் நடிப்பவர்கள் – இவர்கள் நற்பதம் சேருவதில்லை.

756. 'அரிது அரிது' என்று தாயுமானவரும் பாடியமை ஒப்பு நோக்குக. எல்லாவற்றிலும் அரிது வீடு பேறடைதல்.

757. எத்தனை பாடு இந்த உலகிலே பணம் தேடிச் சுகம் தேடுவதற்காக! இத்தகைய மனிதர்கள் நற்பதம் அடைவது இல்லை.

758. ஒன்ற தாய்ப்ப லவதாயங்
குள்ள தாயப்பு றம்பதாய்
நன்ற தாகி தீயதாகி
நான்ம றைக்கெட் டாததாய்
சென்ற தாய்செனிப்பதாய்
சிறப்ப தாய்செ ழிப்பதாய்க்
கன்ற தாய் தாயதாய்
கரப் பதும் சிவாயமே.

759. பிணம தாகி லுயிர்கொடுத்துப்
பின்ன தையெ ழுப்புவேன்
மணம்பெ றவுருக் கித்தங்கம்
வார்த்த டுவேன் பாரமாய்க்
கணமெனும் பூதப்ப சாசினைக்
கதற வோட்டுவேன்
குணமெனக் குண்டென்போர்
முத்தி கோரி யங்கடைவரே.

760. ராம லட்மண் என்றதும்பொய்
ராம நாம மந்த்ரம்பொய்
நாம ரூப பேதமான
நாலு பத்து தேவரும்பொய்
காம னும்பொய் வீமனும்பொய்
கருவி யுங்க ரணமும்பொய்
சோம சூர்ய ரன்றிமற்றச்
சொற்பொ ருட்கள் பொய்யதே!

---

758. சிவாயத்தின் சிறப்புகளை நமது சமய ஞானமரபுப் பாங்கிலே பாடியது.

759. பெரிய பெரிய ஜாலங்கள் செய்வேன் என்று ஆடம்பரம் பேசுவோர்கள் முத்தி கோரிப் பெறுவதில்லை!

760. இது ஒரு 'ரூட்' என்று ஆங்கிலத்திலே சொல்கிற மனநிலை. எல்லாம் பொய். சந்திரனும் சூரியனுமே மெய். அதாவது யோக ஞானமே மெய் என்றவாறு!

737. வீணாசை கொண்டெங் குஞ்சுற்றி
வேச ரிபோ லோடியும்
தோணா தவைக ளைப்பேசித்
துட்ட ருக்குத் துட்டர்கள்
மாணாக் கர்ப லரைக்கூட்டி
மாத பசியா கியும்
காணா தகாட் சியைக்காணக்
காத்தி ருப்பர் யென்பரே.

738. பெண்டாட் டியாவ தும்பொய்
பிள்ளை களாவ தும்பொய்
கொண்டாட் டமாய் தந்தை
குலவ யமியா வும்பொய்
செண்பாட் டமா கசில
சீடர் களைக் கட்டியும்
திண்டாட் டப்ப டுவரெங்குந்
தேடி யோடி நாடியே.

739. தாயைப் போலும் பெண்டுபோலும்
தன்மு லையைத் தந்தவள்
மாயை யாக வந்தவளே
மாங்க லியம் பூண்டவள்
பேயைப் போலும் பூதம்போலும்
பேதிக் கப்பி டித்தவள்
நாயைப் போலும் நரியைப்போலும்
நாடெங் குந்தி ரிவளே.

---

737. வேசரி - கோவேறு கழுதை. போலியான வேடதாரிக் கூட்டத்தை வெகுண்டவாறு.

738. இதுவும் பொய்யான உலகில் பொய்யான போலிகளின் கூட்டத்தைச் சாடியது.

739. தாயும் மனைவியும் தந்த ஊட்டமும் சுகமும் தந்தவள் மாயை. அவளுடைய இயல்பு கூறியவை.

740. பாக்கி யங்கள் வந்தென்ன
பராக்கி ரமம் வந்தென்ன
யோக்கி யங்கள் வந்தென்ன
யுயர் பொருள் வந்தென்ன
வாக்கி யங்கள் வந்தென்ன
வைராக் கியங்கள் வந்தென்ன
போக்கி யங்கள் வந்தென்ன
பொல்லார் கட்கெந்த நாளுமே.

741. திருத்த லந்தி ருப்பணி
திருவி ழாவுஞ் செய்திட
ஒருத்தர் நற்க திபெறவு
முள்ள தோசொல் லெங்கினும்
வருத்த மின்றி யேழைகட்கு
மாதுலர் பரங்கட்கும்
பெருத்த லன்ன தானஞ்செய்யப்
பேரு லக டைவரே.

742. பொத்தை வீட்டி னிற்படுத்து
மெல்லி யரு டன்கூடி
அத்தை யம்மான் கண்டெவரு
மானந்த தமிகக் கொள
சத்தை யற்றி டவல்லார்
சைதன் னியத்திற் சேர்வரோ
வத்தை யீதெ னவறியா
மானி டரென் னாளுமே.

---

740. பாக்கியங்கள் - உலகப் பேறுகள். யோக்கியங்கள் - பிறர் மதிக்கக்கூடிய பெருமைகள். வாக்கியங்கள் - புகழ்ச்சியும் பாராட்டும். இத்தனையும் பொல்லாதவருக்கு வந்தால் நிலைக்கமாட்டா.

741. ஏழை எளியவருக்குச் செய்கிற தானங்களின் பெருமையை வற்புறுத்தியவாறு. 'படமாடக் கோயில்' என்னும் திருமந்திரம் ஒப்புநோக்குக.

742. சத்தை அற்றிட வல்லார் - ஆற்றலையெல்லாம் வீணடிப்பவர். சைதன்யத்திருப்பரோ - மோனஞான ஒடுக்கத்தில் நிற்பரோ. வத்தை - வஸ்துவை, மெய்ப்பொருளை.

743. ஏழை பஞ்சை யானபேரில்
ஏற்ப வர்து யர்தெரிந்து
கூழை யாகி லும்மவர்குலை
குளிர வேஈ பவர்களும்
வாழை யடிவா ழையாக
வாழந்தி டவெந் நாளுமே
தாழை யைப்போல லத்தழைத்துச்
சந்த தமி ருப்பரே.

744. பஞ்சை யும்ப னாதிகள்
ஆதி யோரை வைதுமே
அஞ்சி டாத டித்தவர்
அனியா யம்மும் செய்திட
வஞ்ச கவினை கள்சூழ்ந்து
வாழு நாளும் வீணதாய்
நஞ்செ னநமன் கைதன்னில்
நாச மாவர் அங்ஙனே.

745. கண்ணி னாற்கண் டிட்டதும்
குச மால ரங்களே
பண்ண புண்ணி யங்களும்பொய்
பாவன சுகமும் பொய்
எண்ணரும் பலதலம் பொய்
ஈசன் பாதஞ் சேர்தலும்
மண்ணு விண்ணும் பொய்
கொடிய மறலி யூருமெய்யதே.

---

743. ஏழை எளியவரில் ஏற்பவராகிய, பிச்சை ஏற்பவராகிய மனிதர்களின் பசித்துயரம் அறிந்து, கூழ் ஆகாரமாவது அவர் குலை குளிரும்படி கொடுப்பவர்கள் வாழையடி வாழையாக வம்சம் வளர்ந்து தழை போலத் தழைத்து வாழ்வர்.

744. மேற்சொன்னதற்கு மாறாக இப்படிப்பட்ட எளியாரைத் துன்புறுத்துகிறவர்கள் நமன் கைப்பட்டு நாசமாவர்கள்.

745. யோசித்துப் பார்த்தால் யமபட்டாளந் தவிர அத்தனையும் பொய்போலத் தோன்றும். ஆனால் மெய்யென்பது வேறு என்று பொருள்.

746. வேதியர் தபோ தனரை
மெய்ச்சி வன டியரைச்
சாதி யாதி கற்றுநிற்கும்
சாத்தி ரப்பு லவரை
நீதி யோது மாதவரை
நிட்டு ரப்ப டுத்தியே
சூது செய்து வாதுசெய்யும்
சோபர் என்றும் மாள்வரே.

747. வம்பு கள்வ ழக்குகள்ஓய்
வாயி டும்பர் வஞ்சகர்
கும்பு கூடி வார்த்தையாடி
குடிகெ டுக்கும் பாதகர்
பம்பு கள்வைப்பு கள்பில்லி
பார்வை செய்யும் சூன்யர்
நம்பொ ணாது நம்பொணாது
நாட்டி லெங்குங் காணவே.

748. பொய்கொ லைகட் காமமுடன்
போத குருவித் தைகள்
மெய்ப்ப டவுஞ் செய்துதிரி
வீணர்க ளென் ளாளுமே
உய்து மன்ன னலத்திரங்க
ளொன்று மின்றி பதரதாய்
நைந்து மிக்க நாசமாகி
நாட்டி னில லைவரே.

---

746. புண்ணிய சீலர்களையும் சான்றோர்களையும் பழிப்பவர்களுக்குக் கதியே இல்லை என்றபடி.

747. கும்புகூடி - கும்பலாகக் கூடிநின்று. இடும்பர் - இடையூறும் குறும்பும் செய்பவர்கள். தீய செயல்களை அடுக்கி மொழிந்து இவர்களை நம்பாதே என்று முனிவர் எச்சரிக்கிறார்.

748. பாதங்கள் செய்கிறவர்கள், உண்மைபோல் தீயன செய்வோர்கள் இவர்களுடைய முடிவு சோகமேயாகும்.

761. கண்க டந்த வத்துவும்பொய்
கண்ட தும்பொய் விண்டதும்பொய்
எண்க டந்த மந்திரங்கள்
எந்தி ரங்களானதும்பொய்
விண்க டந்த தேவரும்பொய்
வேதனும் பொய்மா லவன்பொய்
பண்க டந்து நின்றமெய்ப்
பராப ரம தொன்றதே.

762. நட்டு வைத்த தேவரும்பொய்
நான்ம லைக ளானதும்பொய்
கட்டி வைத்த புத்தகக்கதை
கரும்பு ராண முமபொய்
எட்டு திக்கு தேவரும்பொய்
ஏழி ரண்டு லோகமும்பொய்
மட்டி லாத ஜோதிநம்
மனத்து ளேவி ளங்குமே.

763. மூல மந்த்ர மென்றதும்பொய்
மூவரும்பொய் ஐவரும்பொய்
ஞால மென்று வாழ்வதும்பொய்
நாலு வேத மானதும்பொய்
கால னென்றயே மனும்பொய்
காலறிந்த காலைநோக்கி
மேலு லகம்சென் றவர்க்கு
வேறு தெய்வ மில்லையே.

---

761. இதுவும் மேலே சொன்ன ஒரு மனநிலை. அதாவது ஒரு கோணத்திலே பார்க்கும்போது நம்முடைய கற்பனையிலே உருவெடுக்கும் கடவுளருமே பொய்தானே! மெய்ப் பராபரம் ஒன்றுதானே சத்தியம்!

762. இதுவும் அது! நம்முன் ஒளிமயமாக நிற்கும் மெய்ச்சுடரே மெய்யானது.

763. இதுவும் அது! காலறிந்து - காற்றின் மூச்சின் வசம் தெரிந்து. மேலுலகம் சென்றவர் - உச்சியிலுள்ள அம்பலம் சேர்ந்தவர்.

764. அண்ட மும்பொய் அண்டமுள்
ளடங்க லும்பொய் யானதால்
மண்ட லம்பொய் மண்டல
மனுக்க ளும்பொய் மற்றுள
தெண்டி ரைக்க டல்களும்பொய்
தேவ ரும்பொய் யாவரும்பொய்
கண்ட மொன்று ளேகருப்ப
தான தொன்று மெய்யதே.

765. சாவ தென்று செல்வதும்பொய்
சாவ தும்பொய் சர்வமும்
ஆவ தென்று சொல்வதும்பொய்
ஆவ தும்அ ழிவதும்பொய்
காவ லிட்ட மேலைவாசல்
நால்ந டந்த ஞானிகட்கு
ஆவி வேறு மீசனன்றி
யாரு மில்லை மெய்யதே.

766. பொய்யெ லாந்தி ரண்டுருண்ட
பொய்யெ டுத்த பொய்யர்கள்
மெய்யி லாத பொய்யிதனை
மெய்ய தென்ப தேதுதான்
மெய்யி லேயி ருந்துதித்த
மெய்க்க ருணை பெற்றிடில்
பொய்ய தென்ற மெய்யுமிக்க
மெய்ய தாகு மெய்யிதே.

---

764. எல்லாம் பொய். கண்டத்தில் கருத்த பரம்பொருளே மெய் என்றவாறு.

765. ஞானிகட்கு அதாவது காற்றைக் கொண்டு மேல்வாசலைத் திறந்து செல்லும் மேன்மையோருக்கு, ஆவில் ஏறும் ஈசன் அதாவது சிவபெருமானல்லாமல் மெய்யான பொருள் வேறில்லை.

766. அற்புதமான பாடல், மெய்யாகிய உடம்பிலிருந்து உதித்த அருளைத் துய்த்தவருக்குப் பொய் என்று சொன்ன மெய்யாகிய உடம்பும் மெய்யான சத்தியமாகும்!

767. அரியு மற்று மயனுமற்று
அரனு மற்று அப்புறம்
கருமை செம்மை வெண்மையென்ற
கடல்க டந்த தற்பரம்
பெரிய தற்று சிறியதற்று
பேசு கின்ற தாரமற்று
துரிய மூங்க டந்துநின்ற
சோதி யேசி வாயமே.

768. குண்ட லங்கள் பூண்டுமென்
குளங்கி ணற்றில் மூழ்கியென்
கண்ட கோயில் முன்னிருந்து
கைவ டத்தைத் தள்ளியென்
பண்டு மூன்ற யோகிபோல்
பழுத்த வேட மாகொள்
மண்டு கங்கள் போலநீர்
மனத்தின் மாச றுக்கிலீர்.

769. மணங்க மழ்ந்த பூவிதழ்
மலர்ந்த போது தேனினை
வணங்கு லாவு சோதியை
மனத்து ளேயி ருந்திடில்
பிணங்க ளாவ தேதுநீர்
பிழைத்தி ருக்க லாகுமே
சொல்லி ருந்த வில்லிலே
சொல்ல தன்மு டிவிலே.

---

767. அழகான பாடல். பராபரத்தின் இலக்கணம் கூறியவாறு.

768. அட தவளைகளே, குளங்கள் கிணறுகள் மூழ்கி கைவடம் தள்ளித் தவளை ஒலி எழுப்புகிறீர் கருணைநமன என்று! மனமாசு நீங்க வில்லையே, ஏதுபயன்?

769. இரண்டாவது அடியில் தேனுண்ணும் வண்டு பற்றிய வாசகம் வர வேண்டும் என்று கருதுகிறேன. மூன்றாவது அடி நான்காம் அடி போலத் தேற்றேகாரத்துடன் முடிவதாலும், இப்போது காணப்படுகிற நான்காவது அடியில் எதுகையில்லாமல் அடுத்த பாடலின் முதலாவது அடியாகவே இருப்பதாலும் எனது ஊகம் வருமாறு: இந்தப் பாடலின் கடைசி அடி எப்படியோ சுவடிகளிலே புரண்டிருக்கிறது. மூன்றாவது அடியே நான்காம் அடிபோன்று ஒலிக்கிறது. நடுவில் ஓர் அடி காணப்பெற வில்லை.

770. சொல்லி ருந்த வில்லிலே
சொல்ல தன்மு டிவிலே
அல்லி ருந்த யிருளிலே
யருக்க னார்ஒ ளியிலே
புல்லி லேபு னலிலே
பிறந்த பல்லு யிரிலே
எல்லை யற்ற யீசர்நோக்கு
மில்லை தில்லை யில்லையே.

771. அஞ்செ ழுத்து மூன்றெழுத்து
அச்சு பத்து ஓரெழுத்து
மிஞ்சு மாறெ ழுத்தென
வழுத்து கின்ற முத்தர்காள்
அஞ்சு மூன்று மாறுமன்ப
தொன்று மல்ல யிப்பொருள்
நெஞ்ச டக்க மற்றவர்க்கு
நிற்கு மோசி வாயமே.

772. புத்த கத்தி லேயிருந்த
பொய்ப் பகட்டு ஞானிகாள்
தத்து வத்தைப் பேசிமிக்க
தாவ டம்சு மப்பதேன்
சித்த கத்தி லேயிருக்கும்
ஜீவனைத் தெரிந்திடில்
மத்த கத்தி லேறிநாளும்
மண்ணி ணள விருப்பரே.

---

770. சொற்பதமும், சொற்பதங்கடந்த முடிவும், இருள் இருந்த ஒளியிலும், புல்லிலும், புனலினும் எங்குமே இறைவனுடைய நோக்கே! அதன்றி வேறில்லை.

771. சிவாயம் பற்றிய மற்றொரு பாடல். முந்தையதில் சில சொல் மாற்றங்களுடன் வருகிறது.

772. புத்தகப் பண்டிதர்கள் வேடங்களையும் தத்துவப் பேச்சுக்களையும் விட்டுத் துறந்து, சித்தகத்திலே உயிரைக் காண்பார்கள் என்றால் நிலத்தளவு நிற்பர். ஆனால் அப்படிச் செய்கிறார்கள் இல்லையே!

773. மண்ண ளவதா னஅண்ட
மண்ட லங்கள் ஒன்றிலொன்று
எண்ண ளவிலா தலோகம்
ஏழி ரண்டு தன்னுளே
கண்ண ளவிலே யிருந்து
கண்க டந்த சோதியை
தன்ன ளவிலே நிறுத்து
வோன் தகுந்த ஞானியே.

774. ஞானி யென்று வேடமிட்டு
நாளு மூரைச் சுற்றியே
ஊன்வ ளக்கமாய் மதத்து
வத்தளங்கள் பூசுவீர்
கான்றி ருந்த சேவுபோல
காம மேக ருதுவீர்
ஏறு மக்கு ஞானியென்று
யாவ ரிட்ட பேரதோ?

775. பெண்டு பிள்ளை சுற்றமற்ற
பேரெ லாந்தி ருத்தியே
கொண்டு வாழ வின்றிநீ
குளத்த ழுந்து ஆமைபோல்
விண்டு ரைக்க வாயிலாது
வேட்டை யாடும் ஊமைநீ
தொண்டர் வேட மிட்டது
துடிக்கி லுந் துடுக்கலோ.

---

773. ஞானியின் இலக்கணம் கூறியமை. அண்டங்கள் அனைத்தும் தன்னுளே காண்பான். கண்கடந்த சோதியைத் தன்னளவில் நிறுத்துவான். அவனே தக்க ஞானி.

774. ஞானி என்று வேடமிட்டு ஊர்சுற்றிக் காமத்தில் உழலுபவனை ஞானி என்று யார் பெயரிட்டது?

775. துடுக்கிலும் துடுக்கமான காரியமப்பா நீ செய்தது. வேடம்பூண்டு மக்கள் சுற்றமற்றக் குளத்திலே ஆமைபோல மூழ்கிக் கிடந்து பொய் பேசாமல் இரகசியமாக அக்கிரமம் செய்கிறார் என்பது முனிவர் வாக்கு!

776. மந்திர முணர்ந்ததாய்
மதிம யக்கும் வேதியா
மந்தி ரம்மி ருந்ததும்
பிறந்த தும்த ந்தையோ
அந்தி ரத்து வாயுவை
அழைத்த ருந்தும் ஞானிமுன்
எந்தி ரப்பி லுக்கெலாம்
எழுதி வைத்த கோலமே.

777. கோல மிட்டு நீர்தெளித்து
கும்ப முங்க லசமிட்டு
வாலை தொட்டுப் பூசைமுன்
வரம்த ரும்கு ருக்களே
நூலை யிட்ட கும்பமும்
நோக்க மிட்ட தெய்வமும்
ஆல மிட்ட கண்டர்
முன்ன டுக்குமோ உரைசெயே.

778. அடுத்த டுத்துச் சென்று
யாவு மம்ப லத்துநாதனை
அடுத்த டுத்துச் சென்றுநீ
யடக்கு மார டைக்கிடில்
எடுத்தெ றிந்து சென்றுஈமம்
இட்டெ ரித்த பேரெலாம்
உடுத்துஉண் டி ருப்பரென்று
உன்னு ளேன்தெ ரிந்திலாய்.

---

776. மந்திரங்கள் உணர்ந்திவிட்டதாகப் பொய் சொல்வோரைப் பழித்தவாறு. அந்தரத்து வாயுவை உட்கொண்டு இயற்றுகிற ஞானிக்கு முன்னாள் இந்தப் பிலுக்கும் பகட்டும் நடக்குமா!

777. கோலம்போட்டு மெழுகிக் கும்பகலசம் வைத்து வாலைமுதல் தேவதைகளைப் பூசனை செய்கிற குருக்களே, உள்நோக்கிக் கண்ட தெய்வமும் உனது கலசமும் அடுக்குமோ!

778. உனக்குள்நீ இதை ஏன் தெரிந்துகொள்ள வில்லை? அதாவது அடுத்தடுத்துச் சொல்லுகிற அப்பனை நீயும் அடுத்தடுத்துப் பற்றி உள்ளே அடக்கும் விதத்தில் அடக்கினால் மரணத்தை வென்று சுற்றத்தார் உன்னோடு உண்டு கலந்து இருந்திருப்பர். மடிந்திருக்க மாட்டார்களே.

779. பில்லை தட்டிச் செம்பினைப்
புடத்தி விட்டு ஊதியே
மல்லு கட்டும் வாதிகாள்
மனக்க லக்க மற்றதோ
எல்லை யற்ற வீசனார்
இருப்பி டம்மு ணர்ந்ததோ
கல்லைச் சுட்ட போதிலும்
களங்க மற்ற தங்கமாய்.

780. விட்டெ ரிந்த வத்திலே
விளைத்தெ ழுந்த கோதையை
பட்டெ ரிந்த முன்னவர்
பரித்தெ ரிந்த வாறுபோல்
சுட்டெ ரிந்து நித்தமும்
களைபி டுங்க வல்லரேல்
சுட்டெ ரிந்து போவரோ
சுடலை யும்மி டுக்குமோ.

781. ஆற்றி லேகு ளித்தெழுந்து
ஆக மங்க ளோதுவீர்
காற்றி லேகு றைந்திடுமக்
கணக்க றிந்து கொண்டிரோ
நாற்றி லேக ளையெடுத்து
நற்கு டியா காதநீர்
ஊற்றி யேமு ணமுணக்கும்
உங்கள் மந்தி ரமேதடா.

---

779. செம்புக்காசு ஒன்றைப் புடத்திலிட்டு ஊதி இரசவாதம் செய்ய முனைகிறவர்களுக்கு, ஈசனை உணர்ந்தால் கல்லும் தங்கமாகும் என்பதை வலியுறுத்துகிறார்.

780. மரணமிலாத வாழ்வுக்கு வழியுரைக்கும் யோக தந்திரம் மொழிந்தவாறு.

781. வெறும் ஆசாரங்களில் மூழ்கியிருப்பவரைப் பார்த்துக் காற்று விடுகிற பயிற்சியிலே சேமிப்புச் செய்வதன் தன்மையை ஓதுகிறார். சித்தரின் சரஞானம் என்ற பகுதி காண்க.

782. மூல வட்ட மீதிலே
முளைத்தெ ழுந்த சோதியை
ஆல வட்ட மிட்டலோ
அமர்த்தி வைக்க வேணுமாம்
கோல மிட்ட கன்னிபோல்
குறிப்பி லேயி ருந்திடில்
மாலை யிட்ட பிள்ளைபோல்
மனம்கு ளிர்ந்தி ருக்கலாம்.

783. ஆசனந்தி ருத்திமே
வணிம ணிது லக்கியே
போச னத்திற் காய்பகட்டுப்
பூசை செய்யும் வேதியா
தாச னென்று உன்னைநம்பித்
தாள்ப ணிந்த பேர்க்கெலாம்
ஈச னோரி ருப்பிடத்தை
யெங்க னென்று ரைப்பையோ.

784. செம்பி லேக ளிம்பெடுத்துச்
சீமை யாள வெண்ணிநீர்
கும்ப லாய்ப்பு டத்திலே
குருட ராவ தென்பயன்
சம்வு வைஇ றைஞ்சியுங்
சவளை யற்ற போதலோ
கம்ப மும்ப ழுக்குமே
கயிலை யுந்தி றக்குமே.

---

782. இதே பாடல் சிறிய மாறுதலுடன் முன்பு வந்துள்ளது காண்க. மூலக்கனல் விளக்கத்தை ஒப்பிடுக.

783. வேடமிட்டுப் பூசை செய்கிறவர்களை நோக்கிப் பேசியவாறு. குரு என்று விளங்கிடும் - வணங்கிடும் பேதையருக்கு இறைவனைக் காட்ட முடியுமா என்று கேட்கிறார்.

784. முன் பாடல்களில் வந்த இரசவாதச் சீற்றமே இதிலும் வெளியாகிறது.

785. மண்ணில் பெண்ணில் பொன்னிலும்
மயங்கு மோக பாதகர்
பண்ணும் புண்ணி யங்கள்பாபம்
எண்ணி யும்செய் வார்களோ
ஒண்ணி வந்தன் கண்ணிலுநேர்
உண்மை யைய றிகிலார்
சண்ணி யும்மெ ழுநரகில்
சண்ட னூர்க்கா ளாவரே.

786. பார தம்ரா மாயணம்
பாக வதம்ச லக்கிரீடை
ஆர ணம்பு ராணம்மனு
விக்கி யானமுந்த ருக்கமும்
கார னம்வி லாசம்
நாட கம்ஆ டல்பாடலும்
தோர ணையாய்ப பார்க்கக்
கேட்கச் சூழ்பல மொழியுமோ.

787. கல்லு கட்டை சாணிமண்ணு
கார யந்து ராசெம்பில்
கொல்லன் வார்த்து வடிவமைத்த
கோயி லுட்சி லைகளை
மல்லுக் கட்டாய்க் கட்டியும்
மகோத்த வம்செய் போதிலும்
இல்லை யேக திபெறவும்
ஏம னுப்பி ணங்களே.

---

785. மூன்று ஆசைகளிலும் மயங்குகிற பாதகர்கள் பாவ புண்ணியம் எண்ணிப் பார்த்தா செய்கிறார்கள்? இல்லை. கண்ணுக்குள்ளே நிற்கின்ற இரகசியப் பொருளை அறிய மாட்டார்கள். நரகத்தில் வீழ்வர்.

786. ஆடம்பரமான படிப்பு தோரணை எல்லாம் பயனற்றவை. வெறும் கல்வி கேள்வியினால் மட்டும் பவநோய் தொலையுமோ? இல்லை.

787. புறப்பூசைகள், உருவங்கள், திருவிழாக்கள் எல்லாம் கதிபெற வழியாமோ? இல்லை. துரா என்பது உலோகக் கலவை. எட்டு பங்கு செம்பும் ஐந்து பங்கு காரீயமும் கலந்தது.

788. கஞ்சி கான அத்திஆனைக்
காவ லும்அண் ணாமலை
மிஞ்சி தில்லை காசி
இராமேஸ் வரம்ம துரையும்
துஞ்சி யாவும் சுற்றித்தார
தூர முந்தி றிந்தபேர்
எஞ்சி யகதி பெறவும்
ஈசன் பதஞ்செ ருவர்கனோ.

789. கம்பை கொள்ள டங்காவேரி
கங்கை துங்க பத்திரா
நம்பி சிந்து சரஸ்வதியு
நர்ம தாகோ தாவரி
சம்புத் தீவுள் நன்னதி
சகல தீர்த்த மாடினும்
எம்பி ரான ருள்பெற
இணைய டிக்கா ளாவரோ.

790. முப்பு ரம்மெ ரியீசனை
முன்தொ ழாத மூடரை
எப்ப வும்வேங்க டேசன்தான்
இரக்கப் பிச்சை எடுப்பித்து
ஒப்பத் தன்ம லைவலஞ்செய்
தொன்று பாதி மொட்டையாய்த்
தப்பிக் கோல்குருவையீவன்
தன்செ ருப்பாற் சாடியே.

---

788. தலங்களெல்லாம் சுற்றினால் போதுமோ? கதிபெறுவரோ?

789. எத்தனையோ நதிகள், தீர்த்தங்கள், நீராடி விட்டால் போதுமா? இணையடிக்கு ஆளாவரா? இல்லை.

790. சிவனை வணங்காதவரைத் திருமால் தண்டிப்பான் என்ற கருத்தைப் பாருங்கள். சிவவாக்கியர் திருமழிசை இருவரின் ஒருமைப்பாடும் துலங்குகிறது.

791. ஆக மூல நாடியில்
அனலெ ழுப்பி அன்புடன்
மோக மான மாயையில்
முயல்வ தும்ஒ ழிந்திடில்
தேக மான கோவிலுள்
தேவ நாதன் உச்சியில்
ஏக மாக ஏறியே
என்றும் வாழ்ந்தி ருப்பரே.

792. முன்னும் பின்னும் ஒன்றலோ
மூல நாடி ஒன்றலோ
உன்னும் உள்ளம் ஒன்றலோ
ஊனுள் நிற்ப தொன்றலோ
பண்ணும் மறையும் ஒன்றலோ
பரம பதந்தான் ஒன்றலோ
உன்னில் நின்ற ஒருபொருளும்
ஒன்றும் ஒன்றும் ஒன்றலோ.

793. மந்திரம் எல்லாம் ஒன்றே
வசியமும் எல்லாம் ஒன்றே
தந்திரம் யாவும் ஒன்றே
சாதனை மூலம் ஒன்றே
எந்திரம் எல்லாம் ஒன்றே
எங்குமாய் நின்ற ஒன்றே
பந்தனம் செய்வ தொன்றே
பரமனாம் எழுத்தும் ஒன்றே.

---

791. மூலக்கனலை எழுப்பி மூலநாடி யூடு சென்று பரவெளியிலே கூடி மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வதைப் பாடியவாறு.

792. அடிப்படையும் இயக்கமும் எல்லாம் ஒரே பொருள் என்பதை உணர்த்தியவாறு.

793. இரகசியப் பயிற்சியும் எழுத்துநிலையும் எல்லோருக்கும் எப்போதும் ஒரேவகைதான். இரண்டாவது இல்லை என்பதை உறுதிசெய்கிற பாடல்.

794. ஆதி யற்ற நாமரூபம்
ஆண்பெண் அற்ற அத்தனை
சாதி வேடஞ் செய்கை
கோலஞ் சாத னர்முதல்
ஓதிப் பிரசங் கிக்கவாணர்
உற்ற நூற்பு ராணமாய்ப்
போதிக் கவுரைத் தியாவும்
பொய்க்க தைப்பு ரட்டரோ.

795. ஊன துவோர் கோயிலாய்
உயிர துஓர் வத்துவாய்
தான துவோர் தம்வயமாய்த்
தவம்செய் வதோர் சத்தியாம்
கான துவோர் காண்ரியாய்க்
காண்ப துவோர் கட்சியாய்
அன துவோர் ஆட்சியாய்
ஆவ தும்ஓர் சாட்சியே.

796. நூறு காத யோசனை
நொடிக்கு ளேப டிக்குமுன்
னேறு மோர்ப ரியிற்சீனி
இட்ட அங்கு படியும்வைத்துத்
தாறு மண்ட லங்கடந்து
அப்பா லும்முப் பாழினில்
சீரு டன்தங் கஉம்முட்
சீவ போக மெய்துமே.

---

794. ஆதியும் அந்தமும் இல்லாத ஆண்பெண் பான்மையற்ற அத்தனுக்குச் சாதி. வேடம், செயல், கோபம், சாதனம் முதலியன ஓதிச் சொற்பொழிவுகள் செய்வதற்காகப் பொய்யான புராணக்கதைகள் முதலியன புரட்டு அல்லவோ!

795. உடம்புக்குள்ளே செய்கிற தவமே உண்மை என்பதைக் காட்சியாகச் சித்தரித்துக் காட்டுகிறார்.

796. வாசியாகிய குதிரையில் இவர்வதால் உண்டாகிற சீவப் பேரின்பத்தைச் சித்திரிக்கிறார்.

797. மூச்சுக் காறு காததூரம்
முன்ன டக்கும் தேசிமேல்
பாச்ச விட்டு மேறியங்கு
பார வனம்சென் றேயதில்
ஒச்ச மின்றித் தங்கி நானாமி
யோக நித்தி ரைகொள
பேச்ச தின்றிப் பிரமானந்தப்
பேரின் பம்ம டைவரே.

798. சர்ச்ச னரிட மிருந்து
சந்தத மெய்ஞ் ஞானியை
அர்ச்ச னைபு ரிந்தவருள்
வீழு நோக்கை எய்திலார்
துர்ச்ச னரிட மடுத்து
தொல்லை பட்டு முன்றுமே
நர்ச்ச னைபு ரிந்தவர்
நலங்கி யேநிற் பார்களே.

799. கண்ணிற் காண்பதுவும் பொய்
காதிற் கேட்பதுவும் பொய்
எண்ணிடு நினைவதும் பொய்
யிச்சட லமானதும் பொய்
உன்னிடு நினைவதும் பொய்
யுற்றது சொல்வதும் பொய்
மண்ணினி லிருப்பதும் பொய்
வத்து வொன்று மெய்யதே.

---

797. இதுவும் வாசியோகத்தினால் விளைகிற பேரின்பம் கூறியவாறு.

798. நல்லவர்களிடையே மெய்ஞ்ஞானியைக் கண்டு அவனைத் தொழுது அவனுடைய அருள்நோக்குப் பெறாதவர்கள், தீயவரின் தொல்லைக்குள்ளாகி அவதிப்பட்டு நலங்கித் துன்பமுறுவார்கள்.

799. பரம்பொருளாகிய வஸ்து ஒன்றைத் தவிர மற்றயாவும் மயக்கமே.

800. பேரா சைப்பி டித்தவர்
பரம லோக மாளினுங்
காரா கரச லாதமாம்
கனகம் செய்யக் கோருவர்
பூரா கஅஞ் ஞானத்தில்
பொரு ளைத் டே வல்லார்க்கும்
பூர ணமெய் ஞானஅனு
போக மும்கிட் டாததே.

801. உற்றுப் பார்க்க வொன்றிலை
யுறுதி யாக நம்பவும்
சற்று முள்ள கற்பிதங்கள்
சொல்ல வும்பொய் யாகுமே
சற்று யோசிக் கின்சடநீ
சகமெ லாமும் மித்தையாய்
அற்றி டும்போ தல்லவோ
யவைய னைத்துந் தோன்றுமே.

802. முப்புச் சத்தி னையறிவர்
மூது ணர்ந்த ஞானிகள்
உப்புச் சத்தி னையறிவர்
உண்மை மேவும் யோகிகள்
அப்புச் சத்தினை யறிவர்
ஆத்து மக்கி யானிகள்
வைப்புச் சத்தி னையறிவர்
வாதி யான வைத்தியரே.

---

800. பேராசையினால் ஞானம் இழந்து அஞ்ஞானத்திலே இரசவாதம் கோரி வீணாகுவாரைப் பாடியது.

801. உற்று நோக்கினால் ஞானக் காட்சியிலே இந்த மயக்கம் எல்லாம் பொய் என்பது புலனாகும்.

802. வேதிஇயல் வாதியான மருத்துவருக்கு வைப்புச்சத்து எப்படித் தெரியுமோ அப்படியே ஞானிகளான வேதியலோர் முப்புச் சத்தினை அறிவார்கள். அதாவது முழுதுணர்ந்த ஞானி முப்பு என்பதை அறிவன். யோகிக்கு உப்புச்சத்து தெரியும். ஆத்தும ஞானிக்கு அப்புச்சத்து புரியும்.

803. காறு காறா வூத்திடக்
கனகத் தையெக் காலுமே
நூறு நூறு காலமாக
நுட்பங் காணா வாதிகள்
வேறு வேறு நூல்களை
விவே கிபோ லுணர்ந்தெலாத்
தாறு மாறாய்ச் செய்தவர்
தனமெ லாமொ ழிப்பரே.

804. ஓங்கி யும்பி ரணவச்
சொரூபி யாயு தித்திலன்
தாங்கியும் வைய மதனைத்
தாய தாக ரட்சிப்பான்
ஏங்கி யுயிருப் பலரை
யின்ப முறச் செய்குவன்
பாங்கி யாகப் பக்கம்நின்று
பாது காத்தி ருப்பனே.

805. ஓரெ ழுத்தாய் மூலமா
யுதித்தி டும்பி ரணவம்
ஆர ணத்தில் முன்னும்
பின்ன னுசரிக் குமட்சரம்
பேரெ ழுத்த னைத்திலும்
பிணைத்தி ருக்கு மந்திரம்
கூரெ ழுத்திற் கோடியதில்
கூடி டும்மந் திரமே.

---

803. இரசவாதம் என்ற நுட்பம் தெரியாதவர்கள் ஞானி போல் வேடங்கொண்டு வந்து தனத்தை ஒழிப்பார்கள்.

804. ஓங்காரமாக உதித்துவந்தவன் ஏங்கியிருப்பாருக்கு இன்பம் தருவான். வையத்தைத் தாய்போல ஆதரிப்பான். பாங்கனாக அருகிருந்து பாதுகாப்பான்.

805. கூரெழுத்தின் கோடியில் கூடுகின்ற மந்திரம் என்று முன் பகுதிகளிலே விளக்கிய ஓரெழுத்து ஓர் மந்திரமான தத்துவத்தை மற்றொரு வடிவத்திலே பாடுகிறார்.

806. வாசி யுருப் பூவது
மனம துமூ லப்புளி
நாசி யுறினுனி நடுவில்
நாட்ட மும்ம றிந்திட
வீசி யுங்கு மூல்ஊதியேமுன்
ஏதி யங்க மர்ந்திடில்
ஊசி முனையில் பேரொளியில்
உள்ள தாகும் நடனமே.

807. ஊக்க மாயி ரண்டுக்காறு
ஆண்டு றாத்து நாதனால்
வாக்கு மனமும் காயமும்
மறந்து மவுன முற்றுமே
போக்கு வரத்தா னதொன்றைப்
போத வும்அ டக்கியும்
சூக்கு மதூ லத்தைக் காணச்
சூட்ச மும்ம றிந்திடே.

808. அறி யவு மிருகலை
யாதனை மாற்றிடும் விதி
குறியும் ரேசகப் பூரகக்
கும்ப கமுற் றர்த்தினை
நெறியுடன் குருவு ரைக்க
நேர்மை கணடனு தினம்
வறிய அம்வென்றூ ன்றிறங்
சிங் கென வகுத்திடே.

---

806. உடம்பிலே செய்கிற யோகமாகிய இரசவாதம் இந்த உடம்பைப் பொன்னாக்க வல்லது. அத்தகைய வாசியோகம் பேசியவாறு.

807. இம்முறையில் பன்னிரண்டு ஆண்டுகள் பயிற்சி செய்கிற கல்வி கூறப்படுகிறது. அதுவே தூல தேகத்திலே சூக்கும தேகத்தைக் காணுகிற சித்தியாகும்.

808. மேலும் அதை விளக்கியவாறு.

809. வகுத்த தோதுங் கைகாலையு
மடக்கி யும்முட் கார்ந்ததில்
தொகுத்துப் பின்னி யூதியுண்
டுருத்தி யுட்பொ ருத்தமாய்ப்
பகுத்த ஒண்ணா வைமடக்கிப்
பகரு நாசி பாதையில்
மிகுத்த வந்தநிலை யடக்கிப்
மேற் கும்பித் தெழும்பிடே.

810. கும்பித் தேஎழும்பி விண்ணினில்
கூர்அட யோகந் தன்னில்
நம்பித் தேடை கலையின்
கலையி ரண்டுந் தாங்கியே
வெம்பி யும்ரே சித்திதிய
ஒவ்வொ ருகடி கைமேல்
நம்பி யும்ப யபக்தியால்
நானி லத்தி றங்குமே.

811. முன்ன மேவா சிவாங்கிங்
கென்ன வேமொழிந்ததை
தன்னி லைவா சிகுண்டலி
தட்டி யும்மெ ழுப்பியே
இன்ன முங்க தும்பியே
அகா ரவீட் டிருத்தியே
உன்னைக் கண்டும் உன்னுள்நின்றும்
ஓது வாய்அும் மகாரமே.

---

809. இதுவும் வாசி யோகத்தின் விளக்கமே.

810. ஹட யோகம் என்ற பயிற்சி சொல்லியவாறு.

811. இதுவும் வாசியோகத்தில் மந்திரக்கூட்டு. இந்தப் பாடல்களில் வருகிற பயிற்சி முறைகளை ஆசான் வாயிலாக நேர்முக மாகக் கற்றுப் பிறகு செய்யவேண்டுமே யல்லாமல் சொற்களுக்குப் பொருளைப் பார்த்த அளவிலே செயலுக்குள் இறங்கிவிடலாகாது என்று யோகிகளே முன்னறிவிப்புத் தந்துள்ளனர்.

812. மகார முஞ்சி காரம்வைத்து
வாய்ம டுத்துண் ணமுதம்
யகார முமோங் காரமே
சத்தா குமட்ட மாசித்தி
அகார மொன்றை யறியதன்மே
லான வைத்து லைந்தெரி
உகாரஞ் சச்சி தானந்தந்து
உண்மை காணு பூதியே.

813. சுத்த னாக வாசியுளனுட்
சூட்ச மாய்வ சப்பட
நித்த மியோகத் தினின்று
நேர்செ லுத்த வல்லிரேல்
சித்த னாகறங் கென்றுதிச்
சேர வும் பூரித்ததை
முத்த னாகப் பக்ஷமட்டும்
முன்ம றவா தோதிடே.

814. வாசி யும்வ சப்பட
அடிக்க டிநீ திருப்பிட
நாசி யைப்பு ரட்டிடா
நடுநி லைநி கைத்திட
தேசி யைவங்சிங் உங்கென்று
சேறக் கீழி றக்கிட
பேசி யும்மி டைகலையைப்
பின்க லைவிட் டிடுதியே.

---

812. அமுத தாரணை என்ற யோக இரகசியம். இந்தப் பயிற்சி தெரிந்தவர்களுக்கு ஆதாரமாகத் துணைசெய்கிற பாடல்கள் இவை.

813. இதுவும் அது.

814. இந்த மந்திரச் சொற்களின் விளக்கம் பிற்காலச் சித்தரும் உரைநடையிலும், உரையிட்ட பாடலிலும் மொழிந்துள்ளனர்

815. விடுக் கவே மூன்றடி
நடக்கை யினுள் மாறிடும்
அடுக் கவுமே பூரகும்ப
ரேய சித்து மில்லிதம்
தொடுக் கவும் பத்தாலாத்தி
மாருதி யற்ற வல்லவர்
நெடுக் கவும் யோகத்திருக்கு
நேர்மை யைக் கண்டோர்களே.

816. ஆவதற் குண்மை ஞானம்
மறிவ தற்கலன் கியானம்
மேயவு நிதந் தியானம்
வீற்றி ருக்கவு மோனம்
தேவது தித்தாம பிரமஞ்
சிக்கிட வருந் தருமம்
பாவமும் விட்டோன் கர்மம்
பகரொ ணாது மர்மமே.

817. மருமம் காண அம்உம்ஓம்
வயந மசிஎன் றேநீ
புருவ மையங் குண்ணிரண்டை
யூட்டிப் பார டுத்ததை
வெருவல் உறங்கல் அசைதல்
மேவல் சோம்பல் பாச்சலற்ற
நிருவி கற்ப மாயிருந்து
நேரிற் காணு மோனமே.

---

815. சரஞானம் என்ற தலைப்பிலே முதற்பகுதியில் இதன் விளக்கம் காண்க.

816. பகரொணாத மர்மத்தை ஏன் பாடியுள்ளனர் என்று கேட்கலாம். பாடநூலைக் கையில் வைத்துக்கொண்டு ஆசிரியர் பாடம் சொல்வதுபோல இந்தப் பாடல்கள் ஆணைசெய்யும்.

817. மோன ஒடுக்கம் கூறியவாறு.

818. மோனத் திலே பஞ்சவர்ண
முற்று நாத கீதமும்
தானத் தில் ரவிமதி
சராச ரம்வ ரைநதி
ஆன தில்சுக் கிலசுரோணி
தம்பே ரின்நின் முகமே
நானது நீசர்க் குருமீ
னற்றே உரகம் தோன்றுமே.

819. தோன்று மாறா தாரமுநேர்
சூரியப் பிர காசமும்
ஈன்ற வாதப்புருடன் வாக்கிய
மத்து விதப்பொருள்களும்
ஊன்றுங் குணங்குறி புத்தி
புண்ணெறி விளக்கொளி
போன்றும் பூத பவுஉஷ்ய
வர்த்த மானமும் புகலுமே.

820. புகலவு முறதி கொண்டு
பூட்டி யுஞ் சுழிமுனை
சகல வாணவந் துண்டாய்த்
தரித்தா னந்த வாழ்வினிற்
பகலவன் போலே ஜொலித்துப்
பாரில் விட்ட குறைதொட்டு
அலையு மூழ்வினை யறுத்து
வாக்கிணையை நோக்குமே.

---

818. யோகப் பயிற்சியிலே தரிசனம் காணுதல் என்ற அனுபவத்தைப் பாடியது.

819. இதுவும் அது.

820. வினையை அழிக்கும் வித்தையாகிய இந்தப் பயிற்சியின் விரிவு கூறியவாறு.

821. நோக்கி யும்பி ரமநீயாய்
நுட்பங் காணத் தம்பதம்
ஆக்கியு முத்திச் சதமா
யகலவும் பொய் வாழ்வினைத்
தூக்கி யும்வ ழியிடச்
சுழிமண் டலமுங் கண்டு
போக்கிய மும்முட் சாதியைப்
பூணும் பதமுஞ் சேருமே.

822. சேரவுங் குருவினைத் தினந்
தொழுது போற்றியும்
நேர வும்பி ரமானந்த
நட்டை யும்பு ரிந்திட
தேர வும்மி ருபிறவிச்
சென்றி டவேநீ அனுதினம்
கோர வும்முத் தியைப்பெறக்
கூறு வதிதுவே உண்மையே.

823. ஆவ தும்ம ழிவதும்
அருள்வ தும்பெ றுவதும்
ஈவ தும்இ ரப்பதும்
மிசைவ தும்மெ திர்ப்பதும்
கோவ துங்கு ருவதுநிர்க்
குணம துங்கு றியதும்
போவ தும்வ ருவதும்
புகலொ ணாத பொருளிலே.

---

821. உள்முகமாகப் பார்வையைச் செலுத்தும்போது ஏற்படுகிற அரிய விளைவுகளைப் பாடியவாறு.

822. இறையின்பம் என்பதே பிரம்மானந்தம். இதை இந்த உடம்பிலே அடையும் வழிதான் ஆசான் உணர்த்துகிற மெய்ஞ்ஞானம், அதன் திறம் பாடுகிறார்.

823. இந்த அகஉலக அனுபவங்களின் இயல்புகளை எவ்வாறு வெளியிட்டுச் சொல்வது! சாதாரண அகப்பொருளே வெளியிட ஒண்ணாதது என்று கூறி 'அகம்' எனப் பெயரிட்டனர். ஆயின் பிரமானந்தமாகிய தெய்வப் பேரின்பத்தை வெளியிடுவது எங்ஙனம்!

824. வாது கூறிதர்க்கம் பேசி
வம்பு செய்யும் வீணர்களின்
போது மாமன வுந்துற்
புத்தி யினால் அதரியும்
சேது பந்த மோடித்
தேறு மெங்குஞ் சுற்றியும்
ஏது வின்றி யெம்பிரான்
இணைப்ப தத்தைச் சேர்வரோ.

825. கள்ளு டன்சா ராயமுங்
கஞ்சா அபின்ம தத்தையும்
தள்ளு படியொன் றிலாது
சந்த தம்கு டித்துமே
சொள்ளெ ழவெ ரித்துவீழ்ந்து
சுத்த ஞானி யானெனத்
துள்ளி யந்தி ரிபவர்கள்
சோதி யிற்க லப்பரோ.

826. எத்தொ ழிலைச் செய்திடினி
மேநலத்தைப்பட்டினும்
முத் தரின் மனமதுவு
மோன மேறி நின்றிடும்
கத்த பத்துக கொத்திருக்குங்
காரி யமில்லாத பேர்
நித்த மும்ம வதிபட்டு
நீடு ழிவதை வர்களே.

---

824. வாதும் வம்பும் செய்கிற வீணர்கள் எங்குபோய் நீராடினாலும் பாவம் தொலையாது. இறைவனின் இணைப்பதம் கிட்டாது.

825. ஞானி என்று வெளிவேடம் பூண்டு கள்குடித்த மயக்கத்தை ஞான போதமாக நடிப்பவர்கள் ஒளியிற் கூடுவது எங்ஙனம்?

826. ஞானிகள் எந்தத் தொழிலைச் செய்தாலும் அவர்களின் உள்ளம் மோனத்தில் கூடியிருக்கும். மற்றவர்கள், படாடோபிகள் நீண்டகாலம் வதையிலே படுவார்கள்.

827. பித்தர் போலும் பேயர்போல்
பிசாசர் போலி ருப்பர் உன்
மத்தர் போலு மிருப்பர்அங்
கைய முதமும் புகுந்துண்பர்
செத்தர் போலு மிருப்பர்
சிகண்டி போது மிருப்பர்
சுத்த முள்ள ஞானியர்கள்
சொல்லப் பேரின் பத்திலே.

828. செங்கொ லுஞ்செ லுத்திநிதந்
தேச மெங்கு மாள்பவர்
பங்க மாய ரசைவிட்டுப்
பார்வ ளங்கள் சுற்றியே
தொங்க மாயோ கத்திருத்து
பூச னைசெய் ஞானியர்
அங்க லிங்க பீடமாக
வானந் தத்தி ருப்பரே.

829. ஆனந்தத்தில் மூழ்கிய
அனுபோகி அன்னத் திற்கே
ஞானந் தேடி யுண்பத்திற்றுத்
த ந்செய் வான் னாட்டினர்
கானந் தனில்வேர் கிழங்கு
காய்க ளுட் ருகுமுண்
கூன மற்ப பதவிசேர்ந்
துய்வர்

---

827. சீவன் முத்தராகிய ஞானிகளின் இலக்கணம் கூறிய பாடல் இது. நவநீதக் கைவல்லியமும் பாடியுள்ளமை ஒப்பு நோக்குக.

828. இதுவும் ஞானிசெயல் கூறியவாறாம். தாண்டவமூர்த்தி சுவாமிகள் பாடலைப்போலவே பட்டினத்தடிகளும் பாடியுள்ளார். இந்தப் பாடல்களை இச்சிவவாக்கியத்தோடு ஒப்புநோக்கி மகிழலாம்.

829. பிறரிடம் ஐயம் ஏற்கும் பயன், இட்டவருக்குச் சேர்கிறது என்பதை அழகொடு சொல்கிறது இப்பாடல்.

830. முத்தி பெற வேண்டுமாகின்
மோகத் தினை விட்டிடு
சுத்தி பெற வேண்டுமாகின்
தூக்கத் தினை விட்டிடு
பத்தி பெற வேண்டுமாயின்
பாசத் தினை விட்டிடு
சித்தி பெற வேண்டுமாகின்
செல்வத் தினை விட்டிடே.

831. ஆசை யற்றுக் கானதில்
அனாதி யாய னுதினம்
பாச முற்று யோகஞ்செய்து
சுத்தி செய்ய வல்லிரேல்
நேச முற்று மாந்தரும்மை
நித்த மும்ப ணியவும்
பூசை யற்று முமுட்சாதி
போத கத்தை அடைவரே.

832. காயத் திரிமந் திரத்தை
கைவி ரலால் எண்ணியே
மாயத் திருட்டு ருட்டுகள்
வஞ்ச னைசெய் பாதகர்
ஞாயம் ஒன்றி ருக்கஅநி
யாயத் திற்க லந்திட
சாயம் வெளுப்ப வைது
சாவி னுக்கி ருப்பரே.

---

830. இது ஒரு நேர்முக நீதியுரை. தெளிவாக பேச்சு.

831. இதுவும் ஒரு நேர்முக உரையே யாகும்.

832. மந்திரத்தைப் பிறர் மதிப்பதற்காகவே வெளிப்படை ஆடம்பரமாகச் செய்து, திருட்டும் உருட்டும், அநியாயமும் செய்கிற போலிகளின் சாயம் வெளுக்கும் சாவுக்காகக் காத்திருக்க வேண்டிய நிலைதான்!

833. எண்ணி லாத சாத்திரங்கள்
யாவு மேப டித்தென்ன
விண்ணா ணங்கள் பேசியும்
விகடங் கள்செய் வீணர்காள்
எண்ணா தவெண்ண மெற்கொண்டு
யெண்ணி யேழை யோரிடம்
பண்ணா தவ்வா தைகளைப்
பண்ணிப் பாவத் தாழ்வரே.

834. கஞ்சனைமுகத் திலொன்
றதைக்க டவுள் கொய்தபின்
மிஞ்சத் தன்முகத் திலொன்றை
மீளச் சிருஷ்டித்திறை
வெஞ்சி னங்கொ ளானற்றிக்கில்
வெகுவு யிர்ப டைத்தோனென்
நஞ்சி டாமற் சொல்லுவாரை
யாரெ னம திக்கலாம்.

835. திண்டி யிற்பல வகையாய்ச்
சிற்றுண்டி யோ ருண்பவர்
பெண்டு கள்புத்தி யுத்தியைப
பேச வுமெ ளிதல்ல
ஒட்டி யாவர் சகவாசத்
ததவு பொல் லாதது
கண்டி டவுங்கா மவிகாரங்
களெண் மணங்கதே.

---

833. இதுவும் தீமையாளரின் முடிவு எத்தகையது என்பதை வற்புறுத்தியவாறு.

834. ஏதேதோ கதைகள் பேசுவார்கள் அத்த உருவகங்களை உணராமல் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்றபடி.

835. வேடதாரிகளை வெகுண்டது.

836. அம்மை கள்பி டாரிகட்கு
ஆடு கோழி வெட்டென்பாள்
பொம்மைக் கலியா ணமது
புகழ்ச்சி யாய்ச்செய் என்பாள்
தம்பி தங்கச் சிக்குமணஞ்
சம்ப மாய்ப்பண் ணுமென்பாள்
வம்ப தாய்ப்ப னத்தைவைப்
பாடடி யாப்பி டுங்குவளே.

837. கேட்ட தைக்கொ டாவிடிற்
கிருது சொல்லி யேச்சுவள்
மீட்ட தைப்போ டாதுவிடில்
மீறி வைதங் குண்ணுவள்
பாட்ட தைப்பா டியுந்தினம்
பணத்தைப் பிடுங்குவள்
ஒட்ட தைத்த லைகவிழ்ந்து
யோடிப் போகச் செய்வளே.

838. காவி வேட்டி யானுக்கோவிக்
கைம்பெண் சாதிப் பெண்ணுக்கோ
பூவின் மணமா னுக்கோயிப்
பேடி யன பெண்ணுக்கோ
ஏவல் பணியா னுக்கோஇவ்
வேழை யாகும் பெண்ணுக்கோ
சேவிப் பதுமா னுக்கோநற்
செய்கை யற்ற பெண்ணுக்கோ?

---

836. சடங்குகளைச் சொல்லிப் பணம்பறிக்கும் பாவியரின் இயல்பு கூறியவாறு.

837. கண்டபடி மேற்கொள்கள் பேசி வேடமிட்டு மனிதர்களை ஏமாற்றுகிற துன்மார்க்கரைச் சாடியது.

838. துறவி வேடதாரிகள் கெட்ட வாழ்க்கை நடத்துவதால் ஏற்படுகிற விபரீதங்களை வெகுண்டது.

839. எண்ணி லாத கோயில்கள்
இடைவி டாது சுற்றியும்
பண்ணி லாத புண்ணியம்
பலகா லம்நீர் செய்கினும்
செண்ணி லாத தீர்த்தசேவை
தேச மெங்கு மூழ்கியும்
கண்ணி லாத வந்தகனோர்
காணுங் காட்சி யாகுமே.

840. நூற்றி ருபதாண் டிற்குமேல்
நுடங்கா திருப்ப தற்
தேற்றி யுங்காய கர்ப்பத்தை
யிடைவி டாதுண்டிடக்
கூற்றிலும் பொல்லாதது
குறியாயக் கொள்ளச் சித்தனாம்
மாற்றி டின்கர்ப் பமென்றா
லற்ப மல்ல மாளுவனே.

841. எச்சி லென்று சொல்லியெங்கு
மேள னமுஞ் செய்கிறீர்
உச்சி தமான வெச்சிலி
லூற்றி னைய றிகிலீர்
குச்சி தமான வூற்றதின்
கூற்றி யவல் லிரேல்
அச்சி தம்ப ராடன
வானந் தனைக் காண்பிரே.

---

839. நுட்பந் தெரியாமல் வெளிச்சடங்குகளும், விழாக் கோலங்களுமாக வாழ்கிறவர்கள் பயன்துய்ப்பது இல்லை.

840. இதுவும் உண்மை தெரியாமல் ஏமாந்து போவாரையும் அவர்களை ஏமாற்றுகிற காயகற்பக் கசடர்களையும் சேறியவாறு.

841. போலியான உயர்வுகளை நடித்து முடிவில் சிதம்பர நாடனைக் காணாமலே வாழ்வு வீணாகிறது.

842. இன்று நாளை யென்றைக்கோ
யிறடி வீழு மிச்சடம்
என்றி யம்பி யெங்கெங்கு
மேமாற் றிப்பொய் சூதுகள்செய்
குன்று போற்பா லத்தைத்தேடிக்
கூடிக் குலாவி வரும்
நன்றி கெட்ட நாய்குணத்தர்
நாய்பக் கஞ்ச தைவரே.

843. அன்றிரண்டு மூன்று நான்கு
வைந்தாறு முகத்தரை
என்றுந் தெய்வ மாக
வெண்ணு மேமை மதியாளர்க்கு
ஒன்றி ரண்டு மூன்றுநான்கு
வைந் தாறு முகமிலா
தென்று மவியா பித்தவன்
தின கரனைப் போலுமே.

844. எங்கள் தெய்வ முங்கள்தெய்வ
மீததிற் பெரிதெனச்
சங்கை கொள வைணவர்
சைவர் தர்க்க மிட்டிட
தங்க வெச்ச மயில்தொறுந்
தானொன் றாய்ச் சொலிப்பலன்
பங்கய ணாரணன் காணாய்
பரப்பிர்ம்ம மாகுமே.

---

842. ஏமாற்றுக்களில் இப்படி ஒருவகை. மலைபோலப் பாவம் சேர்த்து நன்றி கெட்ட வாழ்வை முடித்துக் கொள்கிறார்கள்.

843. உருவங்களுக்கு முகத்தை அதிகம் காட்டினால் மக்கள் மயங்குவார்கள் என்று ஓர் உத்தி! ஐந்தாறு முகம் இல்லாத சூரியனைப் போன்ற சோதியே இறைவன்!

844. சைவ வைணவச் சண்டைகள் பொருளற்றவை. பங்கய நாராயணன் ஒருவனே. அவனே சமயந்தொறும் நிற்கிறான். பேதங்கள் இல்லை.

845. எச்சமயத் தேவர் கட்கும்
ஈச னொருவ னல்லால்
மெச்சமயத் தெவர்க்கும் எங்கும்
வெவ்வெ றுதெய் வங்களோ
மிச்ச ஆடு மாடுயானை
வெம்பு லிகுரங் குநாய்கள்
வச்ச கல்லு சாணிமண்ணும்
ஆண்பெண் தெய்வ மல்லவே.

846. கும்பிடுந் தெய்வ மெலாங்
குலத்தெய் வமாய் சேரடித்தே
நம்பி நாளும் பூசைபொங்கல்
நற்பலிகள் தந்திட
வெம்பிட வெதும்பிட
மிடிய தினவிபட
தெம்பிட குடி கெடுக்குஞ்
செத்த தெய்வ மாகுமே.

847. பேயுடல் பிசாசதும்
பிரம ராட்ச சானதும்
தாயு டன்த மக்களையுந்
தண்ணீ ரில்மாண் டழிந்ததும்
நோயு டனொ ருங்கியு
நொடியிற் சத்தொ ழிந்ததும்
ஈயுட னெறும்பு மொய்த்
திறந்த தெய்வ மீதலோ.

---

845. எல்லாச் சமயங்களுக்கும் இறைவன் ஒருவனே. விலங்குகளின் முகங்களை வகைவகையாகச் செய்து உருவம் அமைத்துவிட்டால் வெவ்வேறு தெய்வங்கள் ஆகிவிடுமா?

846. தோன்றிய படியெல்லாம் தெய்வங்களை நிறுவி வழிபடுவதால் உயிர்ப்பு எது? செத்த தெய்வங்களே அவை என்று வெகுளியோடு வருகிறது பாடல்.

847. மனித உடம்பு மாண்டு ஈ எறும்பு மொய்த்த கதைதான் உயிரற்ற தெய்வங்களின் கதையும்.

848. ஒண்ணு மல்ல ரெண்டுமல்ல
வொண்ணி ரண்டு மூன்றல்ல
பண்ணு மல்ல பாட்டுமல்ல
பண்ணும் பாட்டும் பதமல்ல
எண்ணு மல்ல வெழுத்துமல்ல
யெண்ணு மெழுத் தீதல்ல
மண்ணு மல்ல விண்ணுமல்ல
மண்ணும் விண்ணு மத்தியே.

849. ஆணு பெண் ணிரண்டதோ
பறை வது நியாயமோ
ஆணி லாணு பெண்ணிற்
பெண்ண வரலர் குடித்திடில்
ஆணு வேறு பெண்ணுவேறா
யங் கிரண்ட தாகிட
ஆணும் பெண்ணொ ருத்திவயற்
றங்கு திப்ப தொன்றதே.

850. வாத பித்த வையத்தால்
வடிவெ டுத்த மானிடர்
வாத பித்த வையத்தால்
மடிந் திடு மியமத்தை
வாத பித்த வையத்தாலு
மானியம மானியாய்
வாத பித்த வையத்தை
வழங் கல் மதியீனமே.

---

848. இதுவல்ல அதுவல்ல என்று ஒவ்வொன்றாய் இறைமையை உணர்த்துகிற உத்தியிலே அமைந்த பாடல்.

849. ஆணும் பெண்ணும் இரண்டாகப் பேசுவது தவறு. இரண்டு தத்துவங்களும் இணைந்ததே உயிர்ப்பாகும் என்ற படைப்பு நுட்பத்தைப் பாடியவாறு.

851. கோல மிட்ட மேனிகுன்றில்
கொண்ட கோலம் எங்ஙனே
சீலம் எங்கும் சீருமெங்கும்
செத்தொ ழிந்த தல்லவோ
சால நின்று சாமியென்று
சாற்ற வல்ல தாசர்காள்
ஆல முண்ட காலகண்டன்
நாணிக் காணும் காணுமே.

852. முன்னி ருந்த நிலை மறக்க
மண்ணில் வந்த நாளிலே
பின்னி ருந்த வகையறிய
வேண்டும் அன்றி வேறிலை
மன்னன் என்றும் கன்னனென்றும்
மதியி ழந்து பேசலால்
பொன்னி ருக்க மண்ணைத்தேடும்
போக மாகும் மாயமே.

853. காலன் என்று சொல்லுவோர்
கலங்கி நிற்பர் காணுமே
காலன் என்று சொல்லுவோர்
கால னோடு சேர்வரோ
காலன் என்று சொல்லுவோர்
பால னாகி மாள்வரே
கால னைம றந்தபோது
காண்பர் காணும் ஈசனை.

---

851. அழகான பாடல். கோலம் மட்டும் இருந்து உடம்பு நலிந்து விட்டால் என்ன ஆவது? கடவுளே வெட்கப்படுவான், காண்பதற்கு!

852. முற்பிறப்பு மறந்துவிட்டது. பின்னிருந்த வகையறிந்தாலன்றி வழியில்லை. மன்னன் என்றும் கொடைவள்ளல் என்றும் தற் புகழ்ச்சியல்லால் எல்லாம் வீணே!

853. எமன் என்ற நினைப்பே கூடாது. மரணபயம் என்பதே மரண நெருக்கம்! அவனை மறந்து வாழ்ந்தால் ஈசனைக் காணலாம்.

854. வீடு நாடு நம்மதென்று
வீண்பு ரளியே செய்குவர்
வீடு நாடு நம்மதாகில
காலன் நாடும் நம்மதே
வீடு நாடு நம்மதென்று
வாது தான்செ யாவிடில்
வீடு நாடு அளிப்பவன்
விமல னானம் ஈசனே.

855. ஐந்தும் எட்டும் என்றபோது
நட்ட கல்லும் தெய்வமே
சந்தை யையொ ழித்தபோது
சிந்தை யொன்ற தாகுமே
பந்தம் உள்ள மானிடர்கள்
பகுத்த றியாது அழிவதால்
எந்தை நாதன் என்செய்வான்
ஈத றிவீர் பித்தரே.

856. ஆக மூல நாடியில்
அனல்எ ழுப்பி அன்புடன்
மோக மான மாயையில்
முயல்வ தும்ஒ ழிந்திடில்
தாக மேரு நாடியே
அனேக மான வாறுபோல்
ஏகர் பாதம் அன்புடன்
இறைஞ்சி னார்அ றிவரே.

---

854. வீடும் நாடும் நம்மவென்று சொந்தம் கொண்டாடினால் காலனுடைய நாடும் நம்மதாகி விடும்! இதுதானே தர்க்கவாதம். அதுமட்டுமில்லை! பாசம் பாசத்தில் வீழ்த்தும்!

855. கல்லை நோக்கியதும் மந்திர அதிர்வு நம்முள் ஏற்பட்டு விட்டால் சரிதான்! நட்ட கல்லும் தெய்வந்தான்!

856. கீழே சிற்றின்பத்திற் செல்லும் ஆற்றலை மேலெழுப்புவதே அமர யோகம்! அதுவே மூலக்கனலை எழுப்புகிற யோகம்!

# ஆய்வுக் குறிப்பு

இந்த எண்ணூற்று ஐம்பததாறு பாடல்களும் தத்துவப் பாடல்களாகவும், துதிப்பாடல்களாகவும் விளங்குகிற சிவ வாக்கியப் பகுதியாகும்.

இந்தப் பாடல்கள் சுவடிகளிலே முன்பின்னாக மாறுபட்டு வந்துள்ளன. இதில் பிந்திக் கொடுத்துள்ள ஒரு பாடல் முந்தியும் வந்திருக்கலாம்; முந்தியது பிந்தியும் வந்திருக்கலாம். இவ்வாறு பத்தி வரிசை மாறுபடலாமே அல்லாமல், எல்லாப் பாடல்களும் சிவவாக்கியர் அருளியவை என்றே எல்லாச் சுவடிகளிலும் காணப்பெறுகின்றன.

இத்தொகுப்பில் உள்ள வைணவச் சார்பான நூற்றிருபது பாடல்களும் சுவடிகளிலே சிவவாக்கியம் என்றே மொத்தத் தொகுப்பின் நடுவிலே வருகின்றன. இவையே திவ்வியப் பிரபந்தத் தொகுப்பில் 'திருச்சந்த விருத்தம்' எனற தலைப்பில் இடம்பெற்றள்ளன, திருமழிசை ஆழ்வார் இயற்றிய பாசுரங்களாக.

இந்த இயைபு பற்றியும் வரலாற்றுச் சான்றுகள் குறித்தும் தனியான ஆய்வு இந்நூலின் முடிவுரையில் எழுதியுள்ளேன். இப்போது தொடர்ச்சியாகக் கீழே வருகிற பாடல்கள் அனைத்துமே 'சிவ வாக்கியம்' என்ற தலைப்பில் இருந்தாலும், அவை சித்தர்தத்துவம் பற்றியன அல்ல. அவை வைத்தியப் பாடல்கள்!

சிவவாக்கியர் இயற்றியனவாகச் 'சிவவாக்கியம்' என்ற தொகுப்பிலேயே இவையும் நடுவில் வருகிற காரணத்தால் தொகுப்பின் முழுமை கருதி அந்தப் பாடல்களையும் கீழே தருகிறேன். அவை மருத்துப்பாக்கள் ஆதலின், விளக்கங்கள் தராமல் மூலம் மட்டும் தந்துள்ளேன். 857ஆம் எண்ணிலிருந்து அவை தொடர்கின்றன.

## விண்மீன்களும் அவற்றிற் காணும் நோய் மருந்துகளும்

### அசுவினி

857. ஆவதோ ரசுவனிய
லன்று நித்திடும்சுரம்
போகும்பத்து நாளினிற்
போகாவிடி லோர்சாந்திகேள்;
ஈவது நவ்தாணிய்
மிவன்தலையைச் சுற்றியே
கோவதற்கு வைத்திடக்
குணமதாங் கொடுஞ்சுரம்.

### பரணி

858. பரணியிற் சுருமுதிக்கப்
புகரு மைந்துநாளிலே
விரைவினில் விடாததாகி
வெள்ளுஞ்சோறும் சுற்றியே
நிரவி யூரின் மேற்கினில்
நிலைக்க நாலுசந்தியில்
பரவிவைத்திட வங்கே
பறந்துபோஞ் சுரமதே.

### கிருத்திகை

859. கிருத்திகையிற் றோன்றுகாச்சல்
கேளிருபத் தோர்தினம்
பொருத்தமாகி நின்றுபோம்
போகாவிடிலோ செய்யுஞ்சோர்
திருத்தமாகச் சுற்றியுநீ
சேருமக்கினி மூலையில்
விருத்தமாக வைத்திட
விலகுமச் சுரமுமே.

### ரோகிணி

860. மந்தமாகும் வாய்பிணற்றும்
வாந்தி செய்திருமிடுஞ்
சுந்ததமலம் விடுஞ்
சலமிறங்கும் போதினிற்
குந்திவாந்தி செய்யுந்தேகங்
கொப்பளிக்கும் காய்ந்திடும்
கொந்தவாய்வும் பரியுமிக்க
கருண்டிடுஞ் சொரியுமே.

861. பார்க்கமார் வயிற்றினிற்குப்
பாரைப்பாச்சும் வாறுபோல்
சேர்க்கவும் பிடரிகண்ட
முந்திர்க ளேரிடும்
ஏற்கவும் பதினோராநாள்
ஏகிடும் ஏகாவிடின்
தீர்க்கமாக உரசாதம்
சுற்றிவை யூர்நடுகிலே.

## மிருகசீரிடம்

862. மிருகசீருடச் சுரம்
விலகுமோ நாளொன்பதில்
வெருவவு நிற்காவிடின்
வெள்ளை புஷ்பமைந்துமே
சிரசிடத்தில் சுற்றிமாவின்
சேத்திர முன்வைக்கவும்
மறுவாரக் கடைசியில்
சுரமும் நோயுமோடுமே.

## திருவாதிரை

863. ஆதிரையினிற் சுரமு
மைந்து நாளையில்விடும்
வாதத்து விடாதேல் மரண
மிருபத்தைந் தினிலாகும்.
வேதித்துப் புதன்வியாழன்
வெள்ளி காரியின்பகல்
ஓதியும் பரமானன் சுற்றி
கோயில் முன்வையே.

## புனர்பூசம்

864. புனர்பூச முதித்த காச்சல்
போகுமூணாளால்லது
தனித்திருபத் தோருநாளிற்
குள்விலகு மில்லையேல்
முனிந்துமே காயமுஞ்சோறு
முன்பெருமாட் கோயிலிற்
கனிந்துமே வைக்கச் சுரமுங்
காணாதோடுங் காணுமே.

### பூசம்

865. பூசத்திலுதித் திடும்புகல்
சுரம் பொலாங்கிலை
தேசமாயுதித்த போதே
நின்றிடும் நிஜமிதே
பாசத்தி லுதித்தற்குப்
பச்சாந்தி யில்லையே
தேசத்திலுதித்த நோய்க்குச்
சேதமில்லை தீருமே.

### ஆயிலியம்

866. ஆயிலிய மன்றுதித்த
வச்சுர மடுத்தநாள்
போயிடும் போகாவிடில்
போகு மூவார்நாளில்
தீய நாகப்புற்றிற் பாலும்
தீப தூபமிட்டிடில்
நோயது வகன்றிடு
துணுக்கமான நுட்பமே.

### மகம்

867. மகத்தினிலுதித்த வெப்பு
மாது மீரார் நாளினில்
அகத்தியம் விடாவிடின்
அறுபத்து நாள்செலும்
சுகம்பலிக்கு மெள்ளுமேலும்
சுற்றி சுடலைவைத்திடில்
சகத்தினி லறுஞ்சுரமுந்
தாண்டியோடுஞ் சண்ணியே.

### பூரம்

868. பூரத்திலுதித்த காச்சல்
போகும்பத்தேர் நாளினிற்
பாரத்தில் விடாவிடில்
பருப்புஞ் சோறுஞ் சுற்றியே
கூரதைபிடாரி வாழும்
கோயில்முன்னம் வைத்திடில்
சீரதாய்ச் சுரமுந்தீர்ந்து
செவ்வையா யிருப்பரே.

### உத்திரம்

869. உத்திரத்து தித்தவெப்பு
வொன்பதாந் தினத்திலே
அத்திரம் விடாவிடில்
அதற்குத் தேனுஞ்சோறுமே
சூத்திரமாய்ச் சுத்திவிண்டு
கோயில்முன்னம் வைத்திட
பத்திரமாகச் சுரம்
பறந்துபோகும் பாரிலே.

### அத்தம்

870. அத்தத்தி லுதித்தகாச்சல்
அகலுமேழு நாளினில்
முத்தத்தில் விடாததாகில்
முறையாய்ப் பாலுஞ்சோறுமே
மொத்தத்திற் றலையைச்சுற்றி
மூர்க்கதுர்க்கைக் கோவிலின்முன்
வைத்ததே சுரமுந்தீர்த்து
மாறியோடு மெய்ம்மையே.

### சித்திரை

871. சித்திரைக் குறித்த காய்ச்சல்
சேர்ந்த வெட்டுநாளினின்
சித்திரைபோ லேகுமே
யேகாதிருக்கி லங்ஙனே
வத்திரஞ் சோறும்கரியும்
வைத்தவர்க்குச் சுற்றியே
சித்திரமிழைத்த தேவ
சன்னிதிமுன் வைத்திடே.

### சுவாதி

872. சுவாதியினு தித்தசுரம்
துலையும் பத்துநாளையில்
அவரவதிற் றீராவிடில்
தேற்குச் சோறிலைக்கறி
நிலாசியாய்த் தலையைச்
நேர்கணஞ்சேர் காட்டினிற்
றிலாகரனெதிரில் வைக்கச்
சென்றிடுஞ் சுரமதே.

## விசாகம்

873. விசாகநா ளெடுத்தசுரமே
யிருபத் தொன்றினிற்
றிசாசரம தாயிருக்கில்
நேரிறைச்சிச் சோறுமே
திசா திசையின் புன்னைமா
மரத்தின்கீழே வைத்திட
நிசாரிசஞ்சுரமுந் தீர்ந்து
நெட்டியோடுங் காணவே.

## அனுடம்

874. அநுடநாள் சுரங்கஅடாற்
றிலதிலொரு பயமுமில்லை
மனதிற்கேற்ற சாந்தியொன்று
வைப்பதுவு மங்கிலை
தனதுநாட் கெடுவதுஞ்
சாற்றுதற்கு வொன்றிலை
இனமறிந்து அவுத்தமிய
வேஇடும் விரைவிலே.

## கேட்டை

875. கேட்டை சுரமொட்டிரண்டு
கெட்டியாக விட்டிடும்
பூட்டுமங்கள் செய்திருக்கில்
மிக்கபாலுஞ் சோறுமே
தேட்டையாகக் கேசஞ்சுற்றித்
தேடித்துர்க்கைக் கோயில்முன்
போட்டையாகி வச்சுரம்
புலம்பியோடு மங்ஙனே.

## மூலம்

876. மூலத்ததிற் சுரம்வரின்
ஓடிடும் பதினொன்றிற்
சீலமாய்விடும் விடாதேல்
செல்லு மெட்டு மாதத்தில்
கோலமாய்ப் பயறுஞ்சோறு
கொண்டு வைசமாதியில்
ஞாலத்தில் சுரமகன்று
நாடா தோடுமங்ஙனே.

### பூராடம்

877. பூராடத் துதித்தசுரம்
போதமெட்டா நாளினில்
மாறாட்டமாய் விடாவிடில்
மாயனார்தன் கோயில்முன்
சீராட்டமிகப் பாரிசத்தி
னின்று சொர்ணதானமும்
பாராட்டத் தர்மமளிக்கப்
பற்றுறுஞ் சுரமதே.

### உத்திராடம்

878. உத்திராடந் தன்னிலே
யுதித்த சுரமங்ஙனே
சுத்திரெண்டு நாளினிற்
றணிந்திடு மதில்லையே
பத்திகொண்டு சாந்திசெய்யும்
பாவனங்களில்லைகாண்
சித்தியான அவுடதத்திற்
றீருஞ்சுரஞ் சீரிலே.

### திருவோணம்

879. ஓணத்திற்கு முற்தோன்றி
லொன்று மே பயனில்லை
ஆணவ மொடுங்கிநின்
றகன்றிடுஞ் சுரங்களும்
தோணவேறோர் சாந்தியது
ஆட்டு தற் கிலாமலே
நாணவே யகன்றது
நடுக்கடலில் புக்குமே.

### அவிட்டம்

880. அவிட்ட நாளெடுத்த வெப்புல
கலும்பத்து நாளினிற்
றளிர்க்கவும் விடாவிடிற்
றயிருஞ்சோறுஞ் சாற்றியே
கவியவு மறையோர்கைக்
கொடுத்ததிடச் சுரமது
புவிக்குளே விலகியோடும்
பொய்யலவீ துண்மையே.

## சதயம்

881. சதையத்திற் சுரமுதிக்கத்
தான்விடு மீரெட்டினில்
வதையவும் விடாதாகில்
மரணமு மோராண்டினில்
உதையத்திற் பஞ்சவர்ணச்
சோறுச்சித் தலைசுற்றியும்
இதையத்தோற்றி யந்தணர்க்
கிடச்சுர மகலுமே.

## பூரட்டாதி

882. பூரா ட்டாதியிற் சுரமும்
போகுமாறு நாளினில்
ஈரட்டாய் விடாவிடில்
இரண்டதாரில் விட்டிடும்
ஓரட்டாய்ப் பாற்சோறுசுற்றி
ஒன்றைக்கொம்பின் கோவில்முன்
மாறாட்ட மில்லாது
வைக்க வந்த சுரமாறுமே.

## உத்திரட்டாதி

883. உத்திரட்டாதியினி
லுதித்த சுரம்ரெட்டிற்
றத்திபோம் போகாவிடிற்
றயிரும் சோறுஞ்சுற்றியே
வெற்றிசேரும் கோயில்முன்
வைத்தவர் திரும்புமுன்
மதத்தியிற் சுரமதுவும்
வாங்கிடுநீ தீங்கில்லையே.

## ரேவதி

884. ரேவதி உதித்தசுர
நேரிலெட்டு நாளினிற்
போவதும் போகாவிடிற்
புகழாய்ப்பால் சோறுசுற்றியே
போவது நற்சித்திர
மெழுது மண்டபத்தினிற்
ஆவதுமேல் வைத்திட
வகலுஞ் சுரமன்றுளே.

# பொதுவகை மருத்துவம்

885. சாதிலிங்கத்தின் குளிகை
சாற்றவு மெளிதினில்
ஆதியந்த மாயனுபானத்
தினைப்பு கலவும்
சோதிக்கப் பலமுறை
தொடர்ந்து செய்யவல்லவர்
நீதியாகவே களிக்க
நேருரைத்த பாகமே.

886. சஞ்சதம் லவங்கம்
லிங்கந்தாளிச பத்திரியும்
கொஞ்சமே சமனதாகக்
கொள்ளவித்த நீரிலே
மிஞ்சரெண்டு சாமமாட்டி
மேவுங்குன்றி வீதமாய்
அஞ்சிடா துருண்டைசெய்
தமைத்ததை யெழுத்துடே.

887. அனவேளை வேர்பிடி
அதிற் மேற்பட்டை தட்டியுங்
காணப்பாம் பசும்பால வரைத்துக்
கண்டவிரத்துப் பாலிற்சேர்
ஊமைமற் வாரமோ
குருண்டையந்தி சந்திக்குத்
தான்தர வறுத்த உப்பு
தாக்க வெள்ளைசாகுமே.

888. பூணிலக் கடம்புட்டைப்
போட்ட ரைப்பலமதாய்
காலினிற் செருப்படைச்சார்
கண்டரை த்துழக்கினில்
மேனிமேலேழ் நாளுமேல்
விசிறியே குணமதாய்த்
தானிதில் வறுத்தஉப்பு
தாக்கக் கிரையாகுமே.

889. ஆகிடப் புளிப்புகையு
மாகாப் புண்களாறிடும்
ஏகிடுநற் றேனினல்லதிஞ்
சீச்சாற்றினிற் சுரம்
நேகத்திப்பிலி லவங்க
நெல்லி வற்றல் செவாரி
பாகஞ்சுரணம் மதுவிற்
வாச்சவிக் கல் மாறுமே.

890. வட்டத்துத்த சாற்றிட
மண்டலமோர் குளிகையைக்
கெட்ட தேகநீ தூலமாகும்
கிளராலாரஞ் சாற்றினிற்
பட்டிடமும் பண்டலம்
பசும்பொ னிறமாகிடும்
தட்டவேநற் சீரகத்திற்
றாபசுரந் தீருமே.

891. தீரவும் பழரசத்தில்
சேர்த்து கொண்ட யுள்ளமைத்
தேறிடக் கடிவாயில்
திட்டி விஷமறும்
குறவுந்தேள் கொட்டுக்கும்
வாயிலிட்டிடவு மட்டிடும்
கோறவிஞ்சி சாற்றிற்
சன்னிகுளிர்சுரம் பறக்குமே.

892. கார்திரிபலை திரிக்டுகு
சூரணத்தினில்
ஒருருண்டை கோமயத்தி
லுட்கொளவிரைபாகம்
பேருஞ்சுவை காமாலையும்
பித்த பாண்டுரோகமும்
பாருந்தேக முறலும்
பறந்திடு மனைத்துமே.

893. உண்ணுமிழு நீரிலோ
குருண்டையுண்டச் சூனியம்
சண்ணும் பூதகரப்பான்
பட்டைச்சாற்றி லண்டவாதமும்
பண்ணும் புளியனிலைசத்தில்
பைத்திய சுரமறும்
எண்ணு மிஞ்சால்
தேனிடவுலவுன்மத்தந் தீருமே.

894. வெல்லத்தினிலோ ருருண்டை
விழுங்கவே வியர்வையோடு
நல்லவேளைச் சுற்றிலுண்ண
தவிலும் தாபசுரமறும்
சல்லியமுத்தா மணியின்
சாற்றில் மருந்திடரும்
மல்லு நொச்சிச் சாற்றில்தாக்க
வாதசுரந் தீருமே.

895. நெல்லித்தூல் மேதித்தயிரி
லிடவயர் கடுப்பறும்
சொல்லவுங்கையான் ரசத்தில்
சூட்டிருமல் ஈளைபோம்
நல்லவேறப் பாலிலே
நவில்பிரமயிங்கள் போம்
வல்லசாதிக்காய்ப் பொடியில்
மாடக்கிராணி தீருமே.

896. சாரு வேளைச் சாற்றிலிடத்
தலிரும்புற வாதமும்
நேரலெண்ணெ யிழைத்துதாக்க
நீங்குங் கண்டமாலையும்
கோரமேனிச் சாற்றிலே
குமுங்குமலிற் புகுதியும்
சோரபூமதா கம்சம்
புத்தாளுஷ்ண வாய்வுபோம்.

897. நருவிலிச்சார் தன்னிலுண்ண
நற்கரப்பான் கட்டியும்
பருகுஞ் சர்க்கரையில்
பதினெட்டு நோய்கள் நஞ்சனும்
மருவும் பழச்சாற்றிலே
மயக்கம் நஞ்சு சுழற்ம்
வருகு நெய்யில் தேனிலேனு
முட்கொலிப் காயிலாமே.

898. தலைச்சன் பிள்ளைப்பாலிடக்
கண்தன்னொளியின் பூகுலம்
குலையரிசி கரியிலே
முயலகன்று போகுமே.
நிலைப்புளியம்பட்டைச் சாம்பல்
நீர்தெளி வாந்திர
கணித மூலமாக ருண்டைபயிற்
பரங்கிப் புண்காளுறுமே.

899. வெந்நிலையின் சாற்றிழைத்து
விழியிலிடச் காசம்போம்
உற்றசாராய சதுகாடி
யூட்டிடச் சளியறும்
கற்கழுதை முத்திரற்
கூரைக் கண்ணிலிட்டிட
ஆற்றிடும் பசாசுபே
பதிற்பிரம ராட்சசே.

900. ஆப்பாலிலுரைத் தோருண்டை
யாசனத்திற் கட்டிட
சாப்பாகவுடம்பு புகைகால்
தன்னெரிச்சல் மாறிடும்
சாப்பாகத் தன்னெச்சலிற்
கலந்தரைத்தைந்துண்டைபே
தாப்பாயுள்ளங் காலிற்பூசத்
தாளைங்காதஞ் செவ்வனே.

901. அண்ட முள்ளேபூர
வீரமும்மயஞ் சாம்மபின்
கொண்டரைத்துச் சம்பளச்
சார்கூட்டியேரலியிட
விண்டிட மெழுகதாகும்
வெண்ணெய்நெய் தேனிற்கொள்
கண்டிடும் பாரிசவாய்வு
கண்டமாலை போகுமே.

902. கய்ப லரிப்பட்டையோர்
வயங்கொணர்ந்திடித்துமே
குப்பமேனிச்சாங் மிதக்க
ஊறலை யிரண்டுநாள்
வெப்பிலா நிழலுலர்த்தி
மீண்டுமில்லார் சொர்தபின்
தப்பிலா துகூரணித்து
தன்னிடைக்கு முனியே.

903. சீனி சேர்த்தோர் மண்டலஞ்
சிறக்கவரைக் காற்பலம்
தானுண்ண லவரை
முறிப்பான கரிபூண்டுடன்
மீனுடன் காராமணி
மிளிர்சுரைக் கரியாகா
ஆனதிற்றிமிரும் குஷ்ட
மகலும் ரிணமியாலமே.

904. முன்பட்டையிருபல
முதிர்வெந்நீரிலே யரைத்து
தண்ணைச் சீலையிற் பிழிந்திடுஞ்
சலமுமோர் பலம்
அன்றருந்த வாந்திரெண்டு
பேதிநான் காலத்தியாம்
நின்றிடதாகி மோரும்
சாதமுண்ண நிற்கும்.

905. நிற்கலிசசா பத்தியத்தி
ளீங்கிடும் யிரணங்கள்
வாக்கமுன் பட்டை கஸ்தூரி
மஞ்சள் கருஞ்சீரகம்
சொற்கரிசலத் தரைத்ததிற்
கழற்சி யுண்கையில்
மிக்கதண்டு யோகிரிணம்
விலகிடும் விரைவிலே.

906. மண்ணிற்பு நாகம் கொணர்ந்து
வார்த்து போரினில்விட
வண்ணலுமண் கக்கிடுமலைப்
பசும்பாலிலிட்
டெண்ணிடலெரித்து
சிவப்பேறிட வெடுத்தெறிந்
துண்ணரை ரூபாயிடையு
மோரைந்து நாளிட்டிடே.

907. நாளும் செம்மண் பூமியுள்ள
ரசமா மாத்தடி
வாளும் பூமிநாதந் தன்னை
வன்று செய்படைச்சொரி
மீளும் புண்புரை கிரந்திமிக்க
வெடிசூலையும்
நீருங் கையில் கால்ரிணங்கள்
யாவும் போகு முண்மையே.

908. லிங்கம் ரெண்டு செந்தூர
மிரண்டு வீரம்நாபியும்
பொங்குலாளமும் வகைக்குப்
போட்டோர் விராகனிடை
தங்கவிஞ்சி நொச்சிலித்
தணிக்கருநொச்சிலிச்சார்
அங்குமுச் சாறுமுச்
சாமதுரைத் துலர்த்திடே.

909. உலர்த்தியே பொடித்துமண
விடையாயுண்ணச் சூலையும்
விலர்த்தியாகுங் குன்மவாயுவும்
விட்டிடும் சுரமதும்
நிலைத்திடச் சுத்தியுஞ்செய்து
நேரளிக்கும் போதினில்
பலத்த நோயகன்றிடும்
பின்னிச்சா பத்தியத்திலே.

910. கூட்டிலிங்கம் வீரம்சுரங்
கோவையிலைச் சாற்றினிற்
றாட்டியாய்த் தனித்தனியோர்
சாமமுஞ் சுருக்கிட
பூட்டிநற் கட்டதாகும்
புகலவிதற் கீடிலை
நாட்டிலுள்ளோர் கட்டதற்கு
நல்லகட்டி தாகுமே.

911. மேனிப்பலம் நாலதில்
வெங்காயம் பலம்ரெண்டதாய்
தானரைத்தபின் விளக்கு
எண்ணெயிற் கிளறியே
ஊனமற லேகியஞ்செய
துண்ணப்பக்கச் சூலையும்
தானமபோமார் நோவுபித்தஞ்
சோகை மலக்கட்டுமே.

912. பூவரசன் பட்டை காயம்
பூபலம் வகைக்குமே
தூவியிருபதாய் நிழ
லுலர்த்திச் சூர்ணித்ததில்
தாதவுஞ்சமன் வெள்ளைச்
சர்க்கரை சேர்த்தோர் மண்டலம்
ஈவதும் வெறுகடித்து
விட்டு கொள்ள வேண்டுமே.

913. வேண்டுந் தலைந்ததயில
நீங்கியே முழுகவும்
மீண்டுமிச் சாபத்திய
மிருக்க மேகவூரனும்
தாண்டிடுங் கிரந்தியுந்
தடிப்புக் குட்டமானனும்
நீண்டருந்த நோயெலா
நிமைக்குளே பறக்குமே.

914. வெண்மிளகுடன் மிளகிலங்
கமக் கிராகரபொன்
நண்ணளவு பொட்டிலுப்பரைக்கால்
புட்டிவெல்லம்ரெண்டு
பொன்னளவு தேன்பல
மொன்றரையும் லேகியஞ்செய்
துண்ணளவிற் சிதளந்தாக
மழுக்குந் நன்றாமே.

915. அரைப்பலம் பழமிளகாயா
மணக்கெண்ணெயில்
உரைக்கவிட்டு வருத்த
தூள்பனை வெல்லத்தினில்
விரைக்கவும் பாலாக்கி நெய்தேன்
விட்டதைக் கிளறியும்
கூரைக்குளேயோர் சுண்டையளவுண்
கண்ணுமுஷ்ண வாயுவே.

916. வீரம் புருநதங் கெந்தியு
மிலங்கமோரிடை
தூரமிளகைந் திடைக்கு
சூரணங்களஞ்சியால்
சேரக்கண்டு புட்டிவெல்லந்
தேனிற் கற்கண்டிலிட
தீரவும் பத்தியமின்றி
செல்லும்வேண நோய்களே.

917. ஓரைக்கால் கெந்திகால்
சூதமறைலிங்க முக்கால்
கோரவெள்ளை யொன்று
கௌரிக ரொன்றேகால்வீசமும்
தாரமொன் றரையிடை
தனித்தனியாய்ச் சேர்த்ததை
நேரச்சுக்தித்து முலைப்பாலி
லரையென் சாமமே.

918. சாமமுமரைத் திடத்தளர்
குழம்பு மாகிடும்
நேமமாயனு பானத்தி
னெல்லிமை ளயித்திட
போமதிற் சீதளஞ் சென்னி
போகாசுரம் வாய்வதும்
........ ........... .............
............. ........... ...........

919. மோரிலிட்டு லர்ந்தநாக்மும்
பலம் மொன்றுகால்
நேரினில் முருங்கை விரையும்
பலமீழோதாய்
பாரினிற் சாதிக்காய்
நாற்பலங் குழத்தயிலமாய்
சேரிநக்கிக் கால்விராகனிடை
யீரைந்து நாளிலே.

920. இட்டிடவும் வெற்றிலை
யினிற் றடவி யுண்டிட
நெட்டிடவுந் தாதுவிர்த்தி
நேரிட முண்டுகாண்
பட்டிடுமேந் நோய்களும்
பறந்திடு மெளிதினில்
கிட்டிடும் பலாபலன்
கீரிடி யாவரங்ஙனே.

921. வீரம்பலம் நாலரையுமே
பசுமஞ்சட் கிழங்கு
நேரமும் பலமுறைந்திடித்த
சாற்றரைத்துமே
கோரவு மகலிலிட்டுக்
கொண்டு சீலைசெய்ததை
பூரவும் பூமிமட்டம் புதைத்து
மேல்மணலீடே.

922. மணலு நூல்விரற்கடை
யதிற் கொட்டியுமுன்நெடு
தணலிட முகற்புடந்த
கித்தனையரைத்துமே
குணமுடன் சிலையுஞ்செய்து
கூட்டினா வெருவினில்
மனமுடன் மறுபுடத்தில்
வாட்டியு மெடுத்திடே.

923. எடுத்த பின்னெலோரெருவு
மேற்றிப்ப தினோர்புடம்
விடுத்திடும்பின் முன்போற்றுமி
மேலு முன்றெருமுதல்
தொடுத்திடுமுன் போலரைத்துச்
சூட்டும் புடம்பத்தது
அடுத்திருபத்தோர்
புடமுமாகி வெள்ளவுமே.

924. எள்ளவு தேனினெய்வி
லிட்டிடவும் வேளைக்கு
துள்ளும்வாய் வெண்பத்து
தாலுஞ் சோறுசரமெட்டெட்டும்
கள்ள நோயெலாமலுங்
காருமிச்சா பத்தியதாய்
உள்ளது மூன்றைந்துநாளு
முட்கொளுமே வைக்குமே.

925. மேலுமப்ப ளாகாரம்
விராகவிடை யென்றதை
நாலுபடி நற்சலத்தில்
நாட்டித்தூள் கூழரத்துமப்
பாலுதீபாக் கினியாகப்
பார்த்தெரிந் தொருப்படி
கோலவுட் பிராந்தி வர்ணங்
கூடப்புட்டியிட்டிடே.

926. இட்டிட
யிதைக்குடிக்கிலேநாள்
தொட்டிடவும் பித்தமாகின்
சூட்டும் பழச்சாற்றினில்
விட்டிமோர் நோயதும்
விலங்குன்ம மெட்டதும்
அட்டியொன் றிலாமலே
பகலங் காதமங்ஙனே.

927. பச்சையாம் பசும்மஞ்சட்கிழங்கின்
சாறுபடி யொன்றில்
மிச்சாமணக்கெண்ணெய்
அரைப்புட்டிட் காச்சிட
அச்சம் பொன் வருணமாய்
அதையெடுத்துக் காசிடை
கொச்சமாய் குடிக்கவாய்வு
தூசியும் பறக்குமே.

928. செங்கல்லிற் கிட்டக்கல்லிச்
சிறுதுண்டதாய் நொறுக்கியே
பொங்கவுஞ் சிறுவர் நீரினிற்
போட்டு ஊரப்பின் பொடித்து
மங்கந்த கத்திரா
வகத்திலே யோரைத்ததை
அங்குபில்லை செய்துயெரு
ஐம்பதில் புடமிடே.

926. வெள்ளியை யுருக்கிமூ
விசை மொகடம்பூரசத்
துள்ளதைத்தோய் வெட்டையாகுஞ்
சூட்டுங்கிஞ்சம் பொட்டுனு
புள்ளதிட்டு முன்னிரச
மூட்டியரைத்துப்புடம்
மெள்ளப் போட்டு வெளுப்பாம்
வேண நோய்க்கிட்டிடவே.

927. புத்து மண்ணுடன்
கருவுமத்தன் பத்திரியரைத்
துத்ததோர் குகைபண்ணியு
முற்றியிரசத்தினை
வைத்து வாயைமூடச்
சீலுமண்ணது செலுத்தியும்
ஒத்தை சட்டியினிலும்
பினும் குகையிலேற்றிடே.

928. ஏற்றியும் வாடி முடிச்சிலை
செய்து நாற்சாமலைரைச்
சாற்றிடும் வேலன் விறகல
திருப்பை விறகில்
சுற்றியு மெரிக்கப் பதங்கித்
திடுமேற் சட்டியில்
ஆற்றியங் குடைந்ததில்
மைந்தனதை எடுத்திடே.

932. எடுத்ததை யோர்புட்டி
யிசினிலேற்றி வாய்கார்க்கிட்டுமே
தொடுத்திட வரிசிடையைச்
சூட்டுந் தேனு நெய்யினில்
குடுத்திட வெள்ளைச் சுருக்கு
மாறும் விடையும்ரிணம்
விடுத்திடுமேக முதலிருபத்
தொன்று மேகுமே.

933. செம்பணிற் களிம்பலது
செங்கால் பச்சையும்வெள்ளை
வெம்மிட லிடைந்துளிண
மேற்றடவ மாறிடும்
நம்பிடப்புடை நிணத்தில் நாட்ட
நீர்வாட்டிடும்
அம்புவியினில் வெண்ணெயிணற்
புகுங்காணேரிலே.

934. செற்றி சுத்தியும் விளக்
கெண்ணெயில் உருக்கியே
வெந்திடத் தண்ணீரிற் சாய்த்த
தோர் விராகனுமிடை
கொந்தமாய்ச் சுன்னத்திற்றாரஞ்
சுத்தி செய்ததுஞ்சமன்
சிந்திக்கு விரண்டுமிரு
தேங்காய்ப் பாலிற் சேர்த்திடே.

935. சேர்த்துரைத்த பாலினிலி
தைக்கலக்கிக் காச்சியும்
பார்த்தொத்த வெண்ணெயில்
பார்த்திருந்துள்ள வண்டலை
ஆர்த்திட லேகியஞ் செய்ததைச்
சுண்டையளவதாய்
கோர்த்திட வந்தி சற்றி
கொடுக்க மூன்று நாளுமே.

936. கொடுத்திட யெண்ணெயைச்
சிரங்குக்குப் பூசிதினம்
விடுத்திலுப்பை புண்ணாக்கை
மேற்றேய்து மூழ்க நீரினில்
அடித்துமூணுட் காலைமோர்
சோரன்றி நாசெய் சோறுண்ண
கொடுத்திட பத்தியமேகஞ்
சூழ்காப்பா னேகுமே.

937. வெள்ளைப்பூலாப் பட்டையுந்
தன்மேற் கொழுந்துசீரகம்
கொள்ளலா மணக்கெண்ணெயுங்
கூட்டியங் கெரித்ததை
பிள்ளைகள் தங்கம் கிடவும்
போகுமற்றி லெமடையும்
உள்ள தாணினைத்தும்போ
முடம்பு புஷ்டியாகுமே.

938. பூண்டு முந்திரியுடன்
பொரிச்சல் மிளகின்வீதம்
மீண்டுமோ மங்காசிடையாய்
விண்டரைத்து முண்டிட
தூண்டு மிளகுநீர் சாதஞ்
சூட்டக்காப்பி ரொட்டியும்
நீண்டு பேதி நிற்காதாகு
னெய் பதனி லேற்றிடே.

939. ஏற்றவுட்ட ணத்தில் பேரி
லேங்கப் பேதியாகிடின்
மாற்றச் சுக்குவோ மங்காயம்
வாதைப்பட்டைச் சாற்றரைத்
தூற்ற ரெண்டு கண்டலைத்
துரைத்திடவு மக்கணம்
போற்றவுஞ் சலாமுஞ் செய்து
போகு முஷ்ண பேதியே.

940. உண்ணாப்பாலர்க்குப் பேதி
யுண்டாகில் முலைப்பாலரைத்
தண்ணதைக் கொடுத்திட
வகலும் பேதியானது
சென்னனு மந்தத்திற் பேதி
செல்ல முலைப்பாலிட
வண்ணலோம மாத்திரை
யரைத்திட்டுப் புளித்தள்ளே.

941. கம்பளியிலை யுந்துறுத்த
முதரைத்து பற்றது
தடவிட மேற்போட வாறு
நாளுங் கண்டமாலையும்
வெம்பிடக் கஞ்சாயிலையு
மீதவெங் காயத்தையும்
தெம்பிட வதக்கிக்கட்டத்
தீரும் பவுத்திரமே.

942. ஆவினெய் யவுரிச்சார்
சமன்
ஹாவியே நசியதுடச்
சர்வபீநச மும்போம்
மேவி நல்லெண்ணெய் கடுக்காய்
வெள்ளைவெங்காயஞ்சப
னாவெரித் தேழுநாள்
மூழ்கில் நாட்டச்சிராய் விழுமே.

943. பொட்டிலுப்புரேவல் சின்னி
போட்டுமொரு கோப்பையிற்
றுட்டது வொள்நயப் பொடித்துச்
சூட்டெடுருமை மோரினில்
விட்டதைக்
வேண்டுவோர் குடித்திட
அட்டியின்றிப் பேதியாகு
மக்கணங்சு குணமே.

944. நல்லெண்ணெய் நொச்சிச்சாறு
நாட்டிடுமுழக்காய்
சல்விமிளகுப் பலங்கால்
சாற்று ரைத்திட்டு
கல்விக்காச்சித் தூபங்
கருமஞ் சிரகஞ் கழஞ்சுதூள்
செல்லவிட்டு முற்றலை
ஓிர நோய் தீயி

945. வாதுமைப் பருப்புக்கரிய
பேரளமை சாட்சியும்
சாதிபத்திரிக் கிராம்பு
சாற்றுநீர் முள்ளிலைகைக்
கோதிமார் விராகனிடைக்
கோதுமைச் சமனிடை
ஜோதிராலியிறு வாதத்திற்
சூரணித் தொன்றுக்குமே.

946. ஆக்கியரைத்துக் குளிகையைக்
கடலை வீதஞ்செய்
தேக்கியிரு வேளைவாயி
லிட்டு மென்றுநீரின்
தாக்கிக் கொப்பளித்தூதை
விழுங்க கால்மண்டலம்
தூக்கிறி பத்தியம் லீலைகள்
கள்ளுசராய் தள்ளுமே.

947. காரந்தாரஞ் சூதம்லிங்
கங்காரீயஞ் சமன்பதச்
சாரரைத் தண்டோட்டிலிட்டுத்
தான்மேலோடு மூடியு
மாரச்சிலை செய்துவுன்
மணமில்லைத்து மூடியே
ஏரவைத் தெழுப்புமிடச்
செந்தூ ரமாகுமே.

948. சாதிலிங்கமோர் பலந்
தணித்து மட்டிக்காயினுள்
மோதவிட்டச் சீவித்து
மூவைந் நெருப்புடமிடும்
போதிற்கட்டு மேடிட்டுப்
பிரமதண்டு சாருழ
சாதியரய்ச் சுருக்கிட
மெழுகதா மறைத்திடே.

949. அரைத்திடோர் பணவிடைச்
சீனிகற் கண்டில் வெண்ணெயில்
உரைத்திடத் திரிகடுகிற்
றேழிலோர் விராகணிடை
உரைத்திச் சண்டை வீதத்தில்
மேவும் வாய் வகன்றிடும்
முரைத்திடு நோய்தைத் தோரைந்து
மூவைந்து நாள் மூட்டுமே.

950. முட்டியச் சகல மேகமும்
வாய்வு கிரந்தியும்
மாட்டச் சர்வ சுரஞ்சூலைகள்
குன்மம் வாய்வதும்
தீட்டிட எண்ணாக்கைந் தின்னுந்
தீயநோய் திரட்சியும்
வாட்டிருங்கை கால்பிடிப்
பிடிமார் நோய்குடைச்சலே.

951. குடைச்சலிந்திச் சாபத்தியங்
கூடாறு புளிப்புகை
கிடைச்சது முருங்கைப் பீர்க்கன்
கேளவரை வண்டையும்
இடைக்கல் சிறுமுள்ளிக் கீரை
கடுகுபூண் டிறைச்சியும்
அசைச்சி நீக்குமுறிவு வெண்
மிளகு சிறுகீரையே.

952. மிளகுகியாழம் வைத்துண்ணவு
மோ
விளக்கெண்ணெய் நல்லெண்ணெயில்
மூன்றுதலை முழுகும்பின்
புளகிக்கச் சீயக்காய் அரைப்புடன்
மூவெண்ணெயிலும்
வளப்பமாய்க் கூட்டித் தலைக்கு
வார்த்துப் புளிசேரே.

953. கரட்டு கெந்தியைப்பொடி
தலையரைத்துள் வைத்ததை
விரட்டியைந் தினிற்புடமிடப்
பஸ்பமா நெய்யினில்
திரட்டியுண் மேகப்படை
திணைதவணை சொரியூரல்
மிரட்டிட வின்னும் பலது
வேகும்.

954. சிந்திற் கொடியின் சூரணஞ்
சேரனுலந்தது பலம்
ஏந்து மாமழு மதிர
மேலங்கிராம்பு கோட்டமும்
மீந்த சாதிக்காசபாத்திரி
விடையங்கிராம்பதும்
சாந்தமா முத்தக்காசு
நன்னாரிலசு வாகியே.

955. வாசி சந்தனஞ் சீரக
மாவாரை யிலுப்பைப்பூ
மாசறு கோரைசினை
வகைக்கிரு விராகனிடை
வீணசர்க்கரை
மிரண்டு தேனுமோர்பலம்
நேசமாய் சூரணமல்லது
லேகியஞ் செய்திடே.

956. குட்டிடச் சகல கழிச்சல்
மேகம் பிரமியங்
கட்டிடுத் தலையிடிக்கை
நெவெரிவு பீநசம்
நெட்டிடாது நீரிழிவு
நீர்கடுப்பு நீரடைப்
பொட்டிடாது வுள்ளுருக்கி
போகும் பல நோய்களே.

957. தட்டிப் பூரம் வாழைப்பட்டைச்
சாற்றரைத் தோட்டிட்டதை
ரொட்டி திருப்பினாற் போற்றிருப்பி
யேழ் விசையரைத்
தெட்டியேத் திரஞ்சுட்டுத்
திரிகடுகச் சூரணத்
தொட்டியே யந்தியடை
யண்ணப்போம் நினைகளே.

958. கெந்தகத் திராவம் இருபலம்
வெண்போப்பையில்
அந்தமாக விட்டிலிங்கு மையம்
வைத்துச் சட்டியில்
குந்திடவும் கோப்பை வைத்துக்
கோப்பைவாய்ச் சீரிணைல்
சிந்திடாது கொட்டிவைத்துத்
தீயெரிப்படுப்பிலே.

959. தீயதிற் றிராவகந் தீஞ்சிக்
கொஞ்ச மிருக்கையில்
ஆயதி லிங்கம் பூர்த்ததில்லரும்
போகி நக்கியும்
சாயமது மாரியதன்பின்
நன்னீரினை யூற்றிடின்
பாயது மெல்லா மடியிற்
பற்றி நிற்குங் காணவே.

960. காணவே கலக்கிக் கலக்கத்
தண்ணீரி ருத்தபின்
ஈனவு மில்லாது நாலைந்தே
நற்தண்ணீரைவிட
டுணவுங் கழுவியுற்றி யுள்ளபடி
வைத்திட
தோணவே காய்ந்தது
துல்லிய பஸ்பமீ தாதுவே.

961. படிகியு மிரண்டுபலம்
பாச்சுந்தார மோர்பலம்
பொடியதாய்க் கலியாணப்
பூசுணைச் சாற்றிருசாமத்
திடமுடனரைத்துப் பில்லை
செய்துலர்த்து யீரெரு
புடமிடத் தாளக பஸ்பப்
போக்கு விண்மையாகுமே.

962. கெந்தி தாளகம்வகைக்
கிருவிராகனானதில்
முந்தியு மெருக்கம் பாலொரு
துலாமும் விட்டதில்
பந்திக்கத் தேங்கா யிரண்டின்
பாலினி லரைத்தபின்
சந்திக்கக் கலந்தரைத் தரைத்ததைத்
காச்சியி றக்கிடே.

963. இறக்கியும் பெரியவர்கட்
கித்தயில முத்துளி
உரைக்கவு நிசிநீரினி
லுட்குடிக்கப் பேதியாம்.
ஒருதுளி சிறியர்கட்
குள்ளரிக்க நாற்றிற
முரியது நற்பேதியா முறிப்பு
மோருஞ் சோறுண்ணே.

964. உண்ணவுங் கிரந்தி சிரங்குச்
சொரி ஒட்டமும்போல்
கண்ணவும் வாய்வுமேகங்
கரப்பான் காயங் காங்கைகட்
கெண்ணையுண்டு மூன்று நாளிச்சா
பத்தியம் வைத்திட
வண்ணமாய்ப் பல வினைகள்
வாடிவன மோடுமே.

965. ஊமத்தைச் செடியைச்
சூரியனுதித்த முன்னேபோய்
நாமத்தைக் கெல்லிப் பிடுங்கி
ரண்டதாய்ப் பிளந்ததை
வாமத்தில் வெயிலிற்போட
வாட. வாட நெறிடும்
நேமத்தோ ரையாப்பது
நெட்டிடாது நீங்குமே.

966. நீக்குந் தோன்று மூன்றுநா
ளிற்குள் செய்பலித்திடும்
ஆங்கரையர யாப்புத் தோன்று
நாளுமுல பூநாகத்தை
பாங்கதயரைத்து மூணாட்
பற்றுபோட வீக்கமும்
ஒங்கிடாதனத்து மாதி
யுள்ளநோய் ஒளிக்குமே.

967. வாட்டியவர்க்கன் பருப்பச்சரர்
சித்த மணக்கெண்ணெய்
கூட்டித் திரிபுர பதகங்
கொடுக்க வேளைபொன்
வாட்டிட வகன்றிடும்
பதங்கமு மில்லாவிடின்
நாட்பிழு வேளைக் கொடுக்கு
நல்லாய் கோணல் மாறுமே.

968. புங்கம் வேர் கரடித்தோல்
புலித்தோலுரிக்கரி
பொங்குறல் லெண்ணெயிற்
சோரல்போல் பொரித்திறத்திடப்
தங்கமு வேளைப் புகட்டச்
சாருங் சுக்குவானுமே
மங்கலெங்கு நில்லாது
வகைவேயிற் செல்லுமே.

969. சீயக்கா யுழக்குச் சட்டியி
லிட்டு தண்ணீர்படி
காயவிட்டு மெட்டிலொன்றாய்க்
காய்ச்சியுட் கொடுத்திட
நேயமான மாதர்கட்கு
ஒன்றிடுஞ் சூதகலாய்
வோயவிப்படி மூன்று
நாளும் கொடுக்கப் போனாமே.

970. சோத்தவித்த சாதிக்காய்
மூன்றுபூரம் விராகனிடை
வார்த்து பூப்பலம் சித்தாமணக்
கெண்ணெய் பிணிவரைக்
நூத்தவுங் கிலக்கிக்கரண்டி
வீதமை நாளறு
நித்தவயர் கொட்டிலுக் கண்ணிச்
சாபத்தியத்திலே.

971. அங்கிடுக் கன்றியிப்பலரிச்
சாற்றரைத்ததைத்
தங்கிடச் சிமிளிவிட்டி
ராத்திரி சித் யிற்
பொங்கிட வார முதட்டி
பூச வெள்ளையொனது
நங்கிடக் கறுப்புமாகு
நல்லதட்டிஷ் காணுமே.

972. எள்ளெண்ணெய் அரையணா
விசையு வெள்ளெருக்கன்பால்
கொள்ளும் புட்டிதன்னில்விட்டு
நோறு மஞ்சள்தூ ள்பலர்
மெள்ளவுங் கலக்கி வெயிலில்
வைக்குந் தயிலத்தில்
தெள்ளக்கை நாற்றய் குடைச்
சற்றீரத் தீயிற் காய்ச்சிடே.

973. ஈரமரம் வெங்காய நற்புளி
கருப்பங் கட்டியும்
சீரகங் கோலையிலையைச்
சேர்த்தா மணக்கெண்ணெயில்
நேரவே தடவித்
காய்ச்சியைந்தையுஞ்
சேரவுஞ் சுடெ வரைத்துத்
தீநீரிற் குழப்பிடே.

974. குழப்பியதனை மூன்றுநாள்
கொருக்கலரைக் கீரையாம்
பழக்கமாய்த் துவரையிற்
பருப்பாம் பச்சைப்பயரதும்
பிழக்கமாகச் சேர்க்கவும்
புளிப்புமாகா பத்தியம்
சழக்கறை வாய்ப்புண்டை
சரந்தன் காய்ச்சலகலுமே.

975. காயஞ் சீரகமு மோருங்
கூடுகிந்து புத்திரிகடு
நேயமாய்ப் பசும் பாலுந்தை
வேளைச்சரர் நாட மருந்
தோயவு பிடித்துப்பால்
சற்று பதமாய் லேகியம்
பாயக் காய்ச்சிப் பாகமாய்ப்
பருக வீறு நேருமே.

---

இந்தத் தொள்ளாயிரத் தெழுபத்தைந்து பாடல்களுக்குமேல் இன்னும் சில பாடல்கள் கருத்து இயைபும் சந்த இயைபும் இல்லாமல் காண்கின்றன. அவை மேலும் நூறு வரை இருக்கும்.

இந்த அதிகப்படியான செய்யுட்களை ஆயும்போது அவற்றின் சொல்லாட்சி பழைமை தழுவியதாகக் காணவில்லை. சிவவாக்கியர் இயற்றியன என்பதிலேயே ஐயம் உண்டாக்குகின்றன.

இந்த மருத்துவப் பாடல்களுமே எனக்குத் தெரியாத வைத்திய முறைகளைப் பற்றியன என்பதால் பாடல்களின் பொருளைப்பற்றி நான் எதுவும் சொல்வதற்கில்லை. ஆனால் கவியமைப்பை நோக்கும்போது இப்பாடல்கள் பிற்காலத் தெழுந்தவையாக இருக்குமோ என்று ஐயப்படுகிறேன்.

# கபிலர் அகவல்

நான்முகன் படைத்தநா
    னாவகை உலகில்
ஆன்ற சிறப்பின்
    அரும்பொருள் கூறுங்கால்
ஆண்முதிதோ பெண்முதிதோ
    அன்றிஅலி தான்முதிதோ
நாள்முதிதோ கோள்முதிதோ
    நல்வினையோ தீவினையோ
செல்வம் சிறப்போ
    அறிவு சிறப்போ
தொல்லைமா ஞாலமும்
    தோற்றமோ படைப்போ
எல்லாப் பிறப்பும்
    இயற்கையோ செயற்கையோ
காலத்தாற் சாவரோ
    பொய்ச்சாவு சாவரோ
நஞ்சுறு தீவினை
    துஞ்சுமோ துஞ்சாதோ
துஞ்சும்போ தந்தப்
    பஞ்சேந் திரியம்
என்செயா நிற்குமோ
    எவ்விடத் தேகுமோ

---

இந்தப் தொடக்க அடிகள் உலக இயற்கையைப் பற்றி எழுகின்றன.

நான்முகன் - பிரமன், ஞாலம் - இந்த நிலப்பரப்பு முற்றும். துஞ்சுதல் - மறைந்து நீங்குதல், இறத்தல்.

நாலுமுகம் கொண்ட அயன் நாலுநாலுவிதமான இந்த நானிலத்தைப் படைத்தான். இதன் நுட்பத்தைப பார்த்தால், பார்த்து ஆராய்ந்தால், ஆண்முதலிலே பிறந்த உயிரா அல்லது பெண்ணா? நட்சத்திரம் முந்தியதோ அல்லது கிரமமாகிய கோள் முந்தியதோ? முதல்வினை நல்வினையா அல்லது தீவினையா? செல்வம் சிறந்ததா அல்லது அறிவா? இந்தப் பூமி தோன்றியதா அல்லது படைக்கப்பட்டதா? உயிர் என்பது இயற்கையா அல்லது செயற்கையா? தீவினைக்கு அழிவுண்டா? தூங்கும்போது ஐம்புலன் என்ன ஆகிறது?

ஆற்றலுடையீர்
அருந்தவம் புரிந்தால்
வேற்றுடம் பாகுமோ
தமதுடம் பாகுமோ
உண்டியை யுண்வ(து)
உடலோ உயிரோ
உலகத் தீரே
உலகத் தீரே
நாக்கடிப் பாச
வாய்ப்பறை யறைந்து
சாற்றக் கேண்மின்
சாற்றக் கேண்மின்
மனிதர்க்கு வயது
நூறல்ல தில்லை
ஐம்ப திரவி
லகலுந் துயிலினால்
ஒட்டிய இளமையா
லோரைந்து நீங்கும்
ஆக்கை யிளமையி
லைம்மூன்று நீங்கும்
அவற்றுள்

---

தவம் செய்வதால் இந்த உடம்பே மாறுதலுக்கு உள்ளாகிறதோ? உணவு சாப்பிடுகிறோம். அதை உண்பது உடம்பா உயிரா? நாக்கடிப்பு - குறுந்தடி. வாய்ப்பறை - வாய்க்கொட்டு. மனித ஆயுள், முழுமையான வயது, நூறு என்றால் அதில் ஐம்பது இரவுத் தூக்கத்தில், சரிபாதி கழிந்துவிடும். விவரம் தெரியாத நிலையில் ஐந்து வயது வரை கழிகிறது. உடம்பு பிஞ்சாக இருப்பதால் பதினைந்து ஆண்டு பசுமையில் கழிகிறது.

ஆழ்வார் பாசுரங்களில் இதுபோன்ற கருத்து வந்துள்ளமை ஒப்பு நோக்குக.

இன்புறு நாளும்
　　சிலவே யதாஅன்று
துன்புறு நாளும்
　　சிலவே யாதலால்
பெருக்கா(று) ஒத்தது
　　செல்வம் பெருக்காற்(று)
இடிகரை யொத்தது
　　இளமை யிடிகரை
வாழ்மர மொத்தது
　　வாழ்நா ளாதலால்
ஒன்றே செய்யவும்
　　வேண்டும் ஒன்றும்
நன்றே செய்யவும்
　　வேண்டும் நன்றும்
இன்றே செய்யவும்
　　வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும்
　　வேண்டும் இன்னும்
நாளை நாளை
　　யென்பீ ராகில்
நமனுடை முறைநா
　　ளாவதும் அறிவீர்
நம்முடை முறைநா
　　ளாவதும் அறிவீர்

---

பெருக்காறு - ஆற்றுவெள்ளம். இன்னே - இப்போதே.

இந்த வாழ்விலே, அதாவது வீணான ஆண்டுகள் மேலே சொன்னவை. தவிர மீதத்தில், இன்புறும் நாள்கள் சில, துன்புறும் நாளும் சிலவே. செல்வம் வெள்ளம்போல வரும், வடியும்! இடிந்து வீழ்கிற நீர் நதிக்கரை போன்றது இளமை. அதில் நிற்கும் மரம்போன்றது வாழும் நாள்! எனவே மணம் கவிந்து நிலையான ஒன்றைச் செய்ய வேண்டும். அதை நல்லதாகவும் நன்றாகவும் செய்யவேண்டும். நன்றையும் இன்றே, இப்போதே செய்ய வேண்டும். நாளைக்கு என்று ஒத்திப் போட்டால் அது அந்த மறுநாள் அல்லது எமனுடையதோ? நமக்குத் தெரியாது.

எப்போ தாயினுங்
கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக்
கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான்
பொருளொடும் போகான்
சாற்றவும் போகான்
தமரொடும் போகான்
நல்லா ரென்னான்
நல்குர வறியான்
தீயா ரென்னான்
செல்வரென் றுன்னான்
தரியா னொருகணம்
தறுக ணாளன்!
உயிர்கொடு போவான்
உடல்கொடு போகான்.
ஏதுக் கழுவீர்?
ஏழை மாந்தர்காள்!
உயிரினை யிழந்தோ?
உடலினை யிழந்தோ?
உயிரிழந் தழுதுமென்
றோதுவீ ராகில்

---

கூற்றுவன் - எமன். தமர் - நம்மவர், உறவினர். நல்குரவு - வறுமை, ஏழைமை, தறுகணாளன் - வீரன்.

எமன் எப்போதாவது வருவான். கட்டாயம் வருவான். அவனைப் புகழ்ந்தால் போகமாட்டான். பணம்கொடுத்து லஞ்சம் வழங்கி சரிக்கட்ட முடியாது, போகமாட்டான். சொன்னாலும் போகமாட்டான். மற்ற உறவினர்களை நமக்குப் பதிலாகக் கொண்டு செல்லமாட்டான். நல்லவர், ஏழைஎளியவர் என்று அறிந்து கொள்ளான். தீயவர், செல்வர் என்று தயங்கமாட்டான். ஒரு வினாடிகூடப் பொறுத்திருக்கமாட்டான், அந்தக் கொடியவன்; அஞ்சாத கல்நெஞ்சன்! உயிரைக்கொண்டு போவான், உடம்பை இல்லை. உயிர் போனதும் ஏன் அழுகிறீர்கள்? உயிரை இழந்ததற்கா அல்லது உடம்பை இழந்ததற்கா?

*உடலினை யன்றலா(து)
இன்றுங் காண்கிலீர்!
உயிரினை யிழந்த
உடலது தன்னைக்
களவு கொண்ட
கள்வனைப் போல
காலு மார்த்துக்
கையு மார்த்துக்
கூறை களைந்து
கோவணங் கொளுவி
ஈமத் தீயை
எரியெழ மூட்டிப்
பொடிபடச் சுட்டுப்
புனலிடை மூழ்கிப்
போய்த்தம ரோடும்
புந்திரைந் தழுவது
சலமெனப் படுமோ
சதுரெனப் படுமோ?
பார்ப்பன மாந்தர்காள்!
பகர்வது கேண்மின்!
இறந்தவ ராயுமை
யிவ்விடை யிருத்திப்
பாவனை மந்திரம்
பலபட உரைத்தே

---

* உடலினை என்பது 'உயிரினை' என்றும் இருக்கக்கூடும். காலும் கையும் ஆர்த்தல் - கட்டிப்பிணைத்தல். கூறை - ஆடை. ஈமத்தீ - சுடு காட்டில் உடம்பை எரிக்கிற நெருப்பு. சலம் - பேதைமை. புந்திநைந்தழுதல் - மனம் இன்னலுற்று அழுதல். சதுர் - திறமை, அறிவுடைமை. இவ்விடை - இந்தப் பூமியிலே, இகவுலகத்திலே.

உயிர்போன உடம்பை என்னென்ன செய்கிறோம் என்பதை உருக்கத்தோடு சித்திரிக்கின்றன இந்த அடிகள்.

இனி இறந்த சடங்குகளைக் கூறும்போது இவற்றை நடத்தி வைக்கிற பார்ப்பனர்களை விளிக்கிறது பாடல்.

உமக்கவர் புத்திர
ரூட்டின ப்போது
அருபசி யாற்குலைந்
தாங்கவர் மீண்டு
கையேந்தி நிற்பது
கண்டதார் புகலீர்
அருந்திய உண்டியா
லார்பசி கழிந்தது?
ஒட்டியவர், மிலேச்சர்,
ஊணர், சிங்களர்
இட்டிடைச் சோனகர்,
யவனர், சீனத்தர்
பற்பலர் நாட்டிலும்
பார்ப்ப ரிலையால்
முற்படைப் பதனில்வே(று)
ஆகிய முறைமைபோல்
நால்வகைச் சாதியிந்
நாட்டில்நீர் நாட்டினீர்
மேல்வகை கீழ்வகை
விளங்குவது ஒழுக்கால்
பெற்றமும் எருமையும்
பிறப்பினில் வேறே

---

பெற்றம் - பசு.

உம்மை இறந்தவராகப் பாவனை செய்து உமக்கு உண்டியை இறந்தவரின் மக்கள் தருகிறார்களே, அப்போது பசிமிகுந்த அவர்கள் வந்து கையேந்தி நிற்பதைப் பார்த்தவர்கள் யார்? சாப்பிட்ட உணவில் யாருடைய பசி தீர்ந்தது? உமது பசியா இறந்தோர் பசியா?

பல நாடுகளைச் சுட்டிக்காட்டி இங்கெல்லாம் மரணம் நிகழ்ந்த போதிலும், இங்கே பார்ப்பனர்கள், திதி நடத்தி வைப்போர், சிராத்தம் செய்விப்போர் இல்லையே!

ஏதோ படைப்பிலேயே, முன்கூட்டியே, ஏற்பட்டது போல நீங்கள் நான்கு சாதியை நிலைநாட்டினீர்கள். ஒழுக்கம் அல்லவா உயர்வு தாழ்வைத் தருவது?

அவ்விரு சாதியி
லாண்பெண் மாறிக்
கலந்து கருப்பெறல்
கண்ட துண்டோ?
ஒருவகைச் சாதியாம்
மக்கட் பிறப்பில்ஈ
ரிருவகை யாகநீ
ரியம்பிய குலத்து
ஆண்பெண் மாறி
அணைதலு மணைந்தபின்
கருப்பொறை யுயிர்ப்பதுங்
காண்கின் றிலிரோ?
எந்நிலத் தந்தவித்(து)
அங்குரித் திடுமலால்
மாறிவே றாகும்
வழக்கமொன் றிலையே.
பூசுரர்ப் புணர்ந்து
புலைச்சிய ரீன்ற
புத்திர ராயினோர்
பூசுர ரல்லரோ?

---

பசுவும் எருமையும் வெவ்வேறு பிறப்பு. இரண்டும் கலப்புப்புணர்ச்சி செய்து கருப்பெறல் உண்டோ?

நீர் வெவ்வேறு சாதி என்று வேறுபிரித்துக் கூறுகிற இரண்டு சாதி மக்கள் கலப்புச் செய்து அணைந்து கருப்பெறுகிறார்களே. பார்க்கவில்லையா?

எந்த நிலத்தில் எந்த வித்துப் போடுகிறோமோ அதே முளைக்கிறது. விரை ஒன்றுபோடச் சுரை ஒன்று முளைப்பதில்லை. மாறுவதில்லை.

பார்ப்பனரைக் கூடிப்புணர்ந்து புலைச்சி பெறுகிற பிள்ளை பார்ப்பனச் சிசு இல்லையா?

கருப்பொறை உயிர்ப்பது - பிள்ளை பெறுவது. அங்குரித்தல் - அங்கு முளைத்தல். பூசுரர் - பார்ப்பனர். புலைச்சி -புலையர்குலத்துப் பெண்மணி.

பெற்றமும்
எருமையும்
பேதமாய்த்
தோன்றல்போல்
மாந்தரிற் பேதமாய்
வடிவெவர் கண்டுளார்?
வாழ்நா ளுறுப்புமெய்
வண்ணமோ டறிவினில்
வேற்றுமை யாவதும்
வெளிப்பட லின்றே
தென்றிசைப் புலையன்
வடதிசைக் கேகிற்
பழுதற வோதிப்
பார்ப்பா னாவான்
வடதிசைப் பார்ப்பான்
தென்றிசைக் கேகின்
நடையது கோணிப்
புலைய னாவான்
அதுநிற்க
சேற்றிற் பிறந்த
செங்கழு நீர்போல்

---

கூத்தி - தாசி. இங்கே திலோத்தமை. வசிட்டனின் அன்னை.

பசுவும் எருமையும் வேறாகத் தோன்றுவதுபோல் பல்வகைச் சாதி என்ற மனிதர்களில் வடிவ மாறுபாடு இல்லையே. வாழ்நாள், அங்க அமைப்பு, உடம்பு வாகு, புலன் அறிவு ஆகியவற்றில் வித்தியாசம் காணோமே.

தென்னாட்டில் உள்ள ஒரு புலையன் நெடுந்தூரம் வடக்கே சென்று நன்கு படித்துப் பார்ப்பனப் பண்டிதம் செய்கிறான்.

வடக்கத்திப் பார்ப்பான் தெற்கே வந்து நடையும் பழக்கமும் கோணலாகிப் புலையன் ஆகிறான்.

புரட்சிகரமான பாடல். புரட்சிகரமான சிந்தனைகள். அறிவியல் சார்ந்த விஞ்ஞான நோக்கிலே வருகிற வினாக்கள்!

பிரமற்குக்
கூத்திவயிற்றிற்
பிறந்த வசிட்டரும்
வசிட்டர்க்குச்
சண்டாளி வயிற்றிற்
பிறந்த சத்தியரும்
சத்தியர்க்குப்
புலைச்சிதோள் சேர்ந்து
பிறந்த பராசரரும்
பராசரருக்கு மீன்
வாணிச்சி வயிற்றிற்
பிறந்த வியாசரும்
இந்நால்வரும்
வேதங்க ளோதி
மேன்மைப் பட்டு
மாதவ ராகி
வயங்கின ரன்றோ?

---

செங்கழுநீர் சேற்றிலே பூப்பதுபோல :-

பிரமன் திலோத்தமையைக் கூட, அந்தத் தாசிக்கு வசிட்டர் பிறந்தார். வசிட்டர் ஒரு சண்டாளியைப் புணர்ந்து அவள் வயிற்றில் சத்தியர் பிறந்தார். சத்தியருக்குப் புலைச்சி கூடிப் பிறந்தவரே பராசரர். பராசரருக்கு மீனவ வாணிச்சி பெற்ற மகனே வியாசர்.

இந்த நால்வரும் எப்படி? வேதம் ஓதி மேன்மை அடைந்து பெருந்தவ ஞானிகளாகத் திகழ்ந்தனரல்லவா?

அருந்தவ மாமுனி
யாம்பக வற்குக்
கருவூர்ப் பெரும்பதிக்
கட்பெரும் புலைச்சி
ஆதி வயிற்றினி
லன்றவ தரித்த
கான்முளை யாகிய
கபிலனும் யானே
என்னுடன் பிறந்தவ
ரெத்தனை பேரெனில்
ஆண்பால் மூவர்
பெண்பால் நால்வர்
யாம்வளர் திறஞ்சிறி
தியம்புவல் கேண்மின்
ஊற்றுக் காடெனும்
ஊர்தனிற் றங்கியே
வண்ணா ரகத்தில்
உப்பை வளர்ந்தனள்
காவிரிப்பூம் பட்டினத்திற்
கள்விலைஞர் சேரியில்
சான்றோ ரகந்தனில்
உறுவை வளர்ந்தனள்

---

கான்முளை - மகன். சான்றோர் - நாடார் வகுப்பினர்.

நான் யார் என்பது உங்களுக்குத் தெரியாதா? சொல்கிறேன்.

பகவன் என்னும் அரிய தவமுனிக்குக் கருவூர்ப்புலைச்சி ஆதியின் வயிற்றில் அவதாரம் செய்த மகனே நான்! என் உடன் பிறப்புக்கள் தெரியுமோ? ஆண்மூன்று, பெண் மூன்று. வளர்ந்த முறை கேளும். ஊற்றுக்காடு என்ற ஊரில் வண்ணார் வீட்டில் உப்பை வளர்ந்தாள். காவிரிப்பூம்பட்டினத்தில் கள்விலைஞர் சேரியிலே நாடார்கள் வீட்டில் உறுவை வளர்ந்தாள்.

நரப்புக் கருவியோர்
நண்ணிடு சேரியில்
பாண ரகத்தில்
ஔவை வளர்ந்தனள்
குறவர் கோமான்
கொய்தினைப் புனஞ்சூழ்
வண்மலைச் சாரலில்
வள்ளி வளர்ந்தனள்
தொண்டைமண் டலத்தில்
வண்டமிழ் மயிலைப்
பறைய ரிடத்தில்
வள்ளுவர் வளர்ந்தனர்
அரும்பார் சோலைச்
சுரும்பார் வஞ்சி
அதிக னில்லிடை
அதிகமான் வளர்ந்தனன்
பாரூர் நீர்நாட்டு
ஆரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க
யானும் வளர்ந்தேன்
ஆதலால்

---

நரம்புக் கருவியோர் - யாழ் வாசிக்கிறவர்கள். கோமான் - தலைவன். சுரும்பார் வஞ்சி - வண்டுகள் ஓசையிடுகிற சோலை நிரம்பிய வஞ்சமாநகரத்தில்.

பாணர்கள் வீட்டில் அவ்வை வளர்ந்தாள். குறவர் தலைவனிடம் வள்ளி வளர்ந்தாள். மயிலையில் பறையரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தார். வஞ்சியிலே அதிகன் இல்லத்தில் அதிகமான் வள[ர்ந்]தான்.

திருவாரூரில் அந்தணர்கள் வீட்டில் கபிலனாகிய நான் வளர்ந்தேன்.

மாரிதான் சிலரை
வரைந்து பெய்யுமோ?
காற்றுஞ் சிலரை
நீக்கி வீசுமோ?
மானிலஞ் சுமக்க
மாட்டே னென்னுமோ?
கதிரோன் சிலரைக்
காயே னென்னுமோ?
வாழ்நான்கு சாதிக்(கு)
உணவுகாட் டிலுமோ
திருவும் வறுமையுஞ்
செய்தவப் பேறும்
சாவதும் வேறில்லை
தரணி யோர்க்கே
குலமு மொன்றே
குடியு மொன்றே
பிறப்பு மொன்றே
வழிபடு தெய்வமு
மொன்றே யாதலால்

---

மழை சிலருக்கு என்று சிறப்பாகப் பெய்யுமா? காற்று சிலரை விட்டுவிட்டு மற்றவருக்காக மட்டும் வீசுமா? இந்தப் பூமி சிலரைச் சுமக்க மறுக்குமா? சூரியன் சிலருக்கு வெளிச்சம் தரமாட்டான் என்னுமா?

மேலோர் என்று நீங்கள் வகுத்தவருக்கு நாட்டுணவும், கீழோருக்குக் காட்டுணவுமா? இல்லையே! செல்வமும் வறுமையும், தவப்பயனும், மரணமும் உலகத்தாருக்கு வெவ்வேறு வகையில் அமைவதில்லையே! குலம், குடி, இறப்பு, பிறப்பு, கடவுள் யாவும் எல்லாருக்கும் ஒன்றே ஒன்றுதான். ஆகையால்,

முன்னோ ருரைத்த
மொழி தவறாமல்
எந்நா ளாயினும்
இரப்பவர்க் கிட்டுப்
புலையுங் கொலையுங்
களவுந் தவிர்ந்து
நிலைபெற அறத்தில்
நிற்பதை யறிந்து
ஆணும் பெண்ணு
மல்லதை யுணர்ந்து
பேணி யுரைப்பது
பிழையெனப் படாது
சிறப்புஞ் சீலமு
மல்லது
பிறப்புநலந் தருமோ?
பேதை யீரே!

---

முன்னோர்களின் மொழிப்படி தவறாமல் வாழுங்கள். யாசிப்பவருக்கு இடுங்கள். பாதகமும் கொலையும் செய்யாதீர். அறநிலை உணர்ந்து ஒழுகுங்கள். அல்லதும் நல்லதும் உணர்ந்து ஆணும் பெண்ணும் நடந்துகொள்ளுங்கள்.

ஆதாரமாகப் பேசுவது தப்பில்லை. தன் சிறப்பும், ஒழுக்கமும் தவிர, வெறும் பிறப்பு மட்டும் நலம் தராது. மூடர்களே, இதை அறிந்துகொள்ளுங்கள் என்றவாறு.

இந்தப் பாடலின் பின்னணியும் ஆய்வுக் குறிப்பும் தனித்தலைப்பில் தரப்பட்டுள்ளன.

# ஆய்வுரை

## சிவவாக்கியரும் திருமழிசை ஆழ்வாரும்

சித்தர் இலக்கியம் என்ற சொன்னதுமே நம் எல்லோருடைய மனத்திலும் திருமூலருக்கு அடுத்தபடியாக நினைவு வருவது பட்டினத்தாரும் சிவவாக்கியருமே!

இந்த இருவரிலும் காலத்தால் முந்தியவர் சிவவாக்கியர்.

சரித்திரக் கோணத்திலே பார்க்கும்போது சித்தர் உலகிலே திருமூலருக்கு அடுத்துத் தோன்றியவர்களுள் நற்புகழ் நிரம்பியவர் சிவவாக்கியர் என்றே சொல்லவேண்டும்.

பட்டினத்தார் என்ற பெயரில் வாழ்ந்தோர் இருவர் என்பதை ஏற்கெனவே பார்த்தோம்.

இந்த இருவரில் ஒருவர் மிகவும் பிந்தியவர்; மற்றவர் மிகமிக முந்தியவர் என்பது சில அறிஞர்களின் கருத்து. இதுவும் இதுபோன்ற கருத்துக்களும் வலிமை நலிந்த சான்றுகளின் மீது புனையப்பட்ட மெல்லிய ஊகங்களே யாம்.

வரலாற்று ஆசிரியர் எம். ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்கள் சிவவாக்கியருடைய காலத்தைப் பற்றிக் கூறும்போது, மற்றொரு ஊகத்தின் அடிப்படையில் இவர் மிகவும் பிந்தியவர் என்று சொல்வதோடு, இந்தச் சித்தரிடம் ஐயங்கார் அவர்கள் ஒருவகை அருவருப்பு உள்ளவராக, இவரும் திருமழிசை ஆழ்வாரும் ஒருவரே என்பதை மறுக்கிறார்.

இதுபற்றிப் பின்பு ஆராய்வோம்.

சிவவாக்கியர் என்ற சைவரே பிற்காலத்தில் திருமழிசைப்பிரான் என்னும் வைணவ ஆழ்வாரானார் என்று பல அறிஞர்கள் எழுதியுள்ளார்கள்.

காய்தல் உவத்தல் இல்லாத ஆய்வாளர் பலர் இந்த முடிவை ஒப்புக்கொண்டு பல ஆதாரங்களுடன் உறுதி கூறுகிறார்கள். இந்தக் கருத்தில் பெரும்பாலும் வேறுபாடு இல்லை என்பது மகிழ்ச்சிக்குரியது!

வைணவ ஆழ்வார்களின் வரலாற்றை உரைக்கிற குருபரம்பரா பிரபாவம் என்னும் பழைமையான நூல் திருமழிசை ஆழ்வாரின் வரலாற்றைச் சொல்லும்போது சிவவாக்கியரைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு பேசுகிறது:

"ப்பு ஆழ்வார், தாம் ருஷி புத்திர
ராகையாலே ஏழு சம்வத்சரத்தில்
அகில வித்தைகளையும் அதிகரித்து,
'இளைப்பினை யியக்கம் நீக்கியிருந்து
முன்னிமையைக் கூட்டி யளப்பிலைம்புல
னடக்கி' என்கிறபடி, இயம நியமாதி
அஷ்டாங்க யோகத்திலே இச்சை
யுடையவராய், அதற்கு ஜகத்காரண
வஸ்துவை த்யானத்திற்கு விஷயமாகச்
சொல்லுகையாலே, அந்த வஸ்துவை
அறியவேண்டுமென்று உன்னுங்கால்,
'பிணக்குஞ் சமயம் பலபல'
வாயிருக்கக் கண்டு, சமயந்தோறும் புகுந்து
ஆராய்வோமென்று, 'ஸாக்யோலூ காக்ஷ
தஸ்ச, கபிலஸ்ச, பதஞ்சலி, ஏதே
ப்ராஹ்ம்ய, மஹாப்ரோக்தாஸ்தாந்
ஸர்வா ந ஸ்வயஸோதயத், மாயா

வாதஞ்ச, கைவஞ்ச, ந்யாயம், வை-
ஶேஷிகம் ததா, ஏதோகுத்ருஷ்டி
சமயாபாட்டப்ராபாக ராதாய'
என்கிறபடி, சாக்ய, உலூக்ய,
அக்ஷபாத, க்ஷமண, கபில, பதஞ்சலி
களாகிற பாஷ்ய சமயங்களிலும்,
சைவ மாயாவாத ந்யாய வைசேஷிக
பாட்டப்ரபாகிகளாகிற குத்ருஷ்டி
சமயங்களிலும் புகுந்தும் உணர்ந்தும்,
உரைத்தும், ஆராய்ந்தும், பார்த்துக்
கடைசியில் சைவ மதத்திற் ப்ரேவேசித்துச்
சிவவாக்கிய ரென்கிற ப்ரசித்தமான
பெயரையுடையவராய், அந்த ப்ரசித்தமான
பெயரையுடையவராய், அந்த மதத்திற்
காதாரமாக ஆனந்த நூல்களையுஞ்
செய்துவைத்துச் சிவ தீட்சையினாலே
பூசஞ்சாரம் பண்ணி அன்ய மத நிரசனஞ்
செய்து, திருமயிலை மார்க்கமாய்
வருகையில் பேயாழ்வார் பார்த்து,
இப்படிப் பட்டவரைத்தான் விஷ்ணு
பக்தராகச் செய்யவேண்டுமென்று
மனத்தில் நினைத்து......"

என்று மேலே செல்கிறது இந்தக் குருபரம்பராப் பிரபாவம் என்னும் வைஷ்ணவ சரித்திர அடிப்படை நூல் கூறுகிற திருமழிசை வரலாறு.

பேயாழ்வாருடைய தொடர்புக்குப் பிறகு சிவ வாக்கியர் திருமழிசை ஆழ்வாராக மாறினார் என்பது வைணவ சமயத்திலுள்ள தொன்மையான வரலாறு. ஸ்ரீனிவாச ஐயங்கார் தவிர மற்றப்படி இந்த வரலாற்றை எதிர்ப்பவர்கள் முக்கியமாக யாரும் இல்லை.

'குருபரம்பரா ப்ரபாவம்' என்பது எத்துணைக்கு வரலாறு, எத்துணைக்குப் புராணக் கதை என்பது பற்றி அதிகம் பேசுவதற்கில்லை. அறிஞர்களுக்கிடையே கருத்துக்கள் பலவாறு உள்ளன. எனினும், குருபரம்பரை கூறுகிற வரலாறுகளை முழுமையும் கட்டுக்கதை என்று சொல்லி அப்படியே அவற்றைத் தள்ளி ஒதுக்கிவிடுவதற்கில்லை.

பொதுவாக, நமது தமிழ்நாட்டிலே வரலாறு எழுதுகிற பழக்கம் மற்ற நாடுகளைப் போல அவ்வளவு துல்லியமாக இல்லை.

நமது தமிழகக் கவிஞர்களின் சரித்திரம் கோலமான வடிவமின்றி அலங்கோலமான வினோதச் சுவை மஞ்சரியாகவே இருக்கிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும். புராணக் கதைகளைப் போலவே வரலாற்றையும் வரைகிற ஒரு பழக்கம் மரபுவழியே நமக்கு இருப்பதால், புராணம் எங்கே முடிகிறது, வரலாறு எங்கே தொடங்குகிறது என்று வேறு பிரித்து அறுதியிட்டுச் சொல்வது பெரும்பாடாகவே இருக்கிறது.

கவிச்சக்கரவர்த்தி என்று மகுடம் சூட்டியுள்ள கம்பனும், வான்புகழ் வள்ளுவனுமே புராணக் கதைகளில் உலாவுகிறார்கள். அவ்வையாரில் எத்தனை பேர், கபிலர்கள் எத்தனை, பட்டினத்தடிகள் இருவரா, மூவரா என்றெல்லாம் வாதம் இடுகிறோம். இவர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் கற்பனைக் கதைகளோடு பின்னிப் பிணைந்து வழங்கி வருகின்றன. ஆண்டுகள் இல்லை, நூற்றாண்டுகள் முன் பின்னாக இவர்களுடைய காலத்தைக் கணக்கிட்டுச் சண்டை யிடுகிற நிலையில் இருக்கிறோம்!

தமிழில் மட்டுந்தானா? வடமொழியிலும் இதே கதைதான். வால்மீகி, வியாசர், காளிதாசன் இவர்கள் மட்டும் வாழ்ந்துபோனார்களா என்ன? எங்கே வாழ்ந்தார்கள்? இவர்களுடைய வரலாறு எந்த நிலையில் இருக்கிறது? "இவாளுக்கு அவாள் எழுந்திருந்து உண்பாள்"

என்ற கதைதான்! எல்லாம் புராணமும் கட்டுக்கதையுந்தான் எனினும் நிலைமையை ஒப்புக்கொள்ள மாட்டோம். சத்தியம் இதுதான்! இருந்தாலும் மனம் அங்கீகரிக்காமல் மூடி மறைக்கிறோம்! வடமொழியாளர் மூடி மறைக்கிறார்கள். நாமும் மூடி மறைக்கிறோம்.

இந்த நிலையில் சிவவாக்கியர் என்ற பெயரில் இருவர் இல்லை, ஒருவரே, என்ற நிலை மகிழ்ச்சிக்குரிய பெருமையாகும்!

அதோடு வரலாறு முழுமையாகக் கிடைக்கவில்லையெனினும், பாடல்களாவது ஏறத்தாழ ஆயிரத்துக்கு அருகில் நமக்கு முழுவடிவில் கிடைத்திருப்பது உவகை தருகிற நிலையாகும்! அதோடு சிவவாக்கியரும், திருமழிசையாரும் ஒருவரே என்பதிலும் அதிகமான கருத்து வேற்றுமையோ, காரசாரமான சண்டைகளோ இல்லை. இதுவும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் தொகுப்பினை நாதமுனிகள் சித்தம் செய்தபோது, அதில் சிவவாக்கியராக இருந்து திருமழிசை ஆழ்வாராக மாறிய பக்திசாரரின் விருத்தப் பாடல்கள் நூற்றிருபதைத் 'திருச்சந்த விருத்தம்' என்ற தலைப்பிலே வெளியிட்டார். இவர் இயற்றிய வெண்பாக்களை 'நான்முகன் திருவந்தாதி' என்ற தலைப்பில் தொகுத்தளித்தார். இரண்டும் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ளன.

இந்தத் தொகுப்பை யொட்டித் திருமழிசை என்னும் சிவவாக்கியரின் வரலாற்றை ஆராய்ந்து எழுதியுள்ள வைணவச் சான்றோர்கள், இவருடைய காலம் கி.பி.ஏழாவது நூற்றாண்டு என்று சொல்லி நிகழ்ச்சிக் குறிப்புகளைத் தெளிவோடு தந்துள்ளமை மிகவும் பாராட்டுதலுக்கு உரியதாகும்.

வைணவ நூல்கள் அறுதியிட்டுள்ளபடி, இவர் தோன்றியது கி.பி.ஏழாம் நூற்றாண்டு, பிறந்த நாள் மகம் கூடிய ஞாயிற்றுக்கிழமை. திதி, தேய்பிறையின் பிரதமை. ஆண்டு சித்தார்த்தி. மாதம் தை!

திவ்வியப் பிரபந்தம் கூறுகிற வரலாறு வருமாறு:

திருமழிசை என்னும் பெயரில் தொண்டை மண்டலத்திலே காஞ்சிபுரத்துக்குக் கிழக்கில் ஓர் புண்ணியத் தலம் உள்ளது. அந்தத் தலத்திலே பார்க்கவர் என்ற முனிவர் திருமாலை எண்ணி தீர்க்க சத்திர யாகம் என்னும் வேள்வியைச் செய்தார். அவருடைய மனைவி கனகாங்கி திருமாலின் ஆழி அம்சம் என்று சொல்லக்கூடிய ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தார். ஆனால் அந்தக் குழந்தை கைகால் இல்லாத வெறும் தசைப் பிண்டமாக இருந்தது.

இந்தப் பிண்டத்தைக் கண்டு மனம் நொந்துபோன முனிவரும் அவருடைய மனைவியும் மிகுந்த ஏமாற்றம் அடைந்த நிலையில் அந்தப் பிண்டத்தை எடுத்துக்கொண்டு போய் ஒரு பிரம்புப் புதரிலே போட்டுவிட்டு வீடு திரும்பினர்!

திருமாலின் ஆழி அம்சமான பிண்டம் அல்லவா அது! எம்பெருமான் அந்தப் பிண்டத்தின் முன் திருமகள் உடனாகத் தோன்றி அருள் பாலிக்கவே, அஃது ஓர் அழகிய ஆண் குழந்தையாய் உருவாயிற்று. கையும் காலும் உதைத்து அழத் தொடங்கிற்று! திருமால் தமது திருக்கோலத்தைக் குழந்தைக்கு காட்டி மறைந்தார். மறையவே குழந்தை மீண்டும் அழத் தொடங்கியது.

திருவாளன் என்றொரு குறவன் குழந்தைப் பேறு இல்லாமல் துன்பப்படுகிறவன். பிரம்புத் தொழிலாளி. அவன் அந்தப் பக்கம் பிரம்பு பறிக்க வந்தவன் காதில் குழந்தையின் அழுகுரல் விழவே, அவன் ஓடோடி வந்து குழந்தையைப் புதரிலிருந்து எடுத்து வீட்டுக்குக் கொண்டு சென்றான்.

திருவாளன் மனைவி பங்கயச் செல்வி! அவளுடைய களிப்புக்கு அளவே இல்லை.

குழந்தை செல்லமாகத் திருவாளன் பங்கயச்செல்வி இருவருடைய அரவணைப்பிலே நமது அறிஞர் உலகம் சொல்வது போல, 'நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும்' ஆக வளரவேண்டும் அல்லவா! ஆனால் அப்படி நேரவில்லை! பங்கயச் செல்விக்கு நெஞ்சிலே அன்போடு சேர்ந்து பால்சுரந்து போதிலும் குழந்தை அவளிடம் பாலருந்த மறுத்தது! அது மட்டுமில்லை. சாதாரணக் குழந்தைகளைப் போல, வாயசைப்பது, அழுவது, இயற்கைக்கடன்கள் கழிப்பது முதலிய எச்செயலும் இல்லாமல் ஒரு பிறவி யோகியைப் போல் ஏதோ ஒடுக்கம் கூடிய நிலையிலே எப்போதும் இருந்தது குழந்தை!

திருமழிசையானாகிய இந்த ஆண்மகனின் அதிசய இயல்புகள் ஊர் முழுவதும் வியப்புச் செய்தியாகப் பரவவே, அந்த ஊரில் இருந்த சான்றோராகிய ஒரு பெரியவர் இதைக் கேள்விப்பட்டுத் தமது மனைவியைக் கொண்டு பால் காய்ச்சச் செய்து அந்தப் பாலுடன் திருவாளனுடைய வீட்டுக்கு வந்தார்.

"குழந்தாய்! இதை அமுது செய்தருள்க!" என்று குழந்தையிடம் பால்கொடுத்து வேண்ட, அந்த அதிசயக் குழந்தை அப்படியே அந்தப் பாலை அருந்திற்று.

திருவாளன் அந்த முதியோரை நோக்கி "நாள்தோறும் நீங்களே வந்து என் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டும்" என்று வேண்டினான். அந்த முதியவரும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தார்.

அன்றிலிருந்து நாள்தோறும் திருமழிசை ஊரில் வாழ்ந்த அந்தச் சான்றோராகிய முதியவர் தமது மனைவியோடு திருவாளன் இல்லத்துக்கு வந்து குழந்தைக்குப் பாலூட்டிச் செல்வது வழக்கமாயிற்று.

தெய்வ ஆற்றல் நிரம்பிய அந்தக் குழந்தைக்கு முதியவர் செய்த தொண்டின் புண்ணிய நோக்கம் புரிந்தது. எனவே, ஒருநாள் தான் குடித்த பாலில் சிறிது மீதம் வைத்து அதை அந்த முதியவரும், அவர் மனைவியும் அருந்தும் படி செய்தது. திருமழிசை யாழ்வாராகிய அந்தப் பச்சைக் குழந்தை.!

முதியவரும் மனைவியும் பாலருந்தியதன் பயனாக, இளமைப் பருவம் மீண்டுவரப் பெற்றனர்! பின்னர் அந்தப் பெண்மணி கருவுற்றார். உரிய காலத்தில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதற்குக் 'கணிகண்ணன்' என்று பெயரிட்டார்கள்.

பார்க்கவ முனிவருக்கு அவருடைய இல்லத்தரசி கனகாங்கியின் வயிற்றிலே பிறந்து, திருவாளனும் அவன் மனைவி பங்கயச் செல்வியும் வளர்க்க, முதுபெரும் சான்றோரும் அவர் மனைவியும் பாலூட்ட, ஏழு ஆண்டுகள் வரை நன்கு வளர்ந்த அந்தத் தெய்வமகனான திருமழிசையான் அட்டாங்க யோகம் பயிலவேண்டும் என்னும் ஆசை உடையவனாகி அதற்குரிய வழிமுறைகளைத் தேடத் தொடங்கினான்.

திருமழிசை ஆழ்வாராக உருவாக இருக்கும் இந்த நன்மகன் நூல்கள் கற்று அவற்றின் வாயிலாக அட்டாங்கயோகத்தைப் பற்றி அறிந்தான். பற்பல சமய ஞானிகளோடும் தொடர்பு கொண்டு இந்தப் பயிற்சி முறைகளைக் கற்கத் தொடங்கினான். முடிவில் சைவ சமயஞ் சார்ந்து சிவவாக்கியர் என்னும் திருநாமம் பூண்டு அட்டாங்க யோகம் பயின்று தேர்ந்ததோடு, ஞானானந்த அனுபவங்கள் சித்தியாகப் பெற்று, ஒரு ஞான யோக சித்தனாக வாழ்ந்து வரத் தலைப்பட்டான் இந்த நன்மகன், அதாவது தலைப்பட்டார் சிவவாக்கியர், திருமழிசை ஆழ்வாராக மாறுவதற்கு முன்பு!

ஊர் ஊராகத் திரிந்த இந்தச் சித்தர் பெருமான் திருமயிலை அடைந்தபோது, பேயாழ்வார் இவரை வைணவ சமயத்திற்கு

ஈர்க்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டார். வைணவ மரபிலே இந்த நிகழ்ச்சியைச் சொல்லுகிற கதைப் பகுதியின் வாக்கியம் வருமாறு:

> "மேலும் அம்முதற் பொருளை அடைந்து வீடு பெறுதலே ஞானத்தின் பயனாகும் என்ற எண்ணம் சிவவாக்கியரின் மனத்தில் (பேயாழ்வார்) எழச்செய்து, அத்தகைய முதற்பொருளாய் விளங்கி முத்திநிலை அளிக்கும் முதல்வன் திருமகள் நாதனாகிய திருமாலே என்று நிலைநாட்டி இதர சித்தாந்தங்கள் நிலையற்றவை என்றும் விளக்கினார்."

இவ்வாறு சைவராக இருந்த சிவவாக்கியருக்குப் பேயாழ்வார் நாராயண மந்திரத்தை முறைப்படியாக உபதேசித்து அவரை வைணவராக்கினார். அவருக்குப் "பக்திசாரர்" என்னும் திருநாமம் சூட்டினார் எனவும் சொல்லப் பெறுகிறது.

திருமழிசை ஆழ்வார் திருமாலைத் துதித்தவாறு திருமழிசையில் உள்ள 'கஜேந்திர ரைஸ்' என்னும் குளத்தின் கரையில் பல்லாண்டுகள் யோகம் இயற்றியவாறு ஒடுக்கம் கூடி வாழ்ந்தார்.

பிறகு திருமழிசையிலிருந்து புறப்பட்டு ஒரு மலைக் குகைக்குச் சென்று அங்குத் தவத்தில் இருந்தார். அதாவது யோகம் இயற்றினார். அப்போது, பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய மூவரும், முதல் மூவராகிய மூன்று ஆழ்வார்களும், பல தலங்களுக்குச் சென்று வரும் வழியில் ஒரு மலைக்குகையில் பேரொளி உதித்து வருவது கண்டு, அங்குப் போய்ப் பார்க்கத் திருமழிசைப் பிரானை - பக்திசாரரைக் கண்டு உவகை அடைந்தனர். பிறகு இந்நால்வரும் சின்னாள் யோகத்தில் எழுந்தருளி யிருந்தனர். பின்னர் இந்த நால்வருமே திருமயிலை சென்றனர். பேயாழ்வாரின் அவதாரத் தலமான மயிலைக் கைரவ

தீர்த்தத்தின் கரையில் சில நாள்கள் யோகத்தில் இருந்தார்கள். பின்னர் முதலாழ்வார்கள் மூவரும் திருமழிசைப் பிரானிடம் விடைபெற்றுச் சென்றனர்.

சில நாள்கள் கழித்துத் திருமழிசை ஆழ்வார் தமது ஊரான திருமழிசைக்குச் சென்றார். அணிவதற்குத் திருமண் தேடி இரண்டோர் இடங்களில் கல்லிப் பார்க்கத் திருமண் அகப்படாமல் வருத்தத்தோடு உறங்கினார். அப்போது அவருடைய கனவிலே திருமால் தோன்றினான். தோன்றி, திருமண் எங்கே அகப்படும் என்று இடத்தைக் காட்டினான். ஆழ்வார் அங்கே சென்று திருமண் எடுத்துப் பன்னிரண்டு திருநாமம் சாத்திக் கொண்டார்.

நாமத்தை அணிந்துகொண்டே,

"ஆல - நிழற்கீழ்
அறநெறியை நால்வருக்கு
மேலை உகத்துரைத்தான்
மெய்த்தவத்தோன் - ஞாலம்
அளந்தானை ஆழிக்
கிடந்தானை ஆல்மேல்
வளர்ந்தானைத் தான்வணங்கு
மாறு!"

(ஆலநிழற்கீழ் - கல்லாலின் புடை அமர்ந்து என்று தொடங்கும் பரஞ்சோதி அடிகளின் பாடலை நினைவூட்டுகிறது; ஆலமரத்தின் அடியில்.)

என்று பாடினார்.

தட்சிணாமூர்த்தி அறநெறி உரைத்துத் திருமாலை வணங்குமாறு சொன்னான் என்று சிவவாக்கியர் திருமழிசை யாழ்வாராகப் பாடி யருளுகிறார்!

சில நாள்கள் சென்று, கச்சியில் உள்ள திருவெஃகாவுக்குப் போய், பள்ளிகொண்டானை வணங்கிப் பாடல்கள் பாடினார். பின்னர்ப் பொய்கையார் தோன்றிய பொய்கைக் கரையில் யோகத்திருந்தார்.

இந்தக் கால கட்டத்தில் பழைய முதியவரின் மகன் கணிகண்ணன் இங்குவந்து, திருமழிசை ஆழ்வாரின் சீடன் ஆனான். குருவுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து வரலானான்.

இந்நிலையில் ஒரு மூதாட்டி நாள்தோறும் திருமழிசையார் இருக்குமிடம் வந்து ஆழ்வார் யோகத்தில் ஆழ்ந்திருந்த அந்தப் புனித நிலத்தைத் தூர்த்துப் பெருக்கி அலகிட்டுக் கோலங்கள் போட்டுத் தொண்டு செய்வதானாள்.

ஒருநாள் யோகியார் தமது யோகத்திருந்து கண்விழித்துப் பார்த்தபோது, மூதாட்டியையும் அவருடைய தொண்டையும் கண்டு மகிழ்ச்சியுடன் "அம்மா, உனக்கு வேண்டிய கோரிக்கையைக் கேள். உன் தொண்டிற்காக உனக்கு ஒரு வரம் தருகிறேன்!" என்றார்.

"இந்தக் கிழவிக்கு முதுமை போய் இளமை வரும்படி வரம்தர வேண்டும்" என்றாள் அந்தக் கிழவி.

"அப்படியே ஆகுக!"

அவ்வளவுதான். கிழவி குமரி ஆகிவிட்டாள். பக்தி சாரராகிய சித்தர் திருமழிசையாழ்வாரின் திருவடிகளில் விழுந்து வணங்கிச் சென்றாள் அந்த இளநங்கை.

பெண்மணியின் கதை இதோடு நிற்கவில்லை! இதற்கு மேலேதான் ஆரம்பமாகிறது!

ஆம்; இந்தக் குமரியின் அழகிலே சொக்கிய பல்லவ மன்னன் இவளைத் தனது அன்புக்குரிய ஆசையரசியாக்க இச்சைப்பட்டான்.

அமைச்சர்கள் மூலம் அந்த நங்கைக்குத் தூது சென்றது. அவரும் பல்லவ மன்னனின் அன்புநாயகியானாள்!

நாள்கள் ஓடின; ஓடாமல் நிற்குமா என்ன? அரசன் கிழவனானான். குமரியோ இன்னும் இளமைப் பொலிவோடு திகழ்ந்தாள். மன்னன் மிகவும் கவன்றான். மனைவியின் வாயிலாக அவள் இளமை பெற்ற வரலாற்றை அறிந்தான். சித்தராகிய திருமழிசை ஆழ்வாரின் திருவருள் தனக்கும் கிட்ட வேண்டும் என்று அவன் விரும்பினான்.

கணிகண்ணன் நாள்தோறும் அரண்மனைக்கு வந்து பிச்சை ஏற்பது வழக்கம். அரசி அதுபற்றி மன்னனிடம் தெரிவித்தாள். "கணிகண்ணனின் உதவி கிடைத்தால் அவன் வாயிலாக ஆழ்வாரின் கருணையைப் பெறலாம்!" என்றாள்.

மறுநாள் கணிகண்ணர் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்த பல்லவ அரசன் அவரிடம் தனது விருப்பத்தை அறிவித்து ஆழ்வாரை அரண்மனைக்கு அழைத்துவரும்படி கூறினான்.

"எம் குருநாதன் எந்த மனைக்கும், அரண்மனைக்கும் வரமாட்டார்!" என்றார் கணிகண்ணர்.

"அப்படியானால் நீரே என்மீது பாடல் சொல்லி எமக்கு இளமை வரச்செய்ய வேண்டும்!" என்றான் நாடாண்ட மன்னன்.

"தெய்வத்தைப் பாடும் வாயால் நான் மானுடம் பாடுவதில்லை!"

- என்றார் கணிகண்ணர்

"திருவுடை அரசர் திருமாலேயானதால் பாடுவது தவறில்லை" என்றான் மன்னன்.

கணிகண்ணர் பாடத் தொடங்கினார்.

"ஆடவர்கள் எங்ஙன்
அகல்வார் அருள்சுரந்து
பாடகமும் ஊரகமும்
பாம்பணையும் - நீடியமால்
நின்றான் இருந்தான்
கிடந்தான் இதுவன்றோ
மன்றார் பொழிற்கச்சி
மாண்பு!"

-இப்படிப் பாடி முடித்தார் கணிகண்ணர், திருமாலின் மீது!

மன்னன் திகைத்தான்.

"திருமாலைப் பற்றிப் பாடினீர் - என் மீது பாடச் சொன்னதற்கு!" ஏன் அப்படி?

"மன்னா! அரசரைப் பாடவதும் திருமாலைப் பாடுவதும் ஒன்று என்று சொன்னது யார்? இரண்டும் ஒன்றே அல்லவா?"

அரசன் வெகுண்டான்; சீறினான்.

"கணிகண்ணரே! இன்றே நீர் நாடு கடத்தப்பட்டீர். இப்போதே சென்றுவிடும்! இனி இந்தக் காஞ்சியில் உமக்கு இடம் இல்லை!"

மறு வினாடி அங்கிருந்து படர்ந்தார் கணிகண்ணர். திருமழிசையாழ்வாரான தமது குருநாதனிடம் நேரே வந்து நடந்ததைச் சொன்னார்.

அண்ணலே! நான் இப்போதே விடைபெறுகிறேன்!" என்றார் கணிகண்ணர்.

"சீடரே சற்றுப் பொறுத்திரும் - ஒரு சில வினாடிகள்!"

-என்று சொல்லி எழுந்தார் திருமழிசையார். நேரே கோயிலுக்குச் சென்றார். பெருமானைப் பார்த்துப் பாடினார்:-

"கணிகண்ணன் போகின்றான்
காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க
வேண்டாம் - முனிவுடைய
செந்நாப் புலவனும்நான்
போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக்
கொள்!"

அவ்வளவுதான்! பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலான திருமால் ஆழ்வாரின் பின்னாலேயே தானும் புறப்பட்டுவிட்டான், பாம்புப் பாயைச் சுருட்டி மடக்கிக் கொண்டு!

திருமால் புறப்பட்ட பிறகு ஆலயத்தின் தேவதைகள், அமரர்கள், எல்லாரும் நிற்பார்களோ? இராமபிரான் காடு சென்றபோது நடந்ததாகக் கூறப்பெறுகிற நிகழ்ச்சிகள் மறுபடி நடக்கத் தொடங்கின.

காஞ்சி மாநகரம் இராமன் இல்லாத அயோத்தி ஆயிற்று!

அரசனுக்குச் செய்தி எட்டியது!

மன்னன் கலங்கினான். கணிகண்ணரைத் தேடிக்கொண்டு சென்றான். அவருடைய காலில் விழுந்து மன்னிப்புக் கோரினான்!

கணிகண்ணர் தமது குருநாதன் இவர்களை வேண்டக் குருநாதர் சொன்ன வண்ணம் செய்த அந்தப் பெருமாளை வேண்டினார்:

"கணிகண்ணன் போக்கொழிந்தான்
காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க
வேண்டும் - துணிவுடைய
செந்நாப் புலவனும்நான்
போக்கொழிந்தேன் நீயுமூன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக்
கொள்!"

- இப்படி விண்ணப்பம் செய்தார் திருமழிசை ஆழ்வார். சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோவில் திரும்பினார்!

கணிகண்ணர் முதலியோருடன் முதல்வன் திருமால் ஓர்நாள் வெளியே தங்கியிருந்த இடம் 'ஓர் இரவிருக்கை' என்று பெயர் பெற்றது. பெருமாள் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' ஆனார்

திருமழிசை ஆழ்வார் மேலும் சிறிது காலம் காஞ்சியில் இருந்துவிட்டுப் பிறகு திருக்குடந்தை செல்லக் கருதிப் புறப்பட்டார். வழியில் பெரும்புலியூர் என்ற கிராமத்தில் ஒரு திண்ணையில் சற்று ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கே வேதம் ஓதிக்கொண்டிருந்த பார்ப்பனர்கள் இவரை வெகுண்டு நோக்கி,

"நாலாம் வருணத்தினனாகிய இவன் கேட்க நாம் வேதம் ஓதுதல் கூடாது"

என்று எண்ணித் தவிர்த்திருந்நார்கள். உடனே ஆழ்வார் திண்ணையை விட்டு எழுந்து புறப்பட்டார். பார்ப்பனர் விட்ட இடத்திலிருந்து வேதத்தைத் தொடர முயன்றால், 'எந்த இடத்தில் விட்டோம்' என்பது மறந்துபோய் விட்டது. வாக்கியம் தோன்றவில்லை. தவறித் தடுமாறினார்கள். இதுகண்ட ஆழ்வார் கரு நெல்லை நகத்தால் பிளந்து குறிப்பினால் உணர்த்திக் காட்டினாராம்! உடனே, பார்ப்பனருக்கு வாக்கியம் நினைவு வந்துவிட்டது!

பார்ப்பனர்கள் ஆழ்வாரின் மகிமை உணர்ந்து அவர் காலிலே விழுந்து மன்னிக்கும்படி வேண்டினார்கள். பக்திசாரராகிய சித்தர் அவர்களை மன்னித்து மேலே நடந்து சென்றார்.

இதன் பிறகு இன்னொரு அதிசய நிழச்சி நடந்தது.

பக்திசாரர் பிச்சை ஏற்றுச் செல்லும்போது, பெருமாள் தாம் கோவிலில் எழுந்தருளியிருந்த நிலையின் பார்வையை மாற்றி ஆழ்வார் செல்லும் திசைகளிலெல்லாம் பின்னோடு செல்லுமாறு முகத்தைத் திருப்பித் திருப்பிக் காட்டினார். கோயில் அர்ச்சகர் இதுகண்டு அந்தக் ராமத்தில் யாகம் செய்துகொண்டிருந்த பெரும்புலியூர் அடிகளிடம் சென்று இந்த வியப்பை வெளியிட்டுச் சொல்லவும், உடனே, அடிகள்

பக்திசாரரிடம் வந்து வணங்கி அவரை யாகசாலைக்கு அழைத்துச் சென்று, யாகத்தில் செய்யும் அக்கிர பூசையை ஆழ்வாருக்கே செய்தார். இதுகண்டு வேள்விச் சடங்கர்கள் வெகுண்டு ஆழ்வாரை இழிவாகப் பேசினார்கள். ஆழ்வார் மனத்துக்குள் நகைத்துக் கொண்டார். ஆனால், யாகத் தலைவர் மனம் நொந்து போனார்.

"இவர்கள் இப்படிப் பேசுவதை என்னால்
தாங்க முடியவில்லை. தேவரீர்,
மெய்யை உணர்த்தவேண்டும்!"

என்று ஆழ்வாரிடம் விண்ணப்பம் செய்தார்.

ஆழ்வார் அந்தச் சடங்கர்களுக்கு மனத்தெளிவு ஏற்பட எண்ணினார்:

ஆக்க ரங்கள் அக்கரங்கள்
என்று மாவ தென்கொலோ
இக்கு றும்பை நீக்கியென்னை
ஈச னாக்க லல்லையேல்
சக்க ரங்கொள் கையனே
சடங்கர் வாய டங்கிட
உட்கி டந்த வண்ணமே
புறம்பொ சிந்து காட்டிடே"

(புறம்பொசிந்து - வெளிப்பட்டு; சடங்கர் - தீக்ஷிதர்கள்)

-என்று ஆழ்வார் பாடி முடித்தாரோ இல்லையோ, திருமால் ஆழ்வாரின் மேனியிலே தமது பாற்கடற் பள்ளிக் கோலத்தை எல்லாரும் காணும்படி காட்டியருளிப் பக்திசாரரைச் சாரூப நிலையிலே இருக்கச் செய்தார். சடங்கர்கள் தெளிவுற்று மிகுந்த பயபக்தியுடன் ஆழ்வாரின் திருவடிகளிலே தண்டனிட்டு, இவரே அக்கிர பூசைக்கு உரியவர் எனப் போற்றித் துதித்தார்கள்.

இதன் பிறகு, பக்திசாரர் திருக்குடந்தை என்னும் கும்பகோணம் சென்று அங்கே தங்கியிருந்து பல பாடல்கள் அருளினார். இந்தத் தலம் அவருக்கு இவ்வளவு மன உகப்புத் தந்த காரணத்தால்,

"திருமழிசைப் பிரான் உகந்த இடம்"

என்று திருக்குடந்தைக்குப் பெருமை சொல்லுகிறார் பெரிய வாச்சான் பிள்ளை.

ஒரு ஜைன ஆசிரியர் குடமூக்கில் அல்லது குடமூக்கு என்னும் பெயர்பெற்ற திருக்குடந்தையாகிய கும்பகோணத்தைச சேர்த்து இந்த ஆழ்வாரையே,

"குடமூக்கிற் பகவர்"

அதாவது கும்பகோணத்துப் பாகவதர் என்றும், முக்காலமும் உயர்ந்த இருடி என்றும் ஏத்துகிறார்

இவற்றிலிருந்து ஒன்று தெரிகிறது. குருபரம்பரை நூல் தோன்றுவதற்கு முன்பே திருமழிசை ஒரு சித்தராகவும், பிரான் என்றும், பகவர் என்றும், இருடி என்றும் வணங்கக்கூடிய மகானாகவும் விளங்கினார் என்பது தேற்றம். இந்தப் புகழ் அவருடைய முன்னாள் வாழ்க்கையான சைவ வாழ்க்கையையும் சிவவாக்கியராக இருந்து பாடல்கள் அருளிய கவி மாண்பையும் உறுதி செய்கின்றது.

இதன் பிறகு திருமழிசை ஆழ்வார் ஆராவமுதனைச் சேவித்துத் தமது பாடல்கள் அடங்கிய ஏடுகளைக் காவிரி நதியில் விட்டார். இவற்றில் நான்முகன் திருவந்தாதியும் திருச்சந்த விருத்தமும் தண்ணீரை எதிர்த்து வந்து ஏறின. இவ்விரண்டு நூல்களையும் உலகுக்கு உதவிய ஆழ்வார் பின்னர் பல்லாண்டுகள் இந்த வையத்தில் வாழ்ந்து தமது ஞான ஒளியைப் பரப்பினார்.

திருமழிசை யாழ்வாரைப் பற்றி வைணவ நூல்களில் வருகிற வரலாறு இவ்வளவே. இந்தக் குறிப்பில் வருகிற சிவவாக்கியரைப் பற்றிய செய்தி வேறொன்றுமில்லை. இளமையில் இவர் சைவ மதத்தில் இருந்து சிவவாக்கியர் என்ற பெயரில் வாழ்ந்தார் என்பதைத்தவிர வேறு எந்தச் செய்தியும் காணப்படவில்லை. ஆனால், சிவவாக்கியர் வைணவராகிப் பக்திசாரர் என்ற பெயர் பெற்ற தொடக்கத்திலிருந்து அவரைப் பற்றிய செய்திகள் நிரம்ப வந்துள்ளன.

குருபரம்பராப் பிரபாவத்திலும் பிற வைணவ நூல்களிலும் வந்துள்ள குறிப்பை ஆதாரமாகக் கொண்டு மேலே மொழிந்த செய்திகள் தொகுக்கப் பெற்றுள்ளன. இவை தவிர, பி.ஸ்ரீ.போன்ற அறிஞர்கள் தந்துள்ள ஆய்வுரைகளிலும் சில செய்திகள் வருகின்றன.

அவற்றிலே சில:-

திருமழிசையாரைப் புதரிலே கண்டெடுத்தவன் ஒரு குறவன். ஆனால் அவர் தமது வாக்கிலே

"குலங்க ளாய ஈரிரண்டில்
ஒன்றி லும்பி றந்திலேன்"

என்கிறார். நான்கு வர்ணங்களுள் ஒன்றிலும் பிறப்பு வராது என்கிறார்.

'பிறந்திலேன்' என்பதற்கு 'வளர்க்கப்பட்டேன் இல்லை' என்ற பொருளில் இந்த நான்கு குலத்தில் எதிலும் நான் வளரவில்லை என்று பொருள் கொள்கிறார்கள் வைணவர்கள். அதாவது இவர் வளர்ந்தது தாழ்ந்த குல மாதலின் இவரைத் தாழ்ந்தவராக அக்காலத்தோர் மதித்ததாகச் சொல்கிறார்கள்.

இளமையில் இவர் கூடை முடைதல் முதலிய தொழில்கள் செய்தார். வயதானதும் பல ஊர்களுக்குத் தல யாத்திரை சென்றார். காடுகளில் திரிந்து சித்தரானார். பேயாழ்வாரின் உபதேசத்தினால் பக்தி சாரராகித் திருமழிசையாழ்வார் ஆனார்.

இவருடைய நான்முகன் திருவந்தாதியில் உள்ள ஒரு பாடலில் தமிழையே விதையாகத் தம் உள்ளத்தில் இறைவன் விதைத்தான் என்றும், அதனால் தமது உள்ளம் விளைந்தது என்றும் கூறுகிறார். அதோடு,

"நான்உன்னை அன்றி
இலேன்கண்டாய் நாரணனே
நீஎன்னை அன்றி
இலை"

என்று பாடுகிறார். இஃது ஒரு புரட்சி. நீயும் நானில்லாமல் இராய் என்பது ஒரு புதிய கவிமொழி. 'என்று நீ அன்றுநான்' என்பதுபோல் வருகிறது.

இத்தனை காரணங்களையும் பார்த்தால் சிவவாக்கியருக்குள் திருமழிசையையும், திருமழிசைக்குள் சிவவாக்கியரையும் காணலாம்.

இனி, 'அபிதான சிந்தாமணி'யில் திருமழிசையாழ்வார் பற்றி எழுதியுள்ளதைப் பார்க்கலாம். அது வருமாறு:

"இவர் துவாபர யுகத்தில் சித்தார்த்தி வருஷம் தை மாதம் கிருஷ்ண பிரதமை கூடிய ஞாயிற்றுக்கிழமை மக நக்ஷத்திரத்தில் திருமழிசையில் பிருகு முனிவர் தவஞ்செய்கையில் அத்தலத்தைக் கெடுக்க இந்திரனால் ஏவப்பட்ட தேஸ்திரீயிடம் அவதரித்துப் பிறகு முனிவரால் பிரப்பஞ்செடி நிழலில் வளர்த்த இருந்து அழுதனர். அக்காலையில் உலோகமாதாவாகிய ஸ்ரீமகாலக்ஷ்மி அவ்விடம் எழுந்தருளித் தமது திருமுலைப்பாலைக் கறந்து ஒரு வள்ளத்தில் வைத்து, அப்பால் ஒவ்வொரு திவலையாக வாயில் விழச்செய்து மறைந்தனள். இவ்வகை வளரும் நாளில் திருமழிசைக்கடுத்த காட்டிலுள்ள திருவாளன் என்னும் வேடன், புத்திரனில்லாத தன் பத்தினியிடம் இப்புத்திரரைக் கண்டு கொடுக்க, வேடத்தி அன்பினால் ஊட்டியபாலுண்டு வளர்ந்து, எட்டாம்வயதில் வேடச்சேரியை விட்டகன்று பரமத நிராகரணஞ்செய்திருந்தனர். இவ்வகையிருக்கையில் ருத்ரர் ஆகாசவீதியில் செல்ல அந்நிழல் மேல் படாமல் ஒதுங்கிய ஆழ்வாரைக் கண்டு, "உமக்கு வேண்டிய வரம் கேளீர்" என்றனர். ஆழ்வார், "மோட்சம் தருக! " என ருத்ரர், "அது என்னாலாகாது நாராயணனேதர வல்லான் என்ன, "ஆனால் இந்த ஊசியின் பின்னே நூல் போகச் செய்க!" என, உருத்திரன் கோபித்துநெற்றிக்கண்ணை விழிக்க, ஆழ்வார் திருவடியில் ஒரு கண்ணை ஆக்கித் தீயை யேவினர். அத்தீ ருத்ரனைத் தகிக்க, ருத்திரன் அபசயப்பட்டு, ஆழ்வாரை க்ஷாமணங் கேட்டுக்கொண்டு பத்திசாரர் என்கிற திருநாமம் சாற்றிச் சென்றனன். முதல் ஆழ்வார்கள் மூவரும் இவருடன் கூடித் திருவல்லிக்கேணி தரிசித்தனர். இவருண்ட பாலின் சேக்ஷத்தால் சூத்திரர்களுக்குப் பிறந்த கணிகண்ணர், ஆழ்வார் காஞ்சியில் எழுந்தருளியிருக்கையில் கைங்கர்யம்

செய்துகொண்டிருந்தது, அந்நிதியில் கைங்கர்யம் செய்த விருத்தையிடத்து அன்புவைத்து அவ்விருத்தையைக் குமரியாக்கினர். இதைக் கேள்வியுற்ற பல்லவராயன் என்கிற ராஜா, தன்னை யௌவன புருக்ஷனாகச் செய்யக் கேட்டனன். கணிகண்ணர் மறுத்தனர். அதனால் பல்லவன் 'என்னாட்டை விட்டு நீங்குக' என்றனன். இதனைக் கணிகண்ணர் திருமழிசை ஆழ்வாருக்கறிவித்து நீங்க, ஆழ்வாரும்,

"கணிகண்ணன் போகின்றான்
காமருபூங் கச்சி
மணிவண்ணா நீயிங்கி
ராதே - துணிவுடனே
செந்நாப் புலவனியான்
செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக்
கொள்"

என்று ஊரைவிட்டு நீங்கினர். இதனால் பெருமாளும் நீங்கினர். பெருமாள் நீங்கவே நகரம் வெறுமையடைந்தது. இதனால் அரசன் துக்கமடைந்து இருவரையுமடைந்து வேண்டி மீண்டு மெழுந்தருளச் செய்தனன். இவ்வகை சிறிது நாளிருந்த ஆழ்வார், பெரும்புலியூர் வேதியர் தம்மைச் சூத்திரர் என இகழ்ந்தமையெண்ணி அக்கிராமத்திற் செல்லாது விலக, அவ்விடமிருந்த பெருமாள், ஆழ்வார் சென்ற வழி நோக்கினர். இதனை அறிந்த நம்பி, வேதியருக்கறிவிக்க, அவ்வேதியர், தங்களுக்கு வேதாந்தியயனத்தில் விட்ட இடந்தெரியாது மறந்தமைக்கும் பாகவத தூஷனமே காரணமென்றுணர்ந்து ஆழ்வாரை நமஸ்கரிக்க ஆழ்வார் வேதமுணர்ந்தும் அவர்கள் எண்ணியதை விளக்க வர்ணாச்சிரமத்தால் வாயாற் கூறாமல் ஒரு கறுப்பு நெல்லைப் பிளந்து நாட்டினர். இதனால் வேதியர் வேதத்தில் விட்டவிடமறிந்து சென்றனர். இதுநிற்க, அவ்வூரில் யாகஞ்செய்ய யத்தனித்த வேதியர் யாக பலஹித்தி யடையவேண்டி ஆழ்வாரை யக்கு ஸதஸில் உட்காருவித்தனர். அவ்விடமிருந்த சில வேதியர் அருவருத்தனர். அதனை ஆழ்வாரறிந்து திருமார்பில் திருவாழி ஆழ்வானைக் காட்டினர். இதனால் வேதியர் பயந்து பிரார்த்திக்க ஆழ்வா

கடாக்ஷித்து அவ்விடமிருந்து திருக்குடந்தைக்கு எழுந்தருளி ஆராவமுதனைச் சேவித்து (2300 ஆண்டுகள்) யோகத்திலிருந்து திருநாட்டுக் கெழுந்தருளினர். இவர் சக்கிராம்சம். இவர் (4702) ஆண்டுகள் எழுந்தருளியிருந்தனர். இவர் சுத்திகாரன், கொங்கணர் முதலியவர்களை வெற்றி கொண்டனராம். இவர் செய்தவை நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் முதலியன (குருபரம்பரை)"

இதுவரை நாம் பார்த்த திருமழிசை ஆழ்வார் வரலாற்றில் எது கதை, எது சரித்திரம் என்று வேறுபிரித்துச் சொல்ல இயலாத அளவுக்குப் புராணப்பண்பு இந்த நிகழ்ச்சிகளிலே கலந்து பிணைந்து மயக்கமூட்டுகிறது.

திருமழிசையாழ்வாரே முன்பகுதி வாழ்வில் சிவவாக்கியராக இருந்தவர் என்பதில் கருத்துவேறுபாடு இல்லை. ஆனால் சிவ வாக்கியராக இருந்தபோது இவர் இயற்றிய பாடல்கள் எவை என்பது பற்றிய தகவல்கள் இந்த வைணவக் குறிப்புகளில் சரியாகச் சொல்லப் பெறவில்லை. அப்பர் சுவாமிகள் சமணத்திலிருந்த காலை பாடிய பாடல்கள் பற்றிச் சைவ வரலாறுகள் மோனம் சாதிக்கின்றன அல்லவா? நாவுக்கரசர் திடீரென்று சைவராகிக் கவிஞராகவும் ஆகிவிட்டாரா? முன்பும் அவர் கவிஞராகவே இருந்து கவிதைகள் புனைந்திருக்க வேண்டுந்தானே. அவை என்ன ஆயின?

இந்த நிலையில் திருமழிசை ஆழ்வார் இவ்வாறிருக்க சிவவாக்கியரைப் பார்க்கலாம். அபிதான சிந்தாமணியிலுள்ள குறிப்பு வருமாறு:-

> இவர் வேதியர் குலத்திற் பிறந்து காசியாத்திரை
> சென்று இல்லறத்தில் ஆசைகொண்டு ஒரு ஞானியாகிய
> சக்கிலியால் காசும் பேய்ச்சுரைக்காயும் கொடுக்கப்
> பெற்று அவனுக்கு எந்தப்பெண் மணலையும் இச்சுரைக்
> காயையும் சமைத்து இடுகின்றாளோ அவளே மனைவி
> யென அவ்வாறு செய்த ஒரு குறப்பெண்ணை மணந்து
> இல்லறத்திருந்து மூங்கில் வெட்டுகையில் அது பொன்
> பொழிய, நீத்து ஒரு கீரையைப் பிடுங்குகையில்
> தன்னிலை நிற்கக் கொங்கணரால் திருந்தியவர்.

இவரைத் திருமழிசை ஆழ்வாரென்பர். இவர் தமிழில் தம் பெயரால் சிவவாக்கியம் என நூல் செய்தவர். இவர் வந்து பூமியில் பிறக்கையில் 'சிவ' என்று சொல்லிக்கொண்டு விழுந்தபடியால் இவர்க்கு இப்பெயர் இடப்பட்டது.

இதுவே சிவவாக்கியர் பற்றி அபிதான சிந்தாமணியின் குறிப்பாகும். இதுவும் புராணப் பண்பில் சற்றும் குறைந்ததாக இல்லை. இதை முழுவதும் வரலாறு என்று எப்படி ஒப்புக் கொள்வது?

சிவவாக்கியம் ஒரு பழைய பதிப்பிலே காணப்படுகிற சிவவாக்கியர் சரித்திரம் வருமாறு:

"துவாபர யுகத்திலே தணடகாரணியத்திலே திருமழிசையிலே அத்திரி, பிருகு, வசிஷ்டா முதலான முனிவர்களுடன் நித்தியவாசம் பண்ணிக்கொண்டிருந்த பார்க்கவ மகாமுனிவருக்குச் சர்வேசுவரனுடைய கிருபையால் அவருடைய பத்தினியாரிடமாகப் பன்னிரண்டு மாதம் கர்ப்பத்தில் தங்கிய ஓர் மகவுதித்தது. அஃது ஒரு பிண்டம்போல் ரூபங்கள் தோற்றாமலிருந்த படியினாலே பார்க்கவரும் அவருடைய பத்தினியாரும் வெறுப்புற்றவர்களாய், அங்கிருந்த ஒரு பிரம்பின் புதரின் கீழே போட்டுவிட்டுப் போனார்கள். முண்டை போலிருந்த அந்தப் பிண்டத்தை ரட்சிப்பார் ஒருவருமின்றி இலட்சுமிதேவியார் அனுக்ரகத்தாலே சர்வாங்கமும் பெற்று மிகவும் சிசுவான ஆழ்வார் பசிதாகங்களுக் கிடுபட்டு முலைப்பால் வேண்டி அங்ஙனே அழுதுகொண் டிருக்க அங்கு ஜகத்ரட்சகனான பரமபதநாதன் எழுந்தருளிப் பசிதாகம் தீர்த்துத் தன்னையுங் காட்டி மறைந்தார்.

ஆழ்வார் அவரைவிட்டுப் பிரிந்து சகிக்கமாட்டாமல் மறுபடியும் அழத்தொடங்கினார். அங்கே பிரம்பறுக்க வந்த திருவாளன் என்பான் அவ்வழுகைக் கூரலைக்கேட்டு ஓடோடியும் வந்து குழந்தையைக் கண்டு தாவியெடுத்துச் சென்று தன்

மனைவியிடங் கொடுத்துத் தானும் மனைவியும் பிள்ளையில்லாதவர்களாயிருந்த படியால் மிகுந்த ஆசையோடு வளர்க்க இச்சைக்கொண்டார்கள்.

பிள்ளையான ஆழ்வாரோ பால் முதலியன அருந்துதலின்றி சதா சர்வேசுவரனையே தியானித்தவராய்ப் பேசுவதும் அழுவதும் மலமூத்திரங்களும இல்லாமல் எல்லா அவயங்களும பரிபூரணமாய் எழுந்தருளியிருந்தார். இவ்வாச்சரியத்தைத் திருமழிசையில் புத்திரனல்லாதிருக்கும் ஒரு கிழவன் கேட்டு ஒரு நாளேனும் தவறாது பாலமுதங்காய்ச்சி யெடுத்துக்கொண்டு தன் பத்தினியுடன் வந்து ஆழ்வாருக்களித்து அமுதுசெய்யச் சொல்லி மனப்பூர்த்தி அடைந்துவந்தான்.

ஒருநாள் அக்கிழவனுடைய மனோபாவத்தை ஆழ்வார் அறிந்து அன்று அவர்கள் கொண்டுவந்த பாலமுதை அமுதுசெய்து மிஞ்சிநின்ற பாலை, "இதை நீங்கள் ஸ்வீகரியுங்கள். உங்களுக்கு நல்ல புத்திரன் உண்டாவான்" என்று கொடுத்தருள, அவர்களும் அப்படியே ஸ்வீகரித்து ஒரு பிள்ளையைப் பெற்று அப்பிள்ளைக்கு 'கணிகண்ணன்' என்ற திருநாமஞ் சாத்தி எல்லா வித்தைகளையும் அதிகரிப்பித்தார்கள்.

பின்பு ஆழ்வாரும் ஏழு திருநட்சத்திரம் சென்றவாறே அஷ்டாங்கயோகாப்பியாசத்தில் மனமாகி அதற்குத் தியான விஷயத்தில் மான ஜகத்காரண வஸ்துவை அறிதற்காக இவ்வுலகில் உற்பவித்திருக்கும் பற்பல சமயங்களையும் புக்குணர்ந்து ஆராய்ந்து பார்த்து அவைகளில் யாதொரு பசையுமில்லையென்று கண்டு கழித்துணரும் போது, சைவசமயத்திலும் சில நாள் இருந்து, 'சிவ வாக்கியம்' என்ற பாட்டுக்களைப் பாடி 'சிவவாக்கியர்' என்ற நாமந் தரித்துப் பின்னர் இந்தச் சமயமும் நிலை நில்லாது என்று கைவிட்டு, ஸ்ரீவைஷ்ணவராகி, ஸ்ரீவிஷ்ணுபரமாக 200 திருப்பாசுரங்களைப் பாடி அநேக அற்புதங்களையுஞ் செய்து நாலாயிரத்து எழுநூறு வருஷம் இருந்து இவ்வுலகத்தாரை வாழ்வித்தருளினார்."

-மேலே கண்ட வரலாற்றுக் குறிப்பு சிவவாக்கியர் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ள பழைய பதிப்பில் காணப்பெறுகிறது.

இதிலும் திருமழிசையும் சிவவாக்கியரும் ஒவராகிய பக்திசாரர் என்றும் பார்க்கவ முனிவரின் குமாரர் என்றும் கூறப்படுகிறது.

ஆகவே, பக்திசாரர் என்ற பெயரிலும், குறவர் வீட்டில் வளர்ந்த வரலாற்றிலும், பின்னர் கணிகண்ணன் தொடர்பிலும், பல்லவ அரசன் சம்பந்தத்திலும் எல்லாக் குறிப்புக்களும் ஒரே குரலிலேயே பேசுகின்றன. எனினும் இந்த நிகழ்ச்சிகளில் வருகிற அமானுட சம்பவங்களும், நாலாயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்குமேல் இவர் வாழ்ந்தார் என்பது போன்ற மொழிகளும் வரலாற்றுச செவிகொண்டு கேட்போருக்கு ஒவ்வுவனவாக இல்லை.

திருமூலர் வாழ்க்கை வரலாற்றிலும் ஆண்டுக்கு ஒரு பாடலாக அவர் பாடினார், மூவாயிரம் ஆண்டுகள் தவத்தில் இருந்து மூவாயிரம் பாடல்கள் பாடினார் என்பன போன்ற குறிப்புக்கள் காணப்பெறுகின்றன அல்லவா? இவ்வாறே நம்நாட்டுச் சான்றோரில் பலரின் வரலாற்றிலும் இத்தகைய புராணப் பண்பு வரலாற்றின் இயைபுக்கு முரண்படுகிற பாங்கிலே இருப்பதைக் காண்கிறோம்.

இந்நிலையில் சிவவாக்கியர் வாழ்ந்த நூற்றாண்டு எது என்ற துணிபே முடிகிறது என்ற ஒன்றே நமக்கு மகிழ்ச்சி தருகிறது. எக்காரணம் கொண்டும் ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னில்லை என்பது தெளிவு. அதோடு திருமழிசை ஆழ்வாரும் சிவவாக்கியரும் ஒருவரே என்பதும் ஐயந்திரிபற்ற உண்மையே யாகும்.

'சிவவாக்கியம்' என்ற தொகுப்பில் திருச்சந்த விருத்தம் நூலின் நடுவில் இடம்பெற்றிருந்த போதிலும், நான்முகன் திருவந்தாதி சேர்க்கப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்பது தெளிவாகப் புரியவில்லை. இந்த அந்தாதி வெண்பாவினால் ஆன காரணம் பற்றிச் சிவவாக்கியம் என்ற விருத்தத் தொகுப்பில் இது இடம்பெறாமல் இருந்திருக்கலாம் என்று ஊகிக்கிறேன். இந்நிலையில் நான்முகன் திருவந்தாதியை இந்த நூலிலே சேர்த்து நான் வெளியிடவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, சிவவாக்கியம் என்ற தொகுப்பில் சிவவாக்கியர் இயற்றியவை என்ற மகுடத்துடன் இணைக்கப்பட்டுள்ள சுவடிகளில் நான்முகன் திருவந்தாதி இடம்பெறவில்லை. இது முக்கியமான காரணம்.

இனி, இரண்டாவது காரணம் என்னவென்றால், நான்முகன் திருவந்தாதி சிவவாக்கியரால் இயற்றப்பட்டதாக எந்தச் சுவடியும் குறிப்பிடவில்லை. அதோடு திருமழிசை ஆழ்வார் இயற்றியவை என்ற குறிப்புகளைத் தருவதோடு, இந்த அந்தாதிப் பாடல்கள் அனைத்தும் நாதமுனிகள் தொகுத்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்னும் தொகுப்பில் மட்டுமே காணப்பெறுகின்றன. சிவவாக்கியத்தின் நடுவிலே காணப்படவில்லை என்பதற்கு வெண்பா யாப்பு காரணமெனினும், சிவவாக்கியத்தின் ஒரு பகுதியாகத் தனியொரு அந்தாதியாகவே இதையும் இணைத்திருக்கலாம். அப்படியுமில்லை.

ஆகையால் நான்முகன் திருவந்தாதி சிவவாக்கியர் இயற்றியதில்லை என்று ஆகிவிடாது. திருச்சந்த விருத்தம் சிவவாக்கியத்தின் ஒரு பாகமாக, அந்த நூலின் மத்தியில் மற்றப் பாடலோடு பாடல்களாகக் காணப்பெறுவதோடு வேறு தனித்தலைப்பின்றி, சிவவாக்கியத்தின் உள்ளுறையாகவே இருப்பதுபோல, திருவந்தாதி இல்லை. தவிரவும், திருவந்தாதி முழுமையும் நல்ல அச்சு வடிவிலே தனிநூலாக வைணவ இலக்கியத்தில் கிடைப்பதால் இங்கேயும் அந்தப் பாடலையும் சிவவாக்கியத்தோடு சேர்த்து வெளியிடுவது மிகை என்று கருதி அந்தாதியை இந்த நூலிலே நான் சேர்த்து இணைக்கவில்லை.

## தத்துவ நோக்கும் வரலாற்று ஆராய்ச்சியும்

சித்தர்கள் எல்லாரும் ஒருநிலையில் பக்தர்களே. ஆனால் பக்தர்கள் எல்லாரும் சித்தர்கள் அல்லர்.

சிவவாக்கியரைப் பொறுத்த மட்டில் அவர் ஒரு சித்தர், முழுமையான சித்தர். எனவே அவர் பக்தர் நிலையிலே நின்றும் சிவத்தையும் ராமநாமத்தையும் மனமுருகத் துதிக்கிறார். ஐந்தெழுத்து எட்டெழுத்து ஆகியவற்றைத் தூலத்திலும் பாடுகிறார், சூக்குமத்திலும் பாடுகிறார். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நிலைகளிலும் நின்று அந்தந்த நிலையிலேதோய்ந்து அற்புதமாகப் பாடுகிறார் இந்த மாபெரும் சித்தர்.

எல்லா மதங்களிலும், புகுந்து பார்த்தவரானதால், பக்திசாரராகவும், சிவவாக்கியராகவும், திருமழிசை ஆழ்வாராகவும் இந்த மூன்றையும் தாண்டிய யோக சமாதி கைகூடிய சித்தராகவும் நம்முன் காட்சி தருகிறார் இந்த மகான்.

நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சாத்துகிறதை மடமை எனச் சீறுகிறவர்,

"அந்தி காலை உச்சி மூன்றும்
ஆடுகின்ற தீர்த்தமும்
சந்தி தர்ப்ப ணங்களும்
சங்க ளும்க பங்களும்
சிந்தை மேவு ஞானமும்
தினம்ச பிக்கும் மந்தரமும்
எந்தை ராம ராமராம
ராம என்னும் நாமமே!"

என்றும் பாடுகிறார். அதே திருமழிசை ஆழ்வார் சிவவாக்கியராக நின்று,

"உம்பர் வான கத்திலும்
உலக பார மேழிலும்
நம்பர் நாடு தன்னிலும்
நாவ லென்ற தீவிலும்
செம்பொன் மாட மல்குதில்லை
அம்ப லத்துள் ஆடுவான்
எம்பிரான லாது தெய்வம்
இல்லை இல்லை இல்லையே"

என்றும் பாடுகிறார். அதேபோல, இந்த நிலைகள் அனைத்தையும் கடந்த மகானாக நின்று,

"செய்ய தெங்கி லேஇளநீர்
சேர்ந்த கார ணங்கள்போல்
ஐயன் வந்திங் கென்னுளம்
புகுந்து கோயில் கொண்டனன்

ஐயன் வந்திங் கென்னுளம்
புகுந்து கோயில் கொண்டபின்
வைய கத்தில் மாந்தர்முன்னம்
வாய்தி றப்ப தில்லையே"

என்று பேரானந்த ஒடுக்க நிலையிலே நின்றும் ஆன்மக்குரல் கொடுக்கிறார் சித்தர் பெருமான்!

இத்தனை முரண்பாடுகள் போலத் தோன்றுகிற சிவசிவ ஒடுக்க ஒருமைப்பாடும், ஒரே குரல்தான்! வேற்றுமையிலே ஒற்றுமை காண்கிற குரல் அது! அதற்குப் பெயர்தான் சிவ வாக்கியம்!

மேலெழுந்த வாறாகப் பார்த்தால் சிவவாக்கியரை ஒரு புரட்சியாளர் என்று மட்டுமே சொல்லத் தோன்றும். அந்தப் புரட்சிக்குள்ளே இருக்கிற ஆன்ம ஒடுக்கம் எத்தகையது என்பதை உணர்ந்துகொள்ள இந்தப் பாடல்கள் முழுமைக்குள்ளும் முக்குளித்துப் பார்க்கவேண்டும். இவ்வாறு முக்குளித்துப் பார்க்க ஒண்ணாத நிலையிலேதான் சில ஆசிரியர்கள் சிவவாக்கியரின் நடையையும் போக்கையும் கொச்சையாகவும் பச்சையாகவும் இருப்பதாக எண்ணுகிறார்கள். சிலர் அவ்வாறு குறைசொல்லி எழுதியும் இருக்கிறார்கள். இது காரணம் பற்றியே சில வரலாற்று ஆசிரியர்களும் சிவவாக்கியர் மிகவும் பிற்பட்டவர் என்றுகூடத் தவறாக எழுதியிருக்கிறார்கள். இந்தச் சர்ச்சைகளினால்தான் திருமழிசையும் சிவவாக்கியரும் ஒருவரல்லர் என்று கருத்தும் ஓரிருவர் எழுதக் காரணமாகும்.

குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அறிஞர் வரிசையிலே புலவர் புராண ஆசிரியரும், பல்லவர் சரித்திரம் எழுதிய பி.டி. ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்களும் திருமழிசையாழ்வாரும் சிவவாக்கியரும் ஒருவரே என்று உறுதியாகக் கூறுகிறார்கள். எம்.ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்கள் மட்டும் குருபரம்பரைப் பிரபாவத்தில் கூறியுள்ள வரலாற்றின் படி திருமழிசைப்பிரான்தான் சிவவாக்கியர் என்பது சரியில்லை என்று மறுத்துள்ளார். இதற்கு அவர் செய்யுள்களின் நடையை அகச்சான்றாகக் காட்டிச் சிவவாக்கியர் பாடல்கள் திருமழிசை யாழ்வாரின் பாடல்களைத் திருடி

யெழுதியவை என்றும், சிவவாக்கியர் தெய்வ நம்பிக்கையற்றவர் என்றும், சிவவாக்கியரின் பாங்கும், திருமழிசை யாழ்வாரின் பாங்கும் முற்றிலும் மாறுபட்டவை என்றும் விசித்திரமான முறையில் வாதிடுகிறார். இன்னொரு ஆராய்ச்சி அறிஞரான ஏ.வி.சுப்பிரமணிய ஐயர், எம்.ஸ்ரீநிவாசய்யங்காரின் இந்த விவாதங்கள் பொருளற்ற ஒரு கசப்பிலிருந்து, சிவவாக்கியரிடம் ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்களுக்கு உண்டான தப்பபிப்பிராயம், வெறுப்பு ஆகிய சினத்திலிருந்து தோன்றியவை என்பதை நன்றாக விளக்கி எழுதியிருக்கிறார். திருமழிசையாரே சிவவாக்கியரும் என்பதை அவர் மனம் சீரணிக்க முடியவில்லை என்பது கருத்தாகும்!

இன்னொரு முக்கியமான உண்மையை இங்கே நினைவூட்டவேண்டியது இன்றியமையாததாகும். பட்டினத்தார் தமது திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் - பதினோராந் திருமுறையில் சிவவாக்கியரைப் பற்றிப் பாடுகிறார்.

"அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்"

என்று மனமுருகி மொழிகிறார் பட்டினத்தடிகள்.

சிவவாக்கியர் பிந்திய காலத்தவர் என்று வாதிடுகிற அறிஞர் இதைப் பார்க்கவில்லை! பட்டினத்தடிகள் வாழ்ந்த காலத்திற்கு முந்தியவர் சிவவாக்கியர்! பதினோராந் திருமுறையிலுள்ள திருவிடைமருதூர் மும்மணிக்கோவை தோன்றிய காலத்திற்கும் முன்பு தோன்றியதே சிவ வாக்கியம்!

பட்டினத்தார் காலத்தை அறுதியிட்ட அறிஞர் பெருமக்கள் பத்தாம் நூற்றாண்டு என்று உறுதி செய்துள்ளார்கள். அதாவது இரண்டு பட்டினத்தார்கள் என்று சொல்லுகிற அறிஞர்களும், திருமுறையில் காண்கிற பட்டினத்தார் பிந்தியவர் என்று சொல்கிறவர்களும், பட்டினத்தார் மூவரிலும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை பாடியவர் எல்லாருக்கும் பிந்தியவர் என்போரும் - இவர்கள் எல்லாருமே பதினோராந் திருமுறையில் காண்கிற பட்டினத்தார் பத்தாம் நூற்றாண்டுக்குப் பிந்தியவர் அல்லர் என்று

ஒருமனதாகச் சொல்லுகிறார்கள். எனவே, சிவவாக்கியர் ஏழாம் நூற்றாண்டில் தோன்றியவர் என்ற முடிவுக்கு இதுவும் ஒரு துணையாகும்.

இனி, திவ்ய சூரி சரித்திரம் என்ற மிகப்பழைய நூல் ஆழ்வார்களின் வரலாறு சொல்லும்பேது, திருமழிசை ஆழ்வார் சைவராக இருந்தார் என்றும், குமுதவல்லி என்னும் அழகியைச் சந்தித்துக் காதலுற்றார் என்றும், அவர் ஒரு வைணவக் கன்னிகை என்பதோடு வைணவனாக அல்லாத ஒருவனை மணப்பதில்லை என்று உறுதி பூண்டிருந்தாள் என்றும், ஆழ்வாருக்கு அவளிடத்திருந்த மோக மிகுதியிலே அவளைத் திருமணம் செய்து கொள்வான் வேண்டி அவர் சைவ மதத்திலிருந்து வைணவ சமயம் புகுந்தார் என்றும் கூறுகிறது.

# சிவவாக்கியரின் கடவுட்கொள்கை

சிவ வாக்கியருடைய தத்துவ நோக்கைப் பார்த்த போது அவர் சிவனையும் திருமாலையும் ஒருசேரத் துதிக்கிறார் என்று பார்த்தோம். அதே சமயம் இந்த இரண்டையும் கடந்த ஞானியர்களின் சித்தாந்தமே அவருடைய கடவுட் கொள்கை என்பதில் ஐயமில்லை.

"தில்லை நாய கன்அவன்
திருவ ரங்க னும்அவன்
எல்லை யான புவனமும்
ஏக மூர்த்தி யான்அவன்!"

என்பது சிவவாக்கியம். அதனாலேதான் வேறொரு பாடலில்,

"தங்கம் ஒன்று ரூபம்வேறு
தன்மை யான வாறுபோல்
செங்கண் மாலும் ஈசனும்
சிறந்தி ருந்த தும்முளே
விங்க ளங்கள் பேசுவீர்
விளங்கு கின்ற மாந்தரே
எங்கு மாகி நின்றராம
நாமம் இந்த நாமமே!"

என்று பாடுகிறார் சிவவாக்கியர். அது மட்டுமில்லை சிவனும் திருமாலும் வேறு வேறு என்று பேசுகிறவர்கள் நரகத்துக்குப் போவார்கள் என்றே ஓங்கி அடிக்கிறார்.

"ஏறில் ஏறும் ஈசனும்
இயங்கு சக்ர தாரனும்
வேறு வேறாய்ப் பேசுவார்
வீழ்வர் வீண்ந ரகிலே"

என்பது சிவவாக்கியர் பாடல்.

## சமுதாயக் கொள்கை

சிவ வாக்கியருடைய சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையைப் பார்க்கும்போது ஈ.வெ.ரா. பெரியாருக்கும் ஒரு படி மேலே போகிறார் இவர் என்று கூறலாம்.

ஒருபடி மேலே என்று ஏன் சொல்கிறேன் என்றால், பெரியார் கடவுளை நம்புகிறவன் முட்டாள் என்று சொல்லித் தமது புரட்சிகரமான சீர்திருத்தங்களை ஓதுகிறார். ஆனால், சிவவாக்கியரோ என்றால் கடவுளை நம்பியவாறு, கடவுள் இருப்பது அம்மை ஆணை அப்பன் உண்மையே என்று சத்தியம் செய்துகொண்டே,

"நூறு கோடி ஆகமங்கள்
நூறு கோடி மந்திரம்
நூறு கோடி நாள்இருந்தே
ஓதி னாலும் என்பயன்?"

என்றும்,

"சாதி ஆவ தேதடா"

என்றும்,

"சாவ தான தத்துவச்
சடங்கு செய்யும் மூடர்காள்"

என்றும்,

"சடங்கு செய்யும் ஊமைகாள்"

என்றும்,

"நட்ட கல்லைத் தெய்வமென்று
நாலு பூட்பம் சாத்தியே
சுற்றி வந்து முணுமுணென்று
சொல்லும் மந்த்ரம் ஏதடா"

என்றும்,

கோயி லாவ தேதடா
குளங்க ளாவ தேதடா"

என்றும்,

"இருக்கு நாலு வேதமும்
எழுத்து றவே ஓதிலும்
பெருக்க நீறு பூசினும்
பிதற்றி னும்பி ராணிரான்"

என்றும்,

"தேரி லேவ டத்தையிட்டுச்
செம்பை வைத்தி ழுக்கிறீர்"

என்றும்,

"சாத்தி ரங்கள் ஓதுகின்ற
சட்ட நாத பட்டரே
வெத்தி ரைப்பு வந்தபோது
வேகம் வந்து தவுமோ"

என்றும் இன்னும் பலவாறாகவும் சீறுகிற குரல் பெரியாரின் குரல் போன்றே ஒலித்தாலும், கடவுளோடு தோய்ந்து இறையின்பத்திலே மூழ்கி முக்குளிகின்ற ஒரு மகானின் ஞானக் குரல் இது என்பதை நாம் நன்றாக நினைவில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

மனிதர் யாரும் சமம், பிறவியினால் ஏற்றத் தாழ்வுகள் இல்லை, சடங்குகளும் வேடங்களும் பரகதிக்கு நம்மை அழைத்துச் செல்ல மாட்டா, எல்லா மக்களும் கடவுளின் வடிவம், எல்லா மதங்களுக்கும் இறைவன் ஒருவனே, இந்த வையகம் முழுதும் இன்பமாயிருப்பதற்காகவே நெறிகள் தோன்றியுள்ளன, கடவுள் ஒருவன் உண்டு என்பது சத்தியம், மற்ற யாவும் பொய், இந்த உலகம் முழுவதும் ஒரே பொருள். ஒருமைப்பாடு என்பது உலகந் தழுவிய உயிரொடு தோய்ந்த பரம்பொருளோடு கலந்த ஒருமையுணர்வு என்றெல்லாம் உணர்த்துகிற சித்தர் ஞானமே சிவவாக்கியரின் சமுதாயக் கொள்கையும் ஆகும்.

## சிவ வாக்கியரின் கவிப்பண்பு

சிவவாக்கியரின் நடை பேச்சுத்தமிழிலிருந்து சற்று உயர்ந்தது; சங்கத் தமிழிலிருந்து சற்று இறங்கியது.

பேச்சு நடை மேலேறி, இலக்கண நடை சற்றுந் தாழ்ந்து வந்து இரண்டும் சந்தித்துக் கூடுகிற தமிழ் நடையே சிவ வாக்கியரின் கவிநடை!

அவருடைய நடை தூய்மைற்றது என்று சிலர் சொல்வதற்குக் காரணம், அவர் சில சமயங்களில் உண்மையை ஆடை அணிகலன்கள் இல்லாமல், பிறந்த மேனியாக நம் முன் நிறுத்திவிடுகிறார். சத்தியத்துக்கு அவர் ஜோடனைகள் செய்வதில்லை. பிறப்பும், உடலுறவும், உடம்பின் தன்மைகளும் பற்றி அவர் பேசும்போது அப்பட்டமான உண்மையை. அப்பட்டமாகச் சொல்லுகிறார். அதோடு எச்சில், தூமை, முலை, பறைச்சி, புலைச்சி, சலந்திரண்ட நீர், கருக்குழி, ஈன்ற வாசல், வாய்புழுத்தல், மூடர்காள், இறைச்சி, போன்ற சொல்லாட்சி அவருடைய பாடல்களிலே நிரவி வருவதால் சிலர் அருவருப்புக் கொள்கிறார்கள். இதையே வேறு சில கவிஞர்கள் தமிழ்ச் சொல்லினூடு வடமொழிச் சொற்களிலே மொழிந்துள்ளதை நாம் அருவருப்பாகக் கொள்வதில்லை. இது மொழியாட்சியின் கால அடைவுக் குற்றமே தவிர, மொழியாளரான கவிஞரின் குற்றமாகாது. சான்றாக, நாற்றம் என்ற சொல் ஆண்டாள் பாசுரத்திலேயே வருகிறது. அது நல்ல பொருளில் வருகிறது.

"கருப்பூரம் நாறுமோ
கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான்
தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன்
வாயமுதும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்
சொல்லாழி வெண்சங்கே!"

என்று ஆண்டாள் பாடுகிற அழகான பாசுரத்தில் 'நாற்றமும்' என்ற சொல்லை இக்காலத்துச் சொல்லாட்சி காரணமாக ரசிகமணி டிகேசி

'வாசமும்' என்று திருத்தியுள்ளார். திருத்தத்தைப் பற்றி நான் இப்போது பேசவில்லை. நாற்றம் என்ற சொல் அவருடைய செவியை, நம் அனைவருடைய இருபதாம் நூற்றாண்டுச் செவிகளையுமே குத்துகிறது அல்லவா? இவ்வாறுதான் பல சொற்கள் அவை தோன்றிய காலத்தில் 'கொச்சை' யாக இருக்கவில்லை. காலப் போக்கில் அவற்றுக்கு ஒரு நாற்றம் உண்டாகி விடுகிறது!!! எல்லா உலக மொழிகளிலுமே இந்தச் சொற்பொருள் நலிவு ஏற்படுவதை 'டிடீரியொரேஷன்' (Deterioration) என்று அழைப்பார்கள். இவ்வாறே சொற்களுக்கு உயர்வு ஏற்படுகிற நிலையை 'அமீலியோரேஷன்' (Amelioration) என்பார்கள் தீர்த்தம் என்ற சொல் வடமொழியில் வெறும் தண்ணீரைக் குறித்து இப்போது உயர்பொருளில் வழங்குகிறதல்லவா, அவ்வாறே!

இது ஒரு புறமிருக்க, சிவவாக்கியரின் கவிப்பண்பு அற்புதமானது. சொற்களின் உருக்கமும், எழிலார்ந்த மொழியழகும்; கருத்தோடு இயைந்து உதித்துவருகிற மெருகேறிய சொல்லாட்சியும் அற்புதமானவை.

சான்றாக,

"ஆடு காட்டி வேங்கையை
அகப்ப டுத்து மாறுபோல்
மாடு காட்டி என்னைநீ
மதிம யக்க லாகுமோ
கோடு காட்டி யானையைக்
கொன்று ரித்த கொற்றவா
வீடு காட்டி என்னைநீ
வெளிப்ப டுக்க வேணுமே!"

என்பது போன்ற அமர கவிதைகள் நூற்றுக் கணக்கிலே இந்தச் சிவவாக்கியத்தில் உள்ளன. கவிப்பண்பு என்ற தலையிலே இத்தகைய பாடல்களை நிறை எடுத்தால், உலக இலக்கியங்களிலுள்ள தலையாய கவிதைகளுக்கு ஒப்பாக இவை நிற்கும் என்பதில் ஐயமில்லை!

# சந்த அழகு

சிவ வாக்கியரின் கவிச்சிறப்பில் மிகவும் முக்கியமான ஒரு பண்பு அவருடைய நடையின் சந்தமாகும்.

சிவவாக்கியம் என்ற தொகுப்பிலே உள்ள இந்த விருத்தப் பாடல்களைப் பதிப்பித்துள்ள அறிஞர்கள் பெரும்பாலும் நான்கு சீரடிகளாகவே கொண்டு, நான்கு நான்கு சீராக ஒவ்வொர் அடியையும் பிரித்து அச்சிட்டுள்ளார்கள். சுவடிகளிலே சீர் பிரித்தெழுதுகிற முறையிலே இத்துணை தெளிவு காணப்படவில்லை. எனினும் மகாவித்துவான் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை உள்ளிட்ட ஓரிரு பண்டிதர்கள் மட்டும் அறுசீர் அடிகளாகவே இந்தப் பாடல்களைப் பதிப்பித்துள்ளனர்.

அறுசீர்க் கழிநெடிலடிகளைச் சீர்பிரிக்கும் முறையிலே என் இலக்கண ஆசிரியர் மகாவித்துவான் பண்டித சிரோமணி வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை அவர்கள் ஒவ்வொரு கழிநெடிலடியையும் மூன்று மூன்று சீர்களாகப் பிரித்து மோனை தழுவிய முறையிலே இரண்டு வரிகளாகப் பதிப்பிக்கும் முறையைக் கையாண்டதுண்டு. பிற்காலத்தில் என் இலக்கிய ஆசான்களில் மிகவும் முக்கிய வழிகாட்டியாக விளங்கிய டிகேசி அவர்களும் இந்த முறையையே கையாண்டு வந்தார்கள். பி.ஸ்ரீ, இராய.சொ. போன்ற அறிஞர்களும் இதைக் கையாள்வதுண்டு.

சிவவாக்கியருடைய கவிதைகளை இவ்வாறு சீர் பிரித்துப் பார்க்கும்போது அவற்றின் சந்தம் கண்கூடாகப் புலனாவதைக் காணலாம். எனவே நானும் இந்த முறையிலேயே சீர் பிரித்துத் தந்துள்ளேன்.

ஞான வெளியின் வசமாகி நிற்கிற, - இல்லை, ஓடுகிற, ஓடிப் படர்கிற - ஒரு சித்தனின் அவசரமும், துள்ளலும், ஞான வேகமும் இந்தச் சந்தத்தின் மிடுக்கிலே, 'டக்கு டக்கு டக்கு' என்று தாளம் போட்டுக்கொண்டே தள்ளிச் செல்கிறது. சிவவாக்கியருடைய ஞானவெறியோட்டம் இந்தச் சந்தத்தினூடு குரல் கொடுக்கிறது. இஃது இந்தக் கவிப்பண்பின் வேகமும் ஆற்றலுமாகும்!

## ஞான ஆற்றல்

இந்தப் பாடல்களிலே உள்ள சொற்பொருள் வெளிப்படையானது. சந்த ஆற்றலும் அப்படியே! இந்த ஆற்றலுக்குள்ளே ஆன்ற தவம் இயற்றி மோனத்திலே ஞானம் கைவரப் பெற்ற ஒரு மகானின் ஆன்ம ஆற்றல் உயிர்ப்போடு கனல்கிறது என்பதைச் சிவவாக்கிய நூலின் கவியனுபவம் நமக்கு மெய்ப்பிக்கிறது.

மந்திர ஆற்றல் என்றும், ஆணையிற் கிளந்த மறைமொழி என்றும் சான்றோர்கள் குறிப்பிடுவது இந்த மாபெரும் கவிப்பண்பையே ஆகும்.

சிவவாக்கியருடைய பாடல்கள் அனைத்தும், மந்திரங்களாவது தந்திரங்களாவது என்று அவர் சாடுகிற சீற்றத்தோடு கூடிய பாடல்களையும் சேர்த்தே குறிப்பிடுகிறேன், அத்தனை பாடல்களும் ஒருபெரிய முனிவன், ஒரு பெரிய ஞானி, ஒரு பெரிய தவசீலன், சிவவாக்கியச் சித்தனுடைய ஆன்ம ஆற்றலை உள்ளடக்கி ஒலிக்கின்றன. இவற்றை ஒருவகை மந்திர ஆற்றல் என்றே சொல்ல வேண்டும்.

இலக்கிய அழகு. கவியெழில், சந்தச் சிறப்பு, மொழிநயம் என்றெல்லாம் நாம் பாராட்டுகிற எல்லாப் பண்புகளோடும் இணைந்து இந்த ஞானமாக் கவியாற்றல் என்னும் ஆன்மவேகம் இப்பாடல்களிலே வலத்தும் இடத்தும் பாய்கிற உயிர்மூச்சாகிய வாசி யோகமே யாகும் என்பதை நாம் மனத்தில் நன்கு உட்கொள்ள வேண்டும்.

## ஓதி உணர்வதற்குரியவை!

எனவே, சிவவாக்கியம் என்ற இந்தத் தொகுப்பில் உள்ள பாடல்கள் அனைத்தும் ஓதி ஓதி உள்உணர்வை வளர்த்துக் கொள்வதற்கு ஆற்றல் நல்கும் அரிய கவிச் செல்வங்களாம். இடைச்செருகல் என்று தோன்றிய சில பாடல்களை நீக்கி, ஆற்றல்

மிக்கவை என்று தோன்றிய பாடல்களை மட்டுமே இத்தொகுப்பில் சேர்த்துள்ளதற்கு இதுவும் உள்ளுணர்வுக் காரணமாகும்.

இலக்கிய நோக்கிலே பார்த்தாலும் இவை நல்லிசைப் புலமை சான்ற சொல்லிசைப் பாடல்களேயாம். இவற்றின் கவிப்பண்பு தமிழ் மொழியிலுள்ள இலக்கிய மேன்மை பெற்ற கவிஞர்களின் வரிசையிலே சிவவாக்கியரையும் ஒரு செஞ்சொற் கவிக்கோமான் என்ற புலமை இருக்கையிலே, சங்கப் பலகையிலே வீற்றிருக்கச் செய்யும் வல்லமை உடையது என்பதில் ஐயமில்லை!

சொல்லாட்சி,
யாப்பமைதி,
சீர்களின் ஒழுகலாறு,
சந்தத்தின் தாள அமைப்பு,
எளிய சொற்களில் பொங்கிப் பாய்ந்து
வருகிற உணர்ச்சிப் பெருக்கு,
எதுகையும் மோனையும் சேர்ந்து தருகிற
ஒலிச்செம்மை,
நேருக்கு நேரே கவிஞன் நம்மோடு
உரையாடுகிற பாங்கிலே வருகிற
கவிமொழி

ஆகிய அனைத்தும் சேர்ந்து சிவவாக்கியத்தின் வாக்குக்கு மாண்புமிக்க கவிப்பண்பை வாரிவாரி வழங்குகின்றன! எத்தகைய சந்தேகமும் இல்லை. ஆனால் இத்தனை சிறப்புக்களுக்கும் மேலே, இன்னுமோர் பெருஞ்சிறப்பும் இந்தப் பாடல்களுக்கு உண்டு. அந்த உயர் தனிச்சிறப்பு என்னவென்றால், இவை ஞானக்கவிஞன் ஒருவனுடைய ஆணையிற் கிளந்த சிறந்த தவ மொழிகளாம். எனவே கவியாற்றலொடு இணைந்து ஓர் ஓர் ஒப்பற்ற ஞான ஆற்றல், ஓர் ஆன்ம சக்தி, ஒரு தெய்வ வலிமை, ஒரு கடவுட் பெற்றிமை, தமிழின் மந்திர ஆற்றலாக இந்தப் பாடல்களிலே ஒப்பற்ற மாட்சியுடன் சுடர்கின்றது! சித்தர் இலக்கியம் என்றும், தவமொழி என்றும் அழைக்கப்பெறுகிற உண்மைசான்ற சிறப்புக்குரிய அந்தப் பேராற்றலுக்குத் தமிழர்களாகிய நாம் வணக்கம் செலுத்தி வழிபடுவோமாக!

# ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

## கபிலர்

இந்தச் சிறிய பனுவரின் பழைய பதிப்புரையில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் கொடுத்துள்ள குறிப்பு வருமாறு:

"இந்நூல் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே திருவள்ளுவர் உடன்பிறந்தவரான கபிலர் என்னும் நல்லிசைப் புலவரால் எளிய இனிய தமிழ் நடையில் பாடப்பெற்றது. 132 அடிகளே யுடைய இந்நூலிற் பொதிந்துள்ள அறிவுரைகளைத் திருக்குறளிற் போன்ற அறவுரைகளோடு ஒத்து, அவற்றிலுஞ் சுருக்கமுடையவனாய், எல்லா மதத்தவராலும், எல்லா மக்கட் பிரிவினராலும் உவந்தேற்றுக் கொள்ளப்படும் விருப்பம் வாய்ந்தனவாய் பயில்வோர் உள்ளத்திற் பசுமரத்தாணியெனப் பதியுங் கூர்மை வாய்ந்து திகழ்கின்றன"

இந்தப் புலவர் பெருமானைப் பற்றி 'அபிதான சிந்தாமணி' தருகிற குறிப்பு:-

"கபிலர் - வள்ளுவருடன் பிறந்தவர். இவர் பிறந்தபோது தாய் விட்டுப் பிரிய வருந்துகையில்,

"கண்ணுழையாக் காட்டில்
  கருங்கற் தவளைக்கும்
உண்ணும் படியறிந்
  தூட்டுமவர் - நண்ணும்
படிக்கும் படியளப்பார்
  நாரியொர் பாகர்
தமக்குத் தொழிலென்ன தான்!"

என்று கவி கூறினர். இக்கவி கேட்டுத் தாய் பிரிந்தபின் ஒரு வேதியன் வீட்டில் வளர்ந்து உபநயன காலத்தில் மற்ற வேதியர் இவன் வேதியன் அன்றென்று மறுக்க, அவருடன் கண்மத்தாற் சாதியன்றிச் சன்மத்தால் இல்லை என்று வாதிட்டு நீங்கிச் தம்பெயரால் கபிலரகவல் பாடித் தவஞ்செய்தவர்."

இந்த இரண்டு குறிப்புக்களிலுமுள்ள செய்திகள் தவிர, இவருடைய வரலாறு ஏதும் விரிவாகக் கிடைத்திலது.

கபிலர் அகவல் என்ற இந்த நூலை இயற்றியவர் வள்ளுவரின் உடன்பிறப்பான கபிலர் என்று கொள்வது குறித்து வரலாற்று ஆசிரியரிடையே வலிமையான கருத்து வேற்றுமை நிலவுகிறது.

கபிலரகவல் வள்ளுவரின் உடன்பிறப்பினால் இயற்றப் பட்டது என்றும், இந்த நூல் எழுந்த காலம் பழைய சங்க காலமே என்றும் மரபுவழிப் புலவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அதனுடைய நடையும் பாங்கும் அத்தனை தொன்மைக்குச் சான்று பகரவில்லை என்று வாதிடுகிற அறிஞர்கள் இந்த நூல் தோன்றிய காலத்தை மிகவும் பின்னுக்குத் தள்ளுகிறார்கள்.

வரலாற்றுச் சான்றுகள் போதிய அளவு இல்லாத காரணத்தால் இந்தக் கால நிருணயத்தில் ஒரு தெளிவான முடிவுக்கு வர இயலவில்லை. இந்நிலையில் ஓரளவு நிதானத்தோடு ஆராயும் இயல்புடைய அறிஞர்கள் சிலர் பழைய கபிலரின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு புலவர் ஒருவர் இந்த அகவலை நாடகப் பாங்கிலே, அதே பின்னணியுடன், கபிலர் பாடியது போல இயற்றித் தந்திருக்கிறார் என்று கூறினார்கள். அகவல் என்பது நேர்முக உரை என்று பொருள் தருவதால் கபிலரின் நேர் உரையாடல் என்ற பாங்கிலே இந்தப் பாடலை நாடக உரையாகப் புனைந்திருக்கிறார் என்பர்.

இன்றைய ஆய்வாளர்களில் சிலர் இந்த நூல் கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் தோன்றியது என்பர். சிலர் பதினைந்தாம் நூற்றாண்டு என்கிறார்கள். இரண்டுமே வெறும் ஊகங்களே யன்றி வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் கூறுகிற முடிவுகள் அல்ல!

இத்தனை ஆய்வுகளையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது கபிலர் அகவலின் காலம் பற்றித் திருவாளர் ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் தமது ஆங்கில நூலில் எழுதியுள்ள கருத்து நம் சிந்தனையைக் கிளறுவதாக இருக்கிறது. அவர் இந்தக் கபிலரகவலின் ஆசிரியர் சங்க காலக் கபிலர் இல்லை என்று கூறி, கி.பி.ஒன்பதற்கும் கி.பி.பதினொன்றிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த ஒரு தமிழ்ப்புலவர்; பழைய கபிலர் கதையைக் கருவாக வைத்து இந்த நாடகம் புனைந்தார் என்று கூறுகிறார்.

சோழ மண்டல சதகம், ஒழிவிலொடுக்கம் முதலிய நூல்களில் கபிலர் பற்றி வருகிற குறிப்புக்களை திரு.ஏ.வி.சு. அவர்கள் மேற்கொள் காட்டுகிறார். அதோடு பத்திரகிரியார் புலம்பல் என்னும் பாடலில்,

"ஆதி கபிலர் சொன்ன
ஆகமத்தின் சொற்படியே
சாதிவகை இல்லாமல்
சஞ்சரிப்ப தெக்காலம்"

என்று வருகிற வரிகளையும் மேற்கொள் காட்டித் தமது கருத்துக்குப் பொருந்துகிற முறையில் இவற்றை வைத்து வாதிடுகிறார். அதாவது கபிலர் அகவல் தோன்றிய காலம் ஒன்பது பத்து நூற்றாண்டுகளில் அடங்கும் என்கிறார்.

இத்தனை ஆய்வுகளைப் படித்த பின்பும் இந்தக் கபிலர் அகவல் தோன்றிய காலத்தைப் பற்றி உறுதியாக மனத்திடத்துடன் முடிவு சொல்ல இயலவில்லை என்பது உண்மை. இருட்டுக்குள் சிலம்பம் ஆடுகிற வரலாற்றாய்வுகளால் பயனில்லை என்பது என் கருத்தாகும். தெளிவான கல்வெட்டுக்கள் அல்லது பிற சுவடிச் சான்றுகள் கிடைத்தாலன்றி, ஒரு புலவரின் பிறந்த ஆண்டை எப்படி உறுதியோடு சொல்ல முடியும்? ஏற்கெனவே கிளம்பி நிற்கிற எத்தனையோ பல ஊகங்களோடு என் ஊகங்களையும் கிளப்பிவிட்டுக் குட்டையைக் குழப்ப நான் விரும்பவில்லை.

## கவிப்பொருள்

கபிலரகவலின் குறிக்கோட் பொருள் சாதியினால், பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை. ஒழுக்கமும் சீலமுமே உயர்வு தருபவை. இவற்றின் கேடே தாழ்வுறுத்துவது என்பதேயாகும்.

இந்தப் பாடலிலுள்ள புரட்சிக் கருத்துகள் யாவும் மெய்யாகவே புரட்சிக் கருத்துகளாக இருப்பதோடு, சீர்திருத்தக் கருத்துக்கள் என்று இன்று நாம் அழைக்கிற பல கருத்துக்களும் இந்தப் பாடலிலே இத்தனை சிறிய பனுவலுக்குள் தெளிவோடும் 'சுருக்' என்று தைக்கும் விதத்திலும் வெளியிடப்பட்டிருப்பது பெருஞ்சிறப்பாகும்.

பாடலை இயற்றிய புலவர் நல்ல கவித்துவம் வாய்ந்தவர் என்பதோடு கூட, எளிய சொற்களில் உணர்ச்சி கொப்பளிக்கும் வண்ணம் சிந்தனைகளை வெளியிடுகிற ஆற்றல் நிரம்பியவர் என்பதும் நன்கு புலனாகிறது.

மெருகும் பகட்டும் இல்லாத வெளியீடு என்று சில அறிஞர்கள் இந்தப் பாடலை மதிப்பீடு செய்துள்ளனர். பகட்டு என்ற பெயரில், மெய்யை மறைக்க முயலாமல், இதயத்தில் உதிக்கிற உணர்ச்சியை அப்படியே கொட்டி விடுகிறது இந்தக் கவிதை.

## கவிப்பண்பு

அகவல் என்ற யாப்பமைதி குறித்துச் சித்தர் இலக்கியம் ஆய்வு நூலின் முன்பகுதிகளில் விரிவாகப் பார்த்துள்ளோம். இந்தக் கபிலரகவல் உணர்ச்சிகளைப் பளிச்சென்று வெளியிடுவதோடு, நேருக்கு நேர் பேசுவது போன்ற அமைப்புடன் யாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்கு ஏற்ற முறையில் சொற்கள் எளிமையோடு நேர்முகமாக எழுந்து வருகின்றன. மென்மையான கவிச்சட்டங்கள் கொண்ட யாப்பாக அகவலின் யாப்பு உற்றதால், எடுத்துக்கொண்ட பொருளின் நேர்முக வெளியீட்டுக்கு உகந்ததாக இது விளங்குகிறது.

## சித்தர் இயைபு

சித்தர்களின் புரட்சி மனப்பான்மை, ஞானிகளின் ஒன்றாகக் காண்கிற ஒருமைநோக்கு, உலகளாவிய பொதுநோக்கு, சடங்குகளையும் பொருளற்ற நம்பிக்கைகளையும் சீறுகிற ஒரு ஞானியின் வேகம், அனைத்தும் ஒருங்கிணைந்த ஒரு நற்பனுவலாகச் சின்னஞ் சிறிய வடிவில் இந்தக் கபிலர் அகவல் விளங்குவதால் ஜி.யூ.போப் போன்ற மேனாட்டு அறிஞர்களையும் நம் அறிஞர்களைப் போலவே இந்நூல் கவர்ந்து வந்துள்ளது.

இந்த மறுமலர்ச்சி யுகமாகிய இருபதாம் நூற்றாண்டுச் சிந்தனைகளோடு இசைந்ததாகவும், நமது ஒருமைப்பாட்டுக்கு ஒத்த குரலிலே இணைந்து பேசுவதாகவும் அமைந்துள்ளது! இந்தப் பண்பானது கபிலர் அகவல் என்ற இந்தச் சிறிய சித்தர் தவமொழியின் தனிச்சிறப்பாகும்!

◈◈◈

